# மகாகவி பாரதியார்

## [புதுமைக் கண்ணோட்டம்]

சக்திதாசன் சுப்பிரமணியன்

பாரி நிலையம்
184. பிராட்வே · சென்னை · 600001

# மகாகவி பாரதியார்

## [புதுமைக் கண்ணோட்டம்]

சக்திதாசன் சுப்பிரமணியன்

பாரி நிலையம்
184. பிராட்வே · சென்னை · 600001

முதற் பதிப்பு : டிசம்பர், 1980
உரிமை : ஆசிரியர்க்கே

விலை ரூ. 12-00

மாருதி பிரஸ், 173, பீட்டர்ஸ் ரோடு, சென்னை - 600 014.

## பதிப்புரை

மகாகவி பாரதியார், தமிழ் நாட்டு இலக்கிய உலகத்திலும், பத்திரிகை உலகத்திலும், சுதந்திரப் போராட்டத்திலும், சமுதாய முன்னேற்றச் சிந்தனை களிலும் ஒரு புதிய, உத்வேகமான சகாப்தத்தை உருவாக்கியவர். எந்தத் துறையானாலும், அந்தத் துறையிலே புது எழுச்சியை வித்திட்டுப் பயிர் செய்த பெருமை பாரதியாருக்கு உண்டு.

மகாகவி பாரதியாரின் விடுதலை வேட்கையின் ஆழத்தையும் வேகத்தையும், அவருடைய ஆன்ம உயிரோட்டமாக அமைந்து எங்கும் பரவி, இவரது பேச்சிலும் எழுத்திலும், கவிதைகளிலும் கட்டுரை களிலும் ஒளி வீசிய புத்துணர்வையும், புதிய கண்ணோட்டத்துடன் தமிழ் அன்பர்களுக்கு அறிமுகம் செய்கின்றார் திரு. சக்திதாசன் சுப்பிரமணியன் அவர்கள்.

எழுத்துத் துறையிலும் பத்திரிகைத் துறையிலும் பரந்த அநுபவமும் முதிர்ச்சியும் பெற்றவர் இவர். தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்களிடம் பல ஆண்டுகள் பயிற்சி பெற்றவர். விடுதலைப் போராட்ட

வீரர்கள் பலரோடு பேசியும் பழகியும் அந்த உணர்வு தம்மிடமும் பிரதிபலிக்க விளங்குபவர் இவர். இவருடைய இந்தக் கண்ணோட்டம், பாரதியை மகாகவியாக மட்டுமல்லாமல், மகா தீர்க்க தரிசனம் பெற்ற சமுதாயப் புரட்சிக் கனலாகவும் நமக்கு அறிமுகப் படுத்துகின்றது.

தமிழ்ச் சமுதாயம் ஆர்வத்துடன் வரவேற்று, பாரதியின் நினைவைப் போற்றி, அவருடைய எண்ணங்களைக் கவிக்கனவுகளாக மட்டும் போய்விடாமல், நனவுகளாக நிகழ்த்துவதற்கும் பாடுபடவேண்டும். அந்த வேண்டுகோளுடன் தமிழ் உலகிற்கு இந் நூலைப் பதித்து வழங்குவதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகின்றோம்.

—**பதிப்பகத்தார்**

# அறிமுகம்

மகாகவி பாரதியார் வளர்கிறார்; தமிழ் நாட்டின் தென் கோடியிலே பிறந்த பாரதியார் இன்று இமயம் வரை வளர்ந்து விட்டார்; உயர்ந்து விட்டார்; ஓங்கிவிட்டார்.

பம்பாயிலிருந்து கல்கத்தா வரை பஞ்சாபிலிருந்து கன்னியாகுமரி வரை அவரது புகழ் பரந்து விரிந்து விட்டது. இந்திய நாட்டின்—புத்துயிர் பெற்ற பாரதத்தின்—மாபெரும் கவிகளில் ஒருவராக அவர் போற்றப்பெறுகிறார்; பாராட்டப் பெறுகிறார்; வணங்கப் படுகிறார்; வாழ்த்தப் படுகிறார்.

காரணம் என்ன

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலே இந்த நாட்டு மக்கள் உள்ளத்திலே எழுந்த விடுதலை உணர்ச்சியின் தூதுவராக அவர் தோன்றினார். அந்த உணர்ச்சியின கொந்தளிப்பாக அவர் கொதித்துக் குமிழியிட்டார்; குரலாக ஒலித்தார்; போர்க் குரலாக முழங்கினார்.

நன்றி மறவாத இந்திய மக்கள் அவரைத் தம் இதயக் கோயிலிலே வைத்துக் கும்பிடுகிறார்கள்; வணங்குகிறார்கள்.

எனவே மகாகவி பாரதியார் வளர்கிறார்; வாழ்கிறார். அவர் வாழ்க! வளர்க! அவர் தம் புகழ் ஓங்குக! மேலும் மேலும் ஓங்குக!

உயிரினங்களின் வளர்ச்சி பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் என்ன சொல்கிறார்கள்? போராட்டமே வளர்ச்சிக்குக் காரணம் என்று சொல்கிறார்கள்.

ஆம்; போராட்டமே வளர்ச்சிக்குக் காரணம். போராட்டம் இன்றேல் வளர்ச்சி இல்லை.

போராட்டத்தின் மூலமே உயிரினங்கள் வளர்கின்றன. போராட்டத்தின் மூலமே மனித சமுதாயம் வளர்ந்து வந்துளது; போராட்டமே வளர்ச்சிக்கு வழி. போராட்டம் இன்றேல் வளர்ச்சி இல்லை.

மகாகவி பாரதியார் இந்திய நாட்டின் விடுதலைக்குப் போராடினார்; நாட்டு மக்களை ஏழ்மையினின்றும் மீட்கப் போராடினார்; அந்நிய ஆட்சியை எதிர்த்துப் போராடினார்; அநீதியை ஒழிக்கப் போராடினார்.

இந் நிலவுலகில் முப்பத்தி ஒன்பதே ஆண்டுகள் அவர் வாழ்ந்தார். வாழ்நாள் முழுவதும் போராட்டமே! போராட்டம்! போராட்டம்! ஓயாத போராட்டம். அவரது வாழ்க்கையே போராட்டம். எனவே அவர் வளர்கிறார்; வாழ்கிறார்.

பாரதி காலத்தில் வாழ்ந்த தமிழ்ப்புலவர் பலர் ஜமீந்தார்களைப் பாடினார்கள்; செல்வர்களைப் பாடினார்கள்; அவர் தம் காமக் கேளிக்கைகளுக்குத் தமிழ்க் கவியை அடகு வைத்தார்கள்; சன்மானம் பெற்றார்கள்.

ஆனால் பாரதியோ! மக்களைப் பாடினான்; நாட்டு மக்களோடு ஒன்றினான்; அவர் தம் இன்ப துன்பங்களைத் தனதாக மேற் கொண்டான்; அவர் தம் முன்னேற்றம் வேண்டிப் பாடினான்; வறுமையையே சன்மானமாகப் பெற்றான்.

கோடையிலே திடீரென்று தோன்றுகிறது கொண்டல்! கறுத்துத் திரண்டு எழுகிறது; உறுமுகிறது; இடித்து முழங்குகிறது; மின் வெட்டுகிறது. மழை! மழை! பொழி கிறது! பொழிகிறது! அடர்த்துப் பொழிகிறது. அப்பால்! விலகி விடுகிறது! மறைகிறது! மாரி பொழிந்தது! மாய மாய் மறைந்தது! வானம் தெளிந்தது.

மேகம் எங்கே? காணோம்; மறைந்துவிட்டது. இடி முழக்கம் எங்கே? கேட்கவில்லை. உறுமுதல் எங்கே? எங்கும் கேட்கவில்லை. மின்வெட்டு எங்கே? பளிச்சிடல் இல்லை. ஒன்றும் காணோம். மழை நீர் மட்டும் ஓடிக்கொண்டிருக் கிறது.

கோடை மேகம் நீடிப்பது இல்லை.

கோடை மேகம் போலத் தோன்றினார் பாரதியார்; இடித்து முழங்கினார்; கவி மழை பொழிந்தார்; பின் மறைந்தார். நீண்ட நாள் நிலவுலகில் அவர் உலவினார் அல்லர்.

ஆயினும் முப்பத்தி ஒன்பது வயதுக்குள் அவர் பொழிந்துள்ள கவி மழையை நோக்கினால் என்ன தோன்றுகிறது? 'மாபெரும் சாதனை' என்று கூறத் தோன்றுகிறது.

அவர் வாழ்வில் என்ன கண்டார்? வறுமை! வறுமை! வறுமையே கண்டார். வறுமை வருத்தியது.

ஒரு கவியைத் தோற்றுவிப்பது போராட்டமே; அவனை உருவாக்குவதும் போராட்டமே; வளர்ப்பதும் போராட்டமே.

இந்திய விடுதலைப் போரின் தோன்றலே பாரதி; அது உருவாக்கிய கவியே பாரதி; அதன் தூதுவன் பாரதி; தலை நாள் முழக்கம் பாரதி; தலைநாள் எக்காளமே பாரதி,

எனவே விடுதலைப் போரினின்றும் பிரித்து பாரதியைக் காண்பது நீரினின்றும் பிரித்து மீனைக் காண்பது போன்றதே. அங்ஙனம் பிரித்துக் காண முற்படுவோர் பாரதியை அறிய இயலாதாரே. அவர் பாரதியைக் காணல் அரிது! அரிது!

ஒரு சமுதாயம் முன்னேற்றப் பாதையிலே செல்ல வேண்டுமாயின் அது போராட்டத்தின் மூலமே இயலும். போராட்டம் ஒன்றே ஒரு சமுதாயத்தை முற்போக்கில் உந்திச் செலுத்துவது.

இந்த இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலே இந்திய சமுதாயத்தை முன்னேற்றப் பாதைக்கு உந்தித் தள்ளியது நமது விடுதலைப் போராட்டமே.

அந்தப் போராட்ட அணியின் தலைமையிலே பாண்டு வாத்தியத்துடன் முழங்கிக் கொண்டு அணி திரட்டிச் சென்ற மாபெருங்கவி பாரதி; இந்திய மக்களின் முன்னேற்றத்துக்கு முழங்கிய முற்போக்குக் கவி.

இந்தக் கண்ணோட்டமே .இந்தப் புத்தகம் எழுத என்னை உந்தியது.

முற்போக்குப் பாதையிலே அணிவகுத்து நடப்போர் பலரும் இதனை வரவேற்பர் என்றே கருதுகிறேன்.

எனது கண்ணோட்டத்திலே குறை காணப்படின் அஃது எனது குறையே;

அக் குறையை "நிறையாக்க வம்மின்" என்று அழைக்கிறேன்.

இந்தப் புத்தகத்தைச் சீரிய முறையில் வெளிக் கொணர்ந்துள்ள "பாரிநிலைய" உரிமையாளர் திரு. செல்லப்பன் அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். நன்றி! நன்றி!

— சக்திதாசன் சுப்பிரமணியன்

# முன்னுரை

ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பத்து ஐந்தாம் ஆண்டு, செப்டம்பர் மாதம் பதினேரும் தேதி, சென்னை ஜெனரல் பாட்டரீஸ் ரோடிலே உள்ள காங்கிரஸ் மாளிகை யிலே 'பாரதிதினம்' கொண்டாடப் பெற்றது.

இப்பொழுது சத்தியமூர்த்தி பவனம் இருக்கிறதே! அந்த இடமேதான்! அப்போது இந்த மாதிரி நவீனக் கட்டிடம் இருக்கவில்லை. வேறு ஒரு கட்டிடம் இருந்தது. ஆனல் இடம் அதுவே.

அப்போது நான் "சுதந்திரச் சங்கு" என்ற பத்திரிகை யின் உதவியாசிரியனகப் பணிபுரிந்தேன். பத்திரிகை ஆசிரியர் என்னை அழைத்தார்; கூட்டத்துக்குப் போய் வருமாறு கூறினர். கூட்ட நடவடிக்கைகளைக் குறித்து வருமாறு சொன்னர். நான் சென்றேன்.

மாலை மணி ஆறு இருக்கும். கூட்டம் தொடங்க வில்லை. காங்கிரஸ் மாளிகையில் எவருமே இல்லை, சிறிது நேரம் சென்றது. ஒருவர்பின் ஒருவராகச் சிலர் வந்தனர்.

வந்தவர் எல்லாரும் தேசீய இயக்கத்தில் பங்கு கொண்டவரே. சுமார் முப்பது பேர் கூடிவிட்டனர்.

கூட்டம் தொடங்கியது. "சுதேசமித்திரன்" ஆசிரியர். சி. ஆர். சீனிவாசன் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினர். அவர் பாரதியை நன்கு அறிந்தவர்; நேரில் பழகியவர். ஆதலினுலே பாரதியாரைப் பற்றி எல்லாருக்கும் எடுத்துக் கூறினர் அவர்.

அப்போது பாரதியின் படம் ஏதும் இல்லை. ஆகவே, பாரதியின் தோற்றம் எப்படியிருந்தது என்று எடுத்துக் கூறினர் அவர்.

பாரதியை நன்கு அறிந்தவர் இன்னொருவர். அவர்தான் ஹரிஹரசர்மா என்பவர். "பாரதி பிரசுராலய"த்தின் சார்பிலே பாரதி நூல்களை வெளியிட்டு வந்தார் அவர். அவரும் கூட்டத்தில் பேசினர்.

ஆக, அன்றைய கூட்டத்தில் எல்லாரும் வலியுறுத்திய விஷயம் ஒன்றே. அதாவது, பாரதியாரைப்பற்றிய உண்மையான தகவல் கொண்ட நூல் ஒன்று வெளிவர வேண்டும் என்பதே.

அந்தக் காலத்தில் மகாகவி சுப்பிரமணிய பாரதியைப் பற்றி அறிந்தவர் சிலரே. அச்சிலர் எவர்? தேசியப் போராட்டத்தில் ஈடுபட்ட சிலர், அவரும் என்ன அறிந்தனர்? பாரதி பாடல்கள் சிலவற்றையே அறிந்தனர். அந்த தேசீயப் பாடல்களைப் பாடியவர் பாரதியார் என்கிற அளவில்தான் அறிந்திருந்தனர். அதற்குமேல் அறிந்தார் இலர்.

"உங்களுக்கு சுப்பிரமணிய பாரதியைத் தெரியுமோ?" என்று கேட்டால் பலர் என்ன சொல்வர்?

''ஓ! தெரியுமே! நந்தன் சரித்திரம் பாடியிருக்கிறாரே! அவர்தானே'' என்பர்.

''நந்தன் சரித்திரம் பாடியவர் கோபாலகிருஷ்ண பாரதி. அவரை நான் சொல்லவில்லை. தேசியப்பாடல் பல பாடியிருக்கிறாரே! அவரைச் சொல்கிறேன்'' என்று நான் பதில் கூறுவேன்.

இம்மாதிரி அறியாமைக் களஞ்சியங்களுக்கு முற்றுப் புள்ளி வைக்க எண்ணினேன். பாரதியின் உண்மையான வாழ்க்கை வரலாறு ஒன்று வெளியிடக் கருதினேன்.

பாரதியின் வாழ்க்கையை எழுதுவது எப்படி? பாரதியை அறிந்தவரை நெருங்கி இதுபற்றிக் கேட்க எண்ணினேன்.

இப்போது பாரதி புகழ் நாடு முழுவதும் பரவி விட்டது. 'பாரதியைத் தெரியும்' என்று சொல்லிக் கொள்வோர் பலர் தோன்றி விட்டனர். பாரதியின் உறவினர் என்று சொல்லிக் கொள்வோரும் பலர் ஆகி விட்டனர். அதிலே பெருமை!

ஆனால் நான் கூறுவது நாற்பது ஆண்டுகள் முன்பு, அப்போது பாரதியின் உறவினர் என்று சொல்லிக் கொண்டவர் சிலரே. அவருள் ஒருவர் சென்னையில் வசித்தார்; சேப்பாக்கத்திலே உள்ள அரசினர் ஆபீசிலே உத்தியோகம் வகித்து வந்தார். அவர் பெயர் சங்கரன்.

அவரைக் கண்டு பேசினேன்.

''லோகோபகாரி'' என்ற பத்திரிகையின் ஆசிரியராக விளங்கினார் நெல்லையப்பபிள்ளை. அவர் பாரதியை நன்கு அறிந்தவர். ''தம்பி!'' என்று பாரதியாரால் அழைக்கப்

பட்டவர். பாரதி இறந்தபோது உடன் இருந்தவர். அவருக்கு பாரதி எழுதிய கடிதம் ஒன்றையும் எனக்குக் காட்டினார் அவர்.

வக்கீல் எஸ். துரைசாமி அய்யர் அப்போது சென்னையிலே புகழ் பெற்ற வழக்கறிஞராக விளங்கினார். இவர் பாரதியை நன்கு அறிந்தவர்; பாரதியுடன் பழகியவர்; பாரதியை ஆதரித்தவர். பாரதியுடன் சூரத் காங்கிரசுக்குச் சென்றவர். இவரையும் கண்டு பேசினேன்.

சர்க்கரைச் செட்டியார் தொழிற்சங்க இயக்கத்தில் பங்கு கொண்டவர்; சென்னை நகர மேயராக இருந்தவர்; பொதுவுடைமைக் கொள்கையிலே பற்றுடையவர். இவர் பாரதியை நன்கு அறிந்தவர்; பாரதியின் நண்பர்; பாரதியுடன் சூரத் காங்கிரசுக்குச் சென்றவர். இவரையும் கண்டு பேசினேன்.

''சுதேசமித்திரன்'' பத்திரிகை ஆசிரியர் சி. ஆர். சீனிவாசன் அவர்களையும் சந்தித்தேன்; பாரதியாரைப் பற்றி அறிந்து கொண்டேன்.

இவர்கள் எல்லாரும், பாரதி சென்னையிலே இருந்த போது அறிந்தவரே. பாரதியின் இளமை பற்றி அறிய வேண்டுமே! எப்படி அறிவது? இதுபற்றி நான் யோசித்து வந்தேன்.

எட்டயபுரத்திலிருந்தே வந்தார் ஒருவர். அவர் பெயர் குருகுகதாசபிள்ளை என்பது. புகழ் பெற்ற சோதிட வல்லுநர் அவர். சில மாதங்கள் சென்னையிலே தங்கியிருந்தார் அவர். அவரைச் சந்தித்தேன். பாரதியின் இளமை வாழ்க்கைபற்றிப் பல விஷயங்கள் கூறினார் அவர்.

இந்த முயற்சியில் ஓராண்டு சென்றுவிட்டது. தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் நடத்திவந்த "நவசக்தி" பத்திரிகையில் நான் உதவியாசிரியன் ஆனேன்.

நான் செய்து வரும் முயற்சி பற்றித் திரு. வி. க அவர்களிடம் கூறினேன். திரு. வி. க. அவர்கள் பாரதி பற்றிய சில நிகழ்ச்சிகளை எனக்குக் கூறினார்.

"சுதேசமித்திரன்" பத்திரிகையின் உதவியாசிரியர் இருவரை நான் கண்டேன். இருவருள் ஒருவர் நடேசய்யர்! இன்னொருவர் உலகநாதநாயக்கர்.

புதுவையினின்றும் வந்த பிறகு, "சுதேசமித்திர"னில் பாரதியார் பணியாற்றியபோது இவ்விருவரும் அவருடன் பணியாற்றியவர்.

இவர்களும் தாங்கள் அறிந்தவற்றைக் கூறினார்கள். இவ்வாறு விசாரித்து அறிந்தவற்றை யெல்லாம் திரட்டி ஒரு சிறு புத்தகமாக வெளியிட்டேன். புத்தகம் ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பத்து எட்டாம் ஆண்டு வெளிவந்தது. விலை ஐந்தே அணு.

பத்திரிகைகள் பாராட்டின. பாரதிபக்தர் ரா. அ. பத்மநாபன் அவர்கள் அப்போது "ஹிந்துஸ்தான்" பத்திரிகையில் உதவி ஆசிரியராகப் பணிபுரிந்தார். எனது முயற்சியைப் பாராட்டினார்; வரவேற்றார். நீண்டதொரு மதிப்புரையும் வழங்கினார்.

நாற்பத்து ஐந்து ஆண்டுகள் ஓடிவிட்டன.

இந்த நாற்பத்து ஐந்து ஆண்டுகளில் எத்தகைய வளர்ச்சி! எத்தகைய வளர்ச்சி! பாரதி நூல்கள் பல, பற்பல

உருவங்களில் வெளிவந்து விட்டன. பாரதி பற்றிய ஆராய்ச்சி நூல்களும் பல உலவுகின்றன.

பாரதி பற்றிப் புதுமைக் கண்ணோட்டத்தில் ஒரு புத்தகம் எழுதவேண்டும் என்ற கருத்து எனக்குத் தோன்றியதுண்டு. இந்த நாற்பது ஆண்டுகளில் பலமுறை அந்தக் கருத்து என்னை உந்தியதும் உண்டு.

பாரதிக்கு நூறுவது ஆண்டு கொண்டாடப் பெறும் இந்த ஆண்டிலே எனது நீண்டகால விருப்பம், புத்தக உருக்கொண்டு வெளிவருகிறது.

— சக்திதாசன் சுப்பிரமணியன்

# பொருளடக்கம்

| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | அறிமுகம் | ... | 5 |
| 2. | முன்னுரை | ... | 9 |
| 3. | கவிஞன் உருவாகிறான் | ... | 17 |
| 4. | அரசியல் எதிரொலி | ... | 36 |
| 5. | பாரதியும் வ. உ. சியும் | ... | 57 |
| 6. | சூரத்துச் சூறுவளி | ... | 73 |
| 7. | கொள்கை முழக்கம் | ... | 99 |
| 8. | இடியும் மின்னலும் | ... | 118 |
| 9. | பாரதியும் தொழிலாளரும் | ... | 129 |
| 10. | பத்திரிகை மீது பாணம் | ... | 137 |
| 11. | புதுவைப் போராட்டம் | ... | 143 |
| 12. | இறுதி நாட்கள் | ... | 176 |
| 13. | பாடலின் பின்னே | ... | 200 |
| 14. | முடிவு பெறுத கதை | ... | 223 |
| 15. | பின்னுரை | ... | 271 |

# கவிஞன் உருவாகிறான்

இன்று எட்டயபுரம் பெருமை பெற்று விட்டது. காரணம் என்ன? மகாகவி பாரதியார் அந்த ஊரிலே பிறந்தார் என்பதே.

பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலே எட்டயபுரம் ஒரு பாளையப்பட்டு. மதுரையைத் தலை நகராகக் கொண்டு ஆண்டு வந்த நாயக்க மன்னர்கள் தங்கள் ராஜ்யத்தைப் பல பாளையப்பட்டுகளாக வகுத்திருந்தார்கள். அத்தகைய பாளையப்பட்டுகளிலே ஒன்று தான் எட்டயபுரம்.

பின்னர் வாணிபத்தின் பொருட்டு இங்கு வந்த ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனியார் நாடு பிடிக்கத் தொடங்கினர்.

ஆங்கிலக் கம்பெனியாரின் ஆதிக்கத்தை எதிர்த்தது பாஞ்சாலங்குறிச்சி. இதுவும் ஒரு பாளையப்பட்டுதான். பாஞ்சாலங்குறிச்சி கட்டப்பொம்மனின் வீரப் போர் நாடறிந்த ஒன்று.

இந்தப் போரிலே எட்டயபுரம் கொண்ட பங்கு என்ன? எட்டயபுரம் எவர் பக்கம் நின்றது? பாஞ்சாலங் குறிச்சி பக்கம் நின்றதா? இல்லை; இல்லை. ஆங்கிலேயர் பக்கம் நின்றது: பாஞ்சாலங்குறிச்சிக்கு எதிராக—

ஆங்கிலேயருக்குச் சாதகமாக நின்றது; ஆங்கிலேயரின் நண்பனாக நின்று அவருக்கு உதவியது.

இந்தப் போரிலே வீரபாண்டிய கட்டப்பொம்மன் வீழ்ந்தான். பின்னே பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையை இடித்துத் தரைமட்டமாக்கி, அந்த மண்ணிலே கள்ளி பயிரிட்டான் ஆங்கிலக் கம்பெனிக்காரன்.

*பாஞ்சாலங்குறிச்சி பாளையப்பட்டு 104 கிராமங்கள் கொண்டது. அவற்றில் 79 கிராமங்களை எட்டயபுரம் பாளையப்பட்டுக்கு இனாமாக வழங்கினான் வெள்ளையன். எதற்காக? பாஞ்சாலங்குறிச்சிச் சண்டையிலே வெள்ளை யருக்கு சாதகமாக உதவியதற்காக.

பின்னே பாளையப்பட்டுகள் யாவும் ஒழிக்கப் பட்டன. எட்டயபுரம் பாளையப்பட்டும் ஒழிக்கப்பட்டது. 1803 ம் ஆண்டிலே எட்டயபுரம் ஜமீனாயிற்று.

ஆயினும் எட்டயபுரம் குடிமக்கள் அந்த ஜமீந்தாரை 'மகாராஜா' என்றே அழைத்து வந்தார்கள். எட்டயபுரம் குடிமக்கள் மிகவும் மரியாதையுடையவர்கள். 'எட்டு' என்ற எண்ணை நாவினாலும் சொல்லமாட்டார்கள்.

நெல் அளப்பார்கள். ஒன்று, இரண்டு மூன்று என்று சொல்லிக் கொண்டே வருவார்கள். ஏழுவரை சொல் வார்கள். ஏழுக்குப் பின் எட்டு அல்லவா! அதைச் சொல்லமாட்டார்கள். 'மகாராஜா' என்பார்கள்.

தேங்காய் எண்ணிப் போடுவார்கள், ஒன்று, இரண்டு மூன்று என்று எண்ணுவார்கள். ஏழு முடிந்தவுடனே 'மகாராஜா' என்பார்கள். அதாவது' எட்டு என்று பொருள்.

---

* திருநெல்வேலி ஜில்லா கெஜட்டியர்

ஜமீந்தாரிடத்திலே பேசும்போது மேல் துணியை எடுத்து இடுப்பிலே கட்டிக் கொண்டு வணக்கமாக வாய் பொத்தி நிற்பார்கள்.

ஜமீந்தார் ஏதாவது கூறினால் அப்போது அடிக்கடி 'மகாராஜா' 'மகாராஜா' என்று சொல்வார்கள்.

இப்படி ஜமீந்தாரிடத்திலே வணக்கமும், மரியாதையும், நன்றியும் மிக்கவர்கள் எட்டயபுரத்துக் குடிமக்கள்.

எட்டயபுரம் ஜமீந்தாரைப்பற்றி நாம் ஒன்றும் சொல்வதற்கு இயலவில்லை. ஆனால் பாரதியாரே தாம் எழுதிய கதை ஒன்றில் ஒரு ஜமீந்தாரையும் அவரது திறமையையும் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார்.

இத்தகைய எட்டயபுரத்திலேதான் பாரதியார் பிறந்தார். அதாவது ஆயிரத்து எண்ணூற்று எண்பத்து இரண்டாம் ஆண்டு, டிசம்பர் மாதம் பதினோராம்தேதி.

பாரதியாரின் தந்தையார் பெயர் சின்னச்சாமி ஐயர் என்பது. இவரது சொந்த ஊர் சீவலப்பேரி. கடுவாய் சுப்பய்யர் என்பவரின் புதல்வர் சின்னச்சாமி ஐயர். சிறு வயதிலேயே தந்தையை இழந்தார் இவர். எனவே எட்டயபுரத்தில் குடியேறினார்.

சின்னச்சாமி ஐயர் கல்வி கேள்விகளில் சிறந்தவராக விளங்கினார். கணிதத்தில் வல்லவராகவும் இருந்தார். எனவே எட்டயபுரம் ஜமீனில் முக்கியமான பதவிபெற்றார். நாளடைவில் ஜமீந்தாரின் அன்புக்கு உரியவரும் ஆனார்.

பாரதியாரின் தாயார் பெயர் லக்ஷ்மி.

பாரதிக்குப் பெற்றோர் இட்ட பெயர் சுப்பிரமணியன் என்பது. அதாவது பாட்டனாரின் பெயர். சுப்பையா

என்பது செல்லப்பெயர். 'சுப்பையா' எனவே எல்லாரும் அழைத்து வந்தனர்.

சுப்பையாவுக்கு வயது ஐந்து ஆயிற்று. தாய் லக்ஷ்மி அம்மாள் இவ்வுலகு நீத்தாள்.

''என்னையீன்று எனக்கு ஐந்து பிராயத்தில்
ஏங்க விட்டு விண் எய்திய தாய்''

என்று பாரதியார் தமது சுயசரிதையில் குறிப்பிடுகிறார்.

தமது மகன் சுப்பிரமணியனின் படிப்பிலே அதிக கவனம் செலுத்தினார் பாரதியின் தந்தை. அந்த அளவு உடற்பயிற்சியிலே கருத்துச் செலுத்தவில்லை.

எவருடனும் சேரல் கூடாது. தெருவிலே திரிதல் கூடாது. மற்றப் பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடல் கூடாது. குளம் குட்டைகளிலே நீந்தி விளையாடல் கூடாது. புத்தகம், படிப்பு, கணக்கு இவைதவிர வேறு எதிலும் கவனம் செலுத்தக்கூடாது.

இது அவரது தந்தையாரின் கட்டளை. தந்தையோ கண்டிப்பானவர். சிறு வயதுச் சுப்பையா என்ன செய்வான்?

தோழர் எவருமின்றித் தனியனாய் ஏங்கினான், பத்து வயதுச் சிறுவர்கள் எப்படியிருப்பார்கள்? சாக்கு மூட்டை போல் வீட்டில் உட்கார்ந்திருப்பார்களா? உட்கார்ந்திருக்க மாட்டார்கள். தம்மையொத்த பிள்ளைகளுடன் சேர்ந்து கொண்டு ஓடுவார்கள்; ஆடுவார்கள்; தெருவிலே விளையாடுவார்கள்; மரங்கள்மீது ஏறுவார்கள்; இறங்குவார்கள்; ஆறு குளம் குட்டைகளிலே நீந்துவார்கள்.

ஆனால் பாவம் சுப்பையா! எவருடனும் கலக்க முடியாமல் கலங்குவான்.

"ஆண்டு ஓர் பத்தினில் ஆடியும் ஓடியும்
ஆறு குட்டையின் நீச்சினும் பேச்சினும்
ஈண்டு பன்மரத்தேறி இறங்கியும்
என்னொடொத்த சிறியர் இருப்பரால்
வேண்டு தந்தை விதிப்பினுக்கு அஞ்சி யான்
வீதியாட்டங்கள் ஏதினும் கூடிலேன்
தூண்டு நூல் கணத்தோடு தனியனாய்
தோழமை பிறிதின்றி வருந்தினேன்.

— பாரதி சுய சரிதை

பிள்ளையாண்டான் கணக்கிலே சூரப்புலியாக விளங்க வேண்டும் என்று விரும்பினார் தந்தை. ஆனால் சிறுவன் சுப்பையாவின் கருத்தோ வேறு வகையில் சென்றது.

சிறுவன் சுப்பையா இயற்கை வனப்பிலே ஈடு பட்டான். கவிதையிலே மூழ்கித் திளைத்தான்.

*எட்டயபுரத்திலே ஒரு பள்ளிக்கூடம். அதன் பெயர் ஏ.வி.ஸ்கூல் என்பது. இது ஆங்கிலோ வெர்னகுலர் ஸ்கூல் என்பதன் வாமனாவதாரம். இந்தப் பள்ளிக் கூடத்திலே தான் சுப்பையா படித்தான். அந்தப் பள்ளிக் கூடத்தின் தலைமை ஆசிரியராக விளங்கியவர் சங்கர ஐயர் என்பவர்.

அந்தக் காலத்திலே பிரைமரி போர்டு என்ற ஒன்று இருந்தது. ரெவரண்டு ஏ. கானன் மெகாசியஸ் என்பவர் அந்த போர்டின் தலைவராக இருந்தார். ஆரம்பப் பள்ளியில் படிக்கும் சிறுவர்கள் எந்த அளவு ஆங்கிலம் கற்றிருக்கிறார்கள் என்று சோதனை செய்து நற்சான்று வழங்குவதுதான் அந்த பிரைமரி போர்டின் வேலை. இந்த வேலையைச் செய்தவர் ரெவரண்டு கானன் மெகாசியஸ் என்ற பாதிரியார். இவர் நாசரெத் என்ற ஊரிலே இருந் தார்.

*கூறியவர்—எட்டயபுரம் குருகுகதாசப்பிள்ளை.

பிரைமரி போர்டு பரீட்சையில் தேர்ச்சி பெறுவதும், நற்சான்று பெறுவதும் சிறந்த கௌரவம் என்று அந்தக் காலத்துச் சிறுவர்கள் கருதினார்கள்.

இந்த வழக்கப்படி ஏ. வி. ஸ்கூல் மாணவர் பலர் அந்தப் பரீட்சையின் பொருட்டு நாசரேத் சென்றனர். சுப்பையாவும் சென்றான். பாதிரியார் முன் நின்றான். "உனக்குத் தெரிந்த ஆங்கிலப் பாடல் ஒன்றைச் சொல்லு" என்று கேட்டார் பாதிரியார்.

"ட்விங்கில் ட்விங்கில் லிட்டில் ஸ்டார்" என்ற பாடலை மிகுந்த உணர்ச்சியுடன் பாடினான் சுப்பையா; பாடலிலே ன்னை மறந்து ஈடுபட்டான்; வானிலே உள்ள நட்சத்திரங் களுடன் பேசுபவன் போலவே காணப்பட்டான்.

கேட்டார் பாதிரியார்; மகிழ்ந்தார்; சுப்பையாவைப் பெரிதும் பாராட்டினார்.

சூழ்நிலைதான் மனிதனை உருவாக்குகிறது. எட்டய புரத்தின் சூழ்நிலை எப்படியிருந்தது? கவிதை பொங்கி வழிந்தது. தமிழ்ப் புலவர் பலர் இருந்தனர். குற்றாலக் குறவஞ்சியையும், கூளப்ப நாயக்கன் காதல் பாடல்களையும் பாடி மகிழாத புலவர் எவருமே இலர் எட்டயபுரத்திலே.

ஆணும் சரி, பெண்ணும் சரி, அண்ணாமலை ரெட்டி யாரின் காவடிச் சிந்தைப் பாடிய வண்ணம் இருப்பர். கும்மியும் கோலாட்டமுமே பெண்களின் பொழுதுபோக்கு.

இத்தகைய சூழ்நிலையில் வளர்ந்த சிறுவன் சுப்பையா எப்படியிருந்தான்? கவிதையிலே ஊறினான்; கவி கொப் பளித்தான்.

*காவடிச் சிந்திலே புகழ் பெற்றது சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச் சிந்துதான்.

---

*புதுமைக்கவி பாரதியார்—தி. ஜ. ர,

"இது போன்றதொரு காவடிச் சிந்து பாட எவராலும் இயலாது" என்றனர் எட்டயபுரத்துப் புலவர். அப்போது சுப்பையா அங்கே இருந்தான்; புலவர்கள் சொற்கேட்டுச் சிரித்தான்.

"சும்மா சிரிக்கக் கூடாது. உனக்குத் திறமையிருந் தால் இந்த மாதிரி ஒரு காவடிச் சிந்து பாடு பார்க்கலாம்" என்றனர் புலவர்.

"ஆகட்டும். அப்படியே பாடுகிறேன் பாருங்கள்" என்றான் சுப்பையா. அன்று மாலையே ஒரு காவடிச் சிந்து பாடிக் கொண்டு வந்தான். புலவர்களிடம் படித்துக் காட்டினான். எல்லாரும் கேட்டனர்; மகிழ்ந்தனர். சுப்பையாவைப் பாராட்டினர். அந்தக் காவடிச் சிந்து பின்வருமாறு இருந்தது.

பச்சைத் திருமயில் வீரன்
அலங்காரன்
கௌமாரன் —ஒளிர்

பன்னிரு திண்புயப் பாரன் —அடி
பணி சுப்பிரமணியர்க் கருள்
அணி மிக்குயர் தமிழைத் தரு
பக்தர்க் கெளிய சிங்காரன்—எழில்
பண்ணும் அருணாசலத் தூரன்.

*பெத்தண்ண தளவாய் என்பவர் கடிகை முத்துப் புலவரிடம் தமிழ் பயின்றவர். எட்டயபுரம் ஜமீந்தார் மீது ஓர் உலாமடல் பாடியிருந்தார். அந்த உலாமடல் மிகச் சிறந்த ஒன்று என்று புலவர் பலராலும் பாராட்டப் பெற்றது. அதுபோல் பாட எவராலும் இயலாது என்றனர் புலவர்.

---

*கூறியவர்—எட்டயபுரம் குருகுகதாசப்பிள்ளை.

கேட்டான் சிறுவன் சுப்பையா. "இயலாதது எதுவுமே இல்லை" என்றான். இருநூறு வரிகள் கொண்டதோர் உலாமடல் பாடினான். புலவர்களிடம் படித்துக் காட்டினான். எல்லாரும் வியந்தனர். ஆனால் ஜமீந்தார் சபையில் அதை வைக்க மறுத்தனர். சுப்பையா சீறினான். அந்த உலா மடலைக் கிழித்துப் போட்டான்.

பாரதி என்ற பட்டம் சுப்பையாவுக்கு எப்படிக் கிடைத்தது? யார் கொடுத்தார்? எட்டயபுரம் ஜமீந்தார் இப்பட்டம் சூட்டினார் என்று பாரதியார் பற்றிய நூல்கள் பலவற்றில் காண்கிறோம், இது தவறு. பாரதி என்ற பட்டம் அளித்தவர்கள் புலவர்கள்; ஜமீந்தார் அல்லர்.

சோமசுந்தர பாரதியார் அவர்கள் சுப்பிரமணிய பாரதியின் பள்ளித் தோழர்; இளமை நண்பர்; பாரதியாருடன் நன்கு பழகியவர். அவர் இதுபற்றி என்ன சொல்கிறார்?

"பாரதியார் 11 வது ஆண்டில் புலவர்கள் கூடியதோர் பெரும் சபையில் புதிது புதிதாகக் கொடுத்த அடிகளைக் கொண்டு பூர்ண கவிகளை விரைந்து இயற்றிச் சபையோரை வியப்பித்தபோது, அவருடைய கவித்திறமையையும், அமிர்த வாக்கையும் கண்டு சந்தோஷப் பட்ட புலவர்களால் முதல் முதல் 'பாரதியார்' என்ற பட்டம் கொடுக்கப் பெற்றார், அன்று முதல் இவரை யாவரும் பாரதியார் என்றே அழைக்க ஆரம்பித்தார்கள்."

இவ்வாறு கூறுகிறார் சோமசுந்தர பாரதியார்.

குருகுகதாஸப்பிள்ளை என்பவர் எட்டயபுரத்தைச் சேர்ந்தவர்; சோதிட வித்வான்; பாரதியாரின் இளமை நண்பர்; பாரதியாரை நன்கு அறிந்தவர். இவர் என்ன சொல்கிறார்?

"விருதை சிவஞான யோகியார் என்பவர் பெரும்புலவர் புலவர் பலராலும் நன்கு மதிக்கப் பெற்றவர். எப்போதும் புலவர் பலர் சூழ வீற்றிருந்தவர்.

"சுப்பையாவின் கவித்திறமையைச் சோதித்து அறிந்த சிவஞான யோகியார், புலவர் பலர் கூடிய சபையிலே சுப்பையாவுக்குப் பாரதி என்ற பட்டம் சூட்டினுர்."

இவ்வாறு கூறுகிருர் எட்டயபுரம் சோதிட வித்வான் குருகுகதாஸப்பிள்ளை.

இளம் பாரதியார் கவிகள் பொழிவதில் எப்படி வல்ல வராக இருந்தாரோ அப்படியே மற்ெருன்றிலும் வல்லவ ராக விளங்கினுர். அதாவது எதிரிகளை மடக்கி முறியடித்து அவர்கள் முகத்தில் கரிபூசும் திறமை.

பாரதியார் கல்வி பயின்ற அதே கல்லூரியில் மற் ெருருவரும் கல்வி பயின்ருர். அவர் பெயர் காந்திமதிநாதன் என்பது. பாரதியாரை விட இரண்டு மூன்று வகுப்புகள் மேலே படித்து வந்தார் அவர்.

காந்திமதிநாதன் நன்கு தமிழ் பயின்ற குடும்பத்தைச் சேர்ந்தவர். அதனுலே ஓரளவு தமிழ்ப் புலமையும் இயற்கையாகவே பெற்றிருந்தார். இளம் பாரதி மீது அவருக்குப் பொருமை. பத்துப்பேர் புலவர் நடுவே பாரதியை மட்டம் தட்ட எண்ணினுர் அவர். அதற்குரிய காலமும் நேரமும் கருதியிருந்தார். தக்கதோர் வாய்ப்பும் கிடைத்தது.

ஒருநாள், காந்திமதிநாதன் வீட்டிலே புலவர் பலர் கூடியிருந்தனர். பாரதி சுப்பையாவும் இருந்தார். பாரதி சுப்பையாவை மட்டம் தட்டக் கருதியிருந்த காந்திமதி நாதன் இந்தத் தருணத்தை நன்கு பயன் படுத்த விரும்பினுர்.

ஒரு பாட்டின் கடைசி அடியை மட்டும் கொடுத்து அந்தப் பாட்டை முடிக்குமாறு சொல்வது ஒரு சோதனை. தமிழ்ப்புலவர் ஒருவர் மற்றொரு புலவரைக் கண்டால் இந்த மாதிரி சோதனை செய்வது வழக்கம். விளையாட்டாக வும் உண்டு; வேடிக்கையாகவும் உண்டு; ஒருவரை மற்றொருவர் மட்டம் தட்டுவதற்காகவும் உண்டு. இந்த முறையிலே ஒரு பாட்டின் கடைசி அடியைக் கொடுத்தார் காந்திமதிநாதன். அந்தக் கடைசி அடி என்ன தெரியுமா? 'பாரதி.சின்னப்பயல்' என்பது. மீதியுள்ள அடிகளைப் பாடி முடிக்குமாறு கூறினார். காந்திமதிநாதன் உடனே பாரதியார் பாடினார். அந்தப் பாட்டின் இறுதி இரண்டு அடிகள் வருமாறு:

> காரது போல் நெஞ்சிருண்ட காந்திமதி நாதனைப்
> பாரதி சின்னப் பயல்.

"காரது போல் நெஞ்சு இருண்ட காந்திமதி நாதனைப் பார்! அதி சின்னப்பயல்" என்று முடித்து அந்த அடிகளையே காந்திமதிநாதன் மேல் திருப்பினார் பாரதி. பாரதியை 'சின்னப் பயல்' என்று சொன்ன காந்திமதிநாதனை 'அதி சின்னப்பயல்' என்று மடக்கி முறியடித்தார் பாரதியார். கூடியிருந்தவர்கள் சிரித்தார்கள். காந்திமதிநாதன் முகத்தில் அசடு வழிந்தது.

காந்திமதிநாதனைப் போலவே பாரதியை மட்டம் தட்ட எண்ணியிருந்தார் இன்னொருவர். அவர்தான் பாரதியார் கல்வி பயின்ற கல்லூரித் தமிழ் ஆசிரியர்.

ஒருநாள் தமிழ் வகுப்பு நடக்கிறது. தமிழ் ஐயா பாடம் சொல்கிறார்; பிறகு கேள்விகள் கேட்கிறார். இளம் பாரதியின் எண்ணம் எங்கோ கற்பனையில் உலவிக் கொண் டிருந்தது. தமிழ் ஐயா கேட்ட கேள்விக்கு மறுமொழி கூறினார் அல்லர்.

பாரதியை மட்டம் தட்டக் கருதியிருந்த தமிழ் ஆசிரியர் புலிபோல் பாய்ந்தார்.

"என்ன கவிராயரே! பாரதி என்ற பட்டம் பெற்று விட்டீர். காளமேகம் போல் கவி பொழிவதாகப் பெயர் வாங்கி விட்டீர். இங்கே ஒன்றும் பொழியக் காணுமே!" என்று குத்தலாகக் கூறினார்.

சட்டென்று பதில் கூறினார் பாரதி. "மேகம், தான் விரும்பும் பொழுதுதான் மழை பொழியும். தமிழ்ப் பண்டிதருக்காகப் பயந்து பொழியாது. இதுகூடத் தமிழ் ஐயா அறியாததோ."

வகுப்பில் இருந்த பிள்ளைகள் சிரித்தார்கள். தமிழ் ஆசிரியரின் முகம் சுண்டிப் போயிற்று. வாய்மூடி மௌனி யானார் தமிழ் ஐயா.

சிறுவயதிலேயே பாரதிக்குத் திருமணம் நடை பெற்றது. அதாவது ஆயிரத்து எண்ணூற்றுத் தொண் ணூற்று ஏழாம் ஆண்டு சூன் மாதம் பதினைந்தாம் தேதி. அப்போது பாரதிக்கு வயது பதினான்கு.

கடையம் செல்லப்ப அய்யரின் மகள் செல்லம்மாள், பாரதியின் வாழ்க்கைத் துணைவியானாள். அப்போது செல்லம்மாளுக்கு வயது ஏழு. பதினான்கு வயது நிரம்பிய மணமகனும் ஏழுவயது நிரம்பிய மணமகளும் திருமண மூலம் இணைந்தனர்.

அந்தக் காலத்தில் திருமண விழா ஒரே நாளில் முற்றுப் பெறாது. நான்கு நாட்கள் தொடர்ந்து நடை பெறும். அந்த முறை பற்றிப் பாரதி திருமணமும் நான்கு நாட்கள் தொடர்ந்து நடைபெற்றது.

* நாலாவது நாள். விழா முற்றுப் பெறும் நேரம் ஆசுகவி ஒன்று பாடினார் பாரதியார்; சிறப்பாகத் திருமண

---

* செல்லம்மாள் பாரதி—பாரதியார் சரித்திரம்

விழாவை நடத்திய தமது மாமனாரைப் பாராட்டினார். விழாவுக்கு வந்திருந்த பலரையும் பாராட்டினார். அந்தக் கவி கேட்ட பலரும் மகிழ்ந்தனர். பாரதியைப் பாராட்டினர்.

திருமணம் நடப்பதற்கு முன்பே கணவன் மனைவி ஆகிய இருவரும் கலந்துரையாடுவது இக்கால வழக்கம். ஆனால் அக்காலம் அப்படிப் பட்டது அன்று. கலியாண மாகிவிட்ட போதிலும் கணவன், மனைவியுடன் பேச மாட்டான். அப்படிப் பேச நினைத்தாலும் பூனையைக் கண்ட எலிபோல் பயந்து பாய்ந்து ஓடி ஒளிந்து கொள் வாள் மனைவி. இது அந்தக் காலத்துக் கட்டுப்பாடு.

இந்தக் கட்டுப்பாட்டை உடைத்தார் பாரதி; வழக்கத் துக்கு மாறாக நடந்து கொண்டார்; செல்லம்மாளை நோக்கிக் காதல் பாட்டு பாடினார். அந்தப் பாட்டு அண்ணாமலைரெட்டியாரின் காவடிச் சிந்து போல அமைந்த ஒன்று. அது வருமாறு:

*தேடக் கிடைக்காத சொர்ணமே —உயிர்
சித்திரமே! மட அன்னமே! —அரோ
சிக்குது பால் தயிர் அன்னமே!—மாரன்
சிலைமேல் கணை கொலை வேலெனு
விரிமார்பினில் நடுவே துளை
செய்வது கண்டிலை இன்னமே —என்ன
செய்தேனோ நான் பழி முன்னமே
கன்னத்தினில் குயில் சத்தமே —கேட்கக்
கன்றுது பார் என் சித்தமே. —மயக்
கஞ் செய்யுது காமப் பித்தமே —உடல்
கனலேறிய மெழுகாயினது
இனியாகிலும் அடிபாதகி

* செல்லம்மாள் பாரதி—பாரதியார் சரித்திரம்.

கட்டியணைத்தொரு முத்தமே —தந்தால்
கை தொழுவேன் உனை நித்தமே

பலர் முன் தம் கணவர் இவ்வாறு பாடுதல் கேட்டுச் செல்லம்மாள் பெரிதும் நாணங் கொள்வார். ஆனால் மற்றவர் என்ன நினைக்கிறார் என்பது பற்றிச் சிறிதும் கவலைப்பட மாட்டார் பாரதியார்.

நாடகத்தில் காவியத்தில் காதலென்றால்
நாட்டினர் தாம் வியப் பெய்தி நன்றும் என்பர்
ஊடகத்தே வீட்டினுள்ளே கிணற்றோரத்தே
ஊரினிலே காதலென்றால் உறுமுகின்றார்.
பாடை கட்டி அதைக் கொல்ல வழி செய்கின்றார்.
பாரினிலே காதலென்னும் பயிரை மாய்க்க
மூடரெலாம் பொறாமையினால் விதிகள் செய்து
முறை தவறி இடரெய்திக் கெடுகின்றாரே.

என்று பாடிய கவியன்றோ?

எட்டயபுரத்து மண் கரிசல் பூமி. எனவே அங்கே பருத்திப் பயிர் நன்கு விளைந்தது. அந்தப் பருத்தியைத் தூத்துக்குடி வியாபாரிகளிடம் விற்று வந்தார்கள் எட்டயபுரம் ஜமீன் விவசாயிகள். அதிலே விவசாயிகளுக்கு லாபம் அதிகம் கிடைக்கவில்லை. வியாபாரிகளே லாபமடைந்தார்கள்.

எட்டயபுரத்திலேயே ஒரு பஞ்சாலையை ஏற்படுத்தினால் நல்ல லாபம் கிடைக்குமே என்று எண்ணினார் பாரதியின் தந்தை; கூட்டாகச் சிலரைச் சேர்த்துக் கொண்டார்; ஒரு பஞ்சாலையை நிறுவினார்.

கூட்டுச் சேர்ந்தவர்கள் ஐயரை ஏமாற்றி விட்டார்கள். அதனாலே தொழில் வெற்றிபெறவில்லை. லாபகரமாக

நடக்கும் என்று எண்ணிய ஐயர் ஏமார்ந்தார். நஷ்டமே வந்தது.

கூட்டுச் சேர்ந்தவர்கள் விலகிக் கொண்டார்கள். நஷ்டம் முழுவதும் ஐயர் தலையில் வீழ்ந்தது. கடன்காரர் ஆனார் ஐயர். தொல்லைக்கு ஓர் எல்லை இல்லை,

ஐயர் செல்வாக்குடன் இருந்தபோது சுற்றியிருந்த கூட்டம் பறந்தோடி விட்டது. வலிய வந்து பேசிய நண்பர் பலரும் எட்டி நின்றார்கள். உறவினர் எவரும் வரவில்லை. பாவம்! என்ன செய்வார் ஐயர்! மனமுடைந்து விட்டார்; உடல் மெலிந்தார்; நோய் வாய்ப்பட்டார். காலன் வந்து அவர் உயிரைக் கவர்ந்து சென்றான்.

பதினாறு வயதை எட்டிப் பாராத பாரதி என்ன செய்வார்? ஆதரிப்பார் எவருமின்றித் தவித்தார். ஆறுதல் கூறுவதற்கு எவருமிலர்.

> **தந்தை போயினன்; பாழ் மிடி சூழ்ந்தது**
> **தரணி மீதில் அஞ்சலென்பார் இலர்**
> **எந்த மார்க்கமும் தோன்றிலது! என் செய்கேன்**
> **ஏன் பிறந்தேன் இத்துயர் நாட்டினிலே**

என்று வருந்தி ஏங்கினார் பாரதி; தவித்தார்; துடித்தார்.

சின்னச்சாமி ஐயரின் சகோதரி குப்பம்மாள். இவரது கணவரது பெயர் கிருஷ்ணசிவன். இவர்கள் காசியிலே வாழ்ந்து வந்தார்கள்; தமிழ் நாட்டிலிருந்து காசிக்குச் செல்கிறவர்களுக்கு வேண்டிய உதவி செய்து வந்தார்கள்.

பாரதியின் நிலையை அறிந்தாள் குப்பம்மாள். காசிக்கு வந்து விடுமாறு பாரதியை அழைத்தாள்; அத்தையின் அழைப்புக்கு இணங்கினார் பாரதி; காசிக்குச் சென்றார். அத்தையின் ஆதரவில் வாழ்ந்தார்.

காசி இந்து கல்லூரியிலே சேர்ந்தார் பாரதி; இந்தி, சம்ஸ்கிருதம் ஆகிய இரு மொழிகளையும் கற்ருர்; மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேர்ச்சி பெற்ருர். பிறகு அலாகாபாத் சர்வகலாசாலையின் பிரவேச பரீட்சையில் முதன்மை பெற்றுத் தேறிஞர்.

காசி வாசம் அவரது கருத்திலே பெரும் புரட்சியை உண்டு பண்ணியது. வைதிகம் என்பது குடுமியில் இல்லை என்று கருதிஞர். பக்தி என்பது விபூதியில் இல்லை என்று எண்ணிஞர். எனவே, ஒரு நாள் தமது குடுமியை எடுத்து விட்டு முடியை கிராப் செய்து கொண்டார் பாரதி; மீசையும் வைத்துக் கொண்டார்.

வைதிக பிராமண குடும்பத்தில் பிறந்த ஒருவன், இந்த மாதிரி மீசையும், கிராப்புமாகக் காட்சியளித்தது கண்டார் சிவன்; சீறிஞர்.

"என்னடா! சுப்பையா! எதற்காக இந்தக் கோலம்? எதற்காகக் குடுமியை எடுத்தாய்? எதற்காக இந்த மாதிரி மீசை வைத்துக் கொண்டாய்? இன்று முதல் நீ எங்கள் பந்தியில் சேர்ந்து சாப்பிடக் கூடாது. என்றைக்கு நீ குடுமி வைத்துக் கொண்டு, மீசையை எடுத்து விட்டு வருகிருயோ அன்றுதான் சேர்ந்து சாப்பிடலாம்" என்று கத்திஞர்.

பாரதி என்ன செய்தார்? பதில் பேசிஞரா? இல்லை. பேசாமல் மாடிக்குப் போய் விட்டார். சிறிது நேரம் சென்றது. அத்தை குப்பம்மாள் மாடிக்குச் சென்ருர். பாரதிக்கு உணவு அளித்து வந்தார்.

சிவனின் சைவம் பாரதியின் புரட்சி கண்டு சீறியது. புரட்சிக்கு இடமளிக்க மறுத்தது. சைவம் பறிபோய் விட்டதாக எண்ணிப் பதறியது.

பாரதியின் புரட்சி உள்ளமோ சிவனின் கட்டுப் பாட்டை ஏற்க மறுத்தது; மீறியது.

காசி வாழ்க்கை கசந்தது. சில நாட்கள் சென்றன. அங்கிருந்து புறப்பட்டார் பாரதி. எட்டயபுரம் சேர்ந்தார். எட்டயபுரம் ஜமீந்தார் அவருக்கு ஒரு வேலை அளித்தார். என்ன வேலை? நாள்தோறும் வரும் பத்திரிகைகளைப் படித்து ஜமீந்தாருக்குச் சொல்லவேண்டும். இதுதான் வேலை. மாதச் சம்பளம் ரூபாய் இருபது.

இந்த வேலையை இரண்டு ஆண்டுகள் செய்தார் பாரதியார். அதாவது 1902 முதல் 1904 வரை. அந்த சமயத்திலே ஒருநாள். எட்டயபுரம் சோதிட வித்வான் குருகுஹதாசப்பிள்ளை வீட்டுத் திண்ணையிலே பலர் அமர்ந்து பேசிக் கொண்டு இருந்தனர். அவருள் பாரதியாரும் ஒருவர்.

அப்பொழுது 'வாங்கா' சப்தம் கேட்டது. வாங்கா என்பது ஓர் ஊது வாத்தியம். அதை வாயில் வைத்துக் கொண்டு ஊதுவார்கள். அவ்வாறு எழுப்பும் சப்தம் நீண்ட தூரம் வரை கேட்கும்.

எட்டயபுரம் ஜமீந்தார் தெருவிலே வருகிறபோது இந்த வாத்தியத்தை ஊதிக்கொண்டு இருவர் முன்னே ஓடி வருவார்கள். சிறிது பின்னே ஜமீந்தார் வருவார்.

வாத்திய சப்தம் கேட்ட உடனே தெருவிலே உட்கார்ந்திருப்பவர் எல்லாரும் எழுந்து நிற்க வேண்டும். ஜமீந்தார் அந்த இடத்தைக் கடந்து செல்லும்வரை நின்றுகொண்டே இருக்கவேண்டும்.

*இந்த வழக்கத்தைப் பின்பற்றி எல்லாரும் எழுந்து நின்றனர். பாரதியார் என்ன செய்தார்? Proclamation of

---

*கூறியவர் —எட்டயபுரம் குருகுகதாசப்பிள்ளை

Stupidity என்று சொல்லி விட்டுத் திண்ணையிலே உட்கார்ந்து விட்டார்.

அந்த வம்புச் சாவடியிலே இருந்தவர் ஒருவர் ஜமீந்தாரிடம் இந்தச் செய்தியைக் கூறி, வத்தி வைத்து விட்டார். அதனுல் கோபம் கொண்ட ஜமீந்தார் பாரதியை வேலையினின்று நீக்கிவிட்டார்.

அன்று இரவு—

ஒரு தெருவிலே தீப்பற்றிக் கொண்டது. அப்போது அங்கே பாரதியும் சென்ருர்.

"என்ன சுப்பையா! மகாராஜா உன்னை வேலையிலிருந்து நீக்கிவிட்டாராமே!" என்று கேட்டார் நண்பர் ஒருவர்.

"ஆம்! அன்று இலங்கையிலே ஒரு கவியைத் துன்புறுத்தினன் இராவணன். இலங்கையில் தீ மூண்டது. இங்கே எனக்கு—ஒரு கவிக்கு—துன்பம் கொடுத்தார் இந்த மகாராஜா. இங்கேயும் தீ மூண்டது" என்ருர் பாரதி. கவி = கபி = குரங்கு.

அப்போது பாரதிக்கு வயது இருபது.

*பாரதியார் வேலை நீக்கப் பட்ட செய்தியறிந்தனர் நண்பர் சிலர். மீண்டும் அவரை அந்த வேலையில் அமர்த்த முயன்றனர்.

"எட்டயபுரம் மகாராஜா சுண்டைக்காய் அளவு பூமியை வைத்திருக்கிருர். உலகம் பெரிது. அதிலே எனக்கு இடமிருக்கிறது என்று அவரிடம் சொல்"

இவ்வாறு கூறினுர் பாரதி. மீண்டும் ஜமீனில் வேலை செய்ய மறுத்துவிட்டார்.

---

*கூறியவர்—குருகுகதாசப்பிள்ளை.

பாரதியின் உள்ளம் கவர்ந்த ஆங்கிலக் கவி இருவர். ஒருவர் ஷெல்லி. இன்னொருவர் பைரன். இவ்விருவர் தம் கவிகளிலும் ஈடுபட்டார் பாரதி.

1902-ம் ஆண்டு எட்டயபுரம் பெருமாள் கோவில் தெருவிலே சங்கம் ஒன்று நிறுவினர்; இலக்கிய வட்டம். அதன் பெயர் 'ஷெல்லியன் கில்டு' என்பது.

அந்த இலக்கிய வட்டத்திலே உள்ள நண்பர்களுக்கு ஷெல்லி, பைரன் ஆகியோரின் கவிகளைப் படித்துக் காட்டி விமரிசனம் செய்தார் பாரதி.

ஜமீந்தார்மீது மனவருத்தம் ஏற்பட்ட பிறகு எட்டய புரத்தில் இருத்தல் இயலுமா? இருந்துதான் என்ன செய்வது? எனவே, பாரதியார் எட்டயபுரத்தை விட்டுப் புறப்பட்டார்; மதுரை சேர்ந்தார். எம். கோபால கிருஷ் ணய்யர் என்பவர் பாரதியின் நண்பர். வேலை தேடி மதுரை வந்ததாக அவரிடம் தெரிவித்தார் பாரதி. அது கேட்ட ஐயர் பாரதியை மற்ருெரு நண்பரிடம் அனுப்பினர்.

அந்த நண்பர் பெயர் சண்முகம் பிள்ளை என்பது; அரசன் சண்முகனர். இவர் மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராக இருந்தார்; உடல்நிலை காரண மாக மூன்று மாத ஓய்வு எடுக்க எண்ணியிருந்தார்.

அந்த மூன்று மாத காலம் தமக்குப் பதிலாக வேலை பார்க்க விருப்பமா என்று கேட்டார் சண்முகம்பிள்ளை. பாரதியாரும் இணங்கினர்; மதுரை சேதுபதி உயர் நிலைப் பள்ளியின் தமிழாசிரியர் வேலையை ஏற்றுக் கொண்டார்; 1904-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல் மூன்று மாதம் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார். மாதச் சம்பளம் ரூபாய் பதினேழரை.

*அப்போது ஒரு நூல் இயற்றினர். அதன் பெயர் "மூடசிகாமணிகள் நட்சத்திரமாலை" என்பது. நட்சத்திரங்கள் இருபத்தி ஏழு. அதேபோல் இந்த நூலும் இருபத்தி ஏழு பாக்களால் ஆனது. அதிலே சிலரைக் குறிப்பிட்டு வசை பாடியிருந்தார் பாரதியார்.

அதைப் பலரிடம் படித்துக் காண்பித்தார். கந்தசாமிக் கவிராயர் போன்ருர் பலர் பாரதியைப் பாராட்டினர். ஆனுல் ஒருவர் மட்டும் வேறு விதமான கருத்துத் தெரிவித்தார்.

"இந்த நூலில் கூறப்பட்டிருக்கும் செய்திகள் எல்லாம் உண்மை. ஆயினும் இதனுலே உனது எதிர் காலம் பாதிக்கப்படும். எனவே இது வேண்டாம்" என்ருர் அவர். அவர் பெயர் மதுரை சங்கப்பா; அவர் ·வயது சென்றவர். பெரிய வேதாந்தி.

சங்கப்பாவின் கருத்தை ஏற்றுக் கொண்டார் பாரதி. பாடல் எழுதி வைத்திருந்த காகிதத்தைக் கிழித்துப் போட்டார்.

---

*கூறியவர்—எட்டயபுரம் குருகுகதாசப்பிள்ளை.

# அரசியல் எதிரொலி

அந்த சமயத்திலே நாட்டிலே புதிய விழிப்புணர்ச்சி தோன்றி வளர்ந்துகொண்டு வந்தது. அது சமூகத்தின் மேல் மட்டத்திலேயே பரவியிருந்தது. இந்த விழிப் புணர்ச்சி எதனால் ஏற்பட்டது? காங்கிரஸ் .மகாசபையினால் ஏற்பட்டது. சென்னையிலே இதற்குத் தூண்டுகோலாக விளங்கியவர் ஜி. சுப்பிரமணிய ஐயர். 'சுதேசமித்திரன்' பத்திரிகையைத் தொடங்கி, அப்பத்திரிகை மூலம் இந்த உணர்ச்சியைப் பரப்பி வந்தார் ஐயர்.

ஆங்கிலத்தில் வரும் செய்திகளை உணர்ச்சியுடன் அழகான தமிழில்—எளிய தமிழ் நடையில்—வடித்துத் தரத்தக்கவர் ஒருவரை அவர் தேடிக் கொண்டிருந்தார். தற்செயலாக மதுரைக்கு வந்தார் அவர். அவர்தம் வரவு அறிந்தார் பாரதி.

பாரதி சுப்பிரமணியம் பத்திரிகை சுப்பிரமணியத்தை நாடினார்; சென்றார்; வென்றார். விளைவு என்ன? "சுதேச மித்திரன்" பத்திரிகையில் உதவியாசிரியர் வேலை ஏற்றார் பாரதி. 1904-ம் ஆண்டு நவம்பர் மாதத்திலே "சுதேச மித்திரன்" உதவியாசிரியர் ஆனார். அப்போது பாரதிக்கு வயது இருபத்தி இரண்டு.

அந்தக் காலத்தில் "சுதேசமித்திரன்" எங்கிருந்து வெளி வந்தது? சென்னை ஜார்ஜ்டவுன் அரண்மனைக்காரத்

தெருவிலே ஒரு வீட்டிலிருந்து வெளி வந்தது. அரண்மனைக் காரத் தெருவிலே இப்போது அந்தோணியார் ஆலயம் இருக்கிறதே, அதற்கு எதிர்ப்புறத்தில் இருந்தது அந்த வீடு.

சம்பளம் அதிகம் இல்லை. எனினும் உற்சாகமாகப் பேசி வேலை செய்ய வைத்துவிடுவார் ஐயர். மாலையிலே வேலை முடித்துவிட்டு மேல் மாடியிலே திறந்த வெளியிலே நின்று கொண்டிருப்பார் பாரதியார். அங்கிருந்து கடலைப் பார்த்துக் கொண்டிருப்பார். வேலைக்காரன் ஒருவன் வருவான்; ஒரு டம்ளர் காப்பியைக் கொடுப்பான்; "ஐயர் இதைக் கொடுக்கச் சொன்னார்" என்பான்.

அதை வாங்கி அருந்திக் கொண்டிருப்பார் பாரதி. ஐயரும் வருவார்.

"பாரதி! இதைப் படித்தாயா?" என்று சொல்லிக் கொண்டே ஒரு பத்திரிகையைக் கொடுப்பார்.

"ஓ! படித்தேனே!" என்பார் பாரதி.

"அதை நமது பத்திரிகையிலே வெளியிட்டால் எவ்வளவு நன்றாயிருக்கும்" என்பார் ஐயர்.

"ஓ! வெளியிடலாமே!" என்பார் பாரதியார்.

"அந்த சாமர்த்தியம் உன்னைத் தவிர வேறு எவருக்கு இருக்கிறது. நீ காளிதாசன். ஆனால் நான் போஜனாக இல்லையே!" என்பார் ஐயர்.

"கொடுங்கள்" என்று வாங்கிக் கொள்வார் பாரதி.

"இப்பொழுது ஒன்றும் அவசரமில்லை. வீட்டுக்குக் கொண்டு போய், நன்றாக நிதானமாக எழுதி, நாளை கொண்டு வந்தால் போதும்" என்று சொல்லிக் கொண்டே போய் விடுவார் ஐயர்.

தம்பு செட்டித் தெருவில் இருந்த ஒரு வீட்டில் குடியிருந்தார் பாரதியார். வக்கீல் துரைசாமி ஐயர் மண்ணடியிலுள்ள ராமசாமி தெருவில் இருந்தார். இருவரும் நண்பர் ஆயினர். சர்க்கரைச் செட்டியாரும் பாரதியின் நண்பர் ஆனார். இவர்கள் எல்லாரும் மாலை நேரத்திலே கணேஷ் கம்பெனியில் கூடுவார்கள். கணேஷ் கம்பெனியார் அந்தக் காலத்தில் புகழ்பெற்ற காப்பிக் கொட்டை வியாபாரிகளாக விளங்கினார்கள். இந்தக் கம்பெனி முதல்வர் ராமசேஷய்யர் இவர்களுக்கு ஆதரவு அளித்து வந்தார்.

கணேஷ் கம்பெனியில் ஒன்று கூடும் நண்பர்கள் வெகு உற்சாகமாகப் பேசிக்கொண்டே கடற்கரை செல்வார்கள். மணலில் அமர்ந்து அரட்டை அடிப்பார்கள். பற்பல விஷயங்கள் பற்றி விவாதிப்பார்கள். திட்டங்கள் தீட்டுவார்கள். பாரதியார் பாடுவார். என்ன பாட்டு? கோபாலகிருஷ்ண பாரதியின் நந்தன் சரித்திரப் பாடல்கள். அந்தப் பாடல்களிலே பெரிதும் ஈடுபட்டிருந்தார் பாரதியார். பாடல்களை எல்லாரும் கேட்டு இன்புறுவர். பின்பு எழுந்து அவரவர் இருப்பிடம் சேர்வர். இவ்வாறு நாள்தோறும் நடக்கும்.

*சமூக சீர்திருத்தம் என்பது அந்த நாளிலே பெரிதும் பேசப்பட்ட ஒன்று. சமூக சீர்திருத்த சங்கம் ஒன்றும் சென்னையில் இருந்தது. அதன் பெயர் 'சோஷல் ரிபார்ம் அசோசியேஷன்' என்பதாகும்.

இச்சங்கத்தினர் எல்லாரும் கூடுவர்; சமூக சீர்திருத்தம் பற்றி வானளாவப் பேசுவர். என்ன சீர்திருத்தம்? சமபந்தி போஜனம் செய்யலாமா? கூடாதா? இதுதான் சீர்திருத்தம். 'எல்லா ஜாதியினரும் ஒன்று கூடி உண்பதில்

*கூறியவர்—சர்க்கரைச் செட்டியார்.

தில்லை. நாட்டின் முன்னேற்றம் கருதி எல்லாரும் ஒருங்கே அமர்ந்து உண்ணலாம்.' இப்படிப் பேசுவார்கள். நீண்ட தீர்மானங்கள் நிறைவேற்றுவார்கள். அவ்வளவு தான். அதற்குமேல் ஒன்றும் செய்யமாட்டார்கள்.

இவர்களை ஏளனம் செய்தார் பாரதி; மேடைப் பிரசங்கம் செய்தாலோ, தீர்மானம் நிறைவேற்றி விட்டா லோ சீர்திருத்தம் வந்துவிடுமா?

வேண்டுவது செயல்; செயல்.

இதுதான் பாரதியின் கருத்து. தமது கருத்தைச் செயலில் காட்ட விரும்பினார் பாரதி; சங்கம் ஒன்று தோற்றுவித்தார். அந்த சங்கத்தின் பெயர் 'ராடிகல் கிளப்'. வழக்கறிஞர் எஸ். துரைசாமி ஐயர், சர்க்கரைச் செட்டியார், ஜெயராம் நாயுடு ஆகியவர் பலர் அச்சங்கத் திலே அங்கம் வகித்தனர். மண்ணடி ராமசாமி தெருவிலே வக்கீல் துரைசாமி ஐயர் வீட்டிலே இருந்தது சங்கம்.

தீர்மானம் நிறைவேற்றுவது மட்டும் போதாது. பிராமணர் பிராமணரல்லாதார் எல்லாரும் சமமாக உட்கார்ந்து உண்பது மட்டும் போதாது. பிராமணரல்லா தார் சமையல் செய்ய வேண்டும்; பிராமணர் சாப்பிட வேண்டும். இப்படி ஏற்பாடு. சமையல் செய்தவர் ஜெயராம் நாயுடு. மற்றையோர் சமமாக அமர்ந்து உண்டனர். அந்தக் காலத்திலே பெரியதொரு சமூகப் புரட்சியை உண்டு பண்ணியது இச்சங்கம்.

ஆயிரத்துத் தொளாயிரத்து ஐந்தாம் ஆண்டு. நமது விடுதலைப் போரிலே முக்கியமானதோர் ஆண்டு இது. இந்த ஆண்டுதான் நமது விடுதலைப் போருக்கு வேகம் கொடுத்தது.

இந்த ஆண்டிலேதான் வங்காளம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. அப்பொழுது இந்திய வைசிராயாக இருந்தவர் கர்ஸான் என்பவர். 1905ம் ஆண்டு அக்டோபர் மாதத்திலே வங்கப் பிரிவினை அமுலுக்கு வந்தது.

இந்தப் பிரிவினையை எதிர்த்து நாடு முழுவதும் கிளர்ச்சி நடைபெற்றது.

கண்டனக் கூட்டங்கள் ஒன்று? இரண்டா? ஆயிரம் என்றால் அது மிகக் குறைவு. 1905ம் ஆண்டு டிசம்பர் மாதம் காசியிலே கூடியது காங்கிரஸ்; வங்கப் பிரிவினையைக் கண்டித்தது.

அதிகாரவர்க்கம் அசைந்து கொடுக்கவில்லை. 'வங்கப் பிரிவு முற்றுப்பெற்ற விஷயம்' என்றது. ஆனால் கிளர்ச்சி ஓயவில்லை; தொடர்ந்தது.

கிளர்ச்சி வங்காள மாகாணத்துடன் நிற்கவில்லை. இந்திய நாடு முழுவதும் நடந்தது. வங்காளத்திலே இக் கிளர்ச்சியை முன்னின்று நடத்தியவர் சுரேந்திரநாத் பானர்ஜி, விபினசந்திரபாலர் முதலியோர்.

பாஞ்சாலத்திலே பாஞ்சால சிங்கம் லாலா லஜபதிராயும், மகாராஷ்டிரத்திலே பாலகங்காதர திலகரும் வங்கப் பிரிவினையை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தனர்.

காங்கிரசுக்குள்ளே இரண்டு விதமான கருத்துத் தோன்றலாயிற்று. பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் நல்ல பிள்ளைகளாகவே நடந்து கொண்டு, அதனிடம் மன்றாடிக் கேட்டுக் கேட்டு நன்மை பெறவேண்டும் என்பது ஒரு விதக் கருத்து. இக்கருத்துக் கொண்டவர் கோபால கிருஷ்ண கோகலே, பிரோஸ்ஷா மேத்தா போன்றோர்.

பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் மண்டியிட்டுப் பிச்சை கேட்க வேண்டுவது இல்லை. நமது பலத்திலேயே நாம்

நிற்க வேண்டும். கிளர்ச்சி செய்து நமக்கு வேண்டியவற்றை அடைய வேண்டும் என்பது இன்னொரு கருத்து. இக் கருத்துக் கொண்டவர் பாலகங்காதர திலகர், விபின சந்திர பாலர் முதலியோர்.

இந்த இரண்டு விதமான கருத்துக் கொண்டவர்களும் வெளிப்படையாக மோதிக் கொள்ளவில்லை. ஆனால் இவ்விரு கோஷ்டியினரும் தங்கள் கருத்துக்கு ஆக்கமும் ஆதரவும் தேடிக்கொண்டே வந்தனர்.

இந்தக் கால கட்டத்தில்தான் பாரதியார் அரசியலில் பிரவேசித்தார். பாரதியாரின் கருத்து முழுவதும் திலகர் பக்கமே நின்றது. ஆனால் ஜி. சுப்பிரமணிய அய்யரோ அதற்கு இடம் கொடுக்கவில்லை.

'ஆசையும் நேசமும் ஆனந்தமும் அங்கே; பாசலும் பேசலும் பிதற்றலும் இங்கே, என்ற கோபால கிருஷ்ண பாரதியின் பாட்டுக்கு ஓர் எடுத்துக் காட்டாக விளங்கினார் ஜி. சுப்பிரமணிய அய்யர்.

திலகர் கோஷ்டியிடத்திலே அவருக்குப் பற்றுதல் இருந்தது; மதிப்பும், மரியாதையும் இருந்தன. ஆயினும் கோகலே கோஷ்டியை எதிர்த்து நிற்க அவர் விரும்பவில்லை.

ஆகவே, ஜி சுப்பிரமணிய அய்யர் பாரதியிடம் அன்பு காட்டினார்; ஆதரவு அளித்தார்; ஆனால் தீவிரமாக "சுதேசமித்திர"னில் எழுத அவர் இடமளித்தாரிலர்.

சுதேசமித்திரனில் சேர்ந்தபோது பாரதியாரின் அரசியல் அறிவு அவ்வளவு தெளிவு பெறவில்லை எனலாம். சுதேசமித்திரனில் சேர்ந்த பின்னர் நாளடைவில் அவரது அரசியல் அறிவு கூர்மை பெற்றது; தீவிரமடைந்தது.

பாரதியாரின் அரசியல் அறிவை நன்கு பட்டை போட்டுத் தீட்டிவிட்டது சுதேசமித்திரன்.

தீவிரக் கட்சியில் நின்ற பாரதியார் தமது கருத்துக்களை எந்த விதமான தடையுமின்றி வெளியிடத் தக்கதோர் பத்திரிகையை விரும்பினார். அவரைப் போலவே வேறு சிலரும் விரும்பினர்.

அவருள் ஒருவர் என். திருமலாச்சாரியார் என்பவர். அவர் ஒரு புதிய பத்திரிகையை வெளியிடுவதற்கு வேண்டியன செய்தார். புதிய பத்திரிகைக்கு 'இந்தியா' என்று பெயரிட்டனர்.

1906ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் வாரந்தோறும் வெளிவரத் தொடங்கியது 'இந்தியா.'

* 'இந்தியா' பத்திரிகையின் காரியாலயம் பிராட்வேயில் இருந்தது; பிராட்வேயில் 34 என்ற இலக்கமிட்ட இடத்திலிருந்து வெளிவந்தது; அதே இடத்தில் அதன் அச்சகமும் இருந்தது. அதன் பெயர் 'இந்தியா அச்சகம்' என்பது.

பத்திரிகையின் அளவு அரை கிரவுன் சைஸ். அதாவது 15 அங்குல நீளம்; 10 அங்குல அகலம். பக்கங்கள் எட்டு. சென்னையில் ஒரு பிரதியின் விலை முக்கால் அணு; வெளியூர்களில் ஓரணு, பத்திரிகையின் பதிவு எண் எம். 578.

இப்பத்திரிகையின் ஆசிரியர் பொறுப்பை மேற்கொண்டார் பாரதியார். பத்திரிகையின் காரியாலய நிர்வாகியாக இருந்தவர் எம். பி. திருமலாச்சாரி என்ற இளைஞர். பத்திரிகையின் சொந்தக்காரராகவும், வெளி

---

* சித்திர பாரதி-

யிடுபவராகவும் பதிவு செய்து கொண்டவர் எம். ஸ்ரீநிவாசன் என்பவர்.

தமிழ் நாட்டில் முதன் முதலாக அரசியல் கார்ட்டூன் வெளியிட்ட பத்திரிகை 'இந்தியா'வே. பத்திரிகையின் முதல் பக்கத்தில் இந்த அரசியல் கார்ட்டூன் வெளி வந்தது.

*'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்' என்ற மூன்று சொற்களும் 'இந்தியா' பத்திரிகையின் உயிர் நாடியாக தலைப்பிலே அச்சிடப்பட்டிருந்தன. இந்த மூன்று சொற்களும் பிரஞ்சுப் புரட்சியின் உயிர் நாடியான கோஷங்கள். இவற்றையே 'இந்தியா' பத்திரிகையின் உயிர்நாடி கோஷமாகக் கொண்டார் பாரதியார்.

காங்கிரசுக்குள்ளே உருவாகி வளர்ந்து வந்த புதிய கட்சியின் கருத்துக்களை எல்லாம் மிகத்தெளிவாக விளக்கி வந்தது 'இந்தியா' பத்திரிகை. அம்மட்டோ! பாலகங்காதர திலகர், விபின சந்திரபாலர் ஆகியவர் களுக்குச் சமமாகத் தமிழ் நாட்டிலே விளங்கினார் பாரதியார்.

"ஒரு நாளும் காங்கிரசாரின் கெஞ்சுதல்களுக்குச் செவி கொடுக்கப் போகாதவர்களாகிய கவர்ன்மெண்டாரை மீண்டும் மீண்டும் கெஞ்சுவதைத் தொழிலாக வைத்துக் கொண்டிருப்பதை நிறுத்திவிட்டு, ஜனங்களின் அபிவிருத்தி பயிற்சி என்பவற்றையே நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும்.

"கவர்ன்மெண்டாரின் சகாயமில்லாமல் ஜனங்கள் தாமாகவே செய்து கொள்ளக் கூடிய விஷயங்களில் முக்கியமாக சிரத்தை செலுத்த வேண்டும்.

---

* மண்டயம் ஸ்ரீநிவாசாச்சாரியார் - பாரதி புதையல்

"டம்பப் பேச்சுக்காரர்களின் தொகை குறைந்து தேசாபிவிருத்தியில் ஆத்திரமுள்ள வர்த்தகர், ஜமீந்தார்கள் என்றபேர் காங்கிரஸ் கூட்டத்தில் சேர்தற்குரிய முயற்சிகள் செய்யப்பட வேண்டும். இவையன்றி நமக்கு வேறு பல விருப்பங்களும் உள்ளவெனினும் இவையே முக்கியமானவை." (இந்தியா— 7-7-1906)

இவ்வாறு பாரதியார் காங்கிரஸ் மகாசபைக்கு யோசனை கூறினார்.

1906ம் ஆண்டு ஜூலைமாதம் 14ந் தேதி 'இந்தியா' பத்திரிகையில் இக்கருத்துக்களை மேலும் வற்புறுத்தினார் பாரதியார்.

"காங்கிரஸ் விஷயத்திலே நாம் சென்ற வாரம் ஓர் குறிப்பு எழுத நேரிட்டது. அதற்கப்பால் நமது கருத்தைப் பெரும்பாலும் தழுவியே அரிய தேச பக்தராகிய ஸ்ரீகாபர்தே 'ஹிந்து' பத்திரிகைக்கு ஒரு கடிதம் எழுதியிருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறோம். இந்தியாவின் நலத்தை விரும்பும் எல்லோருக்கும் காங்கிரஸ் முறைமைகளில் பல சீர்திருத்தங்கள் செய்ய வேண்டுமென்ற எண்ணம் ஒருங்கே தோன்றுகிறது. ஸ்ரீமான் காபர்தேயின் பிரரேபணைகள் காங்கிரஸ் தலைவர்களால் நன்கு கவனிக்கப் படுமென நம்புகிறோம். காங்கிரஸ் தீர்மானங்கள் சம்பந்தமாக முக்கியமான சீர்திருத்தம் நடக்க வேண்டும். கேட்போர் காது புளித்துப் போகும்படியாக, அந்நியர்கள் ஒருநாளும் செய்து கொடுக்கப் போகாத விஷயங்களை, அவர்கள் செய்து கொடுக்க வேண்டுமென்று கெஞ்சிக் கொண்டே இருப்பதற்கு அபரிமிதமான பணச் செலவு ஏன் செய்ய வேண்டும்? பிரம்மாண்டமான பொதுச்சபைகள் கூடியும், விண்ணப்பங்கள் அனுப்பியும், பிரார்த்தனைகள் புரிந்தும்,

மன்றுடியும், எத்தனையோ மாதங்களாக பெங்காளத் துண்டிப்பு விஷயத்தில் பெங்காளத்தில் செய்து வந்த பிரயத்தனங்கள் விழலுக்கிறைத்த நீராய் போய்விட்டன அல்லவா? பிரிட்டிஷார் நமது உண்மையான குறைகளை அறியாமலிருப்பதனாலேதான் அவற்றை நிவாரணம் செய்யாமலிருக்கிறார்கள் என்றும், நமது குறைகள் இன்ன என்று தெளிவாக எடுத்துக் காட்டி விடுவோமானால் உடனே அவற்றை நீக்கி விடுவார்கள் என்றும் நமது ஜனத் தலைவர்கள் நம்பினார்கள். அந்த சமயத்தில் காங்கிரஸ் முறைகள் ஒரு மாதிரியாக ஏற்பட்டன. இப்போது அந்த எண்ணம் மாறிவிட்டது. பிரிட்டிஷாரிடம் எத்தனை முறை எடுத்துச் சொன்னாலும் அவர்கள் தமது சௌகரியங்களுக்குச் சிறிது பிரதிகூலமாயிருக்கும் சீர்திருத்தங்களை ஒருநாளும் செய்யப் போவதில்லை. இவ்வாறு நாம் அறிந்து கொண்டதற்கப்பால் நமது காங்கிரஸ் முறைகளை மாற்ற வேண்டும் என்பது நமது கடமையாகின்றதல்லவா?......இந்த வருஷத்துக் காங்கிரஸ் நடக்கும் முன்பாகவே நமது தலைவர்கள் இவ்விஷயத்தில் சரியானபடி நிச்சயம் செய்து கொள்ள வேண்டும்."

1906 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கல்கத்தாவிலே நடைபெற இருந்தது காங்கிரஸ் மகாநாடு. அம்மகாநாட்டின் போக்கை உருவாக்கினார் பாரதியார் என்றால் அது மிகையாகாது. காங்கிரஸின் போக்கை உருவாக்கும் வகையிலேதான் மேற்குறித்தவாறு எழுதினார் பாரதியார்.

கல்கத்தா காங்கிரசுக்குத் தலைவர் யார்? வங்காளத்திலே புதிய கட்சியின் தலைவராக விளங்கிய விபினசந்திர பாலர், 'திலகரே தலைவராக வர வேண்டும்' என்று விரும்பினார்; விரும்பியதோடு மட்டுமன்றி ஊர் ஊராகச் சென்றும் பேசினார். ஆனால் கல்கத்தா காங்கிரசின்

'ஸ்டேஜ் மானேஜ'ராக விளங்கிய நிதானக் கட்சியினர் திலகர் தலைவராக வருவதை விரும்பவில்லை; பலவாறு முயன்றபின் தாதாபாய் நவுரோஜியையே கல்கத்தா காங்கிரஸ் தலைவராக்குவது என்று முடிவு செய்தனர். தாதாபாய் நவுரோஜியும் கல்கத்தா காங்கிரசுக்குத் தலைமை வகிக்க ஒப்புக் கொண்டார்.

நிதானக் கட்சியினர் என்ன நினைத்தனர்? தாதாபாய் தங்கள் பக்கம் நிற்பார் என்று எண்ணினர்.

"காங்கிரஸ் தலைமைக்குத் திலகர் வரக் கூடாது என்றும், தாதாபாய் நவுரோஜியே வரவேண்டும் என்றும் சொல்லும் ஜனங்களிலே சிலர் தாதாபாய் நவுரோஜி நிதானக் கட்சியைச் சேர்ந்தவர் என்று நினைக்கிறார்கள். இது மிகவும் தப்பான நம்பிக்கை.

"பிரிட்டிஷாரை சும்மா கெஞ்சிக் கொண்டிருப்பதில் பிரயோசனமில்லை. இந்தியர்கள் தமது நலத்தைத் தாமே தேடிக் கொள்ள வேண்டும்" என்ற கோட்பாட்டிலே தாதாபாய் நவுரோஜி திலகரைக் காட்டிலும் மிஞ்சியவர். இதையறியாத சிலர், தாதாபாய் நவுரோஜி சென்னை வக்கீல்களைப்போல கோழை ராஜ தந்திரக் கட்சியைச் சேர்ந்தவர் என்று நினைத்துக் கொண்டு இருக்கிறார்கள்." (17 - 11 - 1906)

இவ்வாறு "இந்தியா" பத்திரிகையில் எழுதினார் பாரதியார். 'தாதாபாய் காங்கிரசுக்குத் தலைமை வகிக்க வேண்டும்' என்று நிதானக் கட்சியார் தீர்மானித்த உடனே புதிய கட்சியார் அதை ஆதரித்தனர்; எதிர்க்கவில்லை. திலகர் தலைமை வகிக்க வேண்டும் என்பதையும் வற்புறுத்தாமல் விட்டனர்.

பிறகு என்ன? புதிய கட்சியார் தங்களுக்கு பலம் திரட்டுவதில் முனைந்தனர். இது பற்றி "இந்தியா"

பத்திரிகையில் 1906 டிசம்பர்・22ந்தேதி பின்வரும் செய்தி வெளியிடப்பட்டது:

"காங்கிரஸ் இனிது நடைபெறும் பொருட்டு எல்லா வகுப்பைச் சேர்ந்த ஜனத் தலைவர்களும் அரிய முயற்சிகள் செய்து வருகிறார்கள். இந்த சமயத்தில் நமது புதிய கட்சித் தலைவர்கள் சும்மா இருக்கவில்லை. காங்கிரஸ் நடப்பதற்கு இரண்டு தினங்களுக்கு முன்பாகவே இந்தக் கட்சியின் முக்கியஸ்தர்கள் ஏழு பேர் ஒருங்கு சேர்ந்து ஒரு மீட்டிங் கூடி காங்கிரசில் இப்போது நடக்க வேண்டிய முக்கிய திருத்தங்களைப் பற்றித் தமக்கு நியாயமாகப் புலப் படும் ஆலோசனைகள் செய்ய நிச்சயித்துள்ளார்கள்,

சென்னையில் புதிய கட்சிக்கு ஒரே பிரதிநிதியாய் இருக்கும் நமது தமிழ்ப் பத்திரிகையின் ஆசிரியர் மேற்படி சபைக்கு அவசியம் வந்து சேரவேண்டும் என்று ஸ்ரீ விபின சந்திரபாலரும், ஸ்ரீ திலகரின் உயிர்த் துணையாகிய ஸ்ரீ காபர்தேயும் வற்புறுத்திக் கடிதம் எழுதியபடியால், இப்பத்திராதிபர் அங்கு செல்கின்றார்.

மேற்கண்ட செய்தியிலிருந்து நமக்கு என்ன தெரி கிறது? வங்கத்தில் புதிய கட்சித்தலைவராக விளங்கிய விபின சந்திரபாலர் பாரதிக்கு அக்கட்சியில் எவ்வளவு முக்கிய இடம் அளித்திருந்தார் என்பது தெரிகிறது. திலகர் பெருமானின் உயிர்த்துணைவராகிய காபர்தேயின் அழைப்பு எதைக் குறிக்கிறது? திலகர், பாரதியை எவ்வளவு முக்கியமானவராகக் கருதினார் என்பதையே குறிக்கிறது.

'பாலபாரதம்' என்ற பெயரில் சங்கம்ஒன்று ஏற்படுத்தி யிருந்தார் பாரதியார். இச்சங்கத்தின் மூலம் புதிய கட்சிக் கொள்கைகளைப் பரப்பி வந்தார். இந்த சபை யானது 'இந்தியா' ஆபீசில் கூடியது. கல்கத்தா

காங்கிரசுக்கு டெலிகேட்டுகளாகப் பின்வரும் பெயர் களைத் தெரிந்தெடுத்தது.

1. சி. சுப்பிரமணிய பாரதி 2. எம். நரசிம்மம் 3. வி. நரசிம்மம் 4. ஆர். சபாபதி.

கல்கத்தா காங்கிரசுக்கு ஏற்பாடு செய்திருந்தவர்கள் பொருட்காட்சி ஒன்றுக்கும் ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்தப் பொருட்காட்சி பற்றி "இந்தியா" பத்திரிகையிலே ஒரு தலையங்கம் எழுதினார் பாரதியார். 1906-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 29ந் தேதியிட்ட 'இந்தியா'விலே அது வெளியிடப்பட்டுள்ளது. அது வருமாறு:

"பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் இந்தியரை அரசாட்சி புரிவதில் மிகவும் சமர்த்தான முறைகளை அனுசரிக் கிறார்கள் என்பதும் அம்முறைகள் எப்பொழுதும் அனுகூல மடைந்து வருகின்றன என்பதும் வெளிப்படையாய் தெரி கின்றது. ஜனங்கள் மிஞ்சுகிற சமயம் கெஞ்சுவதும், கெஞ்சுகிற சமயம் மிஞ்சுவதும் அவர்களுடைய பரிசுத்த முறைகளாம். அவ்வாறே இப்போது வங்காளத்து ஜனங் களும் ஜனத் தலைவர்களும் இருக்கும் நிலையை அறிந்து அதற்கேற்ற சில யோசனைகள் செய்தார்கள். பொருட் காட்சி நடத்தும் ஜனத்தலைவர்களுக்குங்கூட ஹால்களும் இடங்களும் கொடுத்துப் பரப்பினார்கள். பொருட்காட்சி விஷயத்தில் தங்களுக்கு மிகுந்த அநுதாபமும் உத்ஸாகமும் இருப்பது போல் நடித்தார்கள். பற்பல விளம்பரங்கள் விடுத்தார்கள்.

இதைக் கண்ட பாபு சுரேந்திரநாத் பானர்ஜி முதலிய ஜனத்தலைவர்கள் கவர்ன்மெண்டாருடைய உட்கருத்தை அறியாமல் அவர்களைப் பூரண விசுவாச முடையவர்கள் என்று எண்ணி மனங்குளிர்ந்து லார்டு மிண்டோவையே பொருட்காட்சியைத் திறக்கும்படி வேண்டினார்கள். இது

கல்கத்தா மாணுக்கர்களுக்கும் புதுக் கட்சித் தலைவர்க ளாகிய ஸ்ரீ விபின சந்திர பாலர் முதலியவர்களுக்கும் சரி யாகத் தோன்ருமையால் சரியில்லையெனத் தடுத்தார்கள். தடுக்கவே, இத்தனை காலமும் சுதேசியத்துக்கு உழைத்து வந்த மாணுக்கர்களை வாலண்டியர்களாகச் சேர்ப் பதின்றித் தள்ளிவிட்டார்கள். என்ன மடமை! கேவலம் விதேசியாகிய லார்டு மிண்டோவையே சந்தோஷிப்பிக்க வேண்டும் என்ற பேராசையால், இந்தியாவுக்குத் துணையாக நின்று சுதேசியத்துக்கு உழைக்கும் மாணுக்கர்களைத் தள்ள லாமா? அந்நியருடைய வாசனையே ஆகாது என்று விரதம் பூண்டு வளரும் சுதேசியத்தில் லார்டு மிண்டோவை ஏன் கலக்க வேண்டும்? இதனுல் சுதேசியத்துக்கு ஏதேனும் நன்மையுண்டா? வாய்ப்பேச்சு மட்டும் லார்ட் மிண்டோ இனிமையாய் பேசுவாரேயன்றி சுதேசியத்தில் அவருக்கு உண்மையான பற்று இருக்கும் என்று நம்பலாமா? பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்ததுபோல், சுதேசியப் பொருட்காட்சி, ஒருவரையும் அறியாமல் மிண்டோ காட்சி யாய் போய்விட்டது.''

பாரதியார் கல்கத்தா காங்கிரசுக்குப் போனுர் என்று சொல்லவும் வேண்டுமா? கல்கத்தா காங்கிரசுக்குப் போனுர்; புதிய கட்சித் தலைவர் பலருடன் நெருங்கிப் பழகினுர்; கலந்து பேசினுர்.

கல்கத்தாவுக்கு அருகே 'டம்டம்' என்ற பகுதியிலே நிவேதிதா தேவி இருப்பதாக அறிந்தார். அவரைச் சந்தித்தார்.

நிவேதிதை யார்?

சுவாமி விவேகானந்தர் அமெரிக்க நாட்டிலே வீர முழக்கம் செய்து விட்டு இங்கிலாந்துக்குச் சென்ருர். அங்கே தொடர்ந்து பிரசங்கம் செய்து வந்தார். ஏராளமான மக்கள் வந்து சொற்பொழிவு கேட்டனர். அப்படிக் கேட்

டவர் பலருள் ஓர் இளம் பெண்ணும் இருந்தார். அப்பெண் மணியின் பெயர் மார்க்கரெட் நோபிள் என்பது. இவர் ஓர் ஐரிஷ் பெண்மணி. அயர்லாந்து தேசம் பிரிட்டனின் விலாப் பக்கம் உள்ள நாடு. இந்த அயர்லாந்தின் மீதும் ஆதிக்கம் செலுத்தி ஆண்டு வந்தது பிரிட்டன். பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்து வந்தது அயர்லாந்து. எனவே அங்கு எல்லாருடைய ரத்தத்திலேயும் சுதந்திர வேகம் ஓடிக் கொண்டிருந்தது. அந்த நாட்டிலே பிறந்த இளம் பெண் எப்படியிருப்பாள்?

மார்க்கரெட் நோபிள் சுவாமி விவேகானந்தரின் ஆவேசச் சொற்பொழிவிலே பெரிதும் ஈடுபட்டார். அவரைப் பின் தொடர்ந்தார்; இந்திய நாட்டுக்கு வந்தார். நிவேதிதை என்று அவருக்குப் பெயர் சூட்டினார் சுவாமி விவேகானந்தர். கல்கத்தா அருகே இருந்து கொண்டு இந்தியப் பெண்களின் முன்னேற்றத்துக்குப் பாடுபட்டு வந்தார் நிவேதிதை.

இவரை தரிசித்தார் பாரதியார்; இவரிடம் உபதேசம் பெற்றார்; உணர்ச்சி பெற்றார்; பின்வருமாறு பாடினார்.

அருளுக்கு நிவேதனமாய் அன்பினுக்கோர்
கோயிலாய் அடியேன் நெஞ்சில்
இருளுக்கு ஞாயிறாய் எமதுயர் நா
டாம் பயிர்க்கு மழையாய் இங்கு
பொருளுக்கு வழியறியா வறிஞர்க்குப்
பெரும்பொருளாய்ப் புன்மைத்தாதச்
சுருளுக்கு நெருப்பாகி விளங்கிய தாய்
நிவேதிதையைத் தொழுது நிற்பேன்.

கல்கத்தா காங்கிரசின்போது ஸ்ரீ விபின சந்திர பாலருடன் நெருங்கிப் பேசினார் பாரதியார்; சென்னைக்கு

வருமாறு அழைத்தார். சென்னை திரும்பியவுடனே பாலரை வரவேற்கும் முயற்சியில் ஈடுபட்டார் பாரதியார்: 1907ம் ஆண்டு ஜனவரி மாதம் 26ந்தேதி "இந்தியா" விலே பின்வருமாறு எழுதினார்:

"இந்தியா இப்போதிருக்கும் இழிந்த நிலையிலிருந்து கை தூக்கி விடும் பொருட்டாக சுதேசியம் என்ற தெய்வம் வந்திருக்கிறது. இத்தெய்வம் நமது நாட்டிலே ஒவ்வொரு பாகங்களிலும் ஒவ்வொரு ரூபமாக அவதரிக்கின்றது. சிற்சில இடங்களிலே அவதாரங்கள் எல்லாக் கலைகளும் பொருந்தின வாகவும், சிற்சில இடங்களிலே கலைகள் குறைந்தனவாகவும் ஏற்பட்டிருக்கின்றன. பரிபூரண கலாவதாரம் என்று ஸ்ரீ திலக மகரிஷியைக் கூறலாம். அவருடைய பிராண சிநேகிதரும், கீழ் பெங்கால் முழுவதும் முடிசூடா அரசரு மாக விளங்கும் ஸ்ரீ விபினசந்திரர் சுதேசிய தெய்வத்தின் வழிகாட்டவதாரமாகக் கருதுவதற்குரியவர், ஹநுமான் எப்படி ஆகாரம் முதலிய எவ்விதமான லோக போகங் களையும் இச்சிக்காமல், 'ராம ராம' என்று தியானம் செய்து கொண்டே ஆனந்தமடைந்திருந்ததாகச் சொல்லப் படுகிறதோ, அதுபோல ஸ்ரீ விபின சந்திரரும் சதாகாலமும் பாரத நாட்டின் அபிவிருத்தியைப் பற்றியே தியானம் செய்வதிலேயே நாள் கழிக்கின்றார். ஹநுமானுக்கு எப்படி ராமாமிருதம் ஜீவனமாக இருந்ததோ அதுபோல விபின சந்திரருக்கும் "பாரதாமிருதம் ஜீவனம்" என்று கூறுதல் மிகவும் பொருந்தும். இவர் இன்னும் சில வாரங் களுக்குள்ளே சென்னை மாகாணத்துக்கு யாத்திரையின் பொருட்டாகவும் ஜன எழுப்புதலின் பொருட்டாகவும் வருகின்றார் என்ற நற்செய்தியை மகா சந்தோஷத்துடன் தெரிவிக்கின்றோம். தெய்வத்திற்குச் செய்யும் உபசரணையைக் காட்டிலும், தொண்டர்களுக்குச் செய்யும் உபசரணைகள் மிகவும் பலிதமுடையன என்பது ஆரிய

சம்பிரதாயம். அதுபோலவே பாரத தேவியிடம் பக்தி யுடைய எல்லா ஜனங்களும் மேற்படி தேவியின் முக்கிய பக்தர்களில் ஒருவராகிய இவருக்கு ராஜோபசாரம் செய்யக் கடமைப்பட்டிக்கிருர்கள். பாரததேவியின் விரோதிகள் இவரிடத்திலும் விரோதம் செலுத்துவார்கள் என்பதில் ஆக்ஷேபமில்லே. நமது 'இந்தியா' பத்திரிகையின் பெயரை ஒட்டி இவருக்கு ஏதேனும் தக்க உபசாரம் செய்ய வேண்டு மென்ற எண்ணம் நமக்கிருக்கின்றது. இவ்விஷயத்தின் பொருட்டு ஒரு நிதி சேகரிக்க எண்ணியிருக்கிறேம். ஒவ்வொரு சந்தாதாரரும் ஒவ்வொரு ரூபாய் அனுப்பும் பக்ஷத்தில் நமக்குப் பெரிய தொகை சேர்ந்துவிடும்."

இவ்வாறு வேண்டுகோள் ஒன்று வெளியிட்டார் பாரதியார். இதுவரை இதற்கு நிதியளித்தவர் ஜாபிதா ஒன்றையும் வெளியிட்டார். அந்த ஜாபிதாவிலே முதலில் 'இந்தியா' பத்திராதிபர் பெயரும், 'இந்தியா' பத்திரிகை ஆசிரியர் ஸ்ரீ சி. சுப்பிரமணிய பாரதியார் பெயரும் உள்ளன. இந்தியா பத்திராதிபர் ஸ்ரீ திருமலாச்சாரியார் 15 ரூபாயும், பாரதியார் 5 ரூபாயும் அளித்துள்ளனர். இன்னும் சிலர் நிதியளித்திருக்கின்றனர், ஆக, அன்றைய நிதி வசூல் மொத்தம் ரூ. 55.

1907-ம் ஆண்டு ஜனவரி மாதம் 26ந் தேதி விபின சந்திர பாலர் வருகை பற்றி எழுதத் தொடங்கினர் பாரதியார்; பிறகு தொடர்ந்து பிரசாரம் செய்து வந்தார்.

"ஸ்ரீ விபின சந்திர பாலர் இன்னும் வெகு சீக்கிரத்தில் தென் மாகாணத்துக்கு வந்துவிடுவார். அவர் வரும் தேதி இன்ன தென்பதை வரையறுத்து மற்ெருரு முறை வெளி யிடுவோம். 'இந்தியா' பத்திரிகை சந்தாதாரர்களும் வேறு சில உபகாரிகளும் இவருக்கு உபசரணே நடத்தும் நிதியின்

பொருட்டு, பணம் அனுப்பியிருக்கிறார்கள். முழு ஜாபிதா அடுத்த தடவை பிரசுரிக்கப்படும். இது நிற்க. வாயால் மட்டும் நாமெல்லாரும் விபின சந்திர பாபுவை ஸ்தோத்திரம் செய்து கொண்டிருந்து விட்டு, அவர் வரும் சமயத்தில் தக்கபடி மரியாதை செய்யாதிருப்போமானால் கடமையிலே தவறியவர்களாயிருப்போம். இதைத் தமிழ் நாட்டின் சுதேசிகள் கவனிக்கும்படி வேண்டுகிறோம்.''

(இந்தியா—9-2-1907)

'இந்தியா' பத்திரிகையில் மேலும் எழுதினார்:

''காக்கிநாடா, விசாகப்பட்டினம், ராஜ மகேந்திரபுரம் முதலிய நகரங்களில் எல்லாம் விபின சந்திர பாபு ஸ்வராஜ்யம், ஸ்வதேசியம் முதலிய தேச தர்மங்களைப் பற்றி உபந்நியாசங்கள் செய்து வருகின்றார். சென்னை ''பால பாரத'' சங்கத்திலிருந்து இவரை அழைத்து வரும் பொருட்டு ஒரு பிரதிநிதி அனுப்பப்பட்டிருக்கிறார். இங்கு இரண்டு வாரங்களுக்குள்ளே நிச்சயமாக வந்து விடுவார்.'' (9-4-1907)

'பால பாரத' சங்கத்திலிருந்து ஒரு பிரதிநிதி அனுப்பப் பட்டிருக்கிறார் என்று மேற்கண்ட கட்டுரையிலே குறிப்பிடப் பட்டுளதே! அந்தப் பிரதிநிதி யார்? பாரதியாரே.

பாரதியாரின் பிரச்சார முறை எவ்வளவு பிரமாதமாயிருக்கிறது பாருங்கள்!

ஏப்ரல் மாதம் 27 - ந் தேதி விபின சந்திர பாலர் சென்னை வந்து சேர்ந்தார். அப்போது பாரதியார் 'இந்தியா' பத்திரிகையில் எழுதினார்:

''புதுக் கட்சித் தலைவராகிய ஸ்ரீஜத் பாபு விபின சந்திர பாலர் இன்று தினம் சென்னைக்கு வருகிறார். இவரை

வரவழைத்தது சென்னையிலுள்ள சில புதுக் கட்சியார்களே யன்றி பழைய கக்ஷியார்களல்ல. பரம யோக்கியர்கள், இந்தியர்களுக்கும் இந்திய காங்கிரஸ் சபைக்கும் தீமை செய்து அவமதிப்பவராய் இருந்த "மெயில்" பத்திராதிபரா யிருந்த ஒரு பரங்கிப் பிள்ளைக்கு மாப்பிள்ளை விருந்து செய்து உபசரிப்பார்களேயன்றி, ஸ்ரீ விபின சந்திர பாலர் போன்ற சாமான்ய மனிதருக்கு உபசாரம் செய்ய முன்வர மாட்டார்கள். ஏனென்றால் ஸ்ரீ பாலரால் இந்தியாவுக்கு விளைந்த நன்மைகளிலும், காலஞ் சென்ற H. K. பீச்சாம் என்னும் பரங்கிப் பிரபுவால் அதிக நன்மை விளைந்திருப்ப தாய் இந்த மகாத்மாக்களின் திருவுளத்திலே பதிந்திருக் கிறது. ஆகா! என்ன செய்யலாம். நமக்கு யாதொரு சம்பந்தமற்றவரும், நமக்கு நேர் விரோதியாய் இருந்தவரு மாகியவருக்கு சம்பந்தி உபசாரம் செய்துவிட்டு, இந்தியாவில் பிறந்து வளர்ந்த இந்துவும் இந்தியாவின் பொருட்டு இந்தியாவிலுழைத்துக்கொண்டு வரும் தேசாபி மானியுமாகிய ஸ்ரீ விபினரை உபசரணை செய்வதற்குப் பின் வாங்குவார்களேயானால் இப்படிப் பட்டவர்கள் இந்தியர்கள் தானா? இவர்களிடமும் தேசாபிமானம் என்பது மருந்துக்காகிலும் கிடைக்குமா என்பதைப்பற்றி அறிஞர்கள் அறிந்து கொள்ளலாம். இவர்கள் ஜனத் தலைவர்கள் தானா? இவர்களை ஜனங்கள் மதிக்கலாமா? என்பதை பொது ஜனங்களே தீர்மானித்துக் கொள்ளலாம். மனதிலே நல்லெண்ணம் இருக்கிறதா? இல்லையா என்பது வெளி நடையில் திட்டமாய் விளங்கிவிடும்."

சென்னையிலே யிருந்த பிரமுகர்கள் விபின சந்திர பாலருக்கு உபசாரம் செய்ய முன் வரவில்லை. ஏன், விபின சந்திரர் பேசிய கூட்டங்களில் தலைமை வகிக்கக்கூட எவரும் முன் வரவில்லை. இப்படியாக இவர்கள் விபின சந்திரரை பகிஷ்கரித்தார்கள். பயம்! பயம்!

மயிலாப்பூர் பிரமுகர்களின் இந்த நடவடிக்கையால் சீற்றங் கொண்டார் பாரதியார். 'மெயில்' பத்திரிகையின் ஆசிரியராக இருந்த பீச்சாம் என்ற வெள்ளையருக்கு விருந்துபசாரம் செய்தார்கள் சென்னைப் பிரமுகர்கள்; பாராட்டுரைகள் வழங்கினார்கள். ஆனால் விபின சந்திர பாலருக்கு ஏதும் செய்யவில்லை. அதனால் சீற்றங்கொண்ட பாரதியார் மேலே குறிப்பிட்டவாறு "இந்தியா" பத்திரிகையில் எழுதினார்.

விபின சந்திர பாலர் சென்னையில் நிகழ்த்திய சொற்பொழிவுகள் பற்றி பாரதியார் தமது "இந்தியா" பத்திரிகையிலே ஒரு கட்டுரை வெளியிட்டார். மேற்படி கட்டுரை 1907-ம் ஆண்டு மே மாதம் 11ந் தேதியிட்ட "இந்தியா" பத்திரிகையிலே வெளிவந்தது. அதன் சில பகுதிகள் வருமாறு :

"......இவரது வாக்குத் திறமையும், விவகார நுட்பமும், தேச பக்திப் பெருமையும் அளவிட்டுக் கூற முடியாதன. பதினாயிரக் கணக்கான ஜனங்கள் திருவல்லிக் கேணி சமுத்திரக்கரை மண்ணிலே சென்ற சில தினங்களாக இவரது அற்புத உபந்நியாசங்களைக் கேட்டுப் பரவசமடைந்து விட்டார்கள். இவர்மீது விரோதத்துடன் சென்றவர்கள்கூட, இவரது உபந்நியாசங்களைக் கேட்டவுடனே இவருக்கு அடிமைகளாய் விட்டார்கள். புதிய கட்சி என்றால் ஏதோ வாலிபர் செய்யும் குறும்பென்று நினைத்துவந்த சில சென்னை மேதாவிகள்கூட, இவரது உபந்நியாசங்களைக் கேட்டவுடன், புதிய கட்சியார் சொல்லும் முறைகளைத் தவிர நமது பாரத தேசம் உன்னதம் பெறுவதற்கு வேறு வழிகளே கிடையாதென்று தெரிந்து கொண்டு விட்டார்கள். புதிய கட்சியாரிடம் வெறுப்புக் காட்டி வந்த 'ஹிந்து' 'ஸ்டாண்டர்ட்' 'இந்தியன் பேட்ரியட்' என்ற பத்திரிகைகள் இப்போது

விபின சந்திர பாலரைப்பற்றிப் பக்கம் பக்கமாக ஸ்தோத்திரங்கள் எழுதத் தலைப்பட்டு விட்டன. "ஹிந்து" பத்திரிகை விபின பாபுவின் விவகாரங்களையும், கொள்கைகளையும் தழுவிப் பேசத் தொடங்கி விட்டது. புதிய கட்சிக்கும் பழைய கட்சிக்கும் இடையிலே அங்கு பாதி இங்கு பாதியாக நின்ற "சுதேசமித்திரன்" பத்திரிகை இப்போது முற்றிலும் நமது பட்டணத்தைச் சார்ந்து விட்டது. சென்னையிலே எங்கு பார்த்தாலும் விபின சந்திர பாபுவைப் பற்றியே பேசுகிறார்கள். எங்கே கேட்டாலும் அவருடைய புகழ்ச்சிதான். தெருக்களிலே 'வந்தே மாதரம்' வெகு சாமானியமான வசனமாகி விட்டது.

"சென்ற காங்கிரஸ் கல்கத்தாவிலே கூடிய காலத்தில் சில மயிலாப்பூர் வக்கீல்கள் கல்கத்தாவிற்குப் போய் சென்னை மாகாண முழுவதும் பழைய கட்சிக்கு அநுகூலமாகவேயிருக்கும்படி தாம் நிபந்தனை செய்திருப்பதாக டம்ப நடிப்பு நடித்துவிட்டு வந்தார்கள். விபின பாபுவை அப்போது இங்கே வரும்படியாகக் கேட்டுக் கொண்ட நாம், அவர் இங்கே வரும் பக்ஷத்தில் மயிலாப்பூர் வக்கீல்கள் செய்து கொண்ட டம்பம் வெறும் பொய் என்பதை நேரிலே கண்டு கொள்வார் என்று நமது பத்திரிகையிலே தெரிவித்திருந்தோம். இப்போது நாம் சொல்லியது முற்றிலும் வாஸ்தவமாக முடிந்து விட்டது. மயிலாப்பூர் வக்கீல்கள் வெளியே தலையை நீட்டவில்லை. வீடுகளுக்குள்ளே பதுங்கியிருப்பவர்களும் வெளியூர்களுக்கு ஓடுபவர்களுமாக இருக்கிறார்கள். இந்தப் புலிகள் கல்கத்தாவிலே செய்து கொண்ட டம்பத்தைப் பார்த்தால் சென்னை மாகாண முழுதும் இவர்கள் உள்ளங்கைக்குள்ளே அடங்கியிருக்கிற தென்று மற்ற மாகாணத்தார் நினைக்கும்படியாக இருந்தது. ஆனால் இப்பொழுதோ இவர்கள் இருக்குமிடத்தையே காணவில்லை."

# பாரதியும் வ. உ. சியும்

தூத்துக்குடியிலே வக்கீல் தொழில் புரிந்து வந்தார் ஸ்ரீ. வ. உ. சிதம்பரம் பிள்ளை. சென்னையிலே பத்திரிகை நடத்தி வந்தார் பாரதி. இவ்விருவரும் எப்படி நண்பராயினர்?

இக் கேள்விக்கு விடை எங்கே காணலாம்? 'வ. உ. சி. கண்ட பாரதி' என்ற புத்தகத்திலே காணலாம். இந்தப் புத்தகத்திலே ஸ்ரீ. வ. உ. சிதம்பரம்பிள்ளை என்ன சொல்கிறார்?

"இப் பெரியாரை நான் முதன் முதலாகப் பார்க்கும் பாக்கியம் பெற்றது அவர் சென்னையில் 'இந்தியா' என்னும் பெயர் பெற்ற தமிழ்ப் பத்திரிகையின் ஆசிரியராக இருந்த காலத்தில்தான். அது 1906-ம் வருஷ ஆரம்பமாக இருக்கலாம் என்று நினைக்கிறேன். அப்போது நான் தூத்துக்குடியிலிருந்து சென்னை சென்றிருந்தேன். எனது சொந்த ஊரான ஓட்டப்பிடாரத்திலிருந்த கச்சேரிகள் எல்லாம் எடுபட்டு விட்டதனால், அப்பொழுது நான் தூத்துக்குடியில் வக்கீல் தொழில் புரிந்து வந்தேன்.

சென்னையில் திருவல்லிக்கேணியில் நண்பன் ஒருவன் வீட்டில் தங்கியிருந்தேன். அங்கிருந்து நான் பட்டணம் போகிற வருகிற வழியில் ஒரு பெரிய வீடு இருந்தது. அது

தான் இந்தியா பத்திராதிபர் ஸ்ரீமான் திருமலாச்சாரியார் வீடு என்று தெரிந்து கொண்டேன்.

ஒரு நாள் மாலை நாலு மணி சுமாருக்கு, நான் "இந்தியா" அதிபர் திரு. ஆச்சாரியாரைப் பார்ப்பதற்காக அப் பெரிய வீட்டிற்குள் புகுந்தேன். அங்கிருந்தவர்களிடம் விசாரித்ததில் அவர் மாடியில் இருப்பதாக அறிந்தேன். நான் மாடிக்குச் சென்றேன். அங்கு ஒரு அய்யங்கார் அமர்ந்திருந்தார். அவர் இளம் வயதினராகக் காணப் பட்டார். முகத்தில் அறிவுச் சுடர் பிரகாசித்துக் கொண் டிருந்தது. அவர்தான் அதிபர் ஸ்ரீ எஸ். என். திருமலாச் சாரியாராக இருக்க வேண்டும் என்று நினைத்தேன். அவரைக் கேட்டேன்.

"ஆம்" என்றார் அவர். அவரிடம் என் ஊரும் பேரும் சொன்னேன். மாடியின் உள்ளரங்கை நோக்கி,

"பாரதி! உங்கள் ஊரார் ஒருவர் உம்மைத் தேடி வந்திருக்கிறார்" என்று உரக்கக் கூவினார்.

உடனே உள்ளிருந்து இருவர் வந்தனர். முண்டாசுக் கட்டுக்கும், முறுக்கு மீசைக்கும் பெயர் பெற்றது எங்கள் ஜில்லா. எனவே தலைப்பாகைக் கட்டைப் பார்த்ததுமே அவர்தான் பாரதியார் என்பதைத் தெரிந்து கொண்டேன்.

முறைப்படி அதிபர் ஸ்ரீ ஆச்சாரியார் பாரதியாரை அறிமுகப்படுத்தினார். ஆசிரியர் பாரதியார் என் ஊரையும் பேரையும் பற்றி உசாவினார்.

"ஓட்டப்பிடாரம். வக்கீல் உலகநாத பிள்ளை மகன் சிதம்பரம்" என்றேன்.

"ஓ! அப்படியா! பிள்ளைவாளின் பிள்ளையாண்டனா தாங்கள்! உட்காருங்கள்" என்று கூறி அங்கிருந்த நாற் காலியில் அமரச் செய்தார்.

பாரதியார் ஆரம்பித்தார்:

"உங்கள் தகப்பனுர், என் தகப்பனுரின் அத்யந்த நண்பர். அவாளை எனக்கு நன்ருகத் தெரியும். உங்களைப் பற்றியும் கேள்விப்பட்டிருக்கிறேன்."

பின்னர் பல்வேறு விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். தேச காரியங்கள் பற்றிய பேச்சுக்களே எங்கள் அளவளாவுதலில் தலைமை வகித்தன. பின்னர் நாள் தோறும் நான் இந்தியா ஆபீசுக்கும், அதிபர் வீட்டுக்கும் செல்லலானேன். சுப்பிரமணிய பாரதியும் நானும் மாமனும் மருகனும் ஆனேம்.

ஒரு நாள் மாலை நாங்கள் கடற்கரையில் வார்த்தை யாடிக் கொண்டிருந்தோம். எங்கெங்கோ சென்று கொண்டிருந்த எங்கள் பேச்சு வங்க வள நாட்டின் மீது திரும்பியது.

அப்போது காளிதேவிக்கு வங்கத்தில் ஆடு பலி கொடுப்பதைக் கண்டித்து விபின சந்திர பாலர் பேசிய பேச்சுக்கு உருக்கத்துடனும் ஆவேசத்துடனும் ஒரு வியாக்கி யானம் செய்து முடித்தார் மாமா. (இல்லை; இல்லை, பொழிந்து கொட்டினுர் என்று சொல்வதுதான் பொருந்தும்.)

இவ் வியாக்கியானத்தைக் கேட்டு நான் கொழுத்த தேச பக்தனுகி விட்டேன். அதாவது இந்தக் காலத்தில் தீவிரவாதி.

இந்த வியாக்கியானத்திஞல் நாங்கள் இருவரும் அதிகமாகப் பிணைக்கப்பட்டோம்; பெரு மகிழ்ச்சி கொண் டோம். எங்கள் நட்பைப் பற்றி மாமா சொல்வார்: "மாப்பிள்ளை நமக்கினி யாரடா ஈடு?" என்று.

அது முதல் அவர் என் வீட்டுக்கு வருவதும், என்னோடு உண்பதும், உறங்குவதும், நான் அவர் வீட்டுக்குப் போவதும் அவரோடு உண்பதும் உறங்குவதும் ஆக இருந்தோம்.

பிரான்ஸ் இத்தாலி இவைபோன்ற பிற தேசங்களின் சரிதத்தை மாமா ஆதியோடந்தமாக ஆவேசத்துடன் கூறி முடிப்பார். நான் அமைதியாகக் கேட்பது வழக்கம்.

ஒரு நாள் இத்தாலி நாட்டு தேசாபிமானி மாஜினியின் தேச ஊழிய யௌவன இத்தாலி சங்கத்தின் அங்கத்தின ராகச் சேர்ந்தோர் செய்துவந்த விசுவாசப் பிரமாணச் செய்யுளை ஆங்கில பாஷையில் எனக்குப் படித்துக் காண்பித்தார் மாமா. அதனைக் கேட்டதும் நான் சொக்கிப் போனேன். அச் செய்யுளைத் தமிழில் பாடித் தருமாறு மாமாவை வேண்டினேன். அவர் அன்றே அந்த இடத்திலேயே அதைக் கவிதையாக மொழி பெயர்த்துத் தந்தார். அதுதான் 'பேரருட் கடவுள் திருவடியாணை' எனத் தொடங்கும் பாட்டு.

பாரதியும், வ. உ. சியும் நெருங்கிய நண்பரானது எப்படி என்பதையும், வ. உ. சி தீவிர தேசாபிமானியானது எவரால் என்பதையும் கண்டோம்.

இனி தூத்துக்குடிக்குப் போவோம்.

அந்தக் காலத்திலே தூத்துக்குடியிலிருந்து மக்களை ஏற்றிச் சென்ற கப்பல் வியாபாரம் முழுவதும் வெள்ளையர் வசமே இருந்தது; சரக்குகளை ஏற்றிச் செல்வதும் அவர்கள் வசமே இருந்தது. இலங்கை நமது அண்டை நாடு. அந்த நாட்டிற்கு வேண்டிய பொருள்களை எல்லாம் பெரும் அளவில் வியாபாரம் செய்து வந்தது இந்தியா. இந்தப் பொருள்களை எல்லாம் வெள்ளைக்கார கப்பல் கம்பெனி

களை ஏற்றிக்கொண்டு போய் அந்த நாட்டிலே இறக்கி வந்தன. இதுதான் 1905-ம் ஆண்டில் இருந்த நிலைமை.

நாட்டிலே வளர்ந்து வந்த சுதேசிப்பற்று என் செய்தது? வெள்ளைக்காரர் கப்பல் கம்பெனிக்குப் போட்டியாக ஒரு சுதேசிக் கப்பல் கம்பெனியை உருவாக்கியது. அந்த சுதேசி கப்பல் கம்பெனியின் பெயர் சி. வ. கம்பெனி என்பது. வெள்ளைக்கார கப்பல் கம்பெனியின் பெயர் பி. ஐ. எஸ். என். என்பது. இந்த இரண்டு கம்பெனிகளுக்கும் வியாபாரப் போட்டி ஏற்பட்டது.

சுதேசிகளால் நடத்தப்பட்டு வந்த சி. வ. கப்பல் கம்பெனியைக் கண்டு 'வயிறு எரிந்தது' வெள்ளைக் கம்பெனி. தங்கள் ஏகபோகக் கொள்ளைக்குப் போட்டி வந்தது கண்டு ஆத்திரம் கொண்டது; சி. வ. கம்பெனியை எப்படியாவது ஒழித்துவிட முயன்றது. அம் முயற்சிக்கு உறுதுணையாக ஒரு வெள்ளை அதிகாரியும் தூத்துக்குடியிலிருந்தான். அவன் பெயர் வாலர் என்பது. இவன் தூத்துக்குடியில் அஸிஸ்டெண்டு கலெக்டராக இருந்தான். வெள்ளைக் கம்பெனிக்கு சாதகமாகவும், சுதேசிக் கம்பெனிக்குப் பாதகமாகவும் இவன் செய்த அக்கிரமங்கள் ஒன்றா? இரண்டா? பல; பலப்பல.

வாலரின் 'திருவிளையாடல்' களைக் கண்டித்து பாரதியார் எழுதினார்.

"தூத்துக்குடியிலே புல்லரின் முறைகள்" என்ற தலைப்பிட்டு முன்னொரு முறை தூத்துக்குடியில் வாலர் என்ற ஆங்கிலேய அஸிஸ்டெண்ட் மாஜிஸ்டிரேட்டின் நியாய விரோதமான செய்கைகளைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். இப்பொழுது மறுபடியும் அவருடைய தப்புச் செயல்களின் ஜாப்தா ஒன்று தூத்துக்குடி நிருபர் ஒருவர்

சென்னை தினசரிப் பத்திரிகைகளுக்கு அனுப்பியிருக்கிறார். அவர் எழுதியிருக்கும் கருத்து பின் வருமாறு:

பி. ஐ. எஸ். என். வெள்ளை கம்பெனியாருக்குப் போட்டியாக ஏற்பட்டிருக்கும் சி. வ. கம்பெனியாரை பலவாறாக இம்சிக்க நிச்சயம் பண்ணிவிட்டாரென்று தெரிகிறது. வெள்ளைக் கம்பெனியார் சுதேசிய கம்பெனியாரின் படகின்மேல் தமது படகை வேண்டுமென்று மோதவிட்டார்கள் என்பதாக சி. வ. கம்பெனியார் சப் மாஜிஸ்டிரேட் முன்பு பிராது கொண்டு வந்தார்கள். அதன் பேரில் மிஸ்டர் வாலர் மேற்படி பிராதை தமக்கு நேராக அனுப்பி விடும்படி சப் மாஜிஸ்டிரேட்டுக்கு உத்தரவு அனுப்பியிருக்கிறார். இது சாதாரண நடவடிக்கை முறைகளுக்கு முற்றிலும் விரோதமானது. மேலும் அந்தப் பிராது இவரிடம் விசாரணைக்கு வந்து இரண்டு வாரங்களுக்கு மேலாகி விட்டது. இவர் இதுவரை ஒன்றும் செய்யாமல் சும்மா இருந்து வருகிறார். இத்தோடு நிற்கவில்லை. சி. வ. கம்பெனியார் பிராது விஷயமாக விசாரணைகள் நடத்தும்படி ஜில்லா போலீஸ் தலைவரிடமிருந்து உத்தரவு பெற்றிருந்த போலீஸ் இன்ஸ்பெக்டரை மிஸ்டர் வாலர் அழைத்து "நீர் இந்த விஷயத்தில் யாதொன்றும் செய்ய வேண்டியதில்லை. எல்லாம் நானே நடத்திக் கொள்கிறேன்" என்று சொல்லி விட்டார்...... போலீஸ் ஸ்டேஷன் ஆபீசராகிய குருநாத அய்யர் என்பவரைத் தருவித்து "நீர் சுதேசிய முயற்சியிலே அநுதாபங் கொண்டிருப்பதாகக் கேள்விப் படுகிறேன். உம்மை தூத்துக்குடியிலிருந்து அப்புறப் படுத்துவதற்கு உண்டான ஏற்பாடுகளைச் செய்கிறேன். போம்!" என்று பயமுறுத்தி அனுப்பினார். இவர் இப்படி செய்த சில தினங்களுக்கெல்லாம் மேற்படி ஸ்டேஷன் ஆபீசரே குலசேகர பட்டணத்துக்குப் போய்விட வேண்டும் என்று

உத்தரவு வந்து விட்டது. இனி வாலர் என்னென்ன அற்புதங்கள் செய்யப் போகிறார் என்று அறியோம்...... தூத்துக்குடியில் மிஸ்டர் வாலர் மேற்கண்டவாறெல்லாம் செய்துவருவது வாஸ்தவமானால் இதை கவர்ன்மெண்டார் உடனே விசாரணை செய்ய வேண்டும். விசாரணை செய்து தக்க ஏற்பாடுகள் செய்ய மறந்து விடுவார்களானால் பெரிய விபத்துக்கள் நேரிடக் கூடும்.''

இவ்வாறு எழுதினார் பாரதியார்.

எஸ்ஸாஜி டாஜ்பாய் என்பவர் பம்பாயிலே பெரிய கப்பல் வியாபாரி, இவருடைய கப்பல் கம்பெனிக்கு ''ஷாலைன் ஸ்டீமர்'' கம்பெனி என்று பெயர். தூத்துக்குடி சுதேசிக் கப்பல் கம்பெனியாராகிய சி. வ. கம்பெனியார் மேற்குறித்த ஷாலைன் முதலாளியான எஸ்ஸாஜி டாஜ்பாயுடன் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டு கப்பல் வியாபாரம் செய்து வந்தார்கள். அதன்படி எஸ்ஸாஜி டாஜ்பாயின் ஷாலைன் ஸ்டீமர் கம்பெனி சி. வ. கம்பெனிக்குச் சில கப்பல்களை வாடகைக்குக் கொடுத்து உதவியது.

இது கண்டு ஆத்திரங்கொண்ட வெள்ளைக் கம்பெனி என்ன செய்தது? ''சி. வ. கம்பெனிக்குக் கப்பல் கொடுத்து உதவக் கூடாது'' என்று ஷாலைன் ஸ்டீமர் கம்பெனியைத் தடுத்துவிட்டது.

இந்தியா—(21- 6- 1906)

1906ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25ந்தேதி வெளி வந்த 'இந்தியா' பத்திரிகையிலே இது குறித்துப் பின் வருமாறு எழுதினார் பாரதியார்;

''தூத்துக்குடியிலே சுதேசியத்திற்குப் புதிது புதிதாக விரோதிகள் கிளம்பிக்கொண்டே இருக்கிறார்கள். யார் யார் என்ன செய்தபோதிலும் சிறிதேனும் சலிப்பில்லாமலும் சுதேசியக் கொடியைச் சற்றேனும் தாழ்த்தா

மலும் மன்முடி வருகின்றனர். நம்மவர்களின் நடை மிகுந்த திருப்தியடையத் தக்கதாய் இருக்கின்றது.

"ஷாலேன் ஸ்டீமர்களின் முதலாளியான எஸ்ஸாஜிடாஜ் பாய் என்ற பம்பாய் வர்த்தகர் சி.வ. (சுதேசிய) கம்பெனியாருடன் ஒப்பந்தம் செய்து கொண்டு மேற்படி சுதேசியக் கம்பெனியாருக்கு சில கப்பல்கள் கொடுத்திருக்கிறார்கள் என்பதை நேயர்கள் அறிவார்கள். அந்தக் கப்பல்கள் லாபம் பெறுவதைத் தடுக்க வேண்டுமென்ற விஷயத்தில் பி. ஐ. எஸ். என் (வெள்ளை) கம்பெனியாரும் மிஸ்டர் வாலர் என்ற தூத்துக்குடி மாஜிஸ்டிரேட்டும் வேறுபல ஜனத் துரோகிகளும் எத்தனை முறை பாடுபட்டார்கள் என்பதையும் பலமுறை பேசியிருக்கிறோம். இப்போது மேற்படி எஸ்ஸாஜி டாஜ்பாய் என்ற பம்பாய் வர்த்தகரே நம்மவர்களுக்கு விரோதமாகத் திரும்பிவிட்டாரென்று கேள்விப்பட்டு மிகுந்த ஆச்சரியமடைகிறோம். இந்த பம்பாய் வர்த்தகருக்கு மேற்படி ஒப்பந்தத்திலிருந்து விசேஷமான லாபம் கிடைத்திருக்கிறது. மேலும் இவர் ஒப்பந்தப்படி செப்டம்பர் மாதம் 30ந்தேதி வரை கப்பல் விட்டு வைக்கக் கடமைப்பட்டிருக்கிறார்.

"பி. ஐ. எஸ். என். கம்பெனியார் பக்கம் சேர்ந்து கொண்டு அவர்களுடைய தூண்டுதலின் பெயரில் மேற்படி எஸ்ஸாஜி டாஜ்பாய் இங்ஙனம் செய்திருக்கலாமென்று தோன்றுகிறது. இந்த சந்தேகத்தின் பேரில் ஹிந்து வர்த்தகர்களுக்கு பி. ஐ. எஸ். என். கம்பெனியார் மீது மிகுந்த கோபம் உண்டாயிருக்கிறது. அவர்கள் மேற்படி பி. ஐ. எஸ். என் கம்பெனிக் கப்பல்களில் இனிச் சரக்கு ஏற்றவே கூடாது என்று நிச்சயம் செய்து விட்டார்கள்.

"இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் தூத்துக்குடி தேச பக்தர்களின் கண்களைத் திறந்து விட்டன. "இனி எக்காரணம்

பற்றியும் பிறரை நம்பியிருக்கக் கூடாது. பிற கம்பெனி களின் ஸ்டீமர்களை வாடகைக்கு வாங்கக் கூடாது, நமது சொந்தமாகவே ஸ்டீமர்களை விலைகொடுத்து வாங்க வேண்டும்" என்று உறுதி பூண்டார்கள். அந்த உறுதியின் விளைவே சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி"

"சுதேசி ஸ்டீம்நாவிகேஷன் கம்பெனி"யானது 1906ம் ஆண்டு அக்டோபர் மாதம் 16ந்தேதி, இந்தியக்கம்பெனிச் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்டது. மேற்படி கம்பெனியின் பதிவு செய்யப்பட்ட காரியாலயம் தூத்துக் குடி கிரேட்காட்டன் ரோடில் 85ம் நெ. உள்ள கட்டிடத் தில் இருந்தது.

கம்பெனியின் மூலதனம் பத்துலட்சம் ரூபாய். பங்கு ஒன்று 25 ரூபாய் வீதம், நாற்பதாயிரம் பங்குகள் கொண்டது மேற்படி கம்பெனி.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் தலைவரும், பாலவநத்தம் ஜமீந்தாருமாகிய ஸ்ரீ. பாண்டித்துரைத் தேவர் இந்தக் கம்பெனியின் தலைவரும், செயலாளரும் ஆவார்.

கம்பெனியின் டைரக்டர் போர்டில் கீழ்க்கண்ட வர்கள் இருந்தார்கள்:-

1 எஸ். வி. நல்ல பெருமாள் பிள்ளை

2. ஏ. எம். எம். அருணாசலம் பிள்ளை

3. எஸ்.எஸ். வி. கிருஷ்ணபிள்ளை

4. பி. வெங்கடராமானுஜம் நாயுடு

5. எஸ். டி. ஆ. ஆறுமுகம் பிள்ளை.

6. ஏ. எஸ். வி. வேலாயுதம் பிள்ளை

7. வி. ஏ. ஏ. ஆதிநாராயண செட்டியார்.
8. வி. ஏ. வி. எஸ். வெங்கடாசலம் செட்டியார்.
9. ஏ. எஸ். வி. திருச்சிற்றம்பலம் செட்டியார்.
10. ஏ. ஏ. ஏ. ஆறுமுகம் செட்டியார்,
11. என். எஸ். தெய்வநாயகம் பிள்ளை.
12. என். வி. மாய நாடார்.
13. இஸ்மாயில் ஹாஜி அப்துல் ரஹ்மான் சேட்

வக்கீல் வ. உ. சிதம்பரம் பிள்ளை துணைச் செயலாளராக இருந்து கம்பெனியின் நிர்வாகத்தை நடத்தி வந்தார்.

கம்பெனியின் சட்ட ஆலோசகர்களாகக் கீழ்க் கண்டவர்கள் இருந்தார்கள்;

1. சி.விஜயராகவாச்சாரியார்
ஜில்லா கோர்ட் வக்கீல், சேலம்.
2. கே. ஆர். குருசாமி அய்யர்
ஹைகோர்ட் வக்கீல், திருநெல்வேலி.
3. எம். கிருஷ்ணன் நாயர்
ஹைகோர்ட் வக்கீல், கள்ளிக்கோட்டை.
4. பால் பீட்டர் பிள்ளை
பாரி-அட்-லா, மதுரை.
5. பி. எல். வெங்கு அய்யர்
ஜில்லா கோர்ட் வக்கீல், தூத்துக்குடி.

இவர்களில் ஸ்ரீ. சி. விஜயராகவாச்சாரியார் சேலத்துச் சிங்கம்; மிக்க புகழ் பெற்ற வழக்கறிஞர்; 1920ம் ஆண்டு காங்கிரஸ் மகாசபைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்.

கிருஷ்ணன் நாயர் அவர்கள் 1920ல் சென்னை அரசாங்கத்தில் சட்ட அங்கத்தினராக விளங்கினார்.

கே. ஆர். குருசாமி 'அய்யர் அந்தக் காலத்திலேயே புகழ் பெற்ற அரசியல்வாதி, பொது வாழ்வில் பங்கு கொண்டவர், நிதானக் கட்சியினர்; மிதவாதி.

பம்பாய் வியாபாரியாகிய ஹாஜி முகம்மத் பக்கீர் சேட் என்பவர் இரண்டு லட்சம் ரூபாய் கொடுத்து மேற்படி கம்பெனியில் எட்டாயிரம் பங்குகள் வாங்கிக்கொண்டார்.

கம்பெனி வேகமாகச் செயல்புரிவதற்கு இத் தொகையே மூலதனமாயிற்று. பாண்டித்துரைத் தேவர் ஐம்பதாயிரம் ரூபாய் கொடுத்து இரண்டாயிரம் பங்குகள் வாங்கிக் கொண்டார்.

பாரதியாரின் தூண்டுதலின் மீது 'இந்தியா' பத்திரிகை உரிமையாளராகிய மண்டயம் குடும்பத்தினர் எழுபதா யிரம் ரூபாய்க்குப் பங்குகள் வாங்கினர்.

1906ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1ந்தேதி 'இந்தியா' பத்திரிகையில் பாரதியார் எழுதினார்.

"தூத்துக்குடியிலே சுதேசிய முயற்சியை மேற்கொண்டு நடத்திவரும் நம்மவர்கள் இப்போது "சுதேசிய ஸ்டீமர் கம்பெனி" என ஒன்று ஸ்தாபிக்கக் கருதியிருப்பதாக முன்னமே அறிவித்திருக்கிறோம். இப்போது அந்தக் கம்பெனியின் ஆரம்பப் பிராயத்தனங்கள் தொடங்கி விட்டன. ......இந்தக் கம்பெனியில் பங்குகள் எடுத்துக் கொள்வோரெல்லாம் இந்தியர்களாகவாவது, பர்மா தேசத் தவராகவாவது, இலங்கைத்தீவினராகவாவது அல்லது ஜப்பானியர்களாகவாவது இருக்க வேண்டும்.

பங்குகளில் 8000 பங்குகள் ஹாஜி,மக்மத் பஷீர் ஷெய்ட் அண்டு சன்ஸ் எடுத்துக் கொண்டதாகத் தெரியவருகிறது.

பாக்கியிருக்கும் பங்குகளில் டைரக்டர்கள் இரண்டாயிரம் பங்குகள் எடுத்துக் கொண்டால் பாக்கி 10, 000 பங்குகள் தானிருக்கின்றன. இவற்றில் நம்மவர்களில் அநேகர் பங்குகள் எடுத்துக் கொள்வார்கள் என்பதில் சந்தேக மில்லை. இதனை வற்புறுத்திய தேசாபிமானிகள் சிறிதேனும் புறங்காட்டாமல் தைரியத்துடன் முன் சென்று நம் காரியத்தைச் செய்து முடிப்பார்கள் என்று நம்புகிறோம்."

கம்பெனிக்கு வேண்டிய கப்பல்கள் வாங்கும் பொருட்டு அரிய முயற்சிகள் மேற்கொண்டார் வ. உ. சி. அம்முயற்சியில் அவருக்கு ஏற்பட்ட இடையூறுகள் பல. அந்த இடையூறுகளை எல்லாம் வென்று புறமுதுகிடச் செய்து வாகைசூடினார் வ. உ. சி. இதுபற்றி பாரதியார் என்ன கூறினார்?

"தூத்துக்குடியைத் தென்னிந்தியாவின் பாரீஸால் என்று கூறலாம். அதிலும் முக்கியமாக ஸ்ரீ. வி. ஓ. சிதம்பரம் பிள்ளை சுதேசியத்தின் பொருட்டு எடுத்து வரும் முயற்சிகள் மிகவும் வியந்து போற்றுதற்குரியன. ஸ்டீமர்கள் விலைக்கு வாங்குவதிலே ஆரம்பத்தில் மேற் கூறப்பட்டிருக்கும் கம்பெனியாருக்குச் சிறிது சிரமம் ஏற்பட்டது. மேற்படி கம்பெனியின் துணைக்காரியதரிசி யாகிய ஸ்ரீ. வி. ஓ. சிதம்பரம்பிள்ளை எவ்வளவு சிரமம் கொண்டேனும் கப்பல்கள் வாங்காமல் திரும்புவது கிடை யாது என்று மனவுறுதியுடன் பம்பாய்க்குப் புறப்பட்டன ராம். கடைசியாக இவர் மனநோக்கம் நிறைவேறி விட்டது பற்றி மிகவும் சந்தோஷமடைகிறோம். சென்னை "சுதேசமித்திரன்" பத்திரிகைக்கு ஸ்ரீ. சிதம்பரம் பிள்ளை பின்வருமாறு எழுதியிருக்கிறார் :

நமது சுதேசிய ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி லிமிடெட்டுக்குச் சென்ற டிசம்பர் மாதம் 22-ந் தேதியில்

கிரையத்துக்கு வாங்கப் பெற்ற ஸ்டீமர், நிகழும் ஜனவரி மாதத்தில் தூத்துக்குடி வந்து சேருமென்று சுதேச பத்திரிகைகளில் கூறியிருந்தோம். ஆனால் ஸ்டீமரின் சொந்தக்காரர் ஸ்டீமரைப் புதுப்பித்து நமக்கு அனுப்ப வேண்டுமெனக் கருதி, ஸ்டீமரை செப்பனிடும் கலத்திற்கனுப்பி, ஸ்டீமரில் சில வேலைகள் செய்யும் நிமித்தமாக ஸ்டீமர் முன் குறித்த தேதியில் ஐரோப்பாவைவிட்டுப் புறப்படவில்லை. இப்பொழுது ஸ்டீமரின் வேலைகள் எல்லாம் முடிந்து விட்டன என்றும், ஸ்டீமர் வருகிற பிப்ரவரி மாதம் 4-ந் தேதியில் ஐரோப்பாவிலிருந்து புறப்பட்டு பிப்ரவரி மாதம் முடிவுக்குள் பம்பாய்க்கு வந்து சேரும் என்றும் தந்திகளும் நிருபங்களும் வந்திருக்கின்றன. நிகழும் ஜனவரி மாதம் 24-ந் தேதியில் கிரையத்துக்கு வாங்கப் பெற்ற ஸ்டீமரும், இன்னும் இரண்டு தினங்களில் கிரையத்துக்கு வாங்கப் பெறும் ஸ்டீம் லாஞ்சுகளும் பிப்ரவரி மாதம் 10-ந் தேதிக்குள் ஐரோப்பாவை விட்டுப் புறப்பட்டு பிப்ரவரி மாதம் முடிவுக்குள் பம்பாய் வந்து சேரும்; ......இன்னும் சில தினங்களில் ஸ்டீமர்கள் ஸ்டீம் லாஞ்சுகள் சம்பந்தமான யாவற்றையும் நமது மித்திரனில் வெளிப்படுத்தக் காத்துக் கொண்டிருக்கிறோம்.

(இந்தியா—2-2-1907)

இதற்குப் பிறகு என்ன ஆயிற்று? 'வந்தே மாதரம்' கொடி பறக்க விட்டு வந்து சேர்ந்தது சுதேசிக் கப்பல்.

"இந்தியா" பத்திரிகையிலே ஒரு சித்திரம் போட்டு வெளியிட்டார் பாரதியார். "வந்தே மாதரம்" என்று எழுதப்பட்ட கொடியைப் பறக்க விட்டுக் கொண்டு வருகிறது சுதேசிக் கப்பல். தூத்துக்குடி மக்கள் மகிழ்ச்சியுடன் அதை வரவேற்கிறார்கள்.

(இந்தியா—27-5-1907)

இவ்வாறு படம் போட்டுத் தமது பத்திரிகையிலே வெளியிட்டார் பாரதியார். குறிப்பு ஒன்றும் வெளியிட்டார்; அது வருமாறு :

"தூத்துக்குடி ஸ்வதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியார் ஸ்டீமர்கள் கொண்டு வந்திருக்கும் மங்களகரமான செய்தியைக் கருதி நாம் "சுதேசியக் கப்பல்கள்" என்ற சித்திரம் பதிப்பித்திருக்கின்றோம். தூத்துக்குடியாரின் அரிய முயற்சிக்கு நமது நாட்டிலுள்ளோர் அனைவரும் பொருளாலும், வாக்காலும், வேறு வகையாலும் துணை புரியக் கடமைப் பட்டிருக்கிறார்கள் என்பதை இங்கே வலியுறுத்துகிறோம்."

இவ்வாறு எழுதினார் பாரதியார். தூத்துக்குடியிலே பொங்கி எழுந்த சுதேசி இயக்கத்துக்கு எவ்வாறு ஆக்கமும், ஊக்கமும் அளித்து வந்தார் பாரதியார் என்பதை இதுவரை கண்டோம்.

ஆயிரத்துத் தொளாயிரத்து ஏழாம் ஆண்டு டிசம்பர் மாத இறுதியிலே சூரத் நகரிலே நடைபெற இருந்தது காங்கிரஸ் மகாநாடு. மேற்படி மகாநாட்டுக்குத் தமிழ் நாட்டிலிருந்து முப்பது பேரை அழைத்துச் சென்றார் பாரதியார். இதற்கான செலவை யார் கொடுத்தார்? மண்டயம் ஸ்ரீநிவாசாச்சாரியார் ஒரு பகுதி பணமும், தூத்துக்குடி வ. உ. சிதம்பரம்பிள்ளை இன்னொரு பகுதி பணமும் கொடுப்பது என்று ஏற்பாடு செய்யப்பட்டது.

தமிழ் நாட்டிலே திலகரின் தீவிர கட்சிக்குத் தலைவராக முன்னின்றவர் பாரதியார்; பிரசாரம் செய்தவர் பாரதியார்; சூரத் காங்கிரசுக்குப் பிரதிநிதிகளைத் திரட்டிச் சென்றவரும் பாரதியாரே. சுருங்கச் சொன்னால் திலகரின் தீவிர கட்சிக்காகத் தமிழ் நாட்டில் முன்னின்று பாடுபட்டவர் பாரதியாரே.

"சூரத்தில் நடக்கிற காங்கிரசுக்கு நாங்கள் எல்லோரும் இவ்விடமிருந்து நாளது டிசம்பர் மாதம் 20-ந் தேதி வெள்ளிக்கிழமை மாலையில் ரிசர்வ் வண்டிகள் மூல மாகச் செல்லுகிறபடியால் இந்த ராஜதானியிலிருந்து காங் கிரசுக்குச் செல்லும் பிரதிநிதி (டெலிகேட்)களும் பார்ப் பவர்களும் (விசிட்டர்) இது பார்த்தவுடன் அவர்கள் புறப் படும் விவரத்தைத் திருவல்லிக்கேணி துளசிங்கப் பெருமாள் தெரு 87-ம் நெம்பர் சுதேசிய கிருகத்தாருக்குத் தெரி விக்கும் படிக்கும், நாளது மாதம் 20-ந் தேதி காலையில் மேற்படி கிருகத்திற்கு வந்து சேரும் படிக்கும் கேட்டுக் கொள்கிறோம்."

சி. சுப்ரமணிய பாரதி

ஆயிரத்துத் தொளாயிரத்து ஏழாம் ஆண்டு டிசம்பர் மாதம் 17-ந் தேதி "சுதேசமித்திரன்" பத்திரிகையில் மேற் கண்டவாறு ஓர் அறிக்கை வெளியிட்டார் பாரதியார்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு 19-12-1907 "சுதேச மித்திர"னில் மீண்டும் ஓர் அறிக்கை வெளியிட்டார். அது வருமாறு :

"இதற்கு முந்திய நோட்டீஸ் 17-ந் தேதி சுதேச மித்திரனில் போட்டதிலிருந்து அநேக நாஷனலிஸ்டு டெலிகேட்டுகள் சென்னைக்கு சனிக்கிழமையன்று வந்து அன்று சாயந்திரமே சூரத்துக்குப் புறப்பட்டுப் போகக் கூடுமென்று தெரிவித்திருக்கிறார்கள்.

ஆகையால் இந்த மாகாணத்திலிருந்து போகும் நாஷனலிஸ்டு டெலிகேட்டுகளுக்கு நாம் தெரிவிக்கிறது என்னவென்றால் நாம் காங்கிரசுக்கு இரண்டு பிரிவாகப் போக வேண்டியிருக்கிறது. அதாவது நாளை 20-ந் தேதி சாயந்திரம் போகிறவர்கள் ஒரு பிரிவு; 21-ந் தேதி சாயந் திரம் போகிறவர்கள் ஒரு பிரிவு. டெலிகேட்டுகளோ

விசிட்டர்களோ தங்கள் விருப்பத்தை 87 துளசிங்கப் பெருமாள் கோயில் தெரு திருவல்லிக்கேணி சென்னை, சுதேச கிருகத்திற்குத் தெரிவித்தால் எந்தப் பிரிவோடும் போகலாம்."

சி. சுப்பிரமணிய பாரதி.

இதன்படி, 20-ந் தேதி ஒரு பிரிவினரை அனுப்பிவிட்டு, மற்ருெரு பிரிவினரை 21-ந் தேதி அழைத்துக் கொண்டு சூரத் காங்கிரசுக்குச் சென்ருர் பாரதி.

சூரத் காங்கிரசுக்குப் போய் வந்தபின் காங்கிரசில் என்ன நடந்தது? எப்படி நடந்தது? ஏன் அப்படி நடந்தது என்பன போன்ற விஷயங்களை எல்லாம் விளக்கி ஒரு துண்டுப் பிரசுரம் வெளியிட்டார் பாரதி.

சூரத்தில் நடைபெற்ற அமளியை இவ்வளவு தெளிவாக இவ்வளவு விரிவாக—எவர் மீதும் எவ்விதமான காழ்ப்பும் இன்றி இதுவரை எவருமே வெளியிட்டார் அல்லர்.

காங்கிரஸ் வரலாற்றிலேகூட இத்தகைய விரிவுரையை நாம் காணல் இயலவில்லை. அந்த அரசியல் கொந்தளிப்பை மிகவும் நிதானமாகச் சுவைபடச் சொல்கிருர் பாரதியார்.

கவியுள்ளம் படைத்த ஒருவன் ஓர் அரசியல் நிகழ்ச்சியை எவ்வாறு விவரிக்கிருன் என்பதற்கு இதுவே எடுத்துக் காட்டு. எங்கள் "காங்கிரஸ் யாத்திரை" என்ற தலைப்பில் அந்தத் துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டார் பாரதியார். அதை இப்போது காண்போம்.

# சூரத்துச் சூறாவளி

சென்னப் பட்டணத்து ஸெண்ட்ரல் ஸ்டேஷனிலிருந்து 21-ந் தேதி சனிக்கிழமையன்று மாலை சென்னப் பட்டணத்துப் புதிய கட்சிப் பிரதிநிதிகளிலே சுமார் 30 பேர் புறப்பட்டோம். தஞ்சாவூர் கே. ராமஸாமி அய்யர், தூத்துக்குடி சிதம்பரம் பிள்ளை, சென்னப் பட்டணத்திலிருந்து சக்கரைச் செட்டி பி. ஏ. பி. எல், துரைசாமி அய்யர் எம். ஏ. பி. எல், சங்கர நாராயணய்யர், வெங்கடரமணராவ், யதிராஜ் சுரேந்திர நாத், நான் முதலியவர்களும், திருவல்லிக்கேணியிலிருந்து சில பிரபுக்களும், வெளியூர் கனவான்கள் சிலரும் எங்கள் கூட்டத்திலே சேர்ந்திருந்தனர். ஸ்டேஷனுக்கு எங்களுடைய சிநேகிதர்களும், சுதேச பக்தியின் விசேஷத்தினுல் எங்களைப் பிரியத்துடன் உபசரித்தனுப்ப வந்த கனவான்களும் நாலு திசைகளிலிருந்தும் வந்து சேர்ந்திருந்தார்கள். ஸ்வதேச விசுவாசத்தையே ஆவேசமாகக் கொண்டவர்களும் பாரத நாட்டின் எதிர்காலத்து ஸம்ரக்ஷகர்களுமாகிய வாலிபர்கள் வந்து எங்களுக்கு மிகுந்த சந்தோஷத்தை விளைவித்தார்கள். சுமை வண்டிகளை எங்களுடைய அறைகளுக்கு இழுத்து வருவதற்கு நாங்கள் கூலிக்காரர் வைத்திருந்த போதிலும், சில குணசாலிகளான வாலிபர்கள் அந்த வண்டிகளைத் தாமே இழுத்து வந்தார்கள். வந்தே மாதர முழக்கம் கொஞ்சமில்லை. அவர்கள் அன்பு நிறைந்த

பார்வைகளாலும், கைலாகுகளாலும், வந்தனங்களாலும், எங்களை வாழ்த்துக் கூறி அனுப்பிய காலத்தில் இவ்வளவு விசுவாசமும் உண்மை நிலையும் வாலிபர்கள் பெற்றிருப்பது பாரத ஜாதிக்கு க்ஷேம காலம் வந்து விட்ட தென்பதற்கு ஓர் நல்லடையாள மென்று எங்களுக்குத் தோன்றியது.

ட்ரெயின் புறப்பட்டது. ஸ்டேஷனுக்கு ஸ்டேஷன் நம்மவர்கள் "வந்தே மாதர" முழக்கம் இடைவிடாது நடத்தி வந்தார்கள். எங்களுக்கு வேண்டிய ஆகார முதலிய சவுகரியங்கள் எல்லாம் வழி ஸ்டேஷன்களிலே பல தேசாபிமானிகளால் தயார் செய்து வைக்கப்பட்டிருந்தன. ஓர் இரவும் ஒரு பகலும் கழிய மறு இரவிலே சுமார் பத்து மணிக்கு புனா ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்தோம். புனா நகரம்தான் புதிய கட்சியாருடைய காசி க்ஷேத்திரம். புனா நகரத்து ஸ்டேஷனில் எங்களை வந்து சந்திக்க வேண்டு மென்று சித்திர சாலைத் தலைவராகிய ஸ்ரீ. வி. ஜி. ஜோஷிக்குத் தந்தி கொடுத்திருந்தோம். சில தினங்களின் முன்பாகவே ஸ்ரீ. ஜோஷி அவ்வூரிலிருந்து பம்பாய்க்குப் புறப்பட்டு விட்டாராகையால் அவருக்கு எங்கள் தந்தியே கிடைக்கவில்லை. ஆயினும் வேறு பல மகாராஷ்ட்ரர்கள் வந்து ஸ்டேஷனிலிருந்தார்கள். அவர்கள் எல்லாரும் நாங்கள் திலகருடைய கட்சியார் என்று கேள்வியுற்ற உடனே மிகுந்த சந்தோஷமடைந்தவர்களாய் எங்களிடம் குசல விசாரணைகள் புரிந்து எங்களுக்கு வாழ்த்துக் கூறி அனுப்பினார்கள். திங்கட்கிழமை காலை பம்பாய் நகரத்தில் வந்திறங்கினோம். ரயில்வே ஸ்டேஷனுக்கு அருகே உள்ள 'ஸர்தார் கிருஹம்' என்ற ஒரு வசதியிலே கொண்டு எங்களை வி. ஓ. சிதம்பரம் பிள்ளை இறக்கிவிட்டார்.

அவர் வியாபார சம்பந்தமாக அடிக்கடி பம்பாய்க்கு வந்து பழக்க முடையவராதலால் எங்களுக்குக் காண்பித்த வசதி மிகவும் நல்லதாக அமைந்திருந்தது. நாங்கள் அங்கே

தங்கியிருந்த ஒரு நாளில் மட்டும் அந்த இடத்திற்கு சுமார் ஆயிரம் விருந்தாளிகள் வந்திருக்கக் கூடும். அப்படி இருந்தும் அவர்களுக்கெல்லாம் தக்கபடி உபசரணைகள் செய்யப்பட்டன. நாங்கள் வந்ததற்கு இரண்டு நாட்களுக்கு முன்பாகத்தான் மேற்படி கிருகத்திலே திலகர், லாஜ்பதிராய், அஜித்சிங் என்ற மூவர்களும் வந்திருந்து விட்டுப் போனதாகக் கேள்வியுற்றோம்.

அன்றைய தினம் பகல் முழுவதும் பம்பாய் நகரத்திலே உள்ள முக்கியமான ஸ்தலங்களைச் சுற்றிப் பார்த்தோம். இரவு சுமார் 10.30. மணிக்கு ரயிலேறிக் காலையிலே ஸூரத்துக்கு வந்து சேர்ந்தோம். ரயில்வே ஸ்டேஷனில் காங்கிரஸ் கமிட்டியின் காரியதரிசியும், வேறு சிலரும் வந்திருந்தார்கள். நாங்கள் வந்தவுடனே எங்கள் முன்பு வந்து, "நீங்கள் காங்கிரஸ் கூடாரத்துக்குப் போகிறீர்களா? அல்லது புதிய கட்சியாரின் கூடாரத்துக்குப் போகிறீர்களா?" என்று விசாரணை செய்தார். நாங்கள், "ஐயா, காங்கிரஸ் சபைக்குத் தான் வந்திருக்கிறோம். நாங்கள் சுதேசிக் கட்சியைச் சேர்ந்தவர்கள்" என்று மறுமொழி கூறினோம். நாங்கள் இது சொன்னவுடனே, காங்கிரஸ் காரியதரிசி எங்களைக் கவனியாமல் போய் விட்டார். இரண்டு கட்சியாருக்கும் முடிவான பிரிவினை உண்டாக்க வேண்டுமென்று மேட்டா வகுப்பினர் நிச்சயம் செய்து விட்டார்கள் என்பது எங்களுக்கு அப்போதே புலப்பட்டது. அப்பால் சுதேசிக் கட்சியாருக்கென்று பிரத்தியேகமாக ஸூரத் நகரத்துக்குள்ளே "வாணியசேரி" என்ற இடத்தருகே வசதிகள் செய்து வைத்திருந்த சங்கத்தார்களிலே சிலர் எங்களை அழைக்கும் பொருட்டு வந்திருந்தார்கள். அவர்கள் தயார் செய்த வசதிக்குப் போய்ச் சேர்ந்தோம். அங்கே "வந்தே மாதரம்" பத்திராதிபராகிய ஸ்ரீமான் அரவிந்த கோஷ், துணைப் பத்திராதிபராகிய சியாமஸுந்தர

சக்ரவர்த்தி முதலிய மகான்களெல்லாம் வந்து இறங்கியிருந்தார்கள். ஸூரத் நகரத்துப் புதிய கட்சி நண்பர்கள் எங்களுக்குச் செய்து வைத்த வசதி மிகவும் அசௌகரியமானது. கீழே ஒரு கோயில், மேலே பெங்காளத்திலிருந்தும், சென்னை மாகாணத்திலிருந்தும் வந்திருந்த பிரதிநிதிகளுக்கு இடம். புழுதி சொல்ல முடியாது. நடந்து போகும் போதே, மோட்டார் வண்டியோடுவது போலப் புழுதி; எழுந்தால் புழுதி. தூசியும் குப்பையும் நிறைந்த அந்த இடத்திலே செல்வத்திலும், கல்வியிலும் நிகரற்றவர்களும், பாரத நாடு முழுமையும் பரவிய கீர்த்தியுடையவர்களுமான பெரியோர்கள் வந்து தங்கி இருந்தார்கள். ஜலத்திற்கும் கஷ்டம்தான். சாப்பாட்டுக்கு வீட்டிலிருந்து ஒரு கூப்பிடு தூரத்தில் ஒரு அன்னசாலை வைத்திருந்தார்கள். அந்த அன்ன சாலையின் சாப்பாடு மகாராஷ்ட்ர சபையார்களால் தயார் செய்து வைக்கப்பட்ட தாகையால் மற்றவர்களுக்குக் கொஞ்சமேனும் ஒத்துக் கொள்ளவில்லை. வட தேசத்திலே திருஷ்டி தோஷம் கிடையாது. தென்னாட்டிலேயிருந்த பிராமணர்கள் மற்ற வகுப்பினர் எல்லோரும் சேர்ந்து பாரத நாடு முழுமையினுமிருந்து வந்திருந்த சுதேசிகளுடன் ஒரே பந்தியில் உட்கார்ந்து உண்டனர்.

நமது மாகாணத்திலிருந்து போன பிரதிநிதிகளிலே பெரும்பான்மையோர் மேற்படி அன்னசாலையில் உண்டு, அதற்கடுத்த புதியகட்சி வசதியிலேயே தங்கி விட்டார்கள். சிலர் மட்டும் பொதுக் காங்கிரஸ் பந்தலிலே போய் வாசம் புரிந்தோம். 24, 25ந் தேதிகளில் எங்களுடைய சுதேசிய சங்கம் (நாஷனலிஸ்ட் கான்பரன்ஸ்) நடைபெற்றது. இரண்டு தினங்களிலும் ஸ்ரீ அரவிந்த கோஷ் (வந்தே மாதரம் பத்திராதிபர்) அக்கிராசனம் வகித்தார். ஸ்ரீமான் திலகர் உபந்நியாசம் செய்தார். காங்கிரஸ் சபை

கூடப் போவதன் சம்பந்தமாகப் புதிய கட்சியார் செய்ய வேண்டிய காரியங்கள் இன்னின்ன என்பதைத் திலகர் விஸ்தரித்துக் கூறினூர். இந்த இரண்டு தினங்களிலேயும் புதிய கட்சிச் சங்கத்தார் செய்துகொண்ட தீர்மானங்கள் ராஜாங்க சம்பந்தமானவையாதலால் அவற்றை இந்தப் பொதுவர்த்தமானங்களோடு சேர்க்காமல் வேறிடத்திலே விவரித்தல் பொருந்துமென்று நினைக்கிறோம்,

புதுக்கட்சி கான்பரன்சுக்கு ஸர்தார் அஜித்சிங் வந்திருந்தார். அவரைச் சென்னை சுதேசியஸ்தர்களாகிய நாங்களெல்லோரும் காங்கிரஸ் பந்தலிலிருந்த எங்கள் கூடாரத்துக்கு அழைத்துச் சென்று ரோஜாப் புஷ்பங்களால் அர்ச்சனை செய்து வாழ்த்துக்கள் கூறி உபசரித்தோம். அஜித்சிங் 26 வயதுள்ளவர், சாமானிய குடும்பத்திலே பிறந்தவரான போதிலும், பார்வைக்கு ராஜ குமாரனைப் போலிருக்கிறார்.

வீரியமும், பராக்கிரமமும், ஸாஹஸமும், கூர்மையான அறிவும், களங்கமற்ற சிந்தையும், இவர் முகத்திலே ஜொலித்துக் கொண்டிருக்கின்றன. இவர் தம்முடைய அற்புத சரித்திரத்தை யெல்லாம் நாம் வற்புறுத்தியதன் பேரில் நமக்குத் தெரிவித்திருக்கின்றார். அதைச் சுருக்கமாக விவரித்துவிட்டு மேலே செல்லுவோம்.

லாலா லாஜ்பதிராயைப் பிடித்து மாண்டலேக்கு அனுப்பியவுடனே ஸர்க்கார் அதிகாரிகள் இன்னொரு தேசாபிமானியைப் பிடித்து அனுப்பப் போகிறார்களென்ற பிரஸ்தாபம் உண்டாயிற்று. தேச முழுவதும் இந்த இரண்டாவது தேசாபிமானி யாராயிருக்கலாம் என்று ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தது. லாலா லாஜ்பத்ராயின் உயிர்த் தோழராகிய லாலா ஹம்ஸராஜ் என்பவரை ஒருவேளை அனுப்பக் கூடும் என்ற சந்தேகம்

உண்டாயிற்று. அப்பால் ஸர்தார் அஜித்சிங் என்ற ஒருவரைப் பிடித்து அனுப்பப் போகிறார்கள் என்ற சமாசாரம் கிடைத்தது. சில நாட்களிலே ஸர்தார் அஜித்ஸிங் போலீசார் வசமிருந்து தப்பி விட்டாரென்றும், இவர் இன்ன இடத்தில் ஒளிந்துக் கொண்டிருக்கிறார் என்பதும் தெரியாமல் தேடித்திரிந்து கொண்டிருக் கிறார்கள் என்றும் வர்த்தமானம் தெரிந்தது. லாலா லாஜ்பத்ராய் மேலேனும், ஸர்தார் அஜித்சிங் மேலேனும் அதிகாரிகள் எவ்விதமான குற்றமும் எடுத்துக்கூற முடிய வில்லையாயினும் ஸர்தார் அஜித்சிங் ராணுவத்தாரின் மனதிலே ராஜ துரோகம் விளைவிக்க முயற்சிகள் புரிந்தார் என்று வதந்தி உண்டாயிற்று. பிறகு ஒருநாள் அமிருத சரஸ் என்ற நகரத்திலே ஸர்தார் அஜித்ஸிங் ஒருமடத்திலே மாறு வேஷம் கொண்டிருந்தாரென்றும் அங்கிருந்து அவரைப் பிடித்து மாண்டலேக்கு அனுப்பிவிட்டார் களென்றும் தந்தி கிடைத்தது. நாடகத் தோற்றங்கள் போலக் கேட்டோரெல்லாம் வியப்பும், மயிர்க் கூச்சும் அமையும்படியான இந்த சம்பவங்கள் நிகழ்ச்சி பெறுவதன் முன்பு நாமெல்லாம் அஜித்ஸிங் என்று பஞ்சாபிலே ஒருவர் உண்டென்பதைக்கூட அறியோம். வானத்திலே திடீரென்று ஒரு புதியநட்சத்திரம் காணப்பட்டு எந்நாளும் மங்காத ஒளியுடன் பிரகாசிப்பதுபோல இவர் திடீரென்று நமது தேசபக்தர் திருக் கூட்டத்திலே வந்து சேர்ந்து கொண்டார்...

சென்ற டிசம்பர் மாதம் காங்கிரஸ் சபை எந்த விதத்தில் தகர்ந்து போனது என்பதைப் பற்றி இங்கு சில விஷயங்கள் குறிப்பிடுவது பொருத்தமுடையதாகுமென்று கருதுகிறோம். 1906ம் வருஷத்திலே கல்கத்தாவில் காங்கிரஸ் நடந்தது. அதற்குச் சில மாதங்களின் முன்பு தான் கல்கத்தாவில் விபினசந்திர பாபு "வந்தே மாதரம்"

பத்திரிகை ஆரம்பம் செய்தார். பெங்காள முழுமையிலேயும் புதிய கிளர்ச்சியின் பெருக்கம் மிகுதிப்பட்டிருந்தது. பெங்காளத்திலே சிறியோர், பெரியோர், ஏழைகள். செல்வர் முதலிய எல்லோரும் அன்னிய வஸ்து பஹிஷ்காரத்திலே ஒரே திடசிந்தை கொண்டவர்களாய் இருந்தார்கள். அந்தக் காங்கிரஸ் சபை நடப்பதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னதாகவே கட்சிச் சண்டைகள் பலமாய் விட்டன. திலகரை அக்கிராசனுதிபதியாக்க விபின சந்திரர் இடத்துக்கிடம் போய் உபந்நியாசங்கள் செய்து முயற்சி புரியத் தொடங்கினுர். பம்பாய் மேத்தா கம்பெனியாரே காங்கிரஸ் கூத்தின் "ஸ்டேஜ் மானேஜர்களாக" அப்போதும் இருந்தார்களாகையால், திலகர் கூடாதென்று சுரேந்திர நாதருக்குப் பலமான போதனைகள் செய்து வற்புறுத்தி விட்டார்கள். சுரேந்திர நாதருக்கு அப்போது சரியான யோசனை ஏற்பட்டு, இரண்டு கட்சிக்கும் பொதுவானவரும் நமது ராஷ்ட்ரீய முயற்சிக்கு மூதாதையும் ஆகிய தாதாபாய் நவுரோஜிக்கு தந்தி கொடுத்து அவரை அக்கிராசனம் வகிக்கும்படி கேட்டுக் கொண்டார். தாதாவும் சம்மதமளித்து விட்டார். இதில் புதிய கட்சியாருக்கு சந்தோஷமுண்டாய் திலகர் வரவேண்டுமென்று நடத்திய பிரயத்தனங்கள் கைவிடப் பட்டன. அந்த வருஷம் பெங்காளத்திலே இருந்த கிளர்ச்சிக்கு தாதா பாய் நவ்ரோஜியைத் தவிர வேறு யார் அக்கிராசனுதிபதியாக இருந்தபோதிலும் மிகவும் கஷ்டம் ஏற்பட்டிருக்கும். காங்கிரஸ் டிசம்பர் மாதம் நடந்தது. பெங்காளத்தார், சுதேசியம், பஹிஷ்காரம், ஜாதியக்கல்வி என்ற விஷயங்களிலேயும் மிகவும் ஊர்ஜிதமாயிருந்தார்கள். மேத்தா முதலியவர்களுக்கு மேற்படி மூன்று விஷயங்களிலும் சம்மதமில்லை. நவுரோஜியைக் கலைத்து விடுவதற்கு மேத்தா வகையருக்கள் செய்த முயற்சி கொஞ்சமில்லை.

ஆனால் தாதாவோ புதிய கிளர்ச்சி இந்நாட்டில் உண்டாயிருப்பது பற்றி உள்ளம் பூரித்துப் போயிருந்தார். தமது முயற்சிகளெல்லாம் பழுக்கும் காலம் வந்து விட்டது என்பதை தாதா அறிந்துகொண்டார். மேத்தா முதலியவர்களும் பெங்காளத்திலிருந்த தேச பக்தி வெள்ளத்தைக் கண்டு பயந்து இந்த வெள்ளத்தை எதிர்க்க நம்மால் முடியாது என்று எண்ணிவிட்டார்கள். எனினும் இரு திறத்தாருக்கும் பலமான விவாதங்களும் சண்டைகளும் நடக்காமலிருக்கவில்லை. ஆனால் தாதாவின் அறிவு முதிர்ச்சியாலும், அன்பினாலும், அந்த விவாதப் புயல் காற்றிலே காங்கிரஸ் கப்பல் சிதறி விடாமல் பாதுகாக்கப் பட்டது. சுதேசியம், பஹிஷ்காரம், ஜாதியக் கல்வி என்ற மூன்று மட்டுமேயன்றி ஸ்வராஜ்ய விஷயமாகவும் தீர்மானங்கள் செய்து கொள்ளப்பட்டன. காங்கிரஸ் சபை முழுதும் அத் தீர்மானங்களை அங்கீகாரம் செய்து கொண்டது. அத் தீர்மானங்கள் முழுமையும் புதிய கட்சியார் பூர்ண திருப்தி கொள்ளுமாறு அமைந்திரா விட்டாலும் பெரும்பாலும் புதிய கட்சியின் நோக்கத்தைத் தழுவியனவாகவும், அபிவிருத்தி முகம் கொண்டனவாகவும் இருந்தன. புதிய கட்சியார் ஒரேயடியாக நாடு முழுதும் நமது நோக்கத்துக்கு வந்து விடுவது சாத்தியமில்லை யாகையால் சிறிது சிறிதாகவேனும் சரியான சுதேசிய வழிக்குக் காங்கிரஸ் சபை திரும்பிக் கொண்டிருக்குமாயின் அதுவே போதுமானது என ஒருவாறு மனத் திருப்தி கொண்டவர்கள் ஆயினர்.

தேச முழுவதும் தாதாபாயின் திறமையை வியந்து, அவர் செய்த காரியத்திலே மிகுந்த சந்தோஷ மெய்திற்று. எங்கே பார்த்தாலும் ஜனங்கள் புதிய கட்சியின் பாரிசமாக அதிகச் சார்பு காட்டத் தொடங்கினார்கள்.

இதெல்லாம் மேத்தா கம்பெனியாருக்குப் பிடிக்க வில்லை. புதிய கட்சியார் செய்த முயற்சியின் விளைவை அழித்துவிட வேண்டுமென்று அவர்கள் தம்மால் இயன்ற விதங்களில் எல்லாம் வேலைசெய்து பார்த்தார்கள். இதன் மேல் கவர்ன்மெண்டார் ஒரு பக்கத்திலே ஜனாபிவிருத்திக்கு நேர் விரோதமாகவும், இடைஞ்சலாகவும், பல விதமான விதிகள் ஏற்படுத்த ஆரம்பித்தார்கள். பத்திராதிபர்களைச் சிறையிலடைப்பதும், ஸ்வராஜ்ய போதனை செய்வோர்களை இம்சை புரிவதும், தேச பக்தர்களை விசாரணையில்லாது தீபாந்தர மனுப்புவதும் நாட்டிலே வழக்கமாய் விட்டன. இத்தோடு நிதானக் கட்சியாரை வசப்படுத்தி, உண்மை யான சுதேசிகளின் முயற்சிக்குத் தடை புரியச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் கவர்ன்மெண்டார் நிதானக் கட்சியாருக்கு ஹிதமான வார்த்தைகள் அதிக மாகச் சொல்வதோடு, சிற்சில ஸாமானிய காரியங்களிலே நிதானக் கட்சியார் விரும்பக்கூடிய சில வேடிக்கை யனு கூலங்கள் செய்யத் தொடங்கினார்கள். இதிலே மேத்தா முதலியவர்கள் மனது மயங்கிப் போய் சுதேசிய அபிவிருத்திக்குத் தம்மால் இயன்ற அளவு தடை செய்யத் தீர்மானித்து விட்டார்கள்.

ஸூரத்திலே சென்ற வருஷம் ஓர் மாகாணச் சங்கம் நடந்தபோது மேத்தா வகையராக்கள் அந்த சங்கத் திலே காங்கிரஸ் தீர்மானங்களுக்கு நேர் விரோதமான வேலை செய்து முடித்து விட்டார்கள். ஜாதீயக் கல்வியைப் பற்றியும் பஹிஷ்காரத்தைப் பற்றியும் பிரஸ்தாபமே யில்லாமல் மேத்தா காரியத்தை நடத்தி விட்டார். மேலும் சென்ற சில மாதங்களாக நிதானஸ்தர்கள் பேசும் பேச்சுக்களையும், செய்யும் செய்கைகளையும் கவனிக்கும் போது அவர்கள் ஸர்க்காரைத் திருப்தி செய்விக்கும்

பொருட்டாக சுதேசிய விளக்கை மங்கச் செய்ய உறுதி கொண்டு விட்டார்களென்று வெளியாகத் தொடங்கிற்று.

நாகபுரத்தில் நடத்த வேண்டும் என்று தீர்மானம் செய்யப் பட்டிருந்த காங்கிரஸ் கூட்டத்தை மேத்தாவும் அவருடைய பூஜாரிகளுமாகச் சேர்ந்து சூரத் நகரில் நடத்தத் தீர்மானித்து விட்டார்கள். அதிலே புதிய கட்சியார் என்பவர்களுக்கு சந்தேகம் அதிகப்பட்டது. அப்படியிருக்க, காங்கிரஸ் நடப்பதற்கு சுமார் 10 தினங் களுக்கு முன்னமே இந்த காங்கிரஸில் இன்னின்ன விஷயங்கள் தீர்மானிக்கப்படும் என்பதைக் குறிப்பிட்டு ஓர் ஸர்க்யூலர் பத்திரிகை நாடு முழுவதும் நிதானஸ்தர்களால் அனுப்பப் பட்டது. அதில் ஸ்வராஜ்யம், பஹிஷ்காரம், ஜாதீயக் கல்வி என்ற விஷயங்களைப் பற்றிய பிரஸ்தாபமே இல்லாமலிருந்தது. இதனால் புதிய கட்சியார் கொண் டிருந்த சமுசயங்கள் முன்னிலும் பதின்மடங்கு தீக்ஷண்ய மடைந்தன. முந்திய (1906) வருஷத்திலே கல்கத்தாவில் புதிய கட்சியார் அரும்பாடு பட்டதன் பேரில் காங்கிரஸ் சபையாரால் அங்கீகாரம் செய்து கொள்ளப்பட்ட மேற்படி தீர்மானங்களை நிதானஸ்தர்கள் இலேசாக ஒதுக்கிவிடப் போகிறார்களென்பதை அறிந்து அநேகர் மனம் புழுங்க லாயினர். ஸூரத் நகரமோ மேத்தா பிறந்த இடம். ராஜ்ய சம்பந்தமான விவகாரங்களில் அதிகப் பழக்கமற்ற வர்களும் தேச பக்தியைக் காட்டிலும் காசு பக்தியே பெரி தென்ற எண்ணம் கொண்டவர்களும் ஆகிய குஜராத்திப் பிரபுக்களின் செல்வாக்கு அந்த ஊரிலே அதிகம். அந்தப் பிரபுக்களிலே பெரும்பாலார் மேத்தா சொல்லியபடி யெல்லாம் ஆடக்கூடிய பொம்மைகள். இந்தத் தன்மை கொண்ட இடத்திலே புதிய கட்சியார் எவ்வளவு பலத் துடன் போன போதிலும் காங்கிரஸ் சபையை ஊர்த்துவ முகமாக்கி மேலபிவிருத்திகள் கொள்ளத் தக்கவாறு செய்

வித்தல் கஷ்டம் என்பது சொல்லாமலே விளங்கும். சுதேச பக்திக்குத் தாய் வீடுகளில் ஒன்றாகிய கல்கத்தா நகரத்திலே புதிய கட்சியாருக்கிருந்த செல்வாக்கும் வல்லமையும் 'நித்திரைக் குகை' (Sleepy Hollow) என்று நியாயமான பெயர் படைத்திருக்கும் சூரத் நகரத்தில் ஏற்படுதல் சாத்தியமில்லையல்லவா! பாரத பக்த திலகராகிய ஸ்ரீமான் பால கங்காதார திலகர், இதனை நன்கு தெரிந்துகொண்டவராகி, காங்கிரஸ் சபை சூரத் நகரில் மேல் முகமாகச் செல்லாவிடினும் தாழ்முகமாக்கப் படாமலாவது முன்னிருந்த நிலைமையைப் பாதுகாத்திருக்கச் செய்ய வேண்டுமென்று பிரயத்தனங்கள் செய்யத் தொடங்கினர். "சுயபலம், ஆத்தும ஸஹாயம் என்பவற்றையே நம்பி தேச நலத்துக்குரிய உண்மையான வழிகளைக் கைக்கொண்டிருக்கும் சுதேசியக் கட்சியாரின் விருப்பப்படியே முழுதும் காங்கிரஸ் சபையின் தீர்மானங்கள் அமைக்கப் பெறு விட்டாலும் போகட்டும். அதற்கு வருஷந்தோறும் சிறிது சிறிதாகப் பாடுபட்டு நமது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளுவோம். சூரத் நகரில் ஒரு கட்சியாரின் திறமை செல்வதுபோல் இனி வருஷந் தோறும் எல்லா நகரங்களிலும் செல்லமாட்டாதல்லவா? ஆதலால், அபிவிருத்தியைப் பற்றிப் பின்னால் பார்த்துக் கொள்வோம். ஆனால் இவ் வருஷத்தில் (1907) தீர்மானங்களின் நிலை முன்பிருந்த மாதிரிக்குத் தாழ்ந்து போய் விடாமல் அவசியம் கவனித்துக்கொள்ள வேண்டும். வெள்ளைக்காரரின் நய வார்த்தைகளுக்கும், பய வார்த்தைகளுக்கும் வசப்பட்டு நிதானஸ்தர் என்று பெயர் கொண்டிருக்கும் கூட்டத்தார் சென்ற வருஷம் கல்கத்தாவிலே செய்து கொள்ளப்பட்ட முக்கியமான தீர்மானங்களிலே சிலவற்றை இவ் வருஷம் நழுவவிட முயற்சி பண்ணுகிறார்கள். இதை நாம் ஒரு போதும் பொறுத்திருக்கலாகாது" என்று ஸ்ரீ திலகர் நிகிச்

யித்துக் கொண்டார். இந்த நோக்கத்தின் பேரில் காங்கிரஸ் கூடுவதற்குச் சில தினங்கள் முன்பாகவே திலகரும் அவர் கட்சியாரும் சூரத் நகரத்துக்கு வந்து, பொதுக் கூட்டங்கள் நடத்தி ஜனங்களுக்குத் தமது கருத்தை விண்ணப்பம் செய்துகொண்டார்கள்.

காங்கிரஸ் தேவிக்கு முன்னமேயே அணிந்திருக்கும் மணிகளைக் கழற்றி யெறிந்துவிட வேண்டுமென்ற கெட்ட நோக்கம் கொண்டிருந்த நிதானத் தலைவர்களை எவ்வகையாகிலும் சரிப்படுத்தி அவர்களுடன் சமாதானம் செய்து கொண்டு சமரசமாகப் போக வேண்டுமென்று திலகர் செய்த முயற்சிகள் கொஞ்சமல்ல. எப்படியாவது காங்கிரஸ் விக்கினமில்லாமல் நடந்தேற வேண்டும் என்பதே திலகருடைய நோக்கம். ஆனால் நிதானஸ்தர்களோ எவ்விதமான சமாதானத்துக்கும் இணங்காமல் ஒரே முரண் கொண்டவர்களாக இருந்து விட்டார்கள். இதன் பேரில் திலகர் ஓர் உபாயம் செய்தார். அது யாதெனில்? ராஸ் விகாரி கோஷ் என்றவரை இவ் வருஷம் இவர்கள் சபைத் தலைவராகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். இவரோ சபைத் தலைமைக்குச் சிறிதும் அருகரில்லை. இவருடைய பிரசங்கம் காங்கிரஸ் சபையில் வாசிக்கப்படு முன்னரே கல்கத்தாப் பத்திரிகைகளில் பிரசுரமாகி அதன் ஸாராம்சங்கள் தந்தி மூலமாக ஸூரத்துக்கு வந்து விட்டன. இரு கட்சியாருக்கும் பொதுவாயிருந்து நியாய அந்நியாயங்களைத் தீர விசாரித்து அறிந்து பக்ஷபாதமில்லாமல் நடத்துபவரே காங்கிரஸ் போன்ற மகா சபைக்குத் தலைவராயிருக்குந் தகுதியுடையவர். அவ்வாறில்லாமல் ஒரு கட்சி மனிதனாக இருந்துகொண்டு தமது தலைமை உபந்நியாசத்திலே ஓர் முக்கியமான கட்சியாரைப் பற்றி அவதூறுகள் எழுதி வந்திருக்கும் அவசர குணமுடையவரும், பொறுமையற்றவருமாகிய ஒருவர் அந்த

ஸ்தானத்துக்கு தகுதியுடையவராக மாட்டார். இவரைப் புதிய கட்சியார் அக்கிராசனம் பெறக் கூடாதென்று எதிர்க்க உரிமையுடையவராகின்றார்கள். ஆனால் இதுவரை காங்கிரஸ் சபாநாயகர் எவ்விதமான எதிர்ப்புமில்லாது பொதுவாக எல்லாக் கட்சியாலும் அங்கீகாரம் செய்யப் படுதல் மரபு. ஆகவே இந்த வருஷம் புதிதாக எதிர்ப்புத் தொடங்குவோமேயானால் அது நிதானஸ்தர்களின் மனதைப் புண்படுத்தக் கூடும். இதனை உத்தேசித்து அவர்களிடம், "நாம் சபைத் தலைவர் நியமனத்தை எதிர்ப்பது கிடையாது. அதற்குப் பிரதியாக நீங்கள் சென்ற வருஷத் தீர்மானங்களைக் குலைப்பதில்லை என்று வாக்குறுதி கொடுங்கள் என்று கேட்கலாம். அப்படிக் கேட்டால் அவர்கள் தம்முடைய தீய செய்கையை நிறுத்தி விடுவார்கள் என்பதில் ஆக்ஷேபமில்லை" என்று திலகர் நிச்சயித்தார்.

அதற்கிணங்கவே புதிய கட்சியார் "காங்கிரஸ் தீர்மானங்கள் முன் வருஷத்து நிலைமையிலே பாதுகாக்கப் படுமென்று வாக்குறுதி கொடுத்தால் நாங்கள் சபைத்தலைவர் நியமனத்தை எதிர்ப்பதில்லை. அப்படி வாக்குறுதி கொடுக்காத விஷயத்தில் எதிர்த்தே தீருவோம்" என்றனர். அவ்விதமான வாக்குறுதி கொடுக்க கோகலே முதலியவர்கள் சம்மதிக்க வில்லை, சமாதானத்துக்கு வருபவர்கள் போலப் பாவனை செய்துவிட்டு கடைசியில் நிதானஸ்தர்கள் ஏமாற்றி விட்டார்கள். இதிலே புதிய கட்சியாருக்கு மிகவும் வருத்தமுண்டாயிற்று. இடையே சென்னைப் பிரதிநிதிகளின் கூடாரத்தில் ஸ்ரீ கோகலே ஒரு மீட்டிங் நடத்தினார். அவர் புதிய கட்சியாரை ஸர்க்கார் பூச்சாண்டியின் பெயரைச் சொல்லி பயமுறுத்தியது மல்லாமல் வேறு பல விதங்களாலும் அவர்கள் மனதைப் புண்படுத்தினார். இது நிற்க.

26ந்தேதி பகலில் காங்கிரஸ் சபை கூடிற்று சுமார் 1500 பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். பிற ஜனங்கள் பல்லாயிரம் பேர் வந்திருந்தார்கள். சபை தொடங்கு முன்பாக சில பார்ஸி மாதர்களும், குஜராத்தி ஸ்திரீகளும், 'வந்தே மாதரம்' பாட்டையும் வேறு பல சுதேசியப் பாடல்களையும் வாத்தியத்தோடு இனிய கந்தருவக் குரலிலே பாடினார்கள். அவர்கள் பாடும்போது சபையோ ரெல்லாம் எழுந்து நின்று பக்தி பாராட்டினார்கள். அப்பால் ஸ்ரீமான் மால்வி (உபசரணைச் சங்கத்தின் தலைவர்) வழக்கப்படியே நல்வரவு கூறி ராஸ் விஹாரி கோஷ் சபைத் தலைவராக வேண்டுமென்று பிரேரணை செய்தார். அதை ஆமோதிக்கும் பொருட்டாக ஸ்ரீமான் சுரேந்திரநாத் பானர்ஜி எழுந்தார். உடனே பெருங் கூச்சலும் குழப்பமும் உண்டாய் விட்டன.

[பாரிஸாலிலும், கல்கத்தாவிலும் சுரேந்திரநாத் பானர்ஜி முதலிய நிதானக் கட்சித் தலைவர்களைப் போலீஸ் காரர்கள் அவமதிப்புடன் நடத்திய காலத்தில் தேச முழுதும் ஜனங்கள் மனத்திலே ஆத்திரமுண்டாய் அந் நிதானத்தலைவர்கள் மீது ஜனங்களுக்கிருந்த பற்றும் பக்தியும் பலமடங்கு அதிகப் பட்டன. மைமன்ஸிங் முதலிய இடங்களிலே போலீஸார் ஜனங்களைப் படுத்திய இமிசை நமது நெஞ்சினின்றும் நீங்க இன்னும் நெடுங் காலம் செல்லும்.

இவ்வாறிருக்க மித்னபூரில் நடந்த கான்பரன்சிலே நிதானக் கட்சித் தலைவர் சுதேசியஸ்தர்களை (புதிய கட்சியாரை) அடக்க வேண்டுமென்ற நோக்கத்துடனே போலீஸார் உதவியை நாடி சபைக்குள்ளேயே போலீஸாரை அழைத்து வைத்திருந்தபோது பொதுஜனங் களுக்கு அளவற்ற துக்கமும் கோபமும் உண்டாயின,

நிதானக் கட்சியார் பொது ஜனசங்கத்திலே போலீஸ் அதிகாரிகளின் சகாயத்தைக் கொண்டு தங்களோடு பொது நோக்கமுடைய தேசாபிமானிகளை பயமுறுத்த வேண்டுமென்ற இழிவான சிந்தை கொண்டதிலிருந்து சுதேசிகளுக்கு நிதானஸ்தர்களிடம் வெறுப்பும் சினமும் உண்டானது ஓர் வியப்பாக மாட்டாது. நிதானஸ்தர் களின் மேற்படி துரோகச் செய்கைக்கு பாபு சுரேந்திர நாத் பானர்ஜியும் உடந்தையாக இருந்தார். மித்னபூர் சங்கத் திலே சுரேந்திர நாதரும் ஓர் போலீஸ் அதிகாரியும் பிரசங்க மேடையின் மீது சேர்ந்து உட்கார்ந்திருந்த வரிசையைக் கண்டவுடனே சுதேசியஸ்தர்களின் மனம் பொங்குவதாயிற்று. சுரேந்திர நாதரைத் தேசபக்த சிகாமணியாகவும் ஜகத்குருவாகவும் பாராட்டிவந்த ஜனங் களின் மனதிலே அக்காட்சி பழுக்கக் காய்ச்சிய வேல் கொண்டு குத்தியது போல் ஆயிற்று. மித்னபூர் கான்பரன்ஸ் நடந்த காலத்தில் இச்செய்தி பத்திரிகைகளில் எல்லாம் வெளிவந்தது.] நிற்க.

சென்ற டிசம்பர் மாதம் 26 ந்தேதி சூரத் காங்கிரஸ் கூடி, மிஸ்டர் மால்வியின் உபந்யாசம் முடிந்த உடனே சபாநாயகரைப் பற்றிய பிரேரணையை ஆமோதிக்கும் பொருட்டாக ஸ்ரீ பானர்ஜி ஒரு சிங்கம் எழுந்தாற்போல எழுந்து நின்றார். இரண்டு வாக்கியங்கள்கூடச் சொல்லி முடிவாகவில்லை. அதற்குள் மகாசபையிலிருந்து "மித்னபூர் துரோகி" என்ற ஒரு சத்தம் உண்டாயிற்று. அவ்வளவுதான். அப்புறம் 20 நிமிஷங்கள் வரை சபையி லிருந்து அமளி சொல்லி முடியாது. "மித்னபூர் துரோகி" "உட்காரும்! உட்காரும்" என்ற இரைச்சல் காது செவிடு படும்படியாய் விட்டது. நெடுங்காலமாக ஒருவரை ஜனங்கள் தேவதா விசுவாசத்துடன் பேணி வந்து, பிறகு திடீரென்று அவர் துரோகம் செய்து விட்டதாக அறிந்து

கொள்வார்களானுல் அச்சமயத்தில் அவர்களுக்குண்டாகும் கோபமும், ஆத்திரமும் ஆன சண்டமாருதத்தை அடக்க யாராலும் முடியாது. ஆயிரம் தொண்டைகளிலிருந்து ஏக காலத்தில் நானுவிதமான இரைச்சல்கள் உண்டாயின. சபை நிலைகலங்கிப் போய் விட்டது. சுரேந்திர பானர்ஜியிடம் விசுவாசம் மாருதிருந்த கட்சியார் ஒரு புறத்திலே எதிர்ச் சத்தம் கிளப்பத் தொடங்கிவிட்டார்கள். "பேசும் பேசும்" "Go on Go on" என்ற கூக்குரல்கள் வேறு அபரிமிதமாக எழுந்துவிட்டன. இரண்டு வகைப்பட்ட இந்தச் சத்தத்திலே சுரேந்திரநாத் பானர்ஜியின் கடல் ஒலி போன்ற ஓசை கூட அடங்கிப் போய்விட்டது. அவர் எவ்வளவோ சிரமப்பட்டுத் தம்மால் இயன்ற மட்டும் உரத்த குரலிலே பேசிப் பார்த்தார். பலிதமில்லாமற் போய் விட்டது. உடனே சுரேந்திர நாதர் திடீரென்று மேஜையின்மீது தாவி ஏறி நின்று கொண்டு "I will be heard" எனக்கு நீங்கள் செவி கொடுத்தே தீர வேண்டும்" என்று கர்ஜனை செய்தார். எவ்வளவு கர்ஜனைசெய்தால்தான் என்ன? நிஷ்பிரயோஜனமாகி விட்டது. சுரேந்திரநாத் பானர்ஜி மேஜையிலிருந்து இறங்கி விட்டார்.

சபை இனி நாளைக்குத்தான் கூடும் என்று சொல்லி விட்டு நிதானக் கட்சித்தலைவர் எல்லாம் பின் பக்கத்து வாயில் வழியாகத் தப்பிச் சென்று விட்டார்கள். வருணிக்க முடியாத குழப்பமும் அமளியும் ஒருமட்டில் முடிவு பெற்றன. இவ்வளவு விமரிசையோடு 26ந் தேதி காங்கிரஸ் சபை கலைந்தது.

அப்பால் இரவு வரையிலும் எங்கே பார்த்தாலும் இதுவே பேச்சாயிருந்தது. காங்கிரஸ் சபை தொடங்கி 23 வருஷ காலமாயும் இதுவரை இந்தமாதிரி ஒரு போதும்

நடந்தது கிடையாது. 'இது என்ன புதுமை! என்ன காலக்கேடு' என்று வியப்பார் சிலர், பிரதிநிதிகளாக வந்தவர்களிலே ஒருவர் திடீரென்று காங்கிரஸ் கூடும் தினத்தில் மரணமடைந்த சகுனத்தின் பயனைக் கண்டு விட்டோமென்பார் வேறு சிலர். "வங்காளத்தில் டாக்கா மாஜிஸ்ட்ரேட்டை சுட்டு விட்டதாகப் பிரஸ்தாபம் வந்திருக்கிறது. கவர்ன்மெண்டார் மகா கோபமடைந்திருப்பார்கள். தேசத்திற்கு என்னென்ன கோரமான கொடுமைகள் விளையப் போகின்றனவோ! அதற்கெல்லாம் இதுவோர் முற்குறியாகும்" என்று கலங்குவோர் சிலர். யார் முகத்தைப் பார்த்தாலும் கலக்கத்தைத்தவிர வேறு தெளிவு கிடையாது.

26 ந் தேதி மாலையில் நகர மத்தியிலே புதுக் கட்சியாரின் சபையொன்று கூடிற்று, எனக்கு உடம்பு சிறிது அசௌகரியமாக இருந்த படியால் நான் அங்கே போகக் கூடவில்லை. நடந்த விஷயங்கள் இன்னவென்று அங்கு போயிருந்த எனது மித்திரர்களிலே சிலர் மூலமாகத் தெரிந்து கொண்டேன். அதன் பிறகு இரவு 8 மணிக்குச் சென்னைப் பிறதிநிதிகளின் கூடாரத்திலே ஸ்ரீ. ஜி. சுப்பிரமணிய ஐயர் அக்கிராசனுதிபதியாக ஒரு மீட்டிங் நடந்தது.

ஸ்ரீ. ஜி சுப்பிரமணிய ஐயர் "நடந்தது நடந்தாய் விட்டது. இனி அதனைப்பற்றி விசனப்படுவதனாலேயும், பரஸ்பரம் குற்றம் கூறுவதனாலேயும் யாதொரு பயனும் கிடையாது. நாளைக்கேனும் இவ்வித அசம்பாவிதமான காரியங்கள் நடக்காமலிருக்க வேண்டுமென்பதே எனது விருப்பம்" என்றார்.

அப்போது சென்னைப் புதிய கட்சிப் பிரதிநிதிகளில் ஒருவராகச் சென்றிருந்த ஸ்ரீ துரைசாமி ஐயர் M. A., B. L பின்வருமாறு பேசினார் :

"இன்று நடந்த குழப்பத்துக்குப் புதிய கட்சியார் பொறுப்பாக மாட்டார்கள். அவர்களே பொறுப்பாளிகள் என்று சிலர் எண்ணியிருக்கிறார்கள். அது மிகத்தவறான எண்ணம். மித்னபூர் சம்பவத்தைக் கருதி சுரேந்திர நாதரின் மீது சில பிரதிநிதிகளுக்கு ஆத்திர மிருந்த படியால் அவர்கள் அவருடைய பிரசங்கத்துக்குத் தடை செய்ய ஆரம்பித்தார்கள். அவர்களுடைய கூச்சல் சிறிது நேரத்தில் தானே நின்று போயிருக்கும். அதன்பிறகு நிதானஸ்தர், புதிய கட்சியார் என்ற எல்லா வகுப்புக் களைச் சேர்ந்த பிரதிநிதிகளும் தமக்கிஷ்டமானபடி யெல்லாம் சத்தமிட்டதுதான் சபைநடத்த முடியாமல் செய்துவிட்டது. அது எவராலும் தடுக்கக் கூடியதன்று. ஒருவர் மீது சபையாருக்குக் கோபமிருக்குமானால் அவரை ஆட்சேபித்துச் சபையார் ஓரிரண்டு நிமிஷம் சில கண்டன வார்த்தைகள் சொல்லுவது தப்பாக மாட்டாது. இது எல்லாச் சபைகளிலும் நடப்பது வழக்கம்தான். அதன் பேரில் எல்லோரும் கோபமுதிர்ச்சியடைந்து சபை குழப்ப மடைந்து விடுமானால் அதற்கு யாரும் பழியாக மாட்டார்கள்" என்று விவரித்தார்.

அப்பால் ஸ்ரீ. ஸி. சுப்பிரமணிய பாரதி சொல்லி யதாவது :

இன்று மாலை நடந்த புதுக்கட்சியார் சங்கத்திலே ஸ்ரீ திலகரும், மற்றத் தலைவர்களும் சொல்லிய விஷயங்களை என் மித்திரர் ஒருவர் வந்து என்னிடம் சொன்னார். அதை உங்களுக்கு எடுத்துக் கூற விரும்புகிறேன். இன்று பகலில் நடந்த அசம்பாவிதமான காரியத்துக்கு யார் ஜவாப் தாரியாக இருந்தபோதிலும், நாளைமுதல் காங்கிரஸ் முடியும் வரை இம்மாதிரியான சம்பவம் நிகழ்வதற்குப் புதிய கட்சியைச் சேர்ந்த எந்தப் பிரதிநிதியும் இடம்

கொடுக்கலாகாது என்று எங்கள் கட்சியாருக்குத் திலகர் சொல்லியிருக்கிறார். "ஐக்கிய பலம். நிதானக் கட்சியாரும் நமது கட்சியாகும் சேர்ந்து பாடுபட்டால்தான் தமது தேசநன்மைக்கு விரைவாக ஹேது ஏற்படும். நமது கட்சியாரை காங்கிரஸிலிருந்து பிரித்து விடுவதற்கு அவர்கள் பலவிதமாக முயற்சி புரிந்து வருகிறார்கள். அதற்கு என்ன வியாஜம் ஏற்படப் போகிறதென்று பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நாமும் ஏமாந்து போய் ஓர் வியாஜம் ஏற்படுத்திக் கொடுத்துவிடலாகாது. இன்று நடந்த குழப்பத்திற்கு நமது கட்சியார் முகாந்திரமில்லை என்பதை நான் நன்றாக அறிவேன்.

"ஆகையால் நாளைக்கு சுரேந்திரநாதராகட்டும், வேறு எந்த நிதானஸ்தர்களாகட்டும் நம்மைப்பற்றி என்ன சொல்லிய போதிலும் நீங்கள் எல்லாம் வாய் திறவாமல் மவுனமாகக் கேட்டுக்கொண்டிருக்கவேண்டும். அவர்களுடைய பிரசங்கத்துக்கு எவ்விதமான தடையும் செய்யக்கூடாது" என்று திலகர் வற்புறுத்தியிருக்கிறார். ஆதலால் இனியெனும் நம்மிரு கட்சியருள் ஒற்றுமையாக நயத்தில் காரியம் நடக்கவேண்டும் என்பதே திலகரும், அவரைப் பின்பற்றுவோர்களும் கொண்டிருக்கும் நோக்கமென்பதை நீங்கள் அறிந்து கொள்ளவேண்டும் என்று பிரார்த்தனை செய்கிறேன். காங்கிரஸ் சமயத்தில் நம்மவர்கள் இரைந்து மூச்சுக்கூட விடுவதில்லை என்று மவுன விரதம் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இது உங்களுக்குத் திருப்தி விளைவிக்குமென்று நம்புகிறேன்." என்று பேசினார்.

இதன் பேரில் சபையோர்கள் எல்லாம் மிக்க சந்தோஷம் பாராட்டினார்கள். 27ந் தேதி காங்கிரஸ் நிர்விக்கினமாக முடிவு பெறுமென்ற முழுநம்பிக்கையுடன்

அன்றிரவு பிரதிநிதிகள் எல்லாரும் நித்திரைக்குச் சென்றார்கள். மறுநாள் இன்றைக் காட்டிலும் பெரிய சண்டமாருதம் வீசப்போகிற தென்பதை நாங்கள் கனவிலுங்கூட அறிந்திருக்கவில்லை.

மறுநாள் 27ந் தேதி. பொழுது விடிந்தது. சுமார் 8 மணிக்கெல்லாம் சென்னைப் பிரதிநிதிகளின் ஓர் சபை சேர்ந்து விட்டது. இச்சபையின் நோக்கம் யாதெனில் முதல் நாள் காங்கிரஸ் குழப்பத்திலே சென்னைப் பிரதிநிதிகள் சிலர் சேர்ந்திருந்தார்களாம். அவர்களுடைய நடத்தையைக் கண்டித்து வெறுப்புத் தீர்மானம் செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் இச்சபை கூட்டினர், இது சென்னைப் பிரதிநிதிகளின் சபை என்ற பொய்ப் பெயருடன் நடத்தப்பட்டது. ஆனால் வாஸ்தவத்திலே. (எங்களில் இரண்டு மூன்று பேரைத் தவிர) இதில் முற்றிலும் நிதானக் கட்சியாரே கூடியிருந்தார்கள். சென்னை மாகாணத்துப் புதிய கட்சிப் பிரதிநிதிகள் அழைக்கப்படவே இல்லை.

இந்தப் 'பிரதிநிதி'ச்சபையிலே ஸ்ரீ, என். சுப்பராவ் அக்கிராசனம் வகித்தார். படபடப்பும், முன்கோபமும், தேசாபிமானிகளிடம் வெறுப்பும் ஒன்றுகூடி அவதரித்தாற் போன்ற ஸ்ரீ. வி. கிருஷ்ணசாமி அய்யர் ஏதோ சில அர்த்தமற்ற வார்த்தைகள் பேசினார். யாதொரு சம்பந்தமு மில்லாமல் புதிய கட்சியாரைப் பற்றி அவதூறுகள் பேசிக் குவித்து விட்டார். அப்பால் இவருக்கும் புதுக்கட்சியார் சிலருக்கும் உஷ்ணமான வாக்குவாதம் ஏற்பட்டது. இந்த சபை முடிந்து விட்டது. அதன் பிறகு புதிய கட்சியாரின் கூட்டம் ஒன்று சேர்ந்து நிதானக் கூட்டத்தின் தீர்மானங் களைக் கண்டித்துத் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

பகலிலே காங்கிரஸ் மகாசபை கூடிற்று. சுரேந்திரர் தாம் முதல் நாள் செய்யத் தொடங்கிய உபந்யாசத்தைச் செய்து முடித்தார். அப்பால் திலகர் 'அமெண்ட் மெண்ட்' திருத்தப் பிரேரணை கொண்டுவந்தார். இதுவரை சபை முழுவதும் அமைதி நிரம்பியிருந்தது. A calm before storm (புயற்காற்றின் முன்னேயுள்ள நிச்சப்தம்) என்று ஆங்கிலேயர் கூறும் வசனத்தைப்போல சாதாரணமாக உள்ள இரைச்சல்கூட இல்லாது அடங்கிப் போயிருந்தது. திலகர் பிரசங்க மேடைமீது ஏறும்போது ஒரு வாலண்டியர் எதிர்த்தான். அந்த வாலண்டியரை யாரோ தள்ளி விட்டார்கள். திலகர் 'அமெண்ட் மெண்ட்' கொண்டு வரப் போவதாக முன்னமே சீட்டு மூலமாகத் தெரிவித்துக் கூட அவரைப் பேச வொட்டாமல் தடுத்துவிட வேண்டும் என்ற அக்கிரமமும், அசம்பாவிதமான முயற்சியும் நிதானக் கட்சித் தலைவர்களால் செய்யப்பட்டது. முதல் நாள் சுரேந்திரர் பேசும்போது சில புதிய கட்சி வாலிபர்கள் இரைச்சலிட்டார்கள் என்பது பற்றிப் பெரிய நியாயங்கள் பேசியதுபோக, இப்போது வயோதிகர்களும், அநுபவசாலிகளும் கீர்த்திமான்களுமாகிய நிதானத் தலைவர்கள் அதனிலும் எத்தனையோ மடங்கு கேடுகெட்ட காரியத்திலே தலைப்பட்டுவிட்டார்கள். திலகர் பேசக் கூடாதென்று யாதொரு நியாயமுமில்லாமல் வற்புறுத்தினார்கள். இதற்குள்ளே வெகு அவசரமாக ராஸ் விகாரி கோஷ் நாற்காலிமீது தாவிக்குதித்துத் தாமே காங்கிரஸ் சபா நாயகர் என்பதாக உட்கார்ந்துவிட்டார். திலகர் ராஸ் விகாரியை நோக்கித் "தாம் இன்னும் ஒழுங்குப்படி பிரஸிடெண்டாகத் தெரிந்தெடுக்கப்படவில்லை, அதற்குள் ஏன் அவசரம்?" என்று கேட்டார். ராஸ் விகாரி "தாம் பேசக் கூடாது என்று சொல்லித் தமது உபந்நியாசத்தைப் படனம் செய்ய ஆரம்பித்துவிட்டார், தொடங்கியது

ஆர்வாரம், முதல்நாள் நடந்த குழப்பத்தைக் காட்டிலும் பலமடங்கு பெரிதாகிய குழப்பம் பிறந்து விட்டது. பிரசங்க மேடையின் மேலே இருந்தவர்களிலே பெரும் பாலோரர் நிதானக் கட்சியைச் சேர்ந்தவர்கள். அவர் களில் ஒருவன் திலகர் தலையை நோக்கி ஓர் நாற்காலியை எடுத்தெறிந்தான், அது திலகருடைய தலையிலே படாமல் ஸ்ரீ காபர்தே வந்து பாதுகாத்தார். மகாராஷ்ட்ர வீரதிலக மாகிய ஸ்ரீ திலகர் சிறிதேனும் நெஞ்சம் கலங்காமல் மகா சபையை நோக்கிக் கைகட்டி நின்றுகொண்டு சபையை நோக்கி, "நான் அமெண்ட் மெண்ட் கொண்டு வரும் விஷயத்தைப் பற்றி உங்களுடைய அபிப்பிராயம் தெரிய விரும்புகிறேன்" என்றார். குழப்பம் அதிகரித்துப் போய் விட்டது. ராஸ் விகாரி தமது உபந்நியாசத்தைப் படிக்க வேண்டும் என்ற ஒன்றிலேயே கருத்தைச் செலுத்திய வராய் ஆரவாரத்தை அடக்கிவிட வேண்டுமென்ற நோக்கத்துடன் கைம்மணி ஒன்றை வைத்துக்கொண்டு வெகு பலமாகக் குலுக்கிப் பார்த்தார்.

குழப்பம் முதிர்ந்து விட்டது.

திலகர் மீது நாற்காலிகள் மாரியாகச் சொரிந்தன. தெய்வ கிருபையாலும் அவருடைய பக்தர்களின் தீர நிலை யாலும் அவர்மீது ஒரு துரும்புகூடப் படவில்லை. மகா வீரர்களான பஞ்சாபி க்ஷத்திரியர்களும், மகாராஷ்டிரர் களும், நிராயுதபாணிகளாக இருந்த போதிலும், தமது உடலைக் கருதாமல், தமது சற்குருவாகிய ஸ்ரீ திலகரை அணியணியாக வந்து சூழ்ந்து கொண்டு, அவர் மீது எறியப்பட்டவற்றை யெல்லாம் தமது கையாலும், தலை யாலும் தாங்கி அவருடைய புனித சரீரத்துக்கு யாதொரு ஆபத்தும் நேரிடாமல் காத்தார்கள். இதற்குள் மேத்தா முதலிய நிதானத் தலைவர்களால் கூலிக்குக் கொண்டுவந்து

பந்தலிலே திருட்டுத்தனமாக மூலைக்கு மூலை பதுக்கி வைக்கப்பட்டிருந்த 'குண்டா' (செம்படவ முரடர்கள்)) களும், மித்னபூரில் நடந்தது போலவே நிதானக் கட்சியாரால் துரோக சிந்தையுடன் வரவழைத்து வைக்கப் பட்டிருந்த போலீஸ் சேவகர்களும் வந்து பிரசங்க மேடை மீது நிரம்பிப் போயினர். போலீஸார் கையிலே நிராயுத பாணிகளான பிரதிநிதிகள் அடிபட்ட பரிதாபத்தை இப்போது நினைத்தாலும்கூட மனது வருத்தமடைகிறது. அரிய கல்விமான்களும், தாய் நாட்டின் சேவைக்காக நெடுந்தூரங்களிலிருந்து பொருளையும் காலத்தையும் சரீர சுகத்தையும் பொருட் படுத்தாமல் வந்த அபிமானிகளும் ஆகிய பிரதிநிதிகளை அடிக்கும் பொருட்டு, முன்னதாகவே இரக்கமற்ற ஈன குணமுடைய பாமர முரடர்களையும், போலீஸையும் வரவழைத்து வந்தவர்களை என்னென்று வருணிப்பதென்று நமக்குப் புலப்படவில்லை. குழப்பம் கலகமாய் விட்டது. பிரசங்க மேடை யுத்தகளமாய் விட்டது. மகாராஷ்டிரர்களை விசேஷமாகக் குறி பார்த்துப் போலீசார் பார்த்துப் பார்த்து அடித்தார்கள். நிராயுத பாணிகளைத் தோன்றியவாறு தடிகொண்டு புடைப்பது சௌரியமில்லையென்று போலீஸ் முரடர்களுக்குத் தோன்றவில்லை. அவர்களை ஏவி விட்ட கற்றறி மூடர் களுக்கே இது தோன்றாமல் போய் விட்டதே! ஒரு மகாராஷ்டிரப் பிரதிநிதிக்கு மண்டை மூன்று பிளவாகக் கீறிப் போய்விட்டது. திலகரைச் சுற்றி நின்று அவருக்கு ஹானி வராமல் பாதுகாத்த வீரர்களின் கூட்டத்திலே சேர்ந்திருந்த சென்னைப் பிரதிநிதிகளிலே இரண்டு பேருக்கு பலமான அடிபட்டது. இன்னும் எத்தனையோ பிரதிநிதிகள் பலமான அடியுண்டும், காயப்பட்டும், விழுந்தனர். ஆனால் தமக்கு எத்தனை அடிபட்ட போதிலும் திலகரைக் காக்க வேண்டுமென்று அசையாமல் நின்ற இந்தப் பிரதிநிதிகளின்

திடத்தன்மையை எண்ணும்போது உடல் புல்லரித்து மிகுந்த மகிழ்ச்சியுண்டாகிறது. பஞ்சாப் க்ஷத்ரிய ரத்ன மாகிய ஸ்ரீபகத் என்பவர் தமது இரண்டு கைகளே ஆயுத மாகக் கொண்டு போலீஸாரின் அடிகளையும், நிதானஸ் தர்கள் வீசிய நாற்காலிகளையும், தாங்கிய வீரத்தன்மை சொல்லுந்தரமன்று. நிதானைக் கட்சித்தலைவர்கள் கலக மூட்டி விட்டுப் பின் வாயில் வழியாக தமது பிராணன் கற்கண்டாக நினைத்துத் தப்பியோடிவிட்டார்கள். உயர்ந்த பட்டதாரிகளும், கல்விமான்களும், ஸ்ரீமான்களுமாகிய சில பிரதிநிதிகளைப் போலீசார் கைதிகளாகப் பிடித்துச் சென்று விட்டார்கள் என்ற வதந்தியுண்டாயிற்று.

27ந் தேதி மாலை எங்கள் கூடாரத்திலே யிருந்த குழப்பமும், பரபரப்பும் வருணித்து முடியத் தக்கவை யன்று. "தூத்துக்குடிச் சிதம்பரம் பிள்ளை எங்கே?" என்று ஒரு நண்பர் என்னிடம் மகா ஆத்திரத்தோடு வந்து கேட்டார். "ஆகா! அவரைத் தவறவிட்டல்லவோ வந்து விட்டோம்" என்று நான் நினைத்து வருத்தமடைந்தேன். காங்கிரஸ் பந்தலிலே பெரிய மீசைகளும் "புஸ்தி"களும் வைத்துக்கொண்டு தென்னாட்டில் (திருப்பூரில் என்று ஞாபகம்) வந்து நெடுநாளாக வர்த்தகத் தொழில் நடத்தி வரும் ஒரு ஹிந்துஸ்தானி லாலா, சில போலீசாரை அழைத்துக் கொண்டு வந்து என்னையும், ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையையும், வேறு சிலரையும், அப் போலீசாரிடம் காண்பித்து, "இவர்களெல்லாம் புதிய கட்சியார்கள். இவர்களை அரெஸ்ட் செய்யும்" என்று சொல்லியது என் காதில் பட்டது. ஆனால் அந்த சமயத்தில் போலீஸார் பிரசங்க மேடையின் மீது இருந்த ஆரவாரத்தை நோக்கிச் சென்று விட்டார்கள். எங்களைக் கவனிக்கவில்லை. அப்பால் பந்தலில் கலவரம் அதிகப்படவே நாங்கள் ஒருவரி லொருவர் பிரிந்து போய் இன்னார் இன்ன இடமிருக்

கிறார்கள் என்று தெரிந்து கொள்ள முடியாமல் போய் விட்டது. ஆதலால் ஒருவேளை போலீசார் பின்னிட்டு ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை, ஸ்ரீ துரைசாமி அய்யர், சுரேந்திர நாத் யதிராஜ், திருவல்லிக்கேணி கிருஷ்ணமாச்சாரி முதலியவர்களைப் பிடித்துக்கொண்டு போயிருக்கக் கூடும் என்ற சந்தேகம் எனக்குண்டாயிற்று. போலீசார் பிடித்துக் கொண்டு போய் எனது நண்பர்களுக்கு எவ்விதமான தீங்கும் செய்ய முடியாது என்பதை நானறிவேன் என்ற போதிலும் மனதிலே ஆத்திரம் பொறுக்கவில்லை. அவர்களைக் கண்டு பிடிக்க வேண்டுமென்று இடத்துக்கிடம் சுற்றிப் பார்த்தேன். எங்கும் அகப்படவில்லை. நாகப்பூர் பிரதிநிதிகளின் கூடாரத்திலே ஸ்ரீமான் திலகர் முதலியவர்கள் வந்து தாமதிப்பதாகத் தெரிந்தது. மேத்தாவின் போலீசாரும் குண்டர்களும் போய் நமது மகரிஷியை நெருங்காத வண்ணம் கூடாரத்தைச் சூழ்ந்து சுதேசியப் பிரதிநிதிகள் காவல் காத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களிடம் கேட்டுக் கொண்டு, அந்த கூடாரத்துக்குள்ளே ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை முதலியவர்கள் இருக்கக் கூடுமென்று போய்ப் பார்த்தேன். அங்கும் இல்லை. பிறகு அங்கிருந்து வெளியேறி எங்கள் வசதிக்கு வந்த போது, யதிராஜ், கிருஷ்ணமாச்சாரி இருவரையும் கண்டேன். சிதம்பரம் பிள்ளை, துரைசாமி அய்யர் இரண்டு பேரும் காங்கிரஸ் பந்தலுக்கு வெளியே வந்து விட்டதாகவும், அவர்களுக்கு எவ்விதமான சங்கடமும் நேரிடவில்லை என்றும், அவர்களைத் தாம் நேரிலே கண்டதாகவும் ஒருவர் சொன்னார். எங்கள் மனம் ஒருவாறு அமைதியடைந்தது.

ஆயினும் எங்கள் கூட்டத்தைச் சேர்ந்த இரண்டு வாலிபர்கள் (தேச பக்தியிலும், மனோதிடத்திலும் நிகரற்றவர்கள்) போலீசார் கையிலே அடிபட்டுத் தாமும் அற்ப

ஜந்துக்களை நையப் புடைத்து வந்தார்கள் என்று கேள்வி யுற்று என் மனது வருத்தமடைந்தது. "ஐயோ! மேத்தா! ஒரு காலத்தில் பாரத மாதாவின் அடிக் கமலங்களிலே உண்மையான பக்தி செலுத்தி வந்த உம்முடைய நெஞ்சு, இப்போது அந்நியர் சகவாசத்தாலும், சுய நலப் பற்றினாலும், உம்முடைய சொந்த சகோதரர் மீது போலீசாரை ஏவிவிடத் தக்கவாறு அவ்வளவு தூரம் கல்லாய் போய் விட்டதே!" என்று எண்ணி சஞ்சல மடைந்தேன். ......அன்று மாலையும் மறு நாளும் புதிய கட்சியார் நகர மத்தியிலே தமது கூட்டங்கள் கூட்டினார்கள். புதிய கட்சியார் மட்டுமேயல்லாது பொதுப் படையாகக் கல்கத்தா காங்கிரஸ் தீர்மானங்களை அங்கீகாரம் செய்யும் பிரதிநிதிகள் எல்லாரும் சேர்ந்து பாபு அரவிந்த கோஷின் அக்கிராசனத்தின் கீழ் ஒரு பெரும் சங்கம் நடத்தினார்கள். அங்கே ஸ்ரீ திலகர், காங்கிரசில் பிளவு நேர்ந்ததற்குரிய காரணங்களை எல்லாம் விசதமாக எடுத்துரைத்தார்.

இன்னும் ஒரு முறை சூரத்திலே காங்கரஸ் நடத்துவார் களானால் நாங்கள் எளிதில் அங்கு போகத்துணிய மாட்டோம். ஆனால் மேத்தா வரமாட்டாரென்று நிச்சய மாகும் பக்ஷத்தில் ஒருவேளை போகக் கூடும்.

# கொள்கை முழக்கம்

இதன் பிறகு 'புதிய கட்சியின் கொள்கைகள்' என்ற தலைப்பில் இன்னொரு துண்டுப் பிரசுரமும் வெளியிட்டார் பாரதியார். புதிய கட்சியார். என்று அழைக்கப்பட்ட திலகர் கட்சியினர்—தீவிரகட்சியினர்— என்ன சொல்கின்றனர்? ஏன் சொல்கின்றனர்? அவ்வாறு சொல்லக் காரணம் என்ன?

இன்னோரன்ன விஷயங்களையெல்லாம் விரிவாகவும், விளக்கமாகவும் தெரிவிக்கிறார்.

திலகர் பெருமான் நிகழ்த்திய அரசியல் விரிவுரையின் தமிழாக்கம் இது. தமிழில் தந்தவர் பாரதியார்.

சூரத்துக்குப்பின் பாரதியார் செய்த சூறுவளிப் பிரச்சாரத்துக்கு இஃது ஓர் எடுத்துக்காட்டு. அதை இப்பொழுது காண்போம்.

நம்முடைய ராஜாங்க விவகாரங்களின் சம்பந்தமாக இப்பொழுது இரண்டு புதிய வார்த்தைகள் ஏற்பட்டிருக்கின்றன. அதாவது, 'நிதானஸ்தர்கள்' 'தீவிரஸ்தர்கள்' என்ற வார்த்தைகளேயாம். இந்த இரண்டு வார்த்தைகளும் காலசம்பந்தமான குறிப்பையுடையன. ஆதலால், இவற்றின் அர்த்தங்களும் காலம் மாற மாற மாறிக் கொண்டே வரும். இன்றைக்கு தீவிரக் கட்சியார் என்று

அழைக்கப்படுவோர்கள் நாளைக்கு நிதானஸ்தர்களாய் விடுவார்கள். எது போலவென்ருல் நேற்று வரை தீவிரக் கட்சியாரென்றழைக்கப்பட்டோர் இன்றைக்கு நிதானஸ்தர்கள் என்று சொல்லப்படுவது போல, காங்கிரஸ், ஆரம்பத்திலே ஏற்படுத்தப் பெற்று, இப்பொழுது மிகுந்த நிதானமுடையவை என்று கருதப் பெறும் ஸ்ரீ தாதாபாயின் கருத்துக்கள் வெளியிடப்பட்ட காலத்தில், அவரை ஜனங்கள் மிகுந்த அவசர புத்தியுடையவர் என்று கூறினார்கள். இதனுல், 'தீவிர கட்சிக்காரன்' 'அவசர சிந்தையுடையவன்' என்ற வார்த்தைகள் அபிவிருத்தியைக் குறிக்கின்றன என்று உங்களுக்கு விளங்குகின்றது அல்லவா? எங்களை இப்பொழுது ஜனங்கள் தீவிரக் கட்சியாளர்கள் என்று சொல்லுகிருர்கள். எங்களுடைய சந்ததியார் தாமே தீவிரஸ்தர்களென்றும் நாங்கள் நிதானஸ்தர்களென்றும் சொல்லத் தலைப்படுவார்கள். ஒவ்வொரு புதிய கட்சியும் ஆரம்பத்தில் அவசர சிந்தனையுடையதென்று கூறப் பட்டபோதிலும் கடைசியில் மிகுந்த நிதானமுடையதென்றே எண்ணப்பெற்று விடுகின்றது. ராஜாங்க விஷயங்களிலே இதுதான் சாத்தியம், இதுதான் சாத்தியமில்லையென்று வரையறுத்துக் கூறமுடியாது. இன்னுமாயிர வருஷங்களில் என்ன நேரிடும், என்ன நேரிடாது, என்று நாம் சொல்ல முடியுமா? ஒருவேளை அந்த நீடித்த காலவரைக்குள்ளாக வெள்ளை நிறமுள்ள ஜாதியார்கள் எல்லாம் ஒரே பிரளயத்தில் நாசமடைந்து போகக்கூடும். ஆதலால் நாம் தற்கால ஸ்திதிக்கு இசைவான ஒரு ஆலோசனை தயார் செய்து நடத்தவேண்டும்.

இப்பொழுது எனக்கிருக்கும் நேரத்திற்குள்ளாக இவ் விஷயத்தின் விவரங்களை எல்லாம் எடுத்து விளக்குதல் சாத்தியமில்லை. ஒன்று மட்டிலும் எல்லோராலும் ஒப்புக்

கொள்ளப்படுகிறது; அதாவது, இந்த கவர்ன்மென்ட் நமக்கு சரிப்பட்டு வராது. ஒரு தேசத்தை மற்ரெரு தேசத்தார் ஒரு போதும் சீராக அரசாள முடியாதென்றும் ஆகையால் அவ்வித ஆட்சியானது நிலைப்பெற்றிருத்தல் அசாத்தியமென்றும் ஓர் புகழ் பெற்ற ராஜதந்திரி சொல்லி யிருக்கின்ருர். இந்த முக்கியமான கருத்தின் சம்பந்தமாக பழைய கட்சியாருக்கும் நமக்கும் இடையே எவ்விதமான அபிப்பிராய பேதமுங்கிடையாது. ஒரு விஷயம் உறுதி தான். அதாவது அன்னிய ராஜாங்கம் நமது நாட்டை சர்வ நாசம் செய்திருக்கின்றது. ஆரம்பத்தில் நாம் எல்லோரும் பிரமித்து நின்று விட்டோம், இந்த ராஜாங் கத்தார் நமக்கு செய்வதெல்லாம் நமது நன்மையின் பொருட்டாகவே யென்றும், தாமர்லென், செங்கிஸ்கான் முதலிய வெளிநாட்டுக் கொடியோர்கள் நம் மீது படை யெடுத்து நாசம் செய்யாமலிருக்கும் பொருட்டும், உள்நாட்டிலே பெருங்கேடு விளைவிக்கக் கூடிய கலகங்கள் ஏற்படாமலிருக்கும் பொருட்டும், இந்த இங்கிலீஷ் அரசாட்சி ஆகாயத்திலிருந்து இறங்கி வந்திருக்கிற தென்றும் நாம் எண்ணிஞேம். சிறிது காலம் சந்தோஷ மாகவே இருந்தோம், ஆனுல் சீக்கிரத்தில் உண்மை வெளியாய் விட்டது. ஸ்ரீ தாதாபாய் ஓரிடத்தில் சொல்லி யிருப்பதைப்போல இந்த நாட்டில் பிரிட்டிஷ் ஏற்படுத்தி யிருக்கும் அமைதி நிலையானது; நாம் ஒருவரை ஒருவர் கழுத்தை நெரிக்காமல் தடுத்துவிட்டு, அன்னியர்கள் நம் எல்லோரையும் கழுத்தை நெரிப்பதற்காகவேயென்று விளங்கிவிட்டது. 'பிரிட்டிஷ் அமைதி' (Pax Brittanicae) இந்நாட்டிலே ஏன் ஸ்தாபிக்கப்பட்டது? ஓர் அன்னிய ராஜாங்கம் தேசம் முழுமையும் கைப்பற்றி லாபம் தின்னு வதற்காக! பிரிட்டிஷ் அமைதியின் பலன் இதுவே என்பது இப்பொழுதுதான் ஜனங்களுக்கு சிறிது சிறிதாகப் பரவி

வருகின்றது. இது நெடுங்காலத்திற்கு முன்பாகவே நமது ஜனங்களுக்குத் தெரியாமற் போனது மிகவும் விசாரகரமான விஷயம். நம்மை ஆள்வோர் மிகவும் கருணைச்சித்த முடையவர்களென்று நம்பி விட்டோம். ஆனால் ராஜதந்திர விவகாரங்களில் கருணை என்பது உண்டா? அவர்கள் சுயநலங் கருதிச்செய்த ஏற்பாடுகளுக்கெல்லாம் கருணைச்சிந்தனை என்னும் சர்க்கரையால் மேற் பூச்சு பூசி வைத்திருந்தார்கள். சுயநலச் சிந்தை உள்ளேயிருப்பதை அறியாமல் நாம் மேலாகத் தோன்றிய கருணைத் தோற்றங்களை நம்பி அக்காலத்தில் ஏமாந்து போய்விட்டோம்.

ஆனால் சீக்கிரம் நமது எண்ணத்தில் மாறுபாடு உண்டாய் விட்டது. இங்கிலீஷ் படிப்பும், மிகுதிப்பட்டு வரும் தரித்திர நிலையும், நம்மை ஆள்வோரிடம் அதிகரித்த பழக்கமும், என்ற இவை நமது கண்ணைத் திறந்துவிட்டன. நமது ஜனத் தலைவர்கள் அதிலும் முக்கியமாக சென்ற காங்கிரஸிலே தலைமை வகித்த ஸர்வ ஸ்ரீ பூஜிதரான தலைவர் (தாதா பாய்) முதன்முதலாக நமது நாட்டிலிருந்து செல்வம் வற்றடிக்க ·பெறுவதால் நாடு நாசமடைந்து வருகிறதென்றும், இன்னும் சிறிது காலம் இவ்வாறு வற்றடிக்கப் பெறுமாயின் நமக்கு பிரம்மாண்டமான விபத்து நேர்ந்து விடுமென்றும் தெரிவித்தனர். இவ்வெண்ணம் அவருடைய மனதிலே வேரூன்றிப் போய் விட்டது. அதன் பேரில் அவர் இங்கிலாந்துக்குச் சென்று நம்மவர்களுக்கு நடந்து வரும் அநீதிகளை இங்கிலாந்து ஜனங்களின் மனதிலே பதிக்கும் பொருட்டு 25 வருஷ காலம் முயற்சி செய்தார். அவர் பட்ட பாடு கொஞ்சமல்ல. இந்திய மந்திரிகளிடமும், பார்லிமெண்டு மந்திரிகளிடமும், எத்தனையோ சம்பாஷணைகளும், சம்வாதங்களும் செய்து பார்த்தார். கடைசியில் இதற்கெல்லாம்

என்ன பலன் கிடைத்தது? 82 பிராயத்தில் இங்கே வந்து நமது நம்பிக்கையெல்லாம் முற்றிலும் வீணுய்விட்டன வென்று நம்மிடத்தில் முறையிட்டார். ஸ்ரீ கோகலே இன்னும் ஆசைகள் வைத்துக் கொண்டிருக்கிறுர் என்பதை நான் அறிவேன். கோகலே என்னுடைய சிநேகிதர். ஆகையால் அவர் தாம் வெளியிடும் எண்ணத்தை வாஸ்தவ மாகவே உடையவராயிருக்கிறுர் என்று நான் நம்புகிறேன். கோகலேக்கு இன்னும் நிராசை பிறக்கவில்லே. ஆனுல் இவரும் தாதாபாயைப் போல் 80 வயதாகும் பக்ஷத்தில் இப்பொழுதிருக்கும் பிரிட்டிஷாரிடம் விசுவாசத்தை இழந்து விடுவார்.

அவர் வாலிபர், என்னைக் காட்டிலும் வயதிலே குறைந்தவர். அதிகாரிகளிடம் ஒரே பேட்டியிலிருந்தேனும் அல்லது ஒரு வருஷத்திற்கு உள்ளே செய்யப்பட்ட பேட்டிகளிலிருந்தேனும் நிராசை ஏற்பட்டுவிடமாட்டா தல்லவா? தாதாபாய் நவுரோஜியே விசுவாஸம் இழந்து விட்டாரென்றுல், கோகலே இன்னும் 20 வருஷங் களில் அந்த ஸ்திதிக்கு வரமாட்டார் என்பதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது? பிரிட்டிஷ் ஜனங்களுக்குள்ளே லிபரல் கட்சியின் கோட்பாடுகள் மறுபடியும் தழைக்கத் தொடங்கிவிட்டன என்று சிலர் சந்தோஷத்துடன் சொல்கிறுர்கள். ஆனுல் இது எத்தனை காலம் நிற்கும்? ஒருவேளை அடுத்த வருஷம் லிபரல் கட்சியார் அதிகாரத் தினின்றும் மாறிவிடலாம். அப்பால் மறுபடியும் லிபரல் கட்சி அதிகாரம் பெறும்வரை நாம் காத்திருப்பதா? பிறகு அது போய் விடுமானுல் மூன்றும் தடவை எப்போது வரும் என்று காத்திருப்போமா? இது இருக்கட்டும். லிபரல் கட்சியிருந்துதான் நமக்கு என்ன சாதித்துவிடப் போகிறது? இவ்விஷயமாக காங்கிரஸ் சபையின் தந்தை என்று கூறப்படும் மிஸ்டர் ஏ. ஓ. ஹியூம் 1893ம் வருஷத்

திலே வெளியிட்ட அபிப்பிராயத்தை இங்கே தெரிவிக்கிறேன். 'கவர்ன்மெண்டார் லிபரல் கட்சியாயிருந்தாலும் சரி, கன்ஸர்வேடிவ் கட்சியாயிருந்தாலும் சரி, மனப்பூர்வமாக நமக்கு ஒன்றும் விட்டுக் கொடுத்து விடமாட்டார்கள், என்பதை மட்டும் உறுதியாக நம்புங்கள். லிபரல் கவர்ன்மெண்ட் என்றால் யாதெனில், மேற்படி கவர்ன்மெண்ட் மெம்பர்கள் லிபரல் கொள்கைகளை விரும்பி தமது தேசத்தின் ஆட்சியை மேற்படி கொள்கைகளின்படி ஆளக் கருதுகிறார்களென்று அர்த்தம். இவர்கள் இங்கிலாந்திலே லிபரல்களாயிருந்து இந்தியாவுக்கு வந்தவுடனே கன்ஸர்வேடிவ் கட்சியராக மாறிவிடுகிறார்கள். இங்கே ஸிவில் உத்யோகஸ்தர்களாக வருவோர் பள்ளிக்கூடங்களிலும் காலேஜ்களிலும் நல்ல லிபரல்களாயிருக்கிறார்கள். இங்கே வந்து ஆங்கிலோ இந்திய மனிதர்களுடன் பழகியும், ஆங்கிலோ இந்திய ஸ்திரீகளை விவாகம் செய்து கொண்டும் அவர்களுடைய கொள்கைகள் மாறிப்போய் விடுகின்றன. எனவே, அவர்கள் இந்தியாவிலிருந்து புறப்படும் சமயத்தில் கன்ஸர்வேடிவ் கட்சியராகவே இருக்கின்றனர்.

இதே அனுபவம் எல்லோருக்கும் இருக்கின்றது. ஆகவே, லிபரல் கட்சியாக இருந்தாலும், கன்ஸர்வேடிவ் கட்சியாக இருந்தாலும், முக்கியமான விஷயம் யாதெனில் இவர்களில் எவரேனும் உங்களுக்கு உரிமைகளும், அனுகூலங்களும் கொடுக்கத் தயாராகயிருக்கிறார்களா? நூல் ஆராய்ச்சியுடைய அறிஞர்கள் மேற்படி உரிமைகள் ஒரு கீழ்ப்பட்ட தேசத்தாருக்கு காலக்கிரமத்திலே கொடுக்கத் தக்கவை தானென்பதை ஒப்புக்கொள்ளக் கூடும். ஆனால் எவருமே அறிவு சம்பந்தப்பட்ட மட்டில் ஒரு விஷயத்தை ஒப்புக்கொள்வதிலே என்ன பிரயோஜனம்? ஒரு தத்துவ ஞானியாகிய ராஜதந்திரி

இன்னின்ன காரியங்களைச் செய்தே தீரவேண்டும் என்று ஏதேனும் பலவந்தமுண்டா? மிஸ்டர் மார்லி இந்தியா மந்திரியாக நியமிக்கப்பட்டபோது மகிழ்ச்சி கொண்டாடும் பொருட்டாக நடந்த சபையின் காரியங்களைப் படித்தபோதே எனக்கு நகைப்பு உண்டாயிற்று, மார்லியின் புஸ்தகங்களில் இருந்து வாக்கியங்கள் எடுத்துப் படித்தார்கள்" "கிளாட்ஸ்டனுடைய சரித்திரம் எழுதியிருப்பதில் மார்லி இன்னின்னவாறு சொல்லியிருக்கிறார். அந்த சமயத்தில் இப்படிச் சொன்னார், இந்த சமயத்தில் இவ்வாறு சொல்லியிருக்கிறார். 30 வருஷத்திற்கு முன்பு மிஸ்டர் மார்லி ஒரு பத்திரிகையின் ஆசிரியராக இருந்தார். அப்போது இன்னின்னபடி எழுதியிருக்கிறார்." என்றெல்லாம் மேற்கோள் காட்டினார்கள். இதைக் காட்டிலும் பகவத்கீதையிலிருந்து இவ்வாறு சில வாக்கியங்கள் எடுத்து மேற்கோள் விட்டிருந்தால் விசேஷமாயிராதா என்று நான் யோசித்தேன்.

மேலே குறிப்பிட்ட மனிதர்கள் இடத்திலெல்லாம் எனக்கு மிகுந்த மதிப்புண்டு. ஆனால் இப்போது சொல்லுகிறதென்ன வென்றால் மேற்படி மனிதர்கள் நமது விவகாரத்தின் ஸ்திதியை சரியாக அறியவில்லை, அல்லது அவர்கள் தத்துவ ஞானிக்கும் ராஜதந்திரிக்கும் மிகுந்த வித்தியாசம் உண்டென்பதை மறந்து விட்டார்கள். ஓர் ராஜ தந்திரி தற்கால சௌகரியங்களை மட்டுமே கவனிக்கக் கடமைப்பட்டிருக்கிறான். எவ்விதமான மாறுபாடுகள் கட்டாயம் செய்து தீரவேண்டுமென்பதையே அவன் யோசிக்கிறான். 'ஆத்மார்த்தமாக எது செய்யவேண்டியது? எது தர்மம், எது அதர்மம்?' என்பதை அவன் யோசிக்கவில்லை. மேலும் அவன் இரண்டு கட்சிகளையும் யோசிக்க வேண்டியவனாக யிருக்கிறான். ஆங்கிலோ இந்தியர்களுக்கு இந்திய விவகாரத்தில் மிகுந்த சிரத்தை; இந்தியா

மந்திரியோ நமக்கு எதிர் கட்சியின் சிரத்தை கொண்டவர்களாகிய ஆங்கிலோ இந்திய அதிகாரி கூட்டத்திற்குத் தலைவராகவும், பிரமாணிகராகவுமிருக்கின்முர். இந்த ஆங்கிலோ இந்திய அதிகாரிகளின் கூட்ட முழுவதும் உங்களுக்கு விரோதமாயிருக்கும் பொழுது இந்தியா மந்திரி அந்தக் கூட்டத்தாரை யெல்லாம் திரஸ்காரம் செய்து விட்டு, உங்களுடைய உரிமைகளைக் கொடுத்து விடுவார் என்று நீங்கள் எண்ணுகிறீர்களா? அவருக்கு அவ்விதம் செய்ய வல்லமை இருக்கின்றதா? அவர் அவ்விதம் செய்யும் பட்சத்தில் உடனே வெளியே போய் விடச் செய்ய மாட்டார்களா? ஆகவே நீங்கள் பிரிட்டிஷ் எலெக்டர்கள் (வோட் கொடுக்கும் பாத்தியத்தை உடையோர்) கூட்டத்தை உங்கள் பக்கம் திருப்பவேண்டும் என்று ஏற்படுகிறது. எனவே நீங்கள் இங்கிலாந்திலேயே ஓட் கொடுக்கும் பாத்தியத்தை உடைய ஜனங்களையெல்லாம் உங்கள் பக்கம் திருப்ப முயன்று, அதன் பிறகு லிபரல் கட்சி பார்லிமெண்டில் அதிகாரம் பெற்று, அதுவும் இந்தியாவுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற எண்ணங் கொண்டதாக விருந்து இதற்கப்பால் மிஸ்டர் மார்லியைப்போல நல்லவராகிய இந்தியா மந்திரி .நியமிக்கப்பட்டு, இதுவெல்லாம் நிறைவேறி முடிந்த பிறகு உங்களுக்குப் பழைய வழிகளால் உங்களுக்கு நன்மை சம்பவிக்கக் கூடும். எத்தனை அஸம்பாவிதம் பார்த்தீர்களா? இதை புதிய கட்சியார் நன்முக அறிந்துக்கொண்டு விட்டார்கள். பிரிட்டிஷ் நாட்டிலுள்ள எலெக்டர்களின் கூட்டத்தாரெல்லாம் உங்கள் பக்கத்திற்குத் திரும்ப வேண்டுமாஞல் அது பிரசங்கங்களாகவே நடக்கவேண்டும். அவர்களுடைய அனுகூலங்களையேனும் திரவிய லாபத்தையேனும் உங்களால் சிறிதேனும் குறைக்க முடியாது. ஓர் தர்ம பிரசங்கத்தைக் கேட்டுவிட்டு அதற்காக தனது சொந்த

அனுகூலத்தை இழக்க நிச்சயித்த மூடனை எங்கேயாவது கேட்டிருக்கிறீர்களா? நான் அவ்வித பிரசங்கத்தை கேட்கும் பொழுது பிரசங்கம் மிக நேர்த்தியாயிருக்கிற தென்று சொல்வேனே யொழிய, நான் சுயநன்மை இழக்கவே மாட்டேன். ஒரு திருஷ்டாந்தம் சொல்லு கிறேன் கேளுங்கள். இங்கிலாந்திலே பிரசங்கங்கள் செய்யப் போயிருந்த என் சினேகிதர் ஒருவர் இந்தியாவின் குறை களைப் பற்றி ஒரு பிரசங்கம் செய்தார். அப்பொழுது சபை யிலிருந்த ஒரு மனிதன் இவரிடம் வந்து "ஐயா உங்கள் தேசத்திலே எத்தனை மனிதர்கள் இருக்கிறார்கள்?" என்று கேட்டான். இவர் 30 கோடி மனிதர்கள் என்று சொன்னார். உடனே அவன்" இவ்வளவு ஜனங்களிருந்தும் உங்கள் குறைகளை நீங்களே தவிர்த்துக் கொள்ள முடியாத விஷயத்தில், நீங்கள் எதற்கும் தகுதியுடையவர்களில்லை. உங்கள் விஷயத்தில் இரக்கப்படவே கூடாது" என்று மறு மொழி சொன்னான். ஓர் ஆங்கிலேய தொழிலாளி நமது விவகாரத்தை கவனிக்கும் மாதிரி இதுவேயாகும். தொழில் கட்சியினால் உங்களுக்கு அனுகூலங்கள் ஏற்படலா மென்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள். தொழிற்கட்சியார் தாமே பல குறைகளின் கீழ் அவதிப்படுகிறார்கள். ஆனால் அவர்கள் அதிகாரம் பெற்றபோதிலும் கூட உங்களை இப்போதைக்காட்டினும் அனுகூலமாக நடத்தப் போவ தில்லை. இப்போதைக் காட்டிலும் இழிவாகவே நடத்து வார்கள். ஏனென்றால் பிரிட்டிஷ் தொழிலாளிகள் நமக்கு சாமான்கள் அனுப்பி ஜீவனம் செய்கிறார்கள். இதுதான் வாஸ்தவமான நிலை. இது ஜனங்களுக்கு மெல்ல மெல்ல தெரிந்து வருகிறது. ஸ்ரீ கோக்கலேயைப் போன்ற வாலிபர்கள் இன்னும் நம்பிக்கை இழந்து விடாமலிருக் கிறார்கள். எனினும், இவருடனே சென்ற லாலா லஜபதிராய் போன்றவர்கள் இவரைப் போலில்லை, நான்

ஜனங்களின் பெயர்களைக் குறிப்பிட்டுப் பேசுவது அலெளகீக மென்ற போதிலும் விவகாரத்தைத் தெளிவாக விளக்கு வதற்குப் பெயர்களைக் குறிப்பிட்டே தீரவேண்டியிருக் கிறது. இது தான் விஷயங்களின் நிலை. இதற்கு நமது புராதனப் பிரார்த்தனை முறைகள் சிறிதேனும் பயனற்றவை யென்று புதுக் கட்சியார் அறிகிறார்கள். இங்கிலாந்தின் எலெக்டர்களின் கூட்டத்தை எல்லாம் உங்கள் அபிப் பிராயத்திற்குத் திருப்பி, அதன் பேரில் மந்திரிகள் எல்லாம் இந்தியாவிற்கு அனுகூலமுள்ளவர்களாய் ஏற்படுத்தப்பட்டு அவர்கள் இங்குள்ள அதிகாரிகளை தமது விருப்பத்திற்கு அடங்கும்படி செய்து, இவ்வாறெல்லாம் நடப்பது அசாத் தியம் என்று நாங்கள் சொல்லுகிறோம். இப்பொழுது பழைய கட்சிக்கும் புதுக் கட்சிக்கும் உள்ள வேறுபாடு நன்கு விளங்குகிறதல்லவா? சர்க்கார் அதிகாரிகளுக்கு விண்ணப்பங்கள் செய்வது சிறிதேனும் பயன்பட மாட்டாது. இவ்விஷயத்தில் பழைய கட்சிக்கும் புதிய கட்சிக்கும் அபிப்பிராய பேதம் கிடையாது. ஆனால் பழைய கட்சியார் பிரிட்டிஷ் தேச ஜனங்களுக்கு விண்ணப்பம் செய்து பார்க்கலாம் என்று நம்புகிறார்கள். நாங்கள் அதை நம்பவில்லை. எங்களுடைய எண்ணம் இப்படி இருப்பதனால் நாம் மற்றொரு உபாயம் தேடவேண்டுவது அவசியம் என்று ஏற்படுகிறது. வேறொரு உபாயம் இருக்கவே செய்கிறது. நாம் சும்மா இருக்கப் போகிறதில்லை. நமது விருப்பம் நிறைவேறுவதற்கு மற்றொரு வழியைத் தேடவே போகின் றோம். நாம் நம்பிக்கை யிழந்து விடவில்லை. நமக்கு நிராசை ஏற்பட்டு விடவில்லை. நம்முடைய சொந்த முயற்சிகளினாலே நமது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையே புதிய கட்சிக்கு ஆதார மாகிறது.

ஆளுவோர் ஆளப்படுவோருக்கு உதாரத் தன்மையினால் அனுகூலங்கள் செய்து கொடுத்து ராஜ்யத்தை இழந்தார்களென்பது கிடையாது. உலக சரித்திரத்திலே இவ்விதமான சம்பவம் எக்காலத்திலும் நிகழ்ந்ததில்லை. பெரிய அரசுகள் அளவற்ற போக விருப்பத்தாலும், மிதமிஞ்சி அதிகாரம் நடத்துவதாலும், தமது யதார்த்தமான நிலையை மறந்து விடுவதனாலும், இது போன்ற வேறு காரணங்களாலும் இழக்கப்படுகின்றன. ஆனால் ஆட்சி புரிவோர் ஆளப்படுவோருக்கு அதிகாரங்கள் விட்டுக் கொடுத்து விடுவதால் எந்த ராஜாங்கமும் முடிவு பெற்றது கிடையாது. உங்களுக்கு மகாராணியின் பகிரங்க சாஸனம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அது மிகுந்த தாராள சிந்தனையுடைய சாஸனமேயாம். ஆனால் அது காங்கிரஸின் முயற்சியில்லாமலே பெறப்பட்டது. நீங்கள் மிகுந்த கலகம் செய்யத் தலைப்பட்டபடியால் ராஜாங்கத்தார் உங்களை அமைதிப்படுத்த முயன்றார்கள். அதன் பேரில் நீங்கள் கேட்காமலே உங்களுக்கு மகாராணி சாஸனம் கிடைத்தது. அப்போது காங்கிரஸும் கிடையாது, விண்ணப்பமும் கிடையாது. அந்த சாஸனம் மிகுந்த நன்மையானதும் தயவுடையதுந்தான். மகராணி உங்கள் மனதிலே ஆசைகளேற்படுத்தும்படியான வார்த்தைகள் போட்டு அந்த சாஸனத்தை பிரசுரிக்க வேண்டும் என்று மிகுந்த ஆத்திரங்கொண்டவராயிருந்தார். அந்த ஆத்திரமெல்லாம் உங்கள் விண்ணப்பத்திலிருந்தா ஏற்பட்டது? 1858ம் வருஷத்திற்கு நெடுங்காலத்திற்குப் பிறகுதானே நீங்கள் உங்கள் விண்ணப்ப வழிகளெல்லாம் தொடங்கினீர்கள்? சிறிது காலத்திற்கப்பால் மகாராணியின் சாஸனம் அர்த்தமில்லாத வெற்றுக் கடுதாசியாய் போய்விட்டது. ஏனென்றால், அந்த சாஸனத்தின் நிபந்தனைகளை வற்புத்தும் சக்தியை நீங்களிழந்து

விட்டீர்கள். அந்த சாஸனம் எந்த நிலைமையில் பிரசுரிக்கப்பட்டதோ அந்த நிலைமை மாறிப் போய்விட்டது. மகாராணியால் உங்களுக்கு அளிக்கபட்ட ஒரு வாக்குறுதியை வற்புறுத்துவதற்கு நீங்கள் பலமில்லாதவர்களாய்ப் போய்விட்டீர்கள். இராணியின் சாஸனம் ஊர்ஜிதத்திற்கு வராததின் காரணம் இதுவேயாகும். எனவே காலக்கிரமத்தில் பிரிட்டிஷ் அதிகாரிகள் தலைக்கு மிஞ்சிப் போய் விட்டார்கள். மகாராணியின் சாஸனத்தின்படி நடத்தல் அஸாத்தியமாகும்படியாக ஒருவித அரசியல் ஏற்படுத்தி விட்டார்கள். லார்டு கர்ஸன் மகாராணியின் சாஸனத்தைக் கேலி பண்ணினார். மற்றுமொரு லாயர் அந்த விளம்பரம் பார்லிமெண்டாரால் அனுமதி செய்யப் படாமையால் அது சட்ட அமைப்புக்கு உட்பட்டதில்லையென்று கூறிவிட்டார். அந்த வக்கீலின் பெயர் ஸர் ஜேம்ஸ் ஸ்டீபன் (Sir James Stephen) இது. இல்பர்ட் மசோதா (Ilbert Bill) காலத்தில் நடந்த விஷயம். இப்பொழுது அவர்கள் மகாராணி சாஸனத்திற்கு தப்பர்த்தம் சொல்லிக் கழித்து விட்டு விடப் பார்க்கிறார்கள். அவர்கள் முகாந்திரம் சொல்லிக் கழிக்க முயலுவது நமக்குப் பெரிய காரியமில்லை. அந்த சாஸனத்தின் நிபந்தனைகளை அவர்கள் நிறைவேற்றும்படியெவ்வாறு பலவந்தம் செய்ய முடியுமென்பதே பெரிய காரியம். இதுதான் இப்போது விவகாரத்திலிருக்கிற விஷயம். நாம் கேட்டுத்தான் ஆகவேண்டுமென்பதை நானும் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் நாம் கேட்பதை அவர்கள் மறுக்கத்துணியார்கள் என்ற நிலையில் நம்முடைய மனதை உறுதி செய்துகொண்டு கேட்க வேண்டும். கேட்பதற்கும் கெஞ்சுவதற்கும் மிகுந்த வித்தியாஸமிருக்கிறது. அனுமதிப் பிராய மசோதா (Age of Consent), நிலத் தீர்வை (Land Tax), குடியானவர் விஷயம்

(Tenancy question) முதலியவற்றை எடுத்துக் கொள்ளுங்கள். ஆரம்பத்தில் நமக்கு ஏதேனும் குறை ஏற்பட்டபோது நாம் சபைகள் கூடுவதும் விண்ணப்பம் கொடுப்பதும் பத்திரிகைகளில் முறையிடுவதுமே வழக்க மாக வைத்துக்கொண்டிருக்கிறோம். ஆனுலிவற்றின் பேரில் ராஜாங்கத்தார் செய்யும் தீர்மானம் தெரிந்த உடனே மறுபடியும் முற்றிலும் மௌனமடைந்து அத் தீர் மானத்தை வணக்கத்துடன் ஒப்புக்கொண்டு விடுவதென்று வைத்துக்கொண்டோம். இதுவே கவர்ன்மெண்ட்டாரின் அனுபவம். அதிகாரிகள் இவ்விதமாக மிஸ்டர் மார்லிக்கு எழுதியிருக்கிறார்கள் என்று நான் நம்புகிறேன். பெங்காளப் பிரிவு விஷயத்திலும்கூட அவர்கள் பின்வருமாறு மிஸ்டர் மார்லிக்கு எழுதியிருக்காலம் என்று நான் உத்தேசிக் கிறேன். "தாம் இன்னும் சிறிது காலம் சும்மா இருந்து விட்டால் எல்லாம் சரியாய் போய்விடும். தற்காலத்தில் ஏற்பட்டிருக்கும் கூக்குரலெல்லாம் சில கலகப் பிரியர்களால் ஏற்பட்டிருக்கின்றது. சிறிது காலம் கழிந்த பிறகு இந்தக் குழப்பம் தானே அடங்கிவிடும். ஜனங்க்ளும் பெங்காள பிரிவை அங்கீகரித்துக்கொண்டுவிடுவார்கள். இந்தியா ஜனங்களின் இயற்கையை தாம் அறிவதைக் காட்டிலும் நாங்கள் நன்ருய் அறிவோம். நாங்கள் அவர்களின் மீது அரசாட்சி செய்திருக்கிறோம். இன்னும் எவ்வளவோ காலம் அரசாட்சி செய்யப் போகிறோம். எங்களுடைய அனுபவத்தின் பேரில் நாங்கள் தமக்குத் தெரிவித்துக் கொள்வதென்னவென்றல் தாம் இந்த ஜனங்களின் கூக் குரலுக்கும் கலவரத்திற்கும் சிறிதேனும் மனம் தாழ்ந்து விடக்கூடாது." இவ்வாறு மிஸ்டர் மார்லியின் மந்திரி களாகிய ஆங்கிலோ இந்தியர்கள் அவருக்குச் சொல்லியிருக் கிறார்கள். அதின் பேரில் அவர் என்ன நினைப்பார்.? ராஜாங்க அனுபோகமுடையவர்கள் இவ்விதம் ஒருங்கு

சேர்ந்து சொன்ன அபிப்பிராயத்தை தாம் திரஸ்காரம் செய்யக் கூடாதென்று அவர் நினைக்கிறார். அவர் முற்றி லும் யோக்கியதையுடனே தான் அங்ஙனம் செய்கிறார் என்பதில் ஆக்ஷேபணையில்லை. அவரைச் சொல்ல என்ன குற்றமிருக்கிறது?

இப்பொழுது விஷயம் இந்த நிலைமையில் இருக்கிறது. இவ்விதமிருப்பதை மாற்றிவிட வேண்டுமென்பதே புதிய கட்சியின் விருப்பம். நாங்கள் இதன் பொருட்டுக் கொண்டு வந்திருக்கும் ஆலோசனை உங்களால் ஒப்புக் கொள்ளப்படும் பக்ஷத்தில் இந்த நிலைமையை நிவர்த்தி செய்வதற்கு அது பழைய கட்சியாரின் ஆலோசனையைக் காட்டிலும் மிகுந்த அனுகூலம் உடையதாயிருக்கும். உங்களுடைய கைத்தொழில்கள் முற்றிலும் நாசமாய் விட்டன. அவை அன்னிய ராஜாங்கத்தால் நாசமடைந்து போயின. உங்களுடைய செல்வம் நாட்டைவிட்டு வெளியேறிக் கொண்டேயிருக்கிறது. ஒருமனித ஜந்து எவ்வளவு தூரம் தாழ்ந்த நிலைமைக்கு வரமுடியுமோ அந்த நிலைமைக்கு நீங்கள் வந்து கொண்டிருக்கிறீர்கள். இந்த ஸ்திதியில் உங்களுக்கு நீங்களே உதவி செய்து கொள்ளு வதற்கு ஏதேனும் விண்ணப்பம் கொடுத்து நீங்கள் நிவாரணமடையப் போவதில்லை. பஹிஷ்காரம் ஒன்றே உங்களுக்கு நிவாரணமாகும். உங்கள் சக்திகளை சேகரம் செய்யுங்கள். உங்களது வல்லமையை ஒழுங்கு படுத்துங்கள். அதன் பேரில் நீங்கள் கேட்பதை அவர்கள் மறுக்கத் துணியாதபடிக்குள்ள வேலை செய்யுங்கள். மஹாபாரதத் திலே ஒரு கதையிருக்கிறது. பாண்டவர்கள் கௌரவர்கள் இடத்தில் ஏதேனும் ஒரு விதத்தில் சமாதானம் செய்து முடித்து வரும்படி ஸ்ரீ கிருஷ்ணனை அனுப்பினார்கள். ஆனாலிதன் மத்தியிலே இருதிறத்தாரும் சும்மாவிருக்க வில்லை. சமாதானம் ஒருவேளை நிறைவேறாமல் தவறிப்

போகும் பட்சத்தில் அதற்கும் ஆயத்தமாயிருக்கும்பொருட்டாக இருதிறத்தாரும் ஸைன்யங்களைத் திரட்டிக்கொண்டிருந்தார்கள். இதுதான் ராஜதந்திரமுறை. இது போலவே உங்களுடைய விருப்பம் மறுக்கப்படும் பட்சத்தில் நீங்கள் சண்டை செய்யத் தயாராயிருக்கிறீர்களா? நீங்கள் தயாராயிருக்கும் பட்சத்தில் உங்களுடைய விருப்பங்கள் மறுக்கப்பட மாட்டாவென்றே நிச்சயம் கொண்டிருங்கள். இதற்கு நீங்கள் தயாராயில்லாத பட்சத்தில் உங்களுடைய விருப்பம் சதா காலம் மறுக்கப்பட்டே தீருமென்பது சர்வ நிச்சயம். நம்மிடத்தில் ஆயுதங்கள் இல்லை. தற்காலத்தில் ஆயுதம் வேண்டிய அவசியமும் இல்லை. சாதாரண ஆயுதங்களைக் காட்டிலும் பலமான தந்திரக் கருவி ஒன்று நம்மிடத்திலிருக்கிறது. அது ப ஹி ஷ் கா ர ம். ஒரு விஷயத்தை நாம் தெளிவாகக் கண்டு கொண்டு விட்டோம். அதாவது ஒரு பிடியளவு கொண்ட ஆங்கிலேயர்களால் நடத்தப்பெறும் இந்த ராஜாங்கமானது, நம்முடைய ஸஹாயத்திலேயே நடந்து வருகிறது. நாமெல்லோரும் தாழ்ந்த உத்தியோகங்களிலிருக்கிறோம். முழுவதும் நம்முடைய உதவியாலேயே நடக்கிறது. நமக்கிருக்கும் ஐக்கிய சக்தியை நாம் அறிந்து கொண்டு இப்பொழுது அவர்கள் கையிலிருப்பதை நாம் பாத்தியத்தைக் கூறி நாமே ஆளத் தலைப்படாதவண்ணம் அவர்கள் நம்மை அறிவின்மையிலிருத்தி வைக்கப் பார்க்கிறார்கள். முழு அதிகாரமும் நம்முடைய கையிலிருக்க வேண்டுமென்பதுதான் இப்பொழுது குறி. எனது வீட்டிலிருந்து ஒரு அன்னியன் மட்டும் வெளியேறி விட்டால் போதாது. வீட்டுத் திறவுகோல் என் கையிலிருக்க வேண்டும். நாம் குமஸ்தாக்களாகி எந்நாளும் குமஸ்தாக்களாகவே யிருக்கவேண்டும் என்ற விருப்பம் நமக்கில்லை. இப்பொழுது நாம் அன்னிய ராஜாங்கத்தார் கையில்

அவர்கள் நம்மை ஹிம்ஸிப்பதற்கு நாமே விருப்பம் கொண்ட கருவிகளாயிருக்கின்றோம். அந்த ராஜாங்கத்தார் நாம் இவ்விஷயத்தை அறிந்துகொள்ளாதபடி குருட்டுத் தன்மையிலும், அறிவு இன்மையிலும் நம்மை வைத்து அரசு செய்து வருகிறார்கள். இதுவேயன்றி அவர்களுக்கு இயற்கையிலுள்ள சக்தியால் அரசு செய்யவில்லை. ஸிலி என்ற ஆங்கிலேய பண்டிதரும் இந்த அபிப்பிராயத்திலே கலக்கின்றார். அவர்கள் இந்நாட்டிலே ஒரு பிடியளவு மனிதர்கள்தான் இருக்கிறார்கள் என்பதை ஒவ்வொரு ஆங்கிலேயனும் அறிகிறான். எனவே அவர்களில் ஒவ்வொருவனுக்கும் நீங்கள் பலஹீனர்கள் என்றும் அவர்கள் பலவான்களென்றும் உங்களை நம்பச் செய்வது கடமையாகின்றது. இது ராஜதந்திரமுறை. நாம் இத்தனை காலம் இந்த தந்திரத்தால் ஏமாற்றப் பட்டிருந் தோம். இப்போது புதிய கட்சியார் உங்களைக் கேட்டுக் கொள்வது யாதெனில் உங்களுடைய வருங்காலப் பெருமை முற்றிலும் உங்களையே பொறுத்திருக்கிறது என்பதை நீங்கள் அறிய வேண்டுமென்பதே. உங்களுக்குச் சுதந்திரம் கொண்டிருக்க விருப்பமுண்டானால், நீங்கள் சுதந்திரம் பெற்று விடலாம். சுதந்திரம் பெற வேண்டு மென்ற விருப்பம் உங்களுக்கு இல்லையானால், நீங்கள் தோல்வியுற்று எந்நாளும் பதிதராய் விடுவீர்கள். உங்களில் அநேகர் ஆயுதச் சண்டையில் விருப்பமில்லாமல் இருக்கலாம். உங்களுக்கு நேரே சண்டை போடுவதில் விருப்பமில்லாவிட்டால், இந்த அன்னிய ராஜாங்கம் உங்களை அரசாள்வதற்கு நீங்கள் சகாயம் செய்யாதவாறு ஏற்படுதற்குரிய சிறிதளவு தன்மறுப்புக் காட்ட உங்களால் முடியாதா? இதுதான் பஹிஷ்காரம். பஹிஷ்காரம் ஓர் பெரிய ராஜதந்திர ஆயுதம் என்று நான் இந்தக் கருத்தின் மேல்தான் சொல்லுகிறேன். நாம் அவர்களின் சாமான்

களை வாங்காமல் இருப்போம். தீர்வை வசூல் செய்வதிலும் அமைதி பாதுகாப்பதிலும் அவர்களுக்கு நாம் உதவி செய்யாமலிருப்போம். (அதாவது ரெவினியூ இலாகாவிலும் போலீஸ் இலாகாவிலும் வேலை பார்க்கமாட்டோம்.) இந்திய ரத்தத்தையும் இந்தியப் பணத்தையும் செலவிட்டு நாட்டிற்கு வெளியே அவர்கள் சண்டையிடுவதில் நாம் சகாயம் செய்யாமலிருப்போம். (அதாவது ராணுவத்தில் சேரமாட்டோம்.) நீதி பரிபாலனம் செய்வதில் அவர்களுக்கு நாம் உதவி செய்யமாட்டோம். நமது சொந்த நீதி ஸ்தலங்கள் ஏற்படுத்திக் கொள்வோம், காலம் வரும் பக்ஷத்தில் தீர்வையும் கொடுக்கமாட்டோம் என்று சொல்லி விடுவோம். இப்பொழுது உங்களின் ஐக்கிய முயற்சியில் இவ்விதம் நடத்த முடியுமா? முடியுமானால் நாளைமுதல் சுவாதீனமடைந்து விடுவீர்கள். இன்று சாயந்திரம் பேசிய ஒரு கனவான் முழுரொட்டி கிடைக்காத விஷயத்தில் அரை ரொட்டியாவது கிடைக்க முயற்சி செய்ய வேண்டும் என்று ஒரு திருஷ்டாந்தம் சொன்னார். நான் முழு ரொட்டியும் கிடைத்துத் தீரவேண்டும் என்றும், அதுவும் உடனே வேண்டுமென்றும் சொல்லுகிறேன். ஆனால் முழுவதும் கிடைக்காதபக்ஷத்தில், எனக்குக் காத்திருக்கும் இயற்கை கிடையாதென்று நீங்கள் நினைக்கவேண்டாம். பாதி ரொட்டியை எடுத்துக்கொண்டு பிறகு மற்றொரு பாதிக்கு முயற்சி புரிவேன், இந்த வழியான ஆலோசனையிலும், முயற்சியிலும் நீங்கள் பழகிக்கொள்ள வேண்டும். நாங்கள் வெறும் ஆத்திரத்தின் பேரில் இந்தச் சத்தம் கிளப்ப வந்து விட்டோமென்று நினைக்க வேண்டாம். இது தீர்க்காலோசனையின் பேரில் ஏற்பட்ட ஆத்திரம். நீங்கள் குருட்டுத்தனமாக நாங்கள் சொன்னபடியெல்லாம் கேட்க வேண்டுமென எங்களுக்கு விருப்பமில்லை. விஷயம்

அனைத்தையும் நீங்களே யோசித்துப் பாருங்கள். எங்கள் போதனையை நீங்கள் அங்கீகாரம் செய்துகொள்ளும் பக்ஷத்தில், நமக்கெல்லாம் நற்காலம் பிறந்து விடுமென்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். இதுதான் புதிய கட்சியின் போதனை. காங்கிரஸிலே எங்களுடைய கருத்துக்கள் முற்றிலும் அங்கீகரித்துக் கொள்ளப்படவில்லை, என்பது மெய்யாக இருக்கலாம். நெடுங்காலத்துத் தப்பெண்ணங்கள் சீக்கிரம் மடிந்து போவதில்லை. இரு கட்சியாருக்கும் காங்கிரஸை சேதப்படுத்த வேண்டுமென்ற விருப்பமில்லாதபடியால் ஒருவித சமாதானம் செய்துகொண்டோம். எங்களுடைய கொள்கைகள் சிறிது தூரந்தான் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன என்ற போதிலும், இந்த மட்டில் எங்களுக்குத் திருப்திதான். இதனால் நாம் இதனை முற்றிலும் ஒப்புக்கொண்டு விட்டோமென்று அர்த்தமில்லை. அடுத்த வருஷம் நாங்கள் இன்னும் ஒரு அடி முன்னெடுத்து வைக்கக் கூடும். எனவே, இன்னும் கருத்துகளனைத்தும் காங்கிரஸிலே சம்மதமாய் விடும். எங்களுக்குப் பின்வரும் சந்ததியார் எங்களை நிதானக் கட்சியார் என்று சொல்லுவார்கள். ஒரு தேசத்தார் அபிவிருத்தியடையும் வழி இதுவேயாம். ஜனங்களின் அபீஷ்டம் நாளுக்கு நாள் முற்பட்டு வரும் வழி இதுவேயாகும். இப்போது நடந்து வரும் காலவரையினின்று நீங்கள் அறிந்துகொள்ள வேண்டிய பாடம் இதுவேயாகும். இதுவே அபிவிருத்தியின் பாடம். உங்களுக்கு நீங்களே இயன்ற மட்டும் உதவி செய்துகொள்ளவேண்டும் என்பதே இதன் நோக்கம். உங்களுக்கு உண்மையாகவே இப்பாடத்தின் பலன் விளங்கி இவ்விவகாரங்கள் நியாயமென்பதாக உங்கள் மனதில் அழுந்தி விடுமாயின் இப்போது உங்களுக்குக் கஷ்டமுண்டாக்கும் அந்நிய ராஜாங்கத்திலிருந்து நீங்கள்

நிவாரணம் பெறுதல் சாத்தியமாகும். இன்னும் எத்தனையோ விஷயங்களிருக்கின்றன. ஆனால் அவற்றை எல்லாம் ஒருமணி நேரத்திற்குள் முற்றிலும் பேசிவிடுதல் சாத்தியமில்லை. எனது விவகாரங்களிலே ஏதேனும் தெளிவில்லாத விஷயத்தில் வந்து உங்களுடைய சந்தேகங்களை நிவிருத்தி செய்துக் கொள்ளுங்கள். நீங்கள் சொல்லும் ஆக்ஷேபத்திற்கெல்லாம் மறுமொழி கூறச் சித்தமாயிருக்கின்றோம். உங்களுடைய சந்தேகங்களை எல்லாம் நிவிருத்தி செய்து நாங்கள் சொல்வதனைத்தையும் நிரூபணம் செய்யக் காத்திருக்கின்றோம். எங்களுடைய முயற்சிக்கு உங்களது சகாயம் அவசியமாக வேண்டும். உங்கள் துணையில்லாத பக்ஷத்தில் நாங்கள் தனியாக ஒன்றும் நிறைவேற்றிட முடியாது. இந்த விவகாரத்தைப் பற்றி தீர்க்காலோசனை செய்து, இதன் நிலைமையை நன்றாய் ஆராய்ந்தறிந்துகொண்டு, அதற்கு அப்பால் எங்களுக்கு சகாயம் செய்துவர வேண்டுமென்று உங்களைக் கெஞ்சி பிரார்த்தனை செய்து கொள்ளுகிறோம். நமது தேசம் நல்ல நிலைமைக்கு வரவேண்டுமென்ற முயற்சியிலே நாமெல்லோரும் ஒத்து வேலை செய்வோமாக. வந்தே மாதரம்.

# இடியும் மின்னலும்

சூரத் காங்கிரசுக்குப் பிறகு இந்திய அரசியல் வானிலே கருமேகங்கள் சூழ்ந்தன. அம் மேகங்கள் இடித்து முழங்கின. மின்னல்கள் 'பளிச் பளிச்' சென்று வெட்டின.

ஆட்சி பீடத்தில் வீற்றிருந்த அந்நிய அதிகார வர்க்கம் வெறிபிடித்துத் தலைவிரித்து ஆடியது. திலகர் கட்சியை ஆதரித்த பத்திரிகைகள் மீது சீறிப் பாய்ந்தது வெள்ளை ஆட்சி; பத்திரிகை ஆசிரியர்கள்மீது பாணம் தொடுத்தது; சிறையில் தள்ளியது.

வங்காளத்திலே திலகர் கட்சியின் குரலாக ஒலித்தது 'வந்தே மாதரம்' பத்திரிகை. அப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட கட்டுரை ஒன்றின் பொருட்டுக் கைது செய்யப் பட்டார் விபின சந்திர பாலர். கட்டுரை எழுதியவர் யாரென்று வெளியிடுமாறு விபின சந்திர பாலரைக் கேட்டார் அவரை விசாரித்த மாஜிஸ்டிரேட். கட்டுரை எழுதியவரின் பெயர் பத்திரிகையில் வெளியிடப் படவில்லை. அக்கட்டுரை வரைந்தவர் தம் பெயரை வெளியிடாதிருக்குமாறு பத்திரிகை ஆசிரியரைக் கேட்டுக் கொண்டிருந்தார். அவர் பெயரை வெளியிடுவதில்லை என்று உறுதியளித்திருந்தார் ஆசிரியர்.

எனவே, அக்கட்டுரையாளர் எவர் என்பதை வெளியிட மறுத்தார் விபின சந்திர பாலர். அதுதான்

பத்திரிகை தர்மம். உயர்ந்த பத்திரிகை தர்மத்தை உயர்த்திப் பிடித்தார் பாலர். அதுகண்டு வெகுண்டது வெள்ளை அரசு; ஆறு மாத சிறை தண்டனை விதித்தது.

விபின சந்திர பாலர் தண்டனையை ஏற்றார்; சிறை புகுந்தார். ஆறு மாதங்கள் பறந்தோடி விட்டன. சிறையினின்றும் பாலர் வெளிவரும் நாளும் நெருங்கியது. அந் நாள் எது? 1908-ம் ஆண்டு மார்ச் மாதம் எட்டாம் தேதி.

அந்த நன்னாளை விடுதலைத் திருநாளாகக் கொண்டாட முடிவு செய்தது திலகர் கட்சி. அதாவது, 1908-ம் ஆண்டு மார்ச்சு மாதம் எட்டாம் தேதி. சென்னையிலே பாரதியார் என்ன செய்தார்? அந்த விடுதலைத் திருநாளைச் சிறப்புடன் கொண்டாட ஏற்பாடுகள் செய்தார்.

"சென்னையின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் ஊர்வலங்கள் புறப்பட வேண்டும். திருவல்லிக்கேணி பெல்ஸ் ரோடில் கூட வேண்டும். பைகிராப்ட்ஸ் ரோடு வழியே கடற்கரை செல்ல வேண்டும். கடற்கரையிலே கூடவேண்டும். கூட்டத்திலே சொற்பெருக்காற்ற வேண்டும்."

இவ்வாறு ஏற்பாடு செய்தார் பாரதியார். இதன் பொருட்டு மூன்று நாட்கள் முன்னர் தொடங்கி ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

குறித்த நாளில் ஊர்வலமும் புறப்பட்டது. வந்தே மாதரம் முழக்கத்துடன் பாடல்கள் பாடிக் கொண்டு முன்னின்று ஊர்வலத்தை நடத்திச் சென்றார் பாரதியார். கடற்கரைக் கூட்டமும் இனிது முடிந்தது.

தூத்துக்குடியில் என்ன நடந்தது? விடுதலைத் திருநாளைச் சிறப்புடன் கொண்டாட ஏற்பாடுகள் செய்திருந்தார் வ. உ. சிதம்பரம் பிள்ளை,

அரசாங்கம் என்ன செய்தது? வ. உ. சிதம்பரம்பிள்ளை, சுப்பிரமணிய சிவம், ஆகியோரைக் கைது செய்தது. சுதேசி பத்ம நாப ஐயங்கார் என்பவரும் கைது செய்யப்பட்டார்.

இவர்களை அரசாங்கம் கைது செய்த உடனே பொது மக்கள் ஆத்திரம் அடைந்தனர். போலீஸ் ஸ்டேஷனைத் தாக்கினர். முனிசிபல் ஆபீசைச் சூறையிட்டனர். இன்னும் பல்வேறு வகையில் தங்கள் கோபத்தை வெளியிட்டனர்.

அரசாங்கம் என்ன செய்தது? துப்பாக்கி கொண்டு சுட்டது. பலர் இறந்தனர்.

வ. உ. சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணிய சிவம், சுதேசி பத்மநாப ஐயங்கார் ஆகிய மூவர் மீதும் வழக்குத் தொடுத்தது அரசாங்கம்.

பாரதியார் என்ன செய்தார்? பயந்தாரா? சும்மா இருந்தாரா? ஏனையோரைப் போல மௌனம் சாதித்தாரா? இல்லை; இல்லை. திருநெல்வேலிக்குச் சென்றார்; சிறையில் இருந்த வ. உ. சி., சுப்பிரமணிய சிவம் முதலியோரைக் கண்டார்.

தமது 'இந்தியா' பத்திரிகையில் தொடர்ந்து பல கட்டுரைகள் எழுதினார்.

"நான் ஞாயிற்றுக்கிழமை (26 ந்தேதி) மாலை திருநெல்வேலிக்கு வந்து சேர்ந்தேன். வந்தவுடனே திருநெல்வேலியில் சுடப்பட்டு இறந்த சுதேசிகளின் பெயர்களை விசாரித்தேன். இங்குள்ள வக்கீல்களும், மற்ற பெரிய மனிதர்களும் இதுவரை இவ்விஷயத்தைப் பற்றி விசாரணை செய்யாமலிருப்பது வெகு ஆச்சர்யமாயிருக்கின்றது. அது சாமான்யமான விசாரணைக்குத் தகுதியற்ற விஷயமென்று நினைத்துவிட்டார்கள் போலும்! அதை

விசாரணை செய்யப் புகுந்த க்ஷணத்திலேயே தமக்கு ஏதேனும் ஆபத்து வரக்கூடுமென்று அஞ்சினார்கள் போலும்!......

"பொது ஜனங்கள் நடுக்கத்தில் இருப்பார்கள் என்று நான் சென்னையில் வைத்து நம்பியிருந்தேன். 'பெரிய மனிதர்கள்' என்று சொல்லிக்கொள்ளும் சிலரைத் தவிர மற்ற சாமானிய ஜனங்கள் அதிக அச்ச நிலையில் இருக்கவில்லை. கலகம் நடந்து அதிகாரிகளின் பராக்கிரமச் செயல்கள் நடந்து முடிந்த காலத்தில் பீதி அதிகப் பட்டிருந்ததாகவே தெரிகிறது. இரண்டு மூன்று தினங் களுக்கு தெருக்களிலே மனிதர் நடமாட்டமில்லாமல் ஊர் 'மரணபுரம்' போல் இருந்ததாம். ஆனால், அந்த பீதி இப்பொழுது தெளிந்து போய்விட்டது. ஜனங்கள் வழக்கம் போலவே தமது காரியாதிகளில் பிரவேசித்து நடத்திவருகிறார்கள். தெருக்களிலே போலீஸ் கோஷங் களைக் காணவில்லை. பாளையங்கோட்டையிலிருக்கும் பியூனிடிவ் போலீஸார் மட்டும் அங்கங்கே இடையிடையில் சுற்றி வருவதாகத் தெரிகிறது.

"திங்கட்கிழமை காலை பாளையங்கோட்டை ஜெயி லுக்குப் போய்ச் சேர்ந்தேன். அங்குள்ள அதிகாரிகளின் அனுமதியின் பேரில் உள்ளே சென்று ஸ்ரீ சிதம்பரம்பிள்ளை, ஸ்ரீ சுப்பிரமணிய சிவம் இருவரையும் கண்டு பேசினேன். ஸ்ரீ சிதம்பரம்பிள்ளையை முன்பு நான் தூத்துக்குடியிலே அவருடைய அரிய பிரசங்கங்களை ஆயிரக்கணக்கான ஜனங்கள் கேட்டுப் புகழ்ச்சி கூறிக்கொண்டிருந்த காலத் தில் பார்த்தபோது அவருடைய முகம் எவ்வளவு பிரசன்ன மாகவும், தேஜஸுடனும் விளங்கியதோ அதே மாதிரி யிலேயே இப்பொழுதும் இருக்கக் கண்டேன், உடனே எனக்கு,

"மெய்த்திருப்பதம் மேவென்ற போழ்திலும்
'இத்திருத் துறந்து ஏகு' என்ற காலையும்
சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை
ஒத்திருக்கும் முகத்தினை உன்னுவாள்"

என்ற கம்பராமாயணப் பாட்டு ஞாபகத்திற்கு வந்தது.

"அதிகாரிகள் இவர் தலைமீது செக்ஷன் கணக்கான கேஸ்களைக் கொண்டு சுமத்தியிருக்க, ஜெயிலிலே அதிபாதகமான குற்றவாளிகளுடனே சேர்ந்து அடையுண்டவராக இருக்கவும், இவருக்கு விரோதமாக இது வரை சொல்லப்பட்ட சாக்ஷிகள் வெகு பலமாகவும், இவருக்கு பயத்தை விளைவிக்கக் கூடியனவாகவும் இருக்கவும், இவர் சிறிதேனும் முகவாட்டமில்லாமலும் சோர்வில்லாமலும் வீர மூர்த்தியாக விளங்கிய அற்புதத்தை என்னால் வருணிக்க முடியாது.

"ஸ்ரீ சிவமும் சந்தோஷமாகவேதான் இருந்தார். ஆனால் அவர் தாடி மீசைகளை எடுத்துவிட்டபடியால் முகம் சிறிது மாறுபாடாகத் தெரிந்தது. ஸ்ரீமான் பிள்ளையும் சிவமும் தங்களுடைய சொந்தக் காரியங்களைப் பற்றி மட்டிலுமே என்னோடு வார்த்தையாடாமல் உலகப் பொது விஷயங்களைப்பற்றி வெகு உல்லாசமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். இதனிடையே ஸ்ரீ குருநாத அய்யரும் வந்து சேர்ந்தார். இவர் என்னைக் கண்டவுடனே 'வந்தே மாதரம்' என்று முழங்கிய தொனி சிறைக்கூடம் முழுதிலும் கேட்டிருக்கும் மேலும், இவர் இந்த க்ஷத்திரிய நடையும் க்ஷத்திரியப் பார்வையும் எப்படிப் பெற்றார் என்பது எனக்குத் தெரியவில்லை. இதுநிற்க, ஸ்ரீகுருநாத அய்யர் கலகத்தன்று காலை ஒன்பது மணி ரயிலுக்குத் திருநெல்வேலியிலிருந்து ஏதோ அவசர வேலையாகத் தூத்துக்குடிக்குப் போய் விட்டார் என்றும்

கலக சமயத்தில் இவர் அங்கு இருக்கவேயில்லை என்றும், போலீஸார் அவரை அநீதியாக அடைத்து விட்டார்கள் என்றும் ஊர்க்காரர்கள் பேசிக்கொள்கிறார்கள்."

குருநாத அய்யர் போலீஸ் ஹெட்-கான்ஸ்டேபிளாக இருந்தவர். வ. உ. சி.—சிவா இவர்களின் பேச்சுக் கேட்டு வேலையை உதறியவர்.

ஆயிரத்துத் தொளாயிரத்து எட்டாம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18-ந்தேதியிட்ட "இந்தியா" பத்திரிகையிலே பின்வருமாறு எழுதினார் பாரதியார் ;

"ஸ்ரீ சிதம்பரம்பிள்ளை மேற்படி விசாரணையைக் கேலிக் கூத்து என்று சொல்லியது முழுவதும் ஒக்கும். கேஸ் நடவடிக்கைகளைப் பார்க்கும்போது வெகு ஆச்சர்யமாக இருக்கிறது. ஸ்ரீ சிதம்பரம்பிள்ளை பேசியதில் ராஜதுரோக மொன்றும் இல்லாவிட்டாலும் இவரது பிரசங்கத்தினால் தான் கலகம் உண்டாயிற்றென்றும் ஸ்தாபிக்கப் பார்க் கிறார்கள். ஸ்ரீ பிள்ளையின் கதியையும் அவரது பெருந் தன்மையையும் கவனிக்கும்போது அளவற்ற மனக்குழப்பம் ஒரு புறத்திலும் சந்தோஷம் ஒரு புறத்திலுமாக உதிக் கின்றன."

1908-ம் ஆண்டு ஏப்ரல் 25-ந்தேதி வெளியிட்ட "இந்தியா" பத்திரிகையிலேயே மேலும் எழுதினார் பாரதியார்.

"இம் மகானது கேஸ் இன்னும் இழுத்துக்கொண்டே போகிறது. இவர் மேலுள்ள முதலாவது ராஜத்துரோகக் கேஸில் பிராசிகூஷன் தரப்பு விசாரணை முடிந்துபோய் விட்டது. இரண்டாவது ராஜத்துரோகக் கேஸ் (ஸ்ரீ சுப்பிரமணியசிவம் ராஜத்துரோகக் குற்றம் செய்த தாகவும் அதற்கு ஸ்ரீ சிதம்பரம்பிள்ளை உடந்தையாக

இருந்ததாகவும் கற்பிக்கப்பட்டிருக்கும் கேஸ்) விசாரணை இந்த வாரத்திலே தொடங்கியிருக்கிறார்கள். இது நிற்க,

"கர்மவீரர் என்றும் பிரதம ஆரிய புருஷர் என்றும் உயர்ந்த பரித்தியாகி என்றும் அரவிந்தகோஷ் முதலிய பெரியோர்களாலே பாராட்டப்பட்ட ஸ்ரீமான் சிதம்பரம்பிள்ளையின் பெருந்தன்மையையும் தேசப் பற்றையும் உத்தேசித்து நமது தமிழ் நாட்டோர் அவர் விஷயத்தில் எம்மட்டு சிரத்தை பாராட்டக் கடமை பட்டிருக்கிறார்களோ அம்மட்டுச் சிரத்தை பாராட்டாம லிருப்பது தவறென்பதாகவே நினைக்கிறோம். ஸ்ரீ சிதம்பரம்பிள்ளை யார் பொருட்டு இரவு பகலாக உழைத்தாரோ அவர்கள்கூடப் பயத்தினாலோ அல்லது சோம்பலினாலோ மூச்சுக் காட்டாமல் பின்வாங்கி நிற்கிறார் கள். சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனிக்கு ஸ்ரீ சிதம்பரம்பிள்ளையே பிதாவென்று கூறுதல் தகும். மேற்படி கம்பெனியார் இப்போது இன்னும் பலமான அபிவிருத்திகள் செய்வதற்குரிய பிரயத்தனங்கள் நடத்தி வருகிறார்கள் என்று கேட்டுச் சந்தோஷிக்கிறோம். ஆனால் இவர்கள் சிதம்பரம்பிள்ளைக்குத் தக்கவாறு நன்றிக்கடன் செலுத்தாவிட்டால் இவர்களுடைய முயற்சிகளின்மீது தரும தேவதைக்குச் சினமுண்டாகும். "என்பிலதனை வெயில் போலக் காயுமே அன்பிலதனை அறம்".

"மேற்படி கம்பெனிப் பங்காளிகளில் ஒவ்வொருவரும் தலைக்கு 4 அணா வீதம் போட்டால் எவ்வளவோ பெரிய நிதி சேர்க்கலாம். இவ்விஷயம் அவசியம் நடத்தித் தீர்வதற்குரியது. கம்பெனியின் அனுகூலத்துக்கும் க்ஷேமத்துக்கும் இது இன்றியமையாததாயிருக்கும். இதில் கம்பெனியின் பெருத்த பங்காளி எவரேனும் இந்த

விஷயத்தில் முற்பட்டு நின்று பாடு படுவார்கள் என்று நம்புகிறோம்."

தூத்துக்குடி சுதேசி கப்பல் கம்பெனியை எப்பாடு பட்டேனும் நன்கு நடத்தவேண்டும் என்பது பாரதியாரின் விருப்பம். அதன் பொருட்டு அவர் அரும்பாடு பட்டார். இடைவிடாமல் "இந்தியா" பத்திரிகையில் எழுதினார். மக்களுக்கு வேண்டுதல் விடுத்தார். வ. உ. சி. மேற் கொண்ட செயலை விட்டுவிடலாகாது என்று எழுதினார்.

"தூத்துக்குடியிலுள்ள ஸ்டீமர் கம்பெனிக்கு பிதா ஸ்தானம் வகித்தவராகிய ஸ்ரீமான் சிதம்பரம் பிள்ளை நமதிடையிலிருந்து, அவருடைய பரோபகாரமாகிய முயற்சி செய்வதற்கு இடமில்லாமல் விலக்கப் பெற்று விட்டனர். அவருடைய ஆசை மகளாகிய மேற்படி கம்பெனியை இக் காலத்தில் வைத்து சம்ரக்ஷணை செய்ய வேண்டுவது பாரதவாசியாகிய ஒவ்வொருவருக்கும் தலைப் பொறுப்பாகும்.

"அவர் இல்லாத சமயத்தில் அக் கம்பெனிக்கு ஏதேனும் சஞ்சலம் ஏற்பட்டு விடும் பக்ஷத்தில் நமது ஜாதீய கௌரவத்துக்கு அதைப் போன்ற குறைவு வேறு கிடையாது. சென்னப் பட்டணத்து உள்ளூர்காரர் இந்த விஷயத்தில் மிகவும் சிரத்தை குறைவுடன் இருப்பதுபற்றி கல்கத்தா வந்தே மாதரம் பத்திரிகை பரிகசித்துப் பழிகூறுகின்றது. தூத்துக்குடி தேசாபிமானிகளின் ஊக்கத்தையும் பெங்காளத்துப் பணத்தையுமே முக்கிய ஆதாரங்களாகக் கொண்டு தூத்துக்குடி கம்பெனி நடை பெறுகின்றது. சென்னப் பட்டணத்தில் செல்வம் நிதானஸ்தர் வசமே அகப்பட்டிருக்கிறது. அவர்களுடைய தேச பக்தியோ வாய் மட்டில் நிற்பதே யல்லாமல் பணம் கேட்டவுடனே பின் வாங்கும் இயற்கையுடையது. தூத்துக்குடி பிரதேசத்

திலும் நிதானஸ்தர்களால் வெறியரென்று பழிக்கப்படும் உண்மையான தேச பக்தர்கள் இருப்பதால் அவர்கள் தன்னலம் கருதாமல் தேச நலத்தின் பொருட்டு சகலத் திலும் தத்தம் செய்து பாடு படுகின்றார்கள். பகிஷ்கார பயித்தியமில்லாமல் லார்டு மின்டோ சொல்கிறபடி 'சாது சுதேசியம்' கைப் பற்றியுள்ளதாகச் சொல்லும் சென்னை நிதானஸ்தர்கள் மேலே வந்தே மாதரம் பத்திரிகை எழுதி யிருக்கும் வசை வார்த்தை உண்மையா இல்லையா என்பது பற்றி யோசனை புரிவார்கள் என்று நம்புகிறோம்."

(இந்தியா—தலையங்கம்—ஜூன் 13, 1908)

"தீபாவளிப் பண்டிகை தினம் ஆங்காங்குள்ள தேச பக்தி சிரோன்மணிகள் சிரத்தை எடுத்துக் கொண்டு பணம் வசூலித்து வருகிறார்கள். அதை நமது பாரத நாட்டின் பெருமையான ஸ்வதேசி கப்பல் கம்பெனிக்கு உதவி செய்வார்களேயானால் அது சிறந்த தர்மமாவதுடன் ஜாதீய இயக்கத்திற்கு ஓர் பெரிய ஆதரவாயும், மேலான உத்சாக காரணமாயும் இருக்கும். நமது நண்பர் மேலையூர் பிரம்மஸ்ரீ ராமய்யர் என்பவர் நமது "இந்தியா" பத்திரிகையில் சென்ற வாரத்தில் பதிப்பிருந்த விண்ணப் பத்தைப் படித்தவுடன் தம்மாலியன்ற அளவு ரூபாய் ஐந்து மணியார்டர் செய்து விட்டார். இப்படி தேசாபிமானிகள் தங்கள் கையிலிருந்து கொடுத்து விடுவதுடன் தீபாவளி தினத்தில் வசூலித்துக் கொடுத்தனுப்புவது, சௌகரிய மானது. இந்த முயற்சியின் செய்தி எல்லாரும் அறியத் தக்க பிரசித்தமாய் தெரிய இது ஒரு நல்ல வழி"

(இந்தியா—அக்டோபர் 30, 1909)

சுதேசி இயக்கத்தில் பங்கு கொண்ட தேச பக்தர்களை எவராவது இகழ்ந்து பேசி விட்டால் பாரதி அதைப் பொறுக்க மாட்டார்; சீறிப் பாய்வார்.

வ. உ. சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணிய சிவம் ஆகியோர் மீது அரசாங்கம் வழக்குத் தொடுத்தது அல்லவா? அப்போது அந்த வழக்கிலே போலீஸ் பக்கம் சாட்சியாகப் பேசினார் ஒரு போலீஸ்காரர். சுப்பிரமணிய சிவத்தைப் பற்றி மிக இழிவான முறையில் அவர் சாட்சி கூறினார். கேட்டார் பாரதியார்; கோபம் கொண்டார். அந்தப் போலீஸ்காரரைக் கண்டித்து ஒரு தலையங்கம் எழுதினார்.

"திருநெல்வேலியிலே ராஜ நிந்தனைக் கேசில் விசாரணை செய்யப்பட்டு வரும் ஸ்ரீ சுப்பிரமணிய சிவனுக்கு வயது 26க்கு மேல் ஆகவில்லை. இவர் சுமார் ஆறு வருஷங்களுக்கு முன் அதிபால்யத்திலேயே சிவகாசி சப்டிவிஷனல் ஆபீசிலே 'முச்சி' என்ற தணிந்த உத்தியோகம் பார்த்து வந்தாராம். ஆனால், சரீர சௌக்யம் போதாது என்று இவரை அந்த வேலையிலிருந்து விலக்கி விட்டார்களாம். இந்த விஷயத்தை திருநெல்வேலி போலீஸ் உத்தியோகஸ்தர்கள் சாக்ஷி கூறும் சமயத்தில் இகழ்ச்சியோடு கூறுகிறார்கள். காலம் சென்ற ஜட்ஜ் முத்துசாமி ஐயர் பாலியத்திலே ஒரு கிராம கணக்குப் பிள்ளையிடம் ஒரு ரூபாய் அல்லது இரண்டு ரூபாய் சம்பளத்தில் அமர்ந்ததன் பொருட்டு, இந்தப் போலீஸ்காரர்கள் அவரைப் பற்றித் தாழ்ந்த நோக்கம் கொண்டிருப்பார்கள் என்று சந்தேகிக்கிறோம். இது நிற்க.

"இன்னுமொரு போலீஸ்காரர் ஸ்ரீ சிவன் தூத்துக்குடியிலே சிதம்பரம் பிள்ளையோடு ஒரே வீட்டில் வாசம் செய்து கொண்டிருந்தாரென்றும், இது வர்ணாசிரம தர்மத்துக்கு விரோதமென்றும், இதன் பொருட்டு ஸ்ரீ சிவன் ஜாதியினின்றும் பகிஷ்காரம் செய்யப் படுவதற்குத் தகுதியுடையவராவர் என்றும் சொல்லியிருக்

கிறார். ஒரு போலீஸ்காரருக்கு மனு தர்ம சாஸ்திரத்தில் இவ்வளவு தூரம் ஆழமான ஞானமிருப்பது பற்றி சந்தோஷ மடைகிறோம். அதிவர்ணாசிரமியாக சந்நியாச நிலை பெற்ற மக்களுக்கு, வர்ணாசிரம பேதம் கிடையாது என்று இந்தப் போலீஸ்காரருக்குத் தெரியாது போலும். போலீஸ் மனு நீதியில் மேற்படி விஷயம் சொல்லப் படவில்லை என்று தோன்றுகிறது. பிராமண ஜன்மம் எடுத்துப் போலீஸ் உடை தரித்துக் கொண்டு ஓர் மிலேச்ச அதிகாரியின் கீழ் கை கட்டிக்கொண்டு காவல் செய்வது சாஸ்திரோக்தம் தானோ? இதைப் பற்றி இந்த வேங்கட வரதாச்சாரியார் என்ற போலீஸ்காரர் படித்த மனுதர்ம சாஸ்திரத்திலே என்ன சொல்லியிருக்கிறது என்று அறிய விரும்புகிறோம்."

(இந்தியா, 1908 ஜூன் 13)

# பாரதியும் தொழிலாளரும்

இப்பொழுது நம்முடைய நாட்டிலே தொழிற்சங்க இயக்கம் நன்கு வளர்ந்துவிட்டது. வேலை நிறுத்தங்கள் கதவடைப்புகள் எல்லாம் அடிக்கடி நடைபெறுகின்றன. தொழிலாளர், தம் உரிமைகளுக்காகவும், கோரிக்கைகளுக்காகவும் இடைவிடாது போராடி வருகின்றனர்.

ஆனால், பாரதியார் காலத்திலே இந்தியத் தொழிற் சங்க இயக்கம் குழந்தைப் பருவத்தில் இருந்தது. தொழிற் சங்க இயக்கத்தின்பால் ஒருவர் அநுதாபம் காட்டுகிறார் என்றால், அது சிறப்புடைய ஒன்று ஆகும்; மிக்க சிறப் புடையது.

ஆயிரத்துத் தொளாயிரத்து ஆறும் ஆண்டு ஜூலை மாதத்திலே ஒரு பெரிய வேலை நிறுத்தம் நடைபெற்றது; ரயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தம். கிழக்கு இந்திய ரயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தம்.

இப்போது, இந்த நாட்டிலுள்ள ரயில்பாதைகள் எல்லாம் நாட்டுடைமையாகி விட்டன. ஆனால் அந்தக் காலத்திலே அவ்விதம் இல்லை.

இந்திய நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ரயில் பாதைகள் இருந்தன. ரயில்வண்டிகள் ஓடின. இப்படிப் பல்வேறு பகுதிகளிலும் இருந்த ரயில் பாதைகள் பல்வேறு கம்பெனிகளால் நிர்வகிக்கப்பட்டு வந்தன.

தமிழ் நாட்டிலே இருந்த ரயில்பாதைகள் எல்லாம் தென்னிந்திய ரயில்வே கம்பெனிக்குச் சொந்தம். மேற்

படி கம்பெனியாரே நிர்வாகம் செய்து வந்தனர். அதே மாதிரி, சென்னையிலிருந்து பம்பாய்க்குப் போகும் ரயில் பாதையை இன்னொரு கம்பெனி நிர்வகித்து வந்தது. இதற்கு, "மதராஸ் அண்டு சதர்ன் மராட்டா ரயில்வே கம்பெனி" என்று பெயர். இந்தமாதிரி பல கம்பெனிகள். இவை எல்லாம் வெள்ளைக்காரர் கம்பெனிகளே.

இத்தகைய ரயில்வே கம்பெனிகளில் ஒன்றுதான், ஈஸ்ட் இந்தியா ரயில்வே கம்பெனி. அதாவது கிழக்கிந்திய ரயில்வே கம்பெனி.

இந்தக் கம்பெனியைச் சேர்ந்த இந்தியத் தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்தார்கள். ஜூலை மாதத்தில் தொடங்கிய வேலை நிறுத்தம் செப்டம்பர் மாதம்வரை நடந்தது.

இந்த வேலை நிறுத்தத்தை முறியடிப்பதற்காக, மேற்படி வெள்ளைக்கார ரயில்வே கம்பெனி பகீரதப் பிரயத்தனம் செய்தது. கிழக்கிந்திய ரயில்வே கம்பெனிக்குத் துணையாக உதவி புரிய விரைந்தன பல்வேறு கம்பெனிகள்; அதாவது 'கருங்காலி'களை அனுப்ப முயன்றன.

இந்த வேலை நிறுத்தத்தை ஆதரித்தார் பாரதியார். 'கருங்காலி'களாக ஆள் சேர்த்து அனுப்புவதைக் கண்டித்தார்.

"ஈஸ்ட் இந்தியா இருப்புப் பாதையில் இந்திய வேலைக்காரர்களுடைய குறைகள் சரியாக மேலதிகாரிகளால் கவனிக்கப்பட்டு நிவர்த்தி செய்யப்படாமல் போனபடியால் அந்த இருப்புப் பாதையிலுள்ள இந்திய வேலைக்காரர்கள் ஒரே கட்டுப்பாடாய் வேலை செய்யாமல் நின்று விட்டார்கள்.

தங்களுக்கு இன்னின்ன குறைகள் இருக்கின்றன என்றும், அவைகளுக்குப் பரிகாரம் செய்யாவிட்டால்

வேலை செய்யாது நின்று விடுவோமென்றும் பிரதிநிதிகள் மூலமாய் போதிய அவகாசத்துடன் ஏற்கனவே நோட்டீஸ் மூலமாய் தெரிவித்திருந்தும் மேலதிகாரிகள் கவனிக்க வில்லை. ஐரோப்பிய, யுரேஷிய, ஆங்கிலோ இந்திய ஸ்டேஷன் மாஸ்டர்கள் போலவே, இந்திய ஸ்டேஷன் மாஸ்டர்களும், உதவி ஸ்டேஷன் மாஸ்டர்களும் வேலை செய்தபோதிலும் இந்திய வேலைக்காரர்களுக்கு சம்பளம் மட்டும் ஐரோப்பியர் வகையறுக்களுடைய சம்பளங் களில் நாலில் ஒரு பாகம்கூட கிடையாது என்ற விஷயத்தை மேலதிகாரிகளுடைய கவனத்திற்குக் கொண்டுவந்த பொன்கூர் ஸ்டேஷன் மாஸ்டர் உடனே வேலையை விட்டு நீக்கப்பட்டதோடு, அவருக்குச் சேரவேண்டிய ஒரு மாதச் சம்பளமும் கால்மணி நேரத் தில் கொடுத்துவிடப்பட்டது. உண்மையை எடுத்துச் சொன்ன குற்றத்திற்காக நிரபராதியான பொன்கூர் ஸ்டேஷன் மாஸ்டர் இப்படி அக்கிரமமாய் தண்டிக்கப் பட்டிராவிட்டால் இவ்விதமாய் ஒரே கட்டுப்பாடான வேலை நிறுத்தம்கூட ஏற்பட்டிராது. கூடிய சீக்கிரத்தில் ஏதாவது ஏற்பாடு செய்யப்படாவிட்டால் கம்பெனிக்கு மிகுந்த நஷ்டம் வந்துவிடும் என நினைக்கிறோம். தென்னிந்திய ரயில்வே கம்பெனியார் இந்தச் சமயத்தில் ஈஸ்ட் இந்தியா கம்பெனியாருக்கு உதவி செய்ய முற்பட்டி ருக்கிறார்கள். இவர்களன்றி மற்றும் இந்தியாவிலுள்ள கம்பெனியாரும் இவ்வாறே உதவி செய்வார்கள் என்றே தோன்றுகிறது. மற்றக் கம்பெனியார் ஈஸ்ட் இந்தியா கம்பெனிக்கு ஆள் சேர்த்து அனுப்புவதிலிருந்து மேற்படி கம்பெனியாட்களுக்கு கடைசிவரை உத்தியோகம் கிடைப்பதற்கு வழியில்லாமல் போய்விடும். இந்த மாதிரி விஷயங்களில் மற்றக் கம்பெனி வேலையாட்கள் அற்ப ஆசைப்பட்டுப் போவது அத்தனை யுக்தமாக

மாட்டாது. இதேமாதிரி விபத்து வேறு ஒரு கம்பெனி வேலையாட்களுக்கும் ஏற்படலாம். ஆதலால் மற்றக் கம்பெனி வேலையாட்கள் எல்லா விஷயங்களையும் நன்றாக ஆராய்ச்சி புரிந்து காரியத்தில் தலையிடுவார்கள் என்று நம்புகிறோம்."

(இந்தியா - 28 - 7 - 1906)

வேலைநிறுத்தத்தின் தொடக்க நாட்களிலே இவ்வாறு எழுதினார் பாரதியார். வேலை நிறுத்தம் 'பிசுபிசுத்துப் போகும்' என்று வெள்ளைக் கம்பெனிகள் மனப்பால் குடித்தன; அவர்தம் எண்ணம் மண்ணாயிற்று. வேலை நிறுத்தம் நீடித்தது. வேலைநிறுத்தம் செய்த ஈஸ்ட் இந்தியா தொழிலாளர்கள் உறுதியுடன் நின்றார்கள். அவர்தம் உறுதி கண்டு மகிழ்ந்தார் பாரதியார். தொழிலாளர்தம் உறுதியையும் கட்டுப்பாட்டையும் பாராட்டினார்; பின் வருமாறு எழுதினார்:

"தொழில் நிறுத்தம்போன்ற விஷயங்களில் நெடுங்கால அநுபவமும் தேர்ச்சியும் பெற்ற மேல் நாட்டார்கூட "ரயில்வே தொழில் நிறுத்தம்" முதலியவற்றிலே இரண்டு மூன்று வாரங்களுக்குமேல் நிலைத்து நிற்பது மிகவும் கஷ்டமாகும். அதை உத்தேசிக்கும்போது, ஈஸ்ட் இண்டியா ரெயில்வே வேலையாட்கள் இத்தனை நாள் தீரத்தன்மையுடன் நியாயம் நடக்கும்வரை வணங்க மாட்டோம் என்று நிற்பது மிகவும் சந்தோஷத்திற்கு இடமாயிருக்கிறது. ஜமால்பூரில் 14,000 பேர் வேலை நிறுத்தி விட்டார்கள் என்று சிலதினங்கள் முன்பு ஒரு தந்தி கிடைத்தது. இன்னும் அநேக ஸ்டேஷன்களி லுள்ள வேலையாட்கள் எல்லாம் உடனே ராஜிநாமா கொடுத்து விடுவதாக மேலதிகாரிகளுக்குத் தந்தி அடித் திருக்கிறார்கள். ஒருங்கு கூடி வேலை செய்யும் வல்லமை

இந்தியர்களுக்குக் கிடையாது என்றும், இனி எக்காலத்திலும் வரப்போகிறதில்லை என்றும் சொல்லிச் சந்தோஷமடைந்து கொண்டிருந்தவர்களுக்கெல்லாம் இப்போது விழி பிதுங்குகிறது. தொழில் நிறுத்தத்திலிருக்கும் தீரர்களிடம் இந்தியா முழுதும் அநுதாபம் கொண்டிருக்கிறது என்பதில் ஆக்ஷேபமில்லை.''

(இந்தியா - 8 - 9 - 1906)

கிழக்கிந்திய ரயில்வே தொழிலாளர், வேலை நிறுத்தியிருந்த அதே சமயத்தில் மற்றொரு வேலை நிறுத்தமும் நடைபெற்றது. அது என்ன? பம்பாய் தபால்காரர் வேலை நிறுத்தம். ரயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தம் பற்றி எழுதிய போது சற்று நிதானமாகவே எழுதினார் பாரதியார். காரசாரமான சொற்களைப் பெய்து எழுதினாரல்லர். ஆனால் கொள்கையைச் சிறிதும் விட்டுக் கொடுத்தாரல்லர்; தளர்த்தினாரல்லர்.

ஆனால், தபால்காரர் வேலை நிறுத்தத்தின் போது சிறிது காரசாரமாகவே எழுதினார் பாரதியார்.

''முதலாளிகள் தொழிலாளிகளின் லாபத்தையும், சுகத்தையும் சிறிதேனும் பொருட்படுத்தாமல் கழுகுகள் போல தமது லாபத்தையே கருதி வேலையாட்களை வற்றடிக்கும் முறை இந்தியாவிலே அதிகரித்து விட்டது. நவீன நாகரிகத்திலே பண ஆசை ஒரு முக்கிய அம்சமானதால் நமது நாட்டு முதலாளிகள் இந்த விஷயத்தில் மேல் நாட்டு முதலாளிகளின் முறையைப் பின்பற்றுகிறார்கள். எனவே, தொழிலாளிகளும் மேல் நாட்டுத் தொழிலாளிகளின் மாதிரியைப் பின்பற்றத் தொடங்கி விட்டார்கள். முதலாளிகளிடமிருந்து தனது குறைகளைத் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் உண்டாகுமானால் மேல் நாட்டுத் தொழிலாளிகள் கூட்டம் கூடி

மொத்தமாகத் தொழில் நிறுத்தி விடுவது வழக்கம். அது போலவே நமது தொழிலாளிகளும் செய்யத் தலைப்பட்டு விட்டனர். என்ன செய்வார்கள் பாவம்?

"விவசாயத் தொழிலைப் பரப்புவதற்கு கவர்ன் மெண்டார் போதுமான சகாயம் செய்து கொடுப்பதில்லை. அரிசி, கோதுமை முதலிய உணவு தானியங்கள் பெருமடங் காக ஏற்றுமதி செய்யப்பட்டு உள்நாட்டுக்குள்ளே கஷ்டம் வந்து விடாமல் தடுக்க கவர்ன்மெண்டார் யாதொரு முயற்சியும் செய்யவில்லை, தொழிலற்றுக் கிடக்கும் ஜனத் தொகை நாள்தோறும் அதிகரித்து வருகிறது. இவர்களுக் கெல்லாம் தொழில் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்ற சிரத்தையே ஆட்சி செய்வோருக்கில்லை. எனவே, ஒவ்வொரு தொழிலிலும் ஆட்கள் ஈ மொய்ப்பது போல் மொய்க்க ஹேது உண்டாகிறது. இடையிடையே மழையும் பெய்யாமல் நின்று விடுகிறது. இவற்றை யெல்லாம் சௌகரியங்களாக வைத்துக் கொண்டு முதலாளிகள் வேலையாட்களைக் கூடியவரை இறுக்கி லாபத்தைத் தாங்கள் சாப்பிடப் பார்க்கிறார்கள். முதலாளி என்றால், தான் யந்திரசாலைத் தலைவனாயிருப்பினும், அல்லது ரயில்வே அதிகாரியாயிருப்பினும், கவர்ன்மெண்ட் பிரதிநிதியான போஸ்டாபீஸ் தலைவனாயிருப்பினும் வேறு எவ்விதமாக இருந்த போதிலும் எல்லாம் ஒன்று தான். தொழிலாளியைக் கஞ்சிக்குப் பறக்க விட்டுவிட்டுத் தனது பணப் பெட்டிகளை நிரப்பிக் கொள்ளும் ஒவ்வொரு முதலாளியும் கொள்ளைக்காரரே ஒழிய வேறு ஒருவரில்லை.

"இப்போது பம்பாயிலே தபால் சேவகர்கள் தொழில் நிறுத்தியிருக்கிறார்கள். இவர்களுக்கு நாள்தோறும், பொறுப்புக்களும் கடமைகளும் அதிகரித்து வருகின்றன, சந்தையில் விலைவாசி அதிகப்பட்டு வருகின்றது. ஆனால்

இதற்கெல்லாம் தக்கபடி சம்பளத் திட்டம் அதிகரித்துக் கொடுக்கப்படவில்லை. என்ற போதிலும், வருமானம் போஸ்டாபீஸ் அதிகாரிகளுக்கு ஜாஸ்திபட்டே வருகிறது. உயர்ந்த சம்பளக்காரர்களின் (முக்கியமாக ஐரோப்பியர் களின்) பணப் பெட்டிகள் நிரம்பிக்கொண்டும், கன்னங்கள் வீங்கிக் கொண்டும் வருகின்றன. கஷ்டப்பட்டு உழைக்கும் தபால் சேவகர் கதியை மட்டிலும் மேல் அதிகாரிகள் கவனிப்பது கிடையாது.

"எனவே, வியாழக்கிழமை பகல் ஒரு மணிக்கு 600 தபால் சேவகர்களுக்கு மேலாக ஒன்றுசேர்ந்து டைரக்டர் ஜெனரல் முன்பு சென்று தமது குறைகளைத் தீர்க்க வேண்டு மென்று கேட்டுக் கொண்டார்கள். அவர் சிற்சில அனு கூலங்கள் செய்து கொடுக்க இணங்கினார். இந்த நிபந்தனைகளை ஒத்துக்கொள்ள முடியாது என்றும், தமது துயரங்களனைத்தையும் நிவர்த்தி செய்தாலொழிய வேலைக்கு வர முடியாது என்றும் தொழிலாளிகள் கூறினர். அதன் பேரில், 500 போஸ்டல் சேவகர்களை டைரக்டர் ஜெனரல் தள்ளுபடி செய்துவிட்டார். மேற்படி 500 சேவகர்கள் என்ன செய்வார்கள்? இவ்வாறு தமது குறைகளைத் தீர்க்கும்படி வேண்டிக் கொண்டதற்கு அவர்களை வேலையை விட்டு நீக்கிவிட்டால், அவர்களுடைய குழந்தை குட்டிகளெல்லாம் எவ்வாறு தவிக்கும் என்பதை டைரக்டர் ஜெனரல் ஆலோசனை புரியவில்லை.

"பம்பாய் தபால் சேவகர்களுக்கும் பெங்காளத்தில் ரயில் நிறுத்தம் செய்துள்ள ரெயில்வே காரர்களுக்கும் பலவிதங்களில் ஒற்றுமையிருக்கிறது. இரண்டு விஷயங் களிலும் முதலாளிகள் பிடிவாதத்தால் எத்தனையோ ஏழைக் குடும்பங்கள் பூரண கஷ்டத்தை அடைந்திருக் கின்றன. யுரேஷியர்கள் அல்லது ஐரோப்பியர்கள் தொழில்

நிறுத்தியிருப்பார்களானால் அவர்களிடம் அதிகாரிகள் இவ்வாறு நடந்துகொள்ளத் துணிவார்களா?

"மேற்படி இரண்டு விஷயங்களிலும் அதிகாரிகள் தொழிலாளிகளை வேண்டுமென்றே ஒர வஞ்சத்துடனும், இகழ்ச்சியுடனும் நடத்துகிறார்கள். ஆனால் ஒரு வேற்றுமை மட்டிலும் இருக்கிறது. பெங்காளத்து ரயில்வே தொழில் நிறுத்தம் சுதேசிய முயற்சியுடன் சம்பந்த முடையதாகக் கருதப்பட்டது. பம்பாயில் அந்த சந்தேகத்துக்கு இடமில்லை. நாட்டிலே எப்போதும் வேலையின்றிக் கிடக்கும் கூட்டத்தார்கள் இருந்து கொண்டிருப்பதனால் அல்லவா இவ்வாறு திடீரென்று வேலையாட்களைத் தள்ளுபடி செய்யும் துணிவு, அதிகாரிகளுக்கு உண்டா யிற்று. இந்த ஏழை ஜனங்கள் வயிற்றுப் பிடுங்கல் பொறுக்க முடியாமல் சொற்பச் சம்பளத்திற்கு வந்து அமர்ந்துகொண்டு விடுவார்கள். முந்திய வேலைக்காரர் களின் கதியை இவர்கள் தங்கள் சொந்த பசியினால் கவனிக்க முடியாதவர்களாக இருக்கின்றார்கள். எனவே. ஏழைத் தொழில் நிறுத்தக் காரருக்கும் அவருடைய குடும்பத்தாருக்கும் உதவி செய்வது செல்வர்களுடைய கடமையாகும். பம்பாய் வர்த்தகர்கள் இந்த விஷயத்தில் மன இரக்கமின்றி கல்லுருவங்களைப் போல இருக்க மாட்டார்கள் என்று நம்புகிறோம்."

இந்தியா. 18 - 8 - 1906,

# பத்திரிகை மீது பாணம்

சுதேசி இயக்கம் வளர்ந்து வருதல் கண்டது அரசாங்கம், அதை எவ்விதமேனும் ஒடுக்கிவிடக் கருதியது. சுதேசி இயக்கத்தை ஆதரிக்கும் பத்திரிகைகள்மீது பாணம் தொடுத்தது; பத்திரிகை ஆசிரியர்களைக் கைது செய்தது; சிறைக்கு அனுப்பியது.

"பஞ்சாபி" என்ற பத்திரிகை லாகூரிலிருந்து வெளி வந்துகொண்டிருந்தது. இப்பத்திரிகை திலகர் கட்சியை ஆதரித்து வந்தது. இதன் உரிமையாளர் லாலா ஜஸ்வந்தராய் என்பவர். ஆசிரியர் அட்வனே என்பவர்.

இவ்விருவர் மீதும் அரசாங்கம் வழக்குத் தொடுத்தது. ஜஸ்வந்தராய்க்கு இரண்டு ஆண்டு கடுங்காவலும், ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டன. ஆசிரியர் அட்வனே ஆறுமாத கடுங்காவலும் 200 ரூபாய் அபராதமும் விதிக்கப் பெற்றார். இது லாகூர் டிப்டி கமிஷனரால் விதிக்கப்பட்ட தண்டனை.

இந்த விஷயம் பற்றி பாரதியார் ஒரு தலையங்கம் எழுதினார். அதிலே அவர் பின்வருமாறு குறிப்பிட்டார்:

"இதுவரை நமது தேசாபிமானிகட்குச் சுகமாக நாட்கள் கழிந்து வந்தன. இனிமேல் இந்தியாவின் பக்தன் என்று சொல்லப்படுவோன் எத்தனையோ

விதமான இமிசைகளுக்கும் உட்பட்டே தீரவேண்டும். பாரதமாதாவுக்குத் தொண்டு புரிவது விளையாட்டான காரியமன்று. சரீர இமிசைக்கு அஞ்சுவோர் அப்பெரும் தொண்டிற்குத் தகுதியுடையவராக மாட்டார்கள். எவ் வித பெருந்துன்பம் நேரிடினும் மனமஞ்சாத வீரர்களே பாரதமாதாவின் சேவைக்கு உரியவராவார்கள்"

(இந்தியா, பிப்ரவரி 23 - 1907)

பாரதியார் இவ்வாறு எழுதியதுடன் நின்றாரா? இல்லை. "பால பாரத" சங்கத்தின் கூட்டம் ஒன்றைக் கூட்டினார். ஜஸ்வந்தராய், அட்வனே ஆகிய இருவருக்கும் வாழ்த்துக் கூறியும் வணக்கம் தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றினார்.

"ஆட்டைக் கடித்து, மாட்டைக்கடித்து மனிதனையே கடிக்க வருவதுபோல் கவர்ன்மெண்டார் வர்த்தமானப் பத்திரிகைகளையே மூச்சைப்பிடித்து விடுவதற்கு ஒரு யுக்தி ஏற்பாடு செய்துவிட்டார்கள். சர்க்காருக்கு விரோதமான (அதாவது ஜனங்களை கவர்ன்மெண்டாருக்கு விரோத மாகத் தூண்டுகிற) பத்திரிகைளை லோகல் கவர்ன் மெண்டார் உடனே சட்டமூலமாக அடக்கிவிட வேண்டு மென்றும், இதில் வெகு ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும் என்றும் வைசிராய் இவ்வாரம் பிரசுரம் செய்திருக்கும் தீர்மானத்திலே சிபார்சு செய்திருக்கிறார்கள். சர்க்காரை அழிக்கும்படி ஜனங்களைத் தூண்டிவிடும் பத்திரிகைகளை மாத்திரமே கவர்ன்மெண்டார் தண்டிப் பதில் நமக்கு ஆட்சேபமில்லை. ஏனென்றால் அவ்வளவு அசாத்தியமான விஷயத்தைப் பிரசுரம் செய்யும் முக்கியப் பத்திரிகைகள் எதையும் நாம் பார்த்தது கிடையாது. ஆனால் இந்தத் தீர்மானத்தை வைத்துக்கொண்டு சுதேச பக்தி பாராட்டும் பத்திரிகைகளை எல்லாம் லோகல்

அதிகாரிகள் ஒரே மொத்தமாக வாயைக் கட்டிவிட மாட்டார்கள் என்று எப்படி நம்புவது? லோகல் அதிகாரி கள் இன்னதுதான் செய்வார்கள் என்பதற்கு வரம்பு இல்லாமல் போய்விட்டது. இவர்கள் கையிலே வைசிராய் இப்போது ஒரு புதிய சக்தி கொடுத்திருப்பதுதான் நமக்கு வியப்புண்டாக்குகிறது, இந்தத் தீர்மானத்திலா லேனும், வேறு எந்தத் தீர்மானத்திலாலேனும் ஜனங்கள் மனதிலே ஊறியிருக்கும் சுதேசபக்தியை நீக்க முடியா தென்பதை கவர்ன்மெண்டார் தாமே அறிவார்கள்.''

(இந்தியா 8 - 6 - 1907)

''வர்த்தமானப் பத்திரிகைகளையும் உபந்நியாசங் களையும் அமுக்கிவிடுதல் அதிகாரிகளுக்குச் சுலபம். நாளைக்கே செய்துவிடலாம். ஆனால் மனுஷ்ய ஜீவனுடைய இயற்கையை மாற்ற இந்த அதிகாரிகளால் முடியுமா? இந்தியாவிலே சுயராஜ்ய விருப்பத்துடன் உண்டா யிருக்கும் புதிய கிளர்ச்சி மனுஷ்ய ஜீவனுடைய இயற்கையைப் பற்றியது. அதை அடக்க முயல்வதைக் காட்டிலும் பேதைமை வேறொன்றில்லை. ஜனங்கள் சமாதான வழிகளை விரும்பி நிற்கும்வரை கவர்ன்மெண் டாரும் சமாதான சாந்த வழிகளை விரும்பி நிற்பதே அவர்களின் க்ஷேமத்துக்கு ஏதுவாகும். அவ்வாறின்றி அவர்கள் லார்ட் லிட்டன் காலத்து மகா கொடூர மான பத்திரிகைச் சட்டத்தைப் புதுப்பித்து தமது விருப்பத்தை சாதித்துக் கொள்ள முயலுதல் அவர் களுடைய பலவீனத்தைக் குறிப்பிடக் கூடியதாக இருக் கிறது. இத்தறுவாயில் அவர்கள் எவ்விதமான சற்போதனையையும் கேட்பார்கள் என்று தோன்றவில்லை. நேரே யோசிக்கும் திறமை அதிகாரிகளிடம் நின்று போயிருக்கின்றது. அத்தனை வெறியிலிருக்கிறார்கள்,

திருவள்ளுவர்

"களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீ இயற்று"

என்று சொல்லியிருக்கிறார். அதாவது குடிவெறியிலே இருப்பவனோடு காரணங்கள் கூறி விவகாரம் செய்ய முயலுதல் நீரின் கீழ் முழுகியிருப்பவனை விளக்கைக் கொண்டு தேட முயல்வது போலாகும் என்று அர்த்தம். தற்கால அதிகாரிகள் அதே ஸ்திதிக்கு வந்துவிட்டார்கள்."

(இந்தியா, - 8 - 6 - 1907)

ஆயிரத்துத் தொளாயிரத்து ஆறும் ஆண்டில் 'பஞ்சாபி' பத்திரிகை மீது பாணம் தொடுத்த அரசாங்கம் 1908-ம் ஆண்டில் "இந்தியா" பத்திரிகை மீதும் பாணம் தொடுத்தது.

ஆயிரத்துத் தொளாயிரத்து எட்டாம் ஆண்டு, எட்டாவது மாதம், அதாவது ஆகஸ்டு மாதம் 21ந் தேதி "இந்தியா" பத்திரிகை ஆபீசைப் போலீசார் சோதனை செய்தனர்.

அடுத்தபடி என்ன? பாரதியார் கைது செய்யப் படுவார் என்று நண்பர்கள் எதிர்பார்த்தார்கள்.

இந்நிலையில் என் செய்வது? பாரதியார் சிறை சென்று விட்டால் பத்திரிகையின் கதி என்ன? தேச சேவை என்ன ஆகும்? தடைப்படும் அன்றோ?

எக் காரணம் பற்றியும் தேசசேவைக்குத் தடை வரலாகாது. சென்னையிலிருந்தால் பாரதி கைது செய்யப் படுவது உறுதி. தேசத் தொண்டுக்கு இடையூறு வருவதும் உறுதி.

எனவே சென்னையிலிருக்கக் கூடாது. வேறு எங்காவது போய்விடவேண்டும். எங்குப் போவது?

பிரிட்டிஷ் இந்திய அரசாங்கத்தின் அதிகாரத்துக்கு உட்படாத பகுதிக்குச் சென்றுவிட வேண்டும்.

இதாலிய தேசபக்தராகிய மாஜினி என்ன செய்தார்? இதாலிக்கு வெளியே இருந்து இதாலிய விடுதலைக்குப் பாடு படவில்லையா? அவர் போலவே கரிபால்டி பாடுபட வில்லையா?

அம்மாதிரியே பிரிட்டிஷ் இந்திய அரசாங்க எல்லைக்கு அப்பால் சென்று இருந்துகொண்டு பாரத தேசத்துக்குத் தொண்டு செய்யவேண்டும்.

இவ்வாறு கருதினர் பாரதியார். நண்பர்களும் 'அதுவே சரி' என்றனர். அங்ஙனமாயின் எங்கு செல்வது?

புதுச்சேரியிலே நடப்பது பிரெஞ்சு ஆட்சி. பிரிட்டிஷ் ஆட்சியன்று. எனவே, புதுச்சேரிக்குப் போகலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

பாரதியாரும் அவருடைய நண்பர்களும் எதிர்பார்த்த படியே நிகழ்ந்தது. "இந்தியா" ஆபீஸ் சோதனையிடப் பட்டபின் இரண்டு மூன்று நாட்களே சென்றன.

ஒரு நாள் "இந்தியா" ஆபீஸ் மாடியிலிருந்து கீழே இறங்கி வந்து கொண்டிருந்தார் பாரதியார். அதே சமயத்தில் ஒரு போலீஸ்காரனும் மேலே வந்து கொண் டிருந்தான். வந்தவன் என்ன செய்தான்? பாரதியாரிடம் ஒரு 'வாரண்டை' நீட்டினன். "யாருக்கு?" என்ருர் பாரதியார்; இந்தியா பத்திரிகையின் ஆசிரியருக்கு என்ருன் போலீஸ்காரன். "ஆசிரியருக்குத் தானே! நான் அல்லன்" என்று கூறினர் பாரதியார்; 'மட மட' என்று இறங்கினர்; போய் விட்டார்.

'இந்தியா' பத்திரிகையின் ஆசிரியர் பாரதியே. ஆயினும் அரசாங்க ஏடுகளில் என்ன இருந்தது?

எம். ஸ்ரீநிவாசன் என்பவரே "இந்தியா" பத்திரிகையின் ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும் பதிவு செய்யப் பட்டிருந்தது.

எனவே அரசாங்கப் பதிவு ஏட்டின்படி 'இந்தியா' பத்திரிகையின் ஆசிரியர் பாரதியார் அல்லர். அதைத்தான் குறிப்பிட்டார் பாரதியார்.

இந்த மாதிரி நிலை வரும்போது என் செய்வது என்பது பற்றித்தான் முன்னரே முடிவு செய்யப்பட்டது அன்றோ? அதன்படியே 'செயல் புரியத் தொடங்கினார் பாரதியார்.

புதுச்சேரி, பாரதிக்குப் பழக்கமில்லாத ஊர். எனவே மண்டயம் ஸ்ரீநிவாசாச்சாரியார் ஒரு கடிதம் எழுதிக் கொடுத்தார். யாருக்கு? சிட்டி குப்புசாமி அய்யங்கார் என்பவருக்கு. அந்தக் கடிதத்தை வாங்கிக் கொண்டார் பாரதியார்.

'எழும்பூர் ரயில் நிலையம் சென்று ரயிலேறினால் போலீசுக்குத் தெரிந்து விடும்; பின் தொடர்வார்கள். ஆகவே, எழும்பூர் சென்று ரயிலேறக் கூடாது' என்று கருதினார்; சைதாப்பேட்டை சென்றார்; ரயிலேறினார்.

இரவு முழுவதும் கண் மூடவில்லை. எவனாவது போலீஸ் இலாகா பேர்வழி தன்னைத் தொடர்கிறானோ என்ற சந்தேகம். அதனால் மிக மிக விழிப்புடன் சென்றார் பாரதியார்.

# புதுவைப் போராட்டம்

பொழுது விடியுமுன்னரே ரயில்வண்டி புதுவை சேர்ந்தது. வண்டியை விட்டு இறங்கினார் பாரதி. சிட்டி குப்புசாமி அய்யங்காரின் வீடு நோக்கிச் சென்றார். புதுவை பெருமாள் கோவில் தெருவிலே வசித்து வந்தார் குப்புசாமி அய்யங்கார். அவரது வீட்டு விலாசம் பாரதியாரிடம் இருந்தது. எனவே அந்த வீட்டுக்குச் சென்றார் பாரதியார். ஸ்ரீநிவாசாச்சாரியார் அளித்த கடிதத்தைக் கொடுத்தார். அதை வாங்கினார் குப்புசாமி அய்யங்கார். படித்தார்; பாரதியை வரவேற்றார்.

காலை சிற்றுண்டி முடிந்தது. வீட்டுத் திண்ணையிலே படுத்தார் பாரதியார்; உறங்கினார். இவ்வாறு இரண்டே நாட்கள் சென்றன.

பாரதியார் வந்து சேர்ந்த செய்தி அறிந்தது சென்னைப் போலீஸ். பிரெஞ்சுப் போலீஸ் மூலம் தொல்லை கொடுக்கத் தொடங்கியது. குப்புசாமி அய்யங்காரை அச்சுறுத்தியது.

பாவம்! அய்யங்கார் என்ன செய்வார்? சொல்லவும் முடியவில்லை, விழுங்கவும் முடியவில்லை. ஒருவாறு பாரதியார் இதனை அறிந்துகொண்டார்.

"அஞ்சாதீர் அய்யங்காரே! இரண்டுநாள் பொறுத்திரும். நான் வேறு இடம் பார்த்துக்கொண்டு போய்

விடுகிறேன்'' என்று கூறினார் பாரதியார். அய்யங்காரும் ஒருவாறு மனதைத் தேற்றிக்கொண்டார்.

இந்தமாதிரி நெருக்கடியான நிலையில் என்ன செய்வது என்று எண்ணியவாறு திண்ணையில் வீற்றிருந்தார் பாரதியார்.

'எங்கிருந்தோ வந்தான்' என்று பாரதியார் பாடியிருக்கிறார் அல்லவா? அந்தப் பாட்டுடைத் தலைவனாகிய குவளை கிருஷ்ணமாச்சாரியார் வந்தார். அவர் சிட்டி குப்புசாமி அய்யங்காரின் உறவினர்; புதுவை கால்வே கல்லூரியில் கல்வி பயின்ற இளைஞர்; 'இந்தியா' பத்திரிகையின் வாசகர்; ஆனால், திண்ணையில் உட்கார்ந்திருந்தவரே அந்த 'இந்தியா' பத்திரிகையின் ஆசிரியர் என்பது அறியாதவர்.

இருவரும் பல்வேறு விஷயங்கள் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர்.

"இந்தஊரிலே, 'இந்தியா' பத்திரிகையை தருவித்துப் படிப்பவர் எவரையேனும் தெரியுமா?'' என்று கேட்டார் பாரதியார்,

"தெரியுமே!'' என்றார் அந்த இளைஞர்.

"அவரை நான் பார்க்க விரும்புகிறேன்'' என்றார் பாரதியார்.

"ஓ! போகலாம் வாருங்கள். நான் அழைத்துக் கொண்டு போகிறேன்'' என்றார் இளைஞர். இளைஞரைத் தொடர்ந்தார் பாரதியார்.

சுந்தரேச அய்யர் என்பவர் மணிலாக் கொட்டை வியாபாரி ஒருவரிடம் கணக்கு எழுதி வாழ்க்கை நடத்தியவர்; 'இந்தியா' பத்திரிகையின் பால் பற்றுடையவர். பத்திரிகையின் சந்தாதாரர்.

அவரிடம் பாரதியை அழைத்துச் சென்றார் குவளை கிருஷ்ணமாச்சாரி என்ற அந்த இளைஞர்; பாரதியை அவரிடம் விட்டுச் சென்று விட்டார்.

பாரதியார் சுந்தரேச அய்யரிடம் தம்மை அறிவித்துக் கொண்டார்.

அறிந்த உடனே சுந்தரேச அய்யர் அவருக்கு ஏற்ற பாதுகாப்பான இடம் தந்து உதவினார். பாரதியும் அமைதியாக இருந்து வந்தார்.

சில நாட்கள் சென்றன. மண்டயம் ஸ்ரீநிவாச அய்யங்கார் வந்தார்; தமக்குத் தெரிந்த நண்பர் பலரை பாரதிக்கு அறிமுகம் செய்து வைத்தார்; பாரதிக்கு வேண்டிய வசதிகளும் செய்துவிட்டுப் போனார்.

பாரதியார் புதுவைக்குச் சென்ற சிலநாட்களுக்குப்பின் என்னஆயிற்று? எஸ். என். திருமலாச்சாரியார், மண்டயம் ஸ்ரீநிவாசாச்சாரியார் ஆகியோரும் புதுவை சேர்ந்தனர். புதுவையினின்றும் 'இந்தியா' பத்திரிகையை வெளியிட எண்ணினர். 'இந்தியா' பத்திரிகை அச்சகமும் புதுவைக்குக் கொண்டுபோகப் பட்டது. புதுவையைச் சேர்ந்த எஸ். லக்ஷ்மீநாராயண அய்யர் என்பவர் பத்திரிகையை வெளியிடுபவராகப் பதிவு செய்து கொண்டார். 'சரஸ்வதி அச்சகம்' என்ற பெயரில் இந்தியா அச்சகம் தோன்றியது. புதுவை எத்ரான்ஷேர் தெருவில் 58ம் எண் உள்ள வீட்டில் இந்த அச்சகம் நிறுவப்பட்டது. அக்டோபர் (1908) 20ந் தேதி முதல் 'இந்தியா' பத்திரிகை புதுச்சேரியிலிருந்து வெளிவரத் தொடங்கியது.

புதுச்சேரி கலவை பங்களாவில் ஒரு சிறு குளம் இருந்தது. அந்தக் குளத்தருகே ஒரு சிறு கட்டிடமும் இருந்தது. தளம் போடப்பட்ட கட்டிடம் அது.

கட்டிடத்தின் மேலே ஒரு கீற்றுக் கொட்டகை. கொட்டகையின் உள்ளே நல்ல காற்று வீசும். இங்கேதான் தங்கியிருந்தார் பாரதியார்.

சாமிநாதய்யர் என்பவரும் அந்த பங்களாவின் ஒரு புறத்திலே இருந்தார். உத்தியோகம் செய்பவரிடம் பணம் வாங்கிக் கொண்டு சாப்பாடு அளித்து வந்தார் சாமிநாதய்யர். "இந்தியா" பத்திரிகையைப் புதுச்சேரியிலிருந்து வெளியிடத் தொடங்கிய நாளிலே பாரதியாரும் இவரிடம்தான் சாப்பிட்டு வந்தார்.

பாரதியாருக்கு உதவியாக ஹரிஹர சர்மா வந்தார். இவரைத் தொடர்ந்து பி. பி. சுப்பையா வந்தார். சுப்பையாவைத் தொடர்ந்து என். நாகசாமி வந்தார்.

"இந்தியா" பத்திரிகைக்குத் தொண்டு செய்ய மேலும் சிலர் அழைக்கப்பட்டனர். ஆக ஏழுபேர் சேர்ந்து விட்டனர்.

கலவை பங்களாவில் இவர்கள் இருந்த இடம் எழுவர் வசிக்க ஏற்றதாக இருக்கவில்லை. எனவே வசதியான வீடு ஒன்று பார்க்கும்படி கூறினார் பாரதியார். வீடு பெரிதாக இருக்க வேண்டும். வசதியாயிருக்க வேண்டும். வாடகையும் குறைவாயிருக்க வேண்டும். இதுதான் பாரதி இட்ட கட்டளை. வீடு தேடு படலம் தொடங்கியது.

ஈசுவரன் தர்மராஜா கோவில் தெருவில் ஒரு வீடு பாரதியார் விரும்பியவாறு இருந்தது. அந்த வீட்டுக்கு வாடகை பேசினார்கள்; ஒப்பந்தம் செய்துகொண்டார்கள்; எல்லாரும் சென்று வசிக்கத் தொடங்கினார்கள்.

காலை ஐந்து மணிக்கு எல்லாரும் எழுந்து விடுவர்; சிறிது நேரம் உடற்பயிற்சி செய்வர். பிறகு கிணற்றின் கரை செல்வர். கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்துக்

குளிப்பர்; ஈரத்துணியை உலர்த்துவர்; வேறு துணி கட்டிக்கொண்டு சிற்றுண்டி தயார் செய்வர். சிற்றுண்டி முடிந்தபின், மூவர் "இந்தியா" ஆபீசுக்குச் சென்று அங்கே வேலை செய்வர். மற்ற மூன்று பேர் வீட்டிலே சமையல் செய்வர். மண்சட்டியில்தான் சமையல் செய்வது வழக்கம்.

எல்லாரும் ஒன்றாக அமர்ந்து உண்பர். பகல் சாப்பாடு முடிந்த உடனே, காலையில் உணவு தயாரித்த மூவரும் 'இந்தியா' ஆபீசில் வேலை செய்யப் போய்விடுவர். காலையில் 'இந்தியா' ஆபீசில் வேலை செய்த மூவரும் இரவு உணவு தயாரிப்பர்.

'இந்தியா' பத்திரிகை வேகமாக வளர்ந்தது.

பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்து வெளியேறி, பிரெஞ்சு இந்திய எல்லைக்குப் போய் விட்டால் அங்கே எவ்விதமான தொல்லையும் இராது, எவ்வித இடையூறுமின்றி நாட்டுக்குத் தொண்டு செய்யலாம் என்று எண்ணினார் பாரதி. அந்த எண்ணமே அவரைப் புதுச்சேரி செல்லத் தூண்டியது. ஆனால் பிரிட்டிஷாரின் தொல்லை அங்கும் அவரைத் தேடிச் சென்றது.

பிரிட்டிஷ் இந்தியப் போலீசார் பாரதிக்கு அளித்த தொல்லைகளுக்கு ஓர் எல்லை இல்லை. பிரெஞ்சு எல்லைக்குள் சென்று பாரதியைக் கைது செய்வது இயலாது. எனவே ஏதாவது ஒரு பொய்க் கேஸ் கற்பனை செய்ய வேண்டும். அவ்வாறு பொய்க்கேஸ் கற்பனை செய்யும் பொருட்டு உளவாளர் சிலரை ஏற்படுத்தினர் பிரிட்டிஷ் இந்திய போலீசார்.

இது பற்றிச் சுவையான கடிதம் ஒன்று 'இந்தியா' பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ளது. 1909ம் ஆண்டு

ஜூலைமாதம் 24ந்தேதி 'இந்தியா'வில் அக் கடிதம் வெளியிடப்பட்டது. அதன் தலைப்பு 'உளவாளிகள் தொல்லை'' என்பதாகும். 'இந்தியா' பத்திரிகைக் காரியாலயத்தில் வேலை பார்த்து வந்த ஒருவரைப் பிடித்துப் பிரிட்டிஷ் இந்திய போலீஸார் தங்கள் உளவாளியாக்கிக் கொண்டதும் பிறவும் அக்கடிதத்தின் மூலம் வெளியாகிறது. அந்த உளவாளி சொல்கிறார்:

''1908ம் வருஷம் டிசம்பர் மாதம் முதலில் பிரிட்டிஷ் போலீஸ் கிரிமினல் இன்டலிஜென்ஸ் டிபார்ட்மெண்ட் டிபுடி சூப்பிரண்டெண்டு ஒருவர், புதுச்சேரியில் ஒருவர் வீட்டிற்கு வந்து என்னை வரவழைத்து, ''ஒரு தமிழ் பத்திரிகை ஆபீசில் நீர் வேலையாயிருப்பதாகக் கேள்விப் பட்டேன். அந்த ஆபீசில் நடக்கும் விஷயங்களை எல்லாம் எனக்கு அப்போதைக்கப்போது தெரியப்படுத்திக் கொண்டு இருக்க வேண்டும். அப்படி விசேஷமாக அங்கு ஒன்றும் நடவாவிட்டால் நான் உமக்குச் சொல்லிக் கொடுக்கும் பிரகாரம் அந்த ஆபீஸின்பேரில் நீர் ரிபோர்ட்டு எழுதினால் உமக்கு நல்ல இலாபம் கிடைக்கும்படி செய்வதுடன், எனக்கும் வேலை 'கிரேடு' உயரும்'' என்று என்னிடம் சொன்னார். நான் அவர்களோடு அதிசிநேகமாக இருக்கிறபடியால், அவர்களின் பேரில் அவர் கற்பனை செய்யும் படியான வீண் அவதூறுகளை எழுதுவதற்குச் சம்மதப்பட வில்லை. திரும்பவும் அவர் என் வீட்டிற்கு அடிக்கடி வந்து என்னைத் தன்னுடைய இன்பார்மராக (உளவாளியாக) தானாகவே யெடுத்துக் கொண்டு, தனக்கு, ஒரு நல்ல 'இன்பார்மர்' கிடைத்ததாக இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கும், சிம்லாவிலுள்ள டைரக்டர் ஜெனரலுக்கும் தெரியப் படுத்தி சிபார்சு செய்திருப்பதாகச் சொல்லி, என்னுடன் சொன்னதாவது, ''அப்பா, உன்னை நம்பி மேலதிகாரி

களுக்கு எழுதிவிட்டேன்; என்னைக் கைவிடக்கூடாது" என கெஞ்சினர். அதன் பிறகு எனக்கும் அவருக்கும் இது விஷயமாக அவருக்கு வேண்டிய சங்கதிகளைப்பற்றிக் கடித வர்த்தமானங்கள் நடந்து வந்தன. எங்கேயாவது ஓர் 'யுகாந்தர்' பத்திரிகையைத் தேடியெடுத்து, அது "இந்தியா"பத்திரிகையாபீஸுக்கு வருகிறதென்றும், அதை வெளியில் அனுப்புகிறார்களென்றும் எழுதச்சொல்லி, பிறகு சென்னைக்குப் போய் எனக்கு எழுதிய கடிதத்தில் கடைசி 'யுகாந்தர்' பத்திரிகையொன்றை அனுப்பும்படியாகக் கேட்டிருக்கிறார். அவர் திரும்பவும் புதுவைக்கு வந்து, தானுகவே, அவ்வச்சாபீஸ் மானேஜரின் பேரில் குற்றம் சாட்டும்படியான இன்பர்மேஷன்கள் கொடுக்கும்படி சொன்னர். 'யுகாந்தர்' விஷயம் அகப்படுவது கஷ்டமென்று நான் சொன்னதாக மேல் அதிகாரிகளுக்குத் தெரிவித்துவிட்டார். அவர் சொல்லிய தப்பு விஷயங்களுக்கு நான் ஒப்புக்கொள்ளாமல், ஒரு பஸ்ட்கிளாஸ் இன்ஸ்பெக்டரிடம், அந்த "இந்தியா" ஆபீஸில் நடந்தவும் நடக்கிறவுமான உண்மையான விஷயங்களையும், மேற்படியாரின் பொய் ரிப்போர்ட்டுகளையும் மேலதிகாரிகளுக்குத் தென்னற்காடு சூப்ரிண்டெண்ட் மூலமாக இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு ரிப்போர்ட்டு செய்யும்படி செய்தேன். இதே விதமாக இப்போது ஆபீஸின் உண்மையான விஷயங்களின் ரிபோர்ட்களையும் டிபுடி சூப்ரிண்டெண்டின் பொய் அவதூறுகளையும் தற்போதுள்ள தென்னற்காடு சூபரின்டெண்டெண்டு, இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்குத் தெரிவித்துக் கொண்டு வருகிறார். இது டிப்டி சூப்ரிண்டெண்டின் பொய் ரிப்போர்ட்டுக்கு விரோதமாயிருக்கிறபடியால், இவ்வுண்மை ரிப்போர்ட்டுகள் அவருக்கு அதிக மனவருத்தம் தருகிறதாகச் சொல்லி வருத்தப்படுகிறார்.

"இவ்வுண்மை ரிப்போர்டு இன்ஸ்பெக்டர் ஜெனரலிடம் சேர்ந்ததும் டிப்டி சூப்ரிண்டெண்டை செக் செய்ததன் பேரில், அந்த ரிப்போர்ட்டை எடுத்துக் கொண்டு புதுச்சேரிக்குத் திரும்பவும் என் வீட்டிற்கு வந்து, என்னை தென்னாற்காடு சூப்ரிண்டெண்டு ரிப்போர்ட்டுக்கு மாருக தான் சொல்லும் பிரகாரம் எழுதும்படி கெஞ்சிக் கேட்டுக் கொண்டார். அதை மறுத்தபோது, "எப்படியாவது நான் இந்த உண்மை ரிப்போர்ட்டை பொய்யாக்குவேன்" என்று சொல்லி, சில பொய் ரிப்போர்டுகளை எழுதிக்கொண்டு சென்னைக்குப் போகும்போது திரும்பவும் எனக்குக் கடிதம் எழுதுவதாக சில சமாதான வார்த்தைகளைச் சொல்லிப் போனார். பிறகு, பணம் திருடிக்கொண்டு புதுச்சேரிக்கு வந்த சிலரைப் பற்றி நான் கொடுத்த சில இன்பர்மேஷன்களை வைத்துக்கொண்டு அத்துடன் அவர்கள் ஆபீஸுக்கு வந்ததாகவும் அவர்கள் செய்த காரியங்களுக்கு அவ்வாபீஸார் உடந்தையாய் இருந்ததாகவும் தானகவே சேர்த்துக்கொண்டு, பொய் ரிபோர்ட்டு செய்துவிட்டார். இவர் புதுச்சேரிக்கு வந்த பொழுதெல்லாம் அச்சாபீஸின் பேரில் ஏதாவது ஒரு கேஸை உண்டுபண்ணக் கூடிய இன்பர்மேஷன்களைக் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டிருக்கிறார். கடிதமொன்றில் இரண்டு பெங்காளிகள் எங்கே என்று கேட்டிருக்கிறார். அதாவது, அவர் இதற்கு முன் இரண்டு பெங்காளிகள் அந்த ஆபீஸுக்கு வந்திருப்பதாக எழுது என்று கற்பனை செய்திருக்கிறார். இவ்வித கற்பனைகளைத்தான் அநேகம் தடவை மறுத்திருக்கிறேன். இரண்டு பெங்காளிகள் வந்தது கிடையாது. இதுவுமன்றி, தானகை, அநேக ராஜதுரோகமான விஷயங்கள் நடக்கிறதென்று சொல்லி, ஸ்பெஷல் டியூட்டியின் பேரில் அடிக்கடி புதுவைக்கு வந்து கேட்டுக் கொண்டிருக்கிறார். வந்த பொழுது எல்லாம் ஒவ்வொரு தடவை

யும் பொய் ரிப்போர்ட்டுகள் தயாரித்து எழுதி வருகிருர். தென்ஞற்காடு சூபரிண்டெண்டெண்டு டிப்டி சூப்ரிண் டெண்டெண்டு எழுதும் தப்பு ரிபோர்ட்டுகளை மறுத்து அச்சாபீஸின் உண்மையான சங்கதிகளை அடிக்கடி மேலதி காரிகளுக்குத் தெரிவித்து வருகிருர். அந்த அச்சாபீஸின் சொந்தக்காரர் பேரில் எப்படியாவது ஒரு கேஸ் கொண்டு வர வேண்டியது என்றும், அதற்காகத் தான் கொடுக்கும் இரண்டு ரிவால்வர்களை அவர் (இந்தியா சொந்தக்காரர்) சென்னைக்குப் பிரயாணமாகும்பொழுது அவர் போகும் வண்டியில் அவருடைய மூட்டைகளுடன் வைத்துவிட்டால் தானும் தன்னைச் சேர்ந்தவர்களுமாக கண்டமங்கலம் பிரிட்டிஷ் சுங்க இலாகாவில் வந்திருந்து அரஸ்ட் செய்து தன் பொய் ரிப்போர்ட்டுகளை வாஸ்தவமென்று நம்பும்படி செய்யவும் இன்னும் ப்ரமோஷனடையவும் சௌகரியமா யிருக்குமென்று சொன்ஞர். நான் இவ்வித துரோகச் செய்கைகள் செய்ய முடியாதென்றும், இது பிரெஞ்சு எல்லை என்றும், பிரிட்டிஷ் ஆபீஸராகிய நீர் இவ்விதம் செய்ய நினைப்பது தப்பு என்றும் சொல்லி மறுத்து, கண்டித்துவிட்டேன். ஆகையால் இந்த டிப்டி சூப்ரிண் டெண்டெண்டு போன்ற போலீஸ் ஸி. ஐ. டி. உத்தியோ கஸ்தர்களின் விஷயத்தில் நம்மவர்கள் அதிக ஜாக்கிரதை யுடன் இருக்க வேண்டும் என்ற கருத்துடன் இதை வெளிப்படுத்தினேன். மேலும், இதைப் பற்றி டிப்டி சூப்ரிண்டெண்டின் மேல் உத்தியோகஸ்தர்களாகிய இன்ஸ்பெக்டர் ஜெனரல், டைரக்டர் ஜெனரல் முதலிய வர்கள் என்ன முயற்சி எடுத்துக் கொள்கிருர்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆகையால், இவ்விதமான அவரது பொய்யான அமிதச் செய்கைகளை எல்லாம் மறுக்கிறேன்."

(இன்பார்மர் புதுச்சேரி; பாரதி புதையல்— (ரா. அ. ப) - இரண்டாம் பாகம் பக். 327)

உளவாளிகளின் தொல்லை இதோடு நிற்கவில்லை. மேலும் தொடர்ந்தது. 1910ம் ஆண்டு பிப்ரவரி 26ந் தேதி "இந்தியாவில்" ஒரு தலையங்கம் எழுதி வெளியிட்டார் பாரதியார். "எப்படி நம்புவது?" என்ற தலைப்புடன் அத் தலையங்கம் வெளிவந்தது. அது வருமாறு :

"நமது பத்திரிகையில் சென்ற வாரத்தில் வரைந்துள்ள "உடன் பிறந்தே கொல்லும் வியாதி" என்ற வியாசத்திற் கேற்ப நமதூரிலுள்ள ஆங்கில ஸி. ஐ. டி. இலாகாவைச் சேர்ந்த வொருவர் நாமிந்த தர்மபூமிக்கு வந்ததும் நம்முடன் பழமையான சிநேகிதத்தோடு வந்து, நமது ஆபீஸில் வேலை பார்க்க தனக்குப் பிரியமிருப்பதாகத் தெரிவித்தார். ஆனால் அவர் நமக்கு இஷ்டனைப் போலிருப் பதால், அவரை வேலையில் வைத்து வேலை வாங்க சம்மதிக் காது சாதாரணமாக வரப் போகவிருக்கும் படியே செய் தோம். பிறகு அவர் நமது ஆபீசுக்கு வரப்போகவிருப் பதைத் தெரிந்த ஸி. ஐ. டி. இலாக்காதாரர் இவரால் தங்களிஷ்டம் போல் முடியுமென்று கருதி இவரை தங்களி லொருவராக நியமித்துக் கொண்டு எவ்விதத்திலும் பிரயாசைப் பட்டார்கள். எது பயன்பட்டதும் படாததும் தெரியாமலிருக்க, சென்ற 1909-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24-ம் தேதியில் வெளியான 41-வது லக்கமுள்ள "இந்தியா" பத்திரிகையில் 9வது பக்கத்தில் "இன்பார்மர்" என்று கையொப்பமிட்ட விலாசமானது ஷை கையொப்ப மிட்டவராலேயே எழுதப்பட்டு எமக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. இஃதிப்படி இருக்க, சென்ற வார மத்தியில் ஷை யார் பழமையான சிநேகிதத்தை முன்னிட்டுக் கொண்டு நம்மிடம் வந்து சம்பாஷித்துக் கொண்டிருக்கும் போது, ஸி. ஐ. டி. மேலதிகாரிகள் ஷை வியாசமானது யார் எழுதினதென்று தன்னைக் கேட்டதாகவும், அதற்குத் தான் "இந்தியா" ஆபீஸுக்குச் சென்றிருந்தபோது

அவ்வாபீஸிலுள்ளார் தனக்குப் போதையைத் தந்து கையொப்பம் வாங்கிக் கொண்டாரென்று சொன்ன தாகவும் சொன்னார். இதைக் கேட்டுக் கொண்டிருந்த நமது நண்பரில் ஒருவர், இப்படிப் பொய் சொல்லலாமா வெனக் கேட்டதற்கு, "எப்படியாவது நான் தப்பிக் கொள்ள வேண்டிய மார்க்கத்தில் சொன்னேனே யொழிய வேறில்லை" என்று சொல்லிவிட்டு, சற்று நேரம் சென்று நாளை வருவதாக உத்தரவு பெற்றுக் கொண்டு போய் விட்டார். பிறகு, இந்த சம்பாஷணை நடந்த போதிருந்த வேறொரு நண்பர் தன்னிடத்தில் இன்பார்மரான இந்த நண்பன் தனக்கு ஆங்கில அரசாட்சியில் இந்த "இந்தியா" ஆபீஸ்காரரை எவ்விடத்திலாவது பிடித்துக் கொடுத்தால் ஒரு பெருத்த வெகுமானம் செய்வதாக வாக்குத் தத்தம் செய்திருக்கிறார்களென்றும், இவரை சேர்க்கக் கூடா தென்றும், சேர்த்தால் தீமையே விளையக் கூடுமென்றும் வற்புறுத்தினார். நாம் அதற்கு தர்ம தேவதையின் ஸகாயமும் பாரத மாதாவின் அருளும் உள்ள வரையில் நமக்குத் தீங்கு வராதென்றும், நாம் யாருக்கும் கனவிலும் கூட தீங்கை எண்ணவில்லை என்றும் சொல்லி முடித்தோம்.

—பாரதி புதையல்-பாகம் - II—ரா. அ. ப. பக்கம் 221-223

இப்படியாக "இந்தியா" பத்திரிகை நடந்து கொண்டிருந்தபோது அதை நிர்வகித்து வந்த எம். பி. திருமலாச் சாரியார் ஐரோப்பாவுக்குப் புறப்பட்டுச் சென்றார். பத்திரிகை நடத்தும் பொறுப்பை மண்டயம் ஸ்ரீநிவாசா சாரியார் ஏற்றுக் கொண்டார். சில மாதங்கள் சென்றன. மண்டயம் ஸ்ரீநிவாசாச்சாரியார் சென்னைக்கு வர வேண்டியவர் ஆனார். எனவே பத்திரிகை நடத்தும் பொறுப்பை பி. டி. ரங்காச்சாரியார் என்பவரிடம் ஒப்பு வித்துச் சென்னை சேர்ந்தார்.

ரங்காச்சாரியார் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட உடனே என்ன செய்தார்? நிர்வாகச் செலவை விரிவாக்கினர்; மற்றவர் செலவைச் சுருக்கச் சொன்னர். தொழிலாளர்களிடத்திலே அநாவசியமாகக் கண்டிப்புக் காட்டினர். இவரது நிர்வாகம் கண்டு வெறுப்புக் கொண்ட பி. பி. சுப்பையா வேலையை விட்டார்; எட்டய புரம் சென்ருர். ஹரிஹர சர்மா வட இந்தியா சென்ருர். "இந்தியா" ஆபீசில் நின்றவர் இருவரே. ஒருவர் பாரதியார்; இன்னெருவர் நாகசாமி.

"இந்தியா" பத்திரிகைக்கு உயிர் கொடுத்தவர் பாரதியார்; பத்திரிகையின் மூச்சே பாரதியார்தான். பணம் சம்பாதிப்பதன் பொருட்டு அவர் பத்திரிகை ஆசிரியர் ஆனரா? இல்லை. தேச சேவைக்கு ஒரு கருவி யாகவே பத்திரிகையைக் கருதினர். அவருடைய எழுத் திஞல்தான் பத்திரிகைக்கு அந்தக் காலத்திலே ஐயாயிரம் சந்தாதாரர்கள் ஏற்பட்டார்கள். ஒரு பத்திரிகை ஆசிரிய னுக்கோ, அல்லது எழுத்தாளனுக்கோ நேரம் காலம் இல்லை. எங்கிருந்தாலும், எந்த நிலையிலிருந்தாலும், எப்போதும் அவன் தன் பத்திரிகை பற்றியும் தான் எழுத வேண்டிய விஷயம் பற்றியுமே எண்ணிக் கொண்டிருப் பான். இந்த விஷயம் சில 'களி மண் மண்டை'களுக்கு விளங்குவதில்லை. இந்த மாதிரி 'களி மண் மண்டைகள்' இந்தக் காலத்திலும் உள்ளன. எழுத்தாளன் பத்திரி காசிரியன் என்ருல் அவன் ஓர் இயந்திரம் என்று கருதும் 'களி மண் மண்டைகளை' என்ன என்று சொல்வேன்! இத்தகைய மண்டை படைத்த மகாப் பிரபுவாக விளங் கினர் அந்த ரங்காச்சாரியார்.

"ஆபீசுக்கு இந்த நேரத்துக்கு வரவேண்டும்; இந்த நேரத்துக்குப் போக வேண்டும்; இந்த நேரம் முதல் இந்த

நேரம் வரை ஆபீசில் இருக்க வேண்டும்" என்று பாரதியாருக்கு உத்தரவு விதித்தார்.

எத்தகைய கட்டுப்பாட்டையும் விரும்பாதவர் பாரதியார். ரங்காச்சாரியின் கட்டுப்பாட்டை விரும்புவாரா? விரும்பமாட்டார்.

அதுவரை "இந்தியா" ஆபீசிலிருந்து அவருக்குச் சம்பளமாக என்ன கொடுத்தார்கள்? கைச்செலவுக்கு வேண்டிய சிறு தொகைதான்.

ரங்காச்சாரியின் கட்டுப்பாடு வந்த உடனே பாரதியார் என்ன சொன்னார்? தமக்குச் சம்பளம் கொடுக்க வேண்டும்; கணிசமான தொகை கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்தினார்.

மற்ற விஷயங்களில் கண்டிப்பாயிருந்த ரங்காச்சாரி பாரதியாரின் கண்டிப்பைக் கண்ட உடனே அதற்கு இணங்க மறுத்தார். இந்தப் பூசல் சில நாட்கள் வரை தொடர்ந்து நடைபெற்றது. ஒரு நாள் காலையில் அப்பூசல் முற்றியது. ரங்காச்சாரி கையை ஓங்கிக் கொண்டு பாரதியை அடிக்கப் போனார். அப்போது நாகசாமி குறுக்கிட்டார்; ரங்காச்சாரியைத் தடுத்தார்; பாரதியை அழைத்துக் கொண்டு வெளியேறினார்.

• பாரதிக்கு மனம் பதைத்தது: நடை தடுமாறியது. "இனி அங்குப் போகக் கூடாது" என்றார். "என்ன செய்யலாம்" என்று யோசித்தார்.

அந்தக் காலத்திலே புதுவையிலே மிக்க செல்வாக்குடன் விளங்கினார் ஒருவர். அவர் பெயர் சைகோன் சின்னய்ய நாயுடு என்பது. அவர் புதுவை அரசியலில் ஓரளவு ஈடுபட்டவர்; முதல்தரமான அச்சுக்கூடம் ஒன்றும் வைத்திருந்தார்; அந்த அச்சுக்கூடத்தில் அச்சுப்போட்டு

ஒரு பத்திரிகையும் வெளியிட்டு வந்தார். அந்தப் பத்திரிகை புதுச்சேரியில் உள்ளவர்களிடையே மட்டும் உலவி வந்தது. அந்தப் பத்திரிகையின் பெயர் 'சூர்யோதயம்' என்பது.

"சூர்யோதயம்" உரிமையாளர் சைகோன் சின்னய்ய நாயுடு பாரதியைப் பற்றி அறிந்திருந்தார்; சிற்சில சமயங்களில் பாரதியைப் பார்த்தவரும் ஆவர். ஆனுல் பாரதியோ அவரை நேரில் கண்டவர் அல்லர். பாரதியாருடன் இருந்த நாகசாமி அவரை அறிவார். நாயுடுவும் நாகசாமியை நன்கு அறிந்தவரே. இவ்விருவரும் பலமுறை சந்தித்திருக்கிருர்கள்; பேசியுமிருக்கிருர்கள். எனவே, பாரதியாரை நாயுடுவிடம் அழைத்துச் சென்ருர் நாகசாமி. பாரதி, நாகசாமி ஆகியோர் இருவரையும் கண்ட நாயுடு அவ்விருவரையும் மரியாதையோடு வரவேற்ருர்.

நாயுடுவைத் தனியே அழைத்துச் சென்ருர் நாகசாமி. அன்று காலை "இந்தியா" ஆபீசில் நடந்தவற்றை யெல்லாம் விவரித்தார். பாரதியாரின் உள்ளம் பட்ட பாட்டையும் எடுத்துக் கூறினுர். கேட்டார் நாயுடு; மிக வருந்தினுர். பாரதியாரிடம் வந்தார். "உங்களுக்கு விருப்பம் இருக்குமாயின் சூர்யோதயம் பத்திரிகையை நீங்களே நடத்துங்கள். வேண்டிய ஏற்பாடுகளை நான் செய்து தருகிறேன்" என்ருர். சம்மதம் தெரிவித்தார் பாரதியார். எல்லாருக்கும் சிற்றுண்டி கொண்டுவரச் சொன்னுர் நாயுடு. சிற்றுண்டியும் வந்தது. பாரதி உள்ளம் மகிழ்ந்தார். அவர் தம் முகம் மலர்ந்தது. பத்திரிகை நடத்துவது பற்றி மூவரும் மனம் விட்டுப் பேசினர்; ஒரு முடிவுக்கு வந்தனர். மறு நாள் முதல் வேலை தொடங்கலாம் என்று கூறினர். பாரதியும் நாகசாமியும் நாயுடுவிடம் விடை பெற்றுக்கொண்டு வெளியே வந்தனர்.

நாயுடு என்ன செய்தார்? 'சூர்யோதயம்' பத்திரிகையின் சிறப்பு இதழ் ஒன்று வெளியிட்டார். பாரதியார் பத்திரிகையின் ஆசிரியர் பொறுப்பை ஏற்றுக் கொண்டு விட்டதாக அறிவித்தார். பாரதியும் ஆசிரியர் பொறுப்பு ஏற்ருர். ''சூர்யோதயம்'' வெகு வேகமாக விரிந்து வளர்ந்தது. சில மாதங்களுக்குள் ஐயாயிரம் சந்தாதாரர்கள் சேர்ந்து விட்டார்கள்.

பத்திரிகை நன்ருக ஓடிக் கொண்டிருந்தது. அந்த சமயத்திலே, வங்காளத்திலே பாபு அரவிந்த கோஷ் விடுதலை பெற்றுச் சிறையினின்றும் வெளியே வந்தார். வெளிவந்த அரவிந்தர் உத்தர்பாரா என்ற இடத்திலே ஒரு சொற்பெருக்காற்றிஞர். அந்தச் சொற்பொழிவு மிகச் சிறந்த ஒன்று என்று எல்லாரும் போற்றினர். அந்தச் சொற்பொழிவைத் தமிழிலே வடித்துச் ''சூர்யோதய''த்திலே வெளியிட்டார் பாரதியார். பின்னே அதனைத் துண்டுப் பிரசுரமாக வெளியிடக் கருதிஞர். துண்டுப் பிரசுரம் வெளியிடுவது பற்றிப் பாரதியும் நாயுடுவும் இருவிதக் கருத்துக் கொண்டனர். பாரதியின் கருத்தை நாயுடு ஏற்கவில்லை. நாயுடுவின் கருத்தை பாரதி ஒப்பவில்லை. இருவரும் மனவேறுபாடு கொண்டனர். இக் காரணத்திஞல், பாரதியார் 'சூர்யோதயம்' பத்திரிகையினின்றும் விலகிஞர். இது 1909ம் ஆண்டு நிகழ்ச்சி.

இந்த சமயத்திலேதான் 'இந்தியா' பத்திரிகை பிரிட்டிஷ் இந்திய அரசாங்கத்தால் தடுக்கப்பட்டது. ''இந்தியா'' பத்திரிகையின் சந்தாதாரர் பெரும்பாலோர் பிரிட்டிஷ் இந்தியாவில் இருந்தனர். பத்திரிகை அவர்களுக்குப் போய் சேராவிட்டால் என்ன செய்தல் கூடும்? பத்திரிகை வெளியிடுவது நிறுத்தப்பட்டது.

இந்தியா பத்திரிகையை நிறுத்திய பின் ஸ்ரீநிவாசாச்சாரியார் என்ன செய்தார்? மற்றொரு தினசரிப் பத்திரிகை தொடங்கினார். அப்பத்திரிகையின் பெயர் 'விஜயா' என்பது.

'விஜயா'வுக்கு ஆசிரியராக யாரை நியமிக்கலாம்? யோசித்தார் ஸ்ரீநிவாசாச்சாரியார். இந்த சமயத்திலே பாரதியார் 'சூர்யோதயம்' பத்திரிகையை விட்டு விலகினார் என்ற செய்தி கேட்டார்; பாரதியாரைச் சந்தித்தார்; 'விஜயா'வுக்கு ஆசிரியராகப் பணிபுரியுமாறு பாரதியை வேண்டினார். 'விஜயா' பத்திரிகை தினசரியாதலால் தேச சேவை செய்யும் வாய்ப்பு அதிகம் என்று கருதினார் பாரதியார். எனவே "விஜயா"வின் ஆசிரியர் பொறுப்பு ஏற்றார்.

சில நாட்களுக்குப் பின் என்ன ஆயிற்று? 'சூர்யோதயம்' 'விஜயா' ஆகிய இரு பத்திரிகைகளுக்குமே தடை விதிக்கப்பட்டது. பிரிட்டிஷ் இந்திய எல்லைக்குள் இவை வரலாகா என்று பிரிட்டிஷ் இந்திய அரசாங்கம் தடை விதித்தது. இவ்வளவில் பாரதி தம் பத்திரிகை முயற்சியைக் கைவிட்டார்.

ஆயிரத்துத் தொளாயிரத்து ஒன்பதாம் ஆண்டு. ஓர் 'அவுன்ஸ்' புதிய சீர்த்திருத்தம் வழங்கியது பிரிட்டிஷ் அரசாங்கம். மின்டோ—மார்லி சீர்திருத்தம் என்று இது பெயர் பெற்றது. இது பாரதியாருக்குத் திருப்தி அளிக்கவில்லை. இதை எதிர்த்தார் அவர். ஆனால் மிதவாதத் தலைவரான வி. கிருஷ்ணஸ்வாமி அய்யரோ இந்தச் சீர்திருத்தத்தை வரவேற்றார்.

1909ம் ஆண்டு அக்டோபர் மாதம் சென்னை உயர்நீதி மன்றத்தின் நீதிபதியாக அவர் நியமிக்கப் பெற்றார். அவரும் அப் பதவியை ஏற்றார்.

இது கண்டு சீறினார் பாரதியார். அப்போது அவர் ஆசிரியராக விளங்கிய 'விஜயா' பத்திரிகையிலே ஒரு தலையங்கம் எழுதி வெளியிட்டார்;

''சூரத் காங்கிரஸ் சமயத்தில் திலகரையும், அவர் கூட்டத்தாரையும் கவர்ன்மெண்டார் அதம் செய்து விடுவார்கள் என்று சோதிடம் சொல்லி, அச் சோதிடம் பலனடையக் கண்டு மகிழ்ச்சி பெற்ற வி. கிருஷ்ணஸ்வாமி அய்யருக்கு ஹைகோர்ட் ஜட்ஜ் வேலை கிடைத்திருக்கிறது. ஆனால் அவர் அங்ஙனம் சொல்லியது சோதிடம்தானா அல்லது வேண்டுகோளா என்பது சந்தேகம். திலகரைச் சர்க்கார் அதிகாரிகள் சிறையிலிட்டு விட்டனர். திலகர் கூட்டம் என்று வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர் யாரைச் சொல்கிறாரோ, அவர்கள் ஒருபோதும் முடிவு பெறப்போவ தில்லை. பாரதநாடு முழுமையும் ஒரு விலக்குகள் ஒழிய திலகர் சிறை சென்றவுடன் ஆற்றொணாத் துக்கமடைந்தது. இங்கிலாந்திலே பலர் திலகரைச் சிறையிலிட்டது பெரிய அநீதி என்கிறார்கள். ஐரோப்பாவில் நீதியபிமானம் கொண்ட பத்திரிகைகள் எல்லாம் திலகர் தண்டனை அடைந்தது பற்றி வருத்தம் பாராட்டுகின்றன. உலகத்தில் எந்தப் பிரதேசத்திலும் இவ்விஷயத்தைப் பற்றிக் கேள்விப் பட்ட நிர்பக்ஷபாதமான ஜனங்கள் யாவராயினும் அவர்கள் எல்லாரும் திலகருக்கு விதித்த தண்டனை வெறும் அநீதி என்கிறார்கள். இவர்கள் எல்லாரும் திலகர்கூட்டம் தான். சூரியனை அவித்தாலும் அவிக்கலாம். மேரு மலையை வெட்டி எறிந்தாலும் எறிந்து விடலாம், திலகர் கூட்டத்தை அதம் செய்ய முடியாது.........

''வி. கிருஷ்ணசாமி அய்யரை நேராக விளித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறோம்.

"காங்கிரஸ் சபையில் உமக்குப் பிரியம் அதிகமா யிருந்தது. அதை ஓர் ஆலயம்போல் கருதினீர். அதன் மூலமாகத் தற்கால ஆட்சி முறையைப் பெரிதும் மாற்றி நாட்டுக்கு எண்ணிறந்த நன்மைகள் விளையலாம் என்று நம்பியிருந்தீர்.

"இப்படிப்பட்ட சபையின் ஒற்றுமைக்கு இடையூறு யிருந்தது பற்றி நீர் நெடுங்காலமாக மகா பண்டித ரென்றும், ஞானியென்றும் பாராட்டி வந்த திலகரையும் அவர் கூட்டத்தாரையும் காங்கிரஸ் சபையினின்றும் விலக்கிவிட முயன்றீர். அந்த முயற்சி கைகூடி விட்டதாக வும் சந்தோஷப்பட்டு கொண்டிருக்கிறீர். நல்லது, நீர் அந்தக் காங்கிரஸ் கூட்டத்தில் இருக்கிறீரா? இனி நீர் காங்கிரஸ் சபைக்குப் போகலாமா? அப்போது காங்கிரஸ் ஓர் ஆலயம் போன்றது. என்னவாயினும், எவ்வளவு தேசாபிமானிகளை எதிர்த்தும் நாம் அதைப் பாதுகாக்க வேண்டும் என்ற நிச்சயத்துடன் இருந்தீர். ஐயோ! இரண்டு வருஷங்கூட ஆகவில்லையே! அதற்குள் காங்கிரஸ் சபை கள்ளுக்கடைபோல் நிஷித்தமானது, அதில் காலை எடுத்து வைக்கலாகாது என்று சொல்லும் கூட்டத் தாருடன் சேர்ந்து விட்டீர். இனிக் காங்கிரஸ் சபையில் போய் வெளிச்சம் நல்லது, ஆனால் பிரகாசம் கெட்டது என்று சொல்வதுபோல் சுதேசியம் நல்லது, அல்லது அந்நிய வஸ்து பகிஷ்காரம் கெட்டது என்று சொல்லுவீரா?

"திலகர் கூட்டத்தார் காங்கிரஸ் சபையில் இருக்க லாகாது என்று கூத்தாடினீரே! நீர் இப்போது காங்கிரஸ் சபையில் இருக்கலாமா? காங்கிரஸ் சபையில் உயிரை வைத்ததுபோல நீர் பேசிய கதையெல்லாம் இப்போது எப்படியாயிற்று? சொல்லுகிறேன் கேட்கிறீரா? வஞ்சனை— நடிப்பு— பாவனை— ஏமாற்று— வேஷம்—பொய்.

"ரகஸ்ய சம்பாஷணைகளை வெளியிடுவது சாதாரணமாக தர்மத்துக்கும், ஒழுக்கத்துக்கும் அடுத்ததன்று. ஆனால் அசாதாரண சந்தர்ப்பங்களை உத்தேசித்து அசாதாரண காரியங்களைச் செய்ய நேரிடுகிறது. சுமார் ஒன்றரை வருஷத்துக்கு முன் மயிலாப்பூரில் உமது வீட்டில் ஓர் ஸ்வதந்திர பக்தருடன் நீர் சம்பாஷணை செய்து கொண்டிருந்த காலத்தில் மிக உருக்கத்துடன் 'உம்மைப்போலவே நாங்களும் ஸ்வதந்திரதாகம் கொண்டவர்களாகத்தான் இருக்கிறோம். உமக்கு இந்த நாட்டிலுள்ள பக்தி எங்களுக்குமுண்டு. நமது உபாயங்கள் வேறு, லட்சியம் ஒன்றுதான்' என்றீரே! நினைவிருக்கிறதா?

"அந்த சுதந்திரதாகம்தான் உம்மை இப்போது ஹைகோர்ட் ஜட்ஜ் வேலை ஒப்புக்கொள்ளத் தூண்டியதோ? நாளைக்கு அதே மனிதர் சென்னப் பட்டணத்தில் சுதந்திர போதனை செய்யும் பக்ஷத்தில் போலீசார் அவரைப்பிடித்து உம்முன்னே நிறுத்துவார்களே! நீர் தயையையும் நீதியையும் கலந்து எட்டு வருஷ கடுங்காவல் விதிப்பீரே!

"நம்மிருவரின் லட்சியம் ஒன்றுதான்! சந்தேகமா? சீச்சீ! வி. கிருஷ்ணஸ்வாமி அய்யரே! என்ன வார்த்தை காணும் சொல்லிவிட்டீர்! நம்மிருதரத்தாரின் லட்சியம் ஒன்றுதான்!

"இப்போது அந்த வார்த்தை சொல்லுவீரா! ஐயோ! வி. கிருஷ்ணஸ்வாமி அய்யரே! என்ன ஜன்மம் எடுத்து விட்டீர்!"

(விஜயா — 1909 அக்டோபர் 5)

பாரதியார் எழுதிய இந்தத் தலையங்கம் எத்தகைய உயர்ந்த லட்சிய நோக்குடையதாக இருக்கிறது! அவரது

கண்டனச் சொற்கள் உள்ளத்தைத் தொடுகின்றன. உயர்ந்த மனிதாபிமானம் கொண்டு விளங்குகின்றன.

(பாரதி புதையல் — ரா. அ. பத்மநாபன்)

அந்நியப் பொருள்களை விலக்குதல் என்று திலகர் கட்சியார் கூறினரே! அந்த விலக்கில் ஒன்று அந்நிய ஆட்சியில் பதவி வகித்தல் என்பது.

நம்மை ஆளும் அந்நியன் நம்மில் சிலரைப் பிடித்து உயர்ந்த பதவிகள் அளிப்பது எதன் பொருட்டு? சுதேசிக் கிளர்ச்சி செய்யும் தேசாபிமானிகளை நசுக்கும் பொருட்டு. இரும்பை வெட்ட மற்றோர் இரும்பு உதவுவதுபோல் இந்தியரைக் கொண்டே இந்தியரை நசுக்குகிறது அந்நிய ஆட்சி. அதற்கு இந்தியர் ஒரு கருவியாகக் கூடாது. எனவே, அந்நிய ஆட்சியில் உத்தியோகம் வகிப்பது கூடாது என்பது திலகர் கட்சிக் கோட்பாடு. அதை எவ்வளவு அழகாக பாரதியார் இதில் விளக்கியுள்ளார் என்பது காண்க.

மகாத்மா காந்தி தென் ஆப்பிரிக்காவில் இந்தியர் களின் பொருட்டுப் போராடினர் அல்லவா! அந்தப் போராட்டம் இந்திய அறத்தின் அடிப்படையில் நடை பெறுதல் கண்டார் பாரதி. அப்போராட்டத்தை ஆதரித்தார். பன்முறை தம் "இந்தியா" பத்திரிகையில் எழுதினர்.

1909ம் ஆண்டு பாரிஸ்டர் காந்தி லண்டன் சென்றார்; தென் ஆப்பிரிக்க இந்தியர் சார்பிலே, அவர் தம் தூதுவராக சென்றார். இங்கிலாந்தில் உள்ள பிரிட்டிஷ் அரசாங்க காலனி மந்திரியைச் சந்திக்கச் சென்றார்; தென் ஆப்பிரிக்க இந்தியர் தம் துன்பங்களை எடுத்துச் சொல்வதற் காகச் சென்றார். பயன் ஏதும் விளையவில்லை. மீண்டும்

தென் ஆப்பிரிக்கா திரும்பினார் காந்தி. தென் ஆப்பிரிக்கா சென்றால் அந்த அரசாங்கம் தம்மைச் சிறையில் அடைக்கும் என்பதை அறிந்திருந்தார் காந்தி. சிறைக்குப் பயந்து லண்டனிலேயே தங்கி விட்டாரா? மற்ற அரசியல் தலைவர் களைப்போல வெளிநாடுகளில் இருந்து பிரச்சாரம் செய்ய விரும்பினாரா? இல்லை; இந்திய மக்கள் நடுவில் இருக்கவே விரும்பினார்.

அவரது செயலைப் பாராட்டினார் பாரதியார். 'இந்தியா' பத்திரிகையிலே ஒரு கார்ட்டூன் வெளியிட்டார். அதற்கு ஒருவிளக்கமும் எழுதினார். அந்தக் கார்ட்டூனும், விளக்கமும் 1909 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ந் தேதியிட்ட இந்தியா பத்திரிகையிலே வெளிவந்தன.

கார்ட்டூனுக்குக் கீழே பின் வருமாறு வெளியிடப் பட்டிருந்தது!

காந்தி யென்ற பசு வந்து கொண்டிருக்கிறது; சில புலிகள் அதன்மீது பாய்கின்றன. இதுதான் சித்திரம். சித்திரத்தின் அடியில். ஸ்ரீ காந்தி யென்ற பசுவானது தனது கன்றுக்குட்டியாகிய இ·தர இந்தியர்களின் நன்மையின் பொருட்டு இங்கிலாந்துக்குப் போய்ப் பேசி விட்டு, சிறையிலடைபடுவதற்காக மறுபடியும் திரான்ஸ் வாலுக்கு வந்திருக்கிறது. தென் ஆப்பிரிக்கா உத்தியோகஸ்தர்களாகிய புலிகள் அவருடைய மேன் மையை அறியாமல் சிறையிலடைத்தார்கள்.

படத்துக்கு விளக்கம் கீழே தரப்பட்டுள்ளது:—

முற்காலத்தில் நடந்ததாக ஹிந்துக்களின் புராணங் களில் சொல்லியிருக்கும் விஷயம் அநேகருக்குத் தெரிந்திருக்கலாம். ஒரு காட்டில் புலியின் வாயிலகப்பட்ட பசுவானது தன்னுடைய கன்றுக்குட்டிக்குப் பால் கொடுத்து

காமல் வந்துவிட்டபடியால் புலியைப் பார்த்து, "ஹே பிரபு! இன்று என்னுடைய கடமையைச் செலுத் தாமல் வந்து விட்டேன். என்னுடைய கன்றுக்குப் பால் கொடுக்கவில்லை. ஆதலால் நான் இப்பொழுதே போய்ப் பால் கொடுத்துவிட்டு வந்து உமக்கு இரையாய் விடுகிறேன். உத்தரவளிக்க வேணும்" என்றது.

புலி நெடுநேரம் யோசித்து, அதனுடைய ஸத்தியத்தைப் பரீட்சிக்கும் பொருட்டு, "போய்க் காரிய மான உடனே வந்து விடு" என்று சொல்லி அனுப்பியது. பின்பு பசுவானது கன்றுக்குப் பால் கொடுத்துவிட்டு, அதைத் தன்னுடைய சிநேகிதியான மற்ெருரு பசுவினிடத் தில் ஒப்புவித்து விட்டு, புலியினிடத்தில் வந்து, "என்னு டைய தர்மத்தைச் செய்துவிட்டு வரும்படி உத்தரவளித்த தற்கு உமக்கு வந்தனமளிக்கிறேன், என்னைப் புசியும்" என்றது.

இதைக் கண்ட புலி ஆச்சரியப்பட்டு, "அம்மா, ஸத்திய தேவதையே, உன்னைப் புசித்துவிட்டு நான் எந்த நீச கதிக்குப் போவேன்! நான் இதுவரைக்கும் செய்தது போதும்!" என்று சொல்லிப் பட்டினியிருந்து பிராணனை விட்டது.

இப் பசுவைப் போல் நடந்துகொண்ட நமது ஸ்ரீ காந்தி பிரபுவை தென் ஆப்பிரிக்கப் புலிகள் என்ன செய்கின்றன பார்த்தீர்களா? ஒன்றும் தெரியாத புலிகூட இந்துஸ்தானத்தில் தயையினுடைய பிரவாகத்தைத் தடுக்க முடியவில்லை, ஆனால் தென் ஆப்பிரிக்காவில் மனுஷிய ரூபம் தரித்துப் புலியைப் பார்க்கிலும் கொடுமை யாக (தங்களுக்கு உதவி புரிந்த) இந்தியர்களை நடத்தும் நாகரிக ஆங்கிலேயர்களை இக் கலிகாலத்தில்தான் காணலாம்."

இவ்வாறு எழுதி வெளியிட்டார் பாரதியார்.

1909 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 18 ந் தேதி இந்தியா விலே ஒரு தலையங்கமும் எழுதி வெளியிட்டார் பாரதியார்.

"கடைசியாக ஐயம் காந்தி பக்கம்தான். அதற்கு சமுசயமில்லாவிட்டாலும் மனிதர்கள் நெஞ்சம் ஏழை நெஞ்சாகையால் அவர் இப்போது படும் கஷ்டத்தைக் கேட்க சகிக்கவில்லை."

இவ்வாறு குறிப்பிட்டார் பாரதியார்,

இவ்வளவில் நின்ருரா? இல்லை. தென் ஆப்பிரிக்க இந்தியர் தம் போராட்டத்துக்கு நிதி சேர்த்து உதவு வதற்கும் முற்பட்டார்.

1909-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 25ந் தேதியிட்ட "இந்தியா"விலே பின்வரும் வேண்டுகோளைக் காணலாம்.

"தென் ஆப்பிரிக்காவிலுள்ள இந்தியர்களிலே பெரும் பாலோர். தமிழர்களே. அப்படியிருந்தும் நாம் இவ் விஷயத்தில் அசிரத்தையாக இருப்பது கிரமமன்று. ஆகையால் 'இந்தியா பத்திரிகை நிதி' என்பதாக ஒன்று சேர்த்துச் சென்னப் பட்டணத்தில் உள்ள சபையின் காரிய தரிசிக்கு அனுப்ப உத்தேசித்திருக்கிறது. தமிழர்கள் அனைவரும் உதவி செய்ய வேண்டும்."

இவ்வாறு ஒரு வேண்டுகோள் விடுத்து நிதி திரட்டினர் பாரதியார். முதன் முதலாக "இந்தியா" பத்தி ராதிபர் பெயரால் பத்து ரூபாயும் பாரதி பெயரால் ஐந்து ரூபாயும் வரவு வைத்து மேற்படி நிதியை சேகரிக்கத் தொடங்கினர்.

பாரதியார் புதுவையில் வாழ்ந்த போது இளைஞர் பலர் இவரைச் சுற்றி இருந்தனர். அவருள் ஒருவர் வ. ரா.

என்பவர். திருப்பழனம் வ. ராமஸ்வாமி ஐயங்கார் என்பது இவருடைய முழுப்பெயர். திருப்பழனம் என்பது தஞ்சை மாவட்டத்திலே திருவையாறுக்கு அருகே உள்ளதொரு சிற்றூர்.

அந்தக் காலத்திலே திருச்சியிலே முக்கிய அரசியல் தலைவராக விளங்கியவர் கொடியாலம் ரங்கசாமி அய்யங்கார் என்பவர். அவர்தான் இந்த வ. ராவைப் புதுச்சேரிக்கு அனுப்பினார். எதன் பொருட்டு அனுப்பினார்? அரவிந்தர் புதுச்சேரிக்கு வந்து விட்டாரா என்பதை அறிந்து வரும் பொருட்டு அனுப்பினார்.

புதுச்சேரி சேர்ந்தார் வ. ரா. அரவிந்தர், பாரதி ஆகிய இருவரையுமே கண்டார்; பாரதியின் பால் பெரிதும் ஈடுபட்டார்.

புதுவையில் அடைக்கலம் புகுந்த தேசபக்தர்கள் பணத்திற்கு என்ன செய்தார்கள்? பணம் எங்கிருந்து வந்தது? பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்து வந்தது. பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்து புதுச்சேரிக்குப் பணம் தருவித்துத் தேச பக்தர்களுக்கு வழங்கிய 'மாயா ஜாலக்காரர்' வ. ரா. அவர் எப்படிப் பணம் வரச் செய்தார்? வியாபாரம் செய்தார். என்ன வியாபாரம்? நெய் வியாபாரம்.

ஆறுமுகம் செட்டியார் என்பவர் புதுவையைச் சேர்ந்தவர். அவர் பெயருக்கு நெய் டின் வரும். நெய் டின்னிலே நெய் மட்டுமா வரும்? பணமும் வரும். டின்னிலே ரூபாயைப் போட்டு விட்டு மேலே நெய்யை நிரப்பி அனுப்புவார்களாம் சென்னையில் உள்ள சில அன்பர்கள். நெய் ஆறுமுகத்துக்கு; ரூபாய் வ. ராவுக்கு. இப்படி ரூபாய் வரச் செய்து தேச பக்தர்களுக்குக் கொடுப்பாராம் வ. ரா. புத்தகத் தபாலில் புத்தகங்கள் வரும். புத்தகத்தின் அட்டையைக் கிழித்தால் ரூபாய் நோட்டு

இருக்கும். இப்படியாகப் பணம் வரச் செய்து வந்தார் வ. ரா.

ஆறுமுகம் செட்டியார் என்பவர் செல்வாக்கு மிக்க வியாபாரி; சாது; அரசியல் அறியாதவர். இவர் வீட்டில் சீமை வெள்ளை எலிகளை வளர்த்து வந்தார். அதனால் 'எலிக்குஞ்சு செட்டியார்' என்று இவரை அழைத்தார் பாரதியார்.

(சித்திர பாரதி—ரா. அ. பத்மநாபன்)

எட்டயபுரம் ஜமீந்தார் பாரதியின் தாய் வழிப் பாட்டனாரைப் புதுச்சேரிக்கு அனுப்பினார். ஏன் அனுப்பினார்? பாரதியை எட்டயபுரத்துக்கு அழைத்து வரும்படி கூறி அனுப்பினார்.

புதுச்சேரியில் வாழ்ந்த பாரதி எட்டயபுரம் வந்து விட்டால் பிறகு பிரிட்டிஷ் இந்திய அரசாங்கம் அவரைக் கைது செய்து சிறையில் தள்ளி விடலாம் அல்லவா?

இது ஒரு சதித்திட்டம். வெள்ளை அரசாங்கம் இந்த சதியை உருவாக்கியது. அதற்கு எட்டயபுரம் ஜமீந்தாரை ஒரு கருவியாக்கியது. ஜமீந்தாரும் இதற்கு இணங்கினார். எனவே பாரதியின் பாட்டனாரையும் பாட்டியாரையும் புதுவைக்கு அனுப்பினார்; பாரதியை அழைத்து வரும்படி தூண்டினார்.

பாரதியின் பாட்டனார் ராமஸ்வாமி ஐயர், பாட்டியார் பாரதியின் மாமா சாம்பசிவ ஐயர் ஆகிய மூவரும் புதுவை சென்றனர்.

மூவரையும் கண்டார் பாரதி; மகிழ்ந்தார்; அன்புடன் உபசரித்தார். ஆனால் அவர்கள் வந்த நோக்கம் என்ன? மெதுவாக அந்த நோக்கத்தை வெளியிட்டார் பாட்டனார்.

"எட்டயபுரம் ஜமீந்தார் அழைத்து வரச் சொன்னார்" என்றார்.

எட்டயபுரம் ஜமீந்தாரின் சதியை அந்தப் பாட்டனாரும் அறியார். தமது பேரனை ஆதரிக்கவே ஜமீந்தார் அழைக்கிறார் என்று எண்ணினார் அந்த அப்பாவி மனிதர்.

கேட்டார் பாரதி. அவரது முகம் சிவந்தது. சினம் பொங்கியது. மீசையை உருவினார்.

"பாஞ்சாலங் குறிச்சியை முன்பு காட்டிக் கொடுத்துப் பரிசு பெற்றது போல என்னையும் வெள்ளைக்காரனுக்குக் காட்டிக் கொடுத்துப் பரிசு பெற நினைக்கிறார் ஜமீந்தார். ஜாக்கிரதையாக இருக்கச் சொல்லுங்கள்" என்று கர்ஜித்தார் பாரதியார்.

பாரதியின் பாட்டனாரும், பாட்டியாரும் ஒரு மாதம் இருந்தனர். பிறகே அவரை ஊருக்கு அனுப்பினார் பாரதியார்.

(சித்திர பாரதி—ரா. அ. பத்மநாபன்.)

புதுச்சேரியில் பாரதிக்கு நண்பரான செட்டியார் மூவர். ஒருவர் வெல்லச்சு செட்டியார்; இன்னொருவர் விளக்கெண்ணெய் செட்டியார்; மற்றொருவர் எலிக்குஞ்சு செட்டியார்.

வெல்லச்சு செட்டியாரின் உண்மைப் பெயர் கிருஷ்ணசாமி செட்டி என்பது. இவர் ஓர் இளைஞர்; இருபது வயதினர்; நெசவுத் தொழில் செய்பவர். குள்ளமானவர்; கெட்டியான இரட்டை நாடி உடல் பெற்றவர்; சோர்வே அறியாதவர். பாரதியார் இவருக்கு வைத்த செல்லப் பெயர் வெல்லச்சு செட்டியார் என்பது.

பாரதியார் தாம் பாடிய பாடல்களை இவரிடம் படித்துக் காட்டுவார். மாலையிலே பாரதி வீட்டில் நண்பர்கள் கூடியிருப்பார்கள். வெல்லச்சு செட்டியாரும் இருப்பார். வந்துள்ள நண்பர்களை உபசரிக்கப் பணம் வேண்டுமே! பாரதியாரிடம் பணம் இராது. என் செய்வார்? காட்டிலே திருடனுக்குப் பயந்து கட்டைபோல் கிடந்த செட்டியின் கதையைச் சொல்வார். மடியிலே பணத்தை வைத்துக் கொண்டு காட்டிலே படுத்திருந்தார் ஒரு செட்டியார். திருடர் வந்தனர். செட்டியார் என்ன செய்தார்? மரக்கட்டை போல் கிடந்தார். 'மரக்கட்டை' என்று கூறிப் போனான் திருடன். தம்மை மரக்கட்டை என்று கூறியதும் செட்டியாருக்குக் கோபம் வந்துவிட்டது.

"உங்கள் வீட்டு மரக்கட்டை இப்படித்தான் மடியில் பத்து ரூபாயுடன் படுத்துக் கிடக்குமோ" என்றார் செட்டியார்.

பிறகு கேட்க வேண்டுமா? திருடர் செட்டியார் மீது பாய்ந்தனர். ரூபாய் பறி போயிற்று.

இப்படி பாரதியார் சொன்ன உடனே வெல்லச்சு செட்டியார் என்ன செய்வார்? தமது மடியிலிருந்து பத்து ரூபாயை எடுத்து பாரதியிடம் கொடுத்து விடுவார்.

"கதையில் வந்தவன் திருடன்; நானோ பகல் கொள்ளைக்காரன்" என்று கூறிச் சிரிப்பார் பாரதியார்.

புதுவை முத்தியாலுப் பேட்டை அருகே ஓர் அழகான தோப்பு இருந்தது. அது வெல்லச்சு செட்டியாருக்குச் சொந்தமானது. அந்தத் தோப்பிலேதான் நீண்ட நேரம் இருப்பார் பாரதியார். அவர் தம் குயில் பாட்டுப் பிறந்த தோப்பும் அதுவே.

புதுவை ஈசுவரன் தர்மராஜா கோவில் தெருவில் ஒரு வீடு. மிக வசதியான வீடு. அந்த வீட்டில்தான் பாரதியார் குடியிருந்தார். அந்த வீட்டின் சொந்தக்காரர் சபாபதி செட்டியார் என்பவர்; பாரதியாரிடம் பற்றுடைய வர்; மரியாதையுடையவர்; பாரதியின் கவிதையிலே பெரிதும் ஈடுபட்டவர். 'விளக்கெண்ணெய்' செட்டியார் என்று அவருக்குப் பெயர் வைத்திருந்தார் பாரதியார். ஏன் தெரியுமா? பாரதியாரிடம் கண்டிப்பாக வாடகை கேட்கமாட்டார். 'வழ' வழ; என்று போய்விடுவார்; நழுவி விடுவார் எனலாம். அதனாலே அவருக்கு 'விளக் கெண்ணெய் செட்டியார்' என்று பெயர் வைத்திருந்தார் பாரதியார்.

ஒருநாள். பாரதியார் மாடியில் உட்கார்ந்து பாடிக் கொண்டிருந்தார். அப்போது பாரதியாரைக் காண வந்தார் செட்டியார். பாரதியின் மனைவி மாடிக்குச் சென்றார்.

"செட்டியார் வருகிறார்" என்றார்.

"யார்? விளக்கெண்ணெய்தானே" என்று கேட்டார் பாரதியார்.

"ஆம்" என்ற பதில் வந்தது.

சில நிமிஷங்கள் பேசாதிருந்தார் பாரதியார். பிறகு சொன்னார்:

"செட்டியாருக்குப் பணம் கொடுக்க வேண்டும். நாலுமாதமாக வாடகை கொடுக்கவில்லை. மிகவும் மரியாதையுள்ளவர் செட்டியார்; ஆகவே, நெருக்கவில்லை. ஆனாலும் நாம் சீக்கிரம் கொடுத்துவிட வேண்டும். பணம் வரவில்லையே! அவர் ரொம்பப் பொறுமையுடையவர். பொறுமை எல்லாருக்கும் கிடைக்குமா? தெய்வத்தினும்

மேம்பட்டவர் செட்டியார்" என்று சொல்லிவிட்டுப் பாடினார்.

சபாபதிக்கு வேறு தெய்வம்
சமானமாகுமா? —புதுவை
சபாபதிக்கு வேறு தெய்வம்
சமான மாகுமா? —புதுவை

அபாரமான அருளுடைமையினால்
அடக்கிச் சினந்தன்னை
அன்பினை மேற் கொண்டான் —புதுவை
சபாபதிக்கு வேறு தெய்வம் சமானமாகுமா?

பாட்டைக் கேட்டுக்கொண்டே மாடிக்கு வந்தார் செட்டியார்.

"பாரதியாரே! நான் வாடகை கேட்க வரவில்லை. தாங்கள் புகழும் அளவு பொறுமை எனக்கில்லை. தங்கள் அருள் வாக்கினால் புகழப்பட்டதால் இனிமேல் பொறுமை வரட்டும்" என்று கூறி பாரதியை வணங்கினார்.

(பாரதியும் கவிதையும்—தங்கம்மாள் பாரதி)

ஆயிரத்துத் தொளாயிரத்துப் பதினைந்தாம் ஆண்டு ஜூலை மாதம் அவர் எழுதிய நாட் குறிப்பு ஒன்று நமக்குக் கண்ணீர் வரச் செய்கிறது. பாரதியார் புதுவையிலே எவ்வாறு வறுமையுடன் போராடினார் என்பதற்கு இதுவே சான்று.

"காலை கண்விழிக்கும் போதே பணம் என்ற ஞாபகம். வியாதி, பயம், சோம்பர் இவை வந்து இன்று காலைப் பொழுதையும் வீணாக்கி விட்டன. செ— வழக்கம் போல வந்தான். பரமேச்வரி! மகாசக்தி! உன்னிடத்தில் அமரத் தன்மை கேட்கிறேன். என்னை மனக்கவலையிலிருந்து விடுவிக்க வேண்டும். முதலாவது—எனக்கு என்மீது வெற்றிவரவேண்டும்,

"குழந்தைக்கு ஜ்வரம் வந்தது. நினது திருவருளால் நின்று போயிற்று. இரண்டு மாத காலம் இரவும் பகலு மாக நானும் செல்லம்மாளும் புழுத் துடிப்பது போலத் துடித்தோம். ஊண் நேரே செல்லவில்லை. இருவருக்கும் எப்போதும் சஞ்சலம். பயம்! பயம்! பயம்! சக்தி உன்னை நம்பித்தான் இருக்கிறோம். நீ கடைசியாகக் காப்பாற்றி னாய். உன்னை வாழ்த்துகிறேன்.

"கடன்காரர் தொல்லையும் அத்துடன் வந்து கலந்தது. வைத்தியனுக்குக் கொடுக்கப் பணமில்லை. குழப்பம்! குழப்பம்! தீராத குழப்பம்! எத்தனை நாட்கள்! எத்தனை மாதங்கள்! எத்தனை வருஷங்கள்!

"வீட்டுக்கார செட்டியாருக்கு எத்தனைநாள் பொய் வாயிதா! பொய் வாயிதா! தினம் இந்தக் கொடுமைதானா? சீச்சீ!"

ஆயிரத்துத் தொளாயிரத்து ஒன்பதாம் ஆண்டு மே மாதம் ஒன்பதாம் தேதி அரவிந்தர் விடுதலை பெற்றார்; ஆயிரத்துத் தொளாயிரத்து பத்தாம் ஆண்டு ஏப்ரல் மாதம் புதுவை சேர்ந்தார். அவரது வருகை பாரதிக்கு அறிவிக்கப்பட்டது.

புதுவையில் அரவிந்தர் தங்குவதற்கு ஒரு வீடு வேண்டுமே! எவருடைய வீட்டிலே அவருக்கு இடம் கிடைக்கும்? யோசித்தார் பாரதி. கலவை சங்கரன் செட்டியாரின் இல்லமே ஏற்ற இடம் என்று முடிவு செய்தார். கலவை சங்கரன் செட்டியாரைக் கலந்தார். முடிவு என்ன? கலவை சங்கரன் செட்டியார் இல்லத்தில் அரவிந்தர் தங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப் பட்டன.

அரவிந்தரை வரவேற்றார் பாரதியார். கலவை இல்லத்துக்கு அழைத்து வந்தார்.

ஆறு மாதங்கள் சென்றன. வ. வே. சு. அய்யரும் புதுவை சேர்ந்தார்.

பாரதி, அய்யர் ஆகியோர் இருவரும் நாள்தோறும் அரவிந்தர் இருக்குமிடம் செல்வர்: அங்கே வேதம் பயில்வர்; உபநிஷதம் படிப்பர். இந்திய தத்துவ நூல்களை எல்லாம் ஆராய்வர். இவ்விதம் நாட்கள் சென்றன.

அரவிந்தரின் வருகையும் அய்யரின் நட்பும் பாரதியின் மனப்போக்கிலே பெருத்த மாறுதலை நிகழ்த்தின எனலாம்.

சுதேசிக் கிளர்ச்சிக்கு வேகம் தந்த அரவிந்தர் புதுவை அடைந்த பின் ஆன்மிக ஞான விசாரணையில் ஈடுபடலானார். பாரதியின் உள்ளம் அதில் ஒன்றியது. அதன் விளைவே புதுவையில் மலர்ந்த பாரதி பாடல்கள்.

ஆயிரத்துத் தொளாயிரத்து எட்டாம் ஆண்டு சிறை புகுந்த வ. உ. சி. 1912 ம் ஆண்டில் விடுதலை பெற்று வெளியே வந்தார்; புதுச்சேரி சென்றார்; பாரதியைக் கண்டார்; அவருடன் சில நாள் இருந்தார்; பின் சென்னை திரும்பினார்.

ஆயிரத்துத் தொளாயிரத்துப் பதினாலாம் ஆண்டு, முதலாவது உலகப் போர் தொடங்கியது.

ஆயிரத்துத் தொளாயிரத்து எட்டாம் ஆண்டு மாண்டலே சிறையில் அடைக்கப்பட்ட திலகர் ஆயிரத்துத் தொளாயிரத்துப் பதினாலாம் ஆண்டில் விடுவிக்கப் பெற்றார்.

வெளிவந்த திலகர் என்ன கண்டார்? தீவிர இயக்கம் ஓய்ந்து போனது கண்டார். நாட்டிலே எழுச்சி வற்றி வரண்டு போனது கண்டார்.

இந்நிலையில் அன்னி பெசன்ட் அம்மையார் இந்திய அரசியல் வானிலே தோன்றி வளர்தல் கண்டார். அவரது 'ஹோம்ரூல்' கொள்கை திலகரைக் கவர்ந்தது.

1916ஆம்ஆண்டிலே புனு நகரத்திலே 'ஹோம்ரூல்லீக்' என்ற பெயர் கொண்ட சங்கம் ஒன்றைத் தொடங்கினுர் திலகர்.

சில மாதங்கள் சென்றன. சென்னையிலும் 'ஹோம்ரூல்' இயக்கத்தைத் தொடங்கினுர் அன்னிபெசன்ட்.

ஹோம்ரூல் கிளர்ச்சி நாடுமுழுவதும் நடைபெற்றது.

படித்த வகுப்பினர் பலரும் இக் கிளர்ச்சியால் கவரப் பெற்றனர்.

ஆங்கிலப் பத்திரிகைகள் இரண்டு. ஒன்று. 'காமன்வீல்' மற்முென்று 'நியூ இந்தியா'

இந்த இரண்டு பத்திரிகைகள் வாயிலாகப் பெருங் கிளர்ச்சி செய்தார் அன்னி பெசன்ட். அரசாங்கம் அவரைச் சும்மா விடுமா? விடாது அன்ருே? அவரைக் கைது செய்தது. உதக மண்டலத்திலே 'வீடு காவலில்' வைத்தது.

இதன் பயனுக அன்னி பெசண்டின் அரசியல் செல் வாக்கு ஓங்கியது. 1917 ஆம் ஆண்டு நடைபெற்ற காங்கிரஸ் மகாநாட்டுக்கு இவர் தலைவராகத் தேர்ந்து எடுக்கப் பெற்ருர்.

பிரிட்டிஷ் இந்திய அரசியல் நிலையக் கூர்ந்து கவனித்து வந்தார் பாரதி. இந்திய அரசியலிலே அன்னி பெசன்ட் செல்வாக்குப் பெறுவதை அவர் விரும்பினுர் அல்லர்.

அன்னி பெசண்டைக் 'கிண்டல்' செய்து ஒரு சிறு துண்டுப் பிரசுரம் வெளியிட்டார். அது ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டது. 'பொன்வால் நரி' என்பது அத் துண் டுப் பிரசுரத்தின் பெயர்.

சுமார் பத்து ஆண்டுகள் புதுவையில் வாழ்ந்தார் பாரதியார். இந்தப் பத்து ஆண்டுகளில் பலர் அவருக்கு நண்பர் ஆயினர். வறுமை வாழ்வுதான் ஆயினும் அவர் தமது வறுமை காரணமாக எவருக்கும் பணிந்தார் அல்லர்; எவரிடமும் யாசித்தார் அல்லர். அவர் தம் பெருமையை அறிந்தோர் சிலர் தாமாகவே வலிய உத வினர்.

புதுவை வாழ்வின் பின் பகுதிக்காலத்தில் 'சுதேசமித் திரன்' உதவி வழங்கியது.

'சுதேசமித்திரன்' நிர்வாகம் அரங்கசாமி அய்யங்கார் கைக்கு மாறியது. 'அரசியல் கட்டுரைகள் எழுத வேண்டாம். வேறு விஷயங்கள் எழுதவும்' என்று பாரதி யைக் கேட்டுக் கொண்டார் அய்யங்கார். மாதம் தோறும் முப்பது ரூபாய் அனுப்பி வந்தார். அந்த ரூபாய் பாரதியின் குடும்ப வாழ்வுக்குப் பேருதவியாக இருந்தது.

# இறுதி நாட்கள்

ஆயிரத்துத் தொளாயிரத்துப் பதினெட்டாம் ஆண்டு முதலாவது உலகப்போர் முடிந்தது. அமைதி ஏற்பட்டது. 1919-ம் ஆண்டு பிரிட்டிஷ் அரசாங்கம் மாண்டெகு—செம்ஸ் போர்டு சீர்திருத்தம் வழங்கியது. இது இரட்டையாட்சி என்று அழைக்கப்பட்டது. இதன்மூலம் இந்திய நிர்வாகத்திலே இந்தியர்களுக்கு ஓரளவு பங்கு கிடைத்தது. இந்த சமயத்திலே பாரதியார் புதுவையிலிருக்க விரும்பினர் அல்லர்; பிரிட்டிஷ் இந்தியாவுக்கு வந்துவிடவேண்டும் என்று துடித்தார்; புதுவையினின்றும் புறப்பட்டார்; கடலூர் அருகே வந்தபோது, கைது செய்யப்பட்டார். இருபது நாட்கள் சிறைவாசம் செய்தார். நிபந்தனையுடன் விடுவிக்கப்பட்டார். என்ன நிபந்தனை? அரசியலில் கலந்து கொள்ளல் கூடாது. குறிப்பிட்டதோர் ஊரில்தான் வசிக்கவேண்டும். இந்த நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டார் பாரதியார்; விடுவிக்கப் பெற்ருர்; விடுதலை பெற்ற உடனே பாரதியார் கடயம் சென்ருர்; அங்கேயே இருந்தார்.

பாரதியின் விடுதலைக்குக் காரணராயிருந்தவர் சுதேசமித்திரன் அரங்கசாமி அய்யங்கார்.

அவருக்கு நன்றி தெரிவித்துக் கடிதம் எழுதினர் பாரதியார்.

பாரதியார் கடையத்தில் இருந்தபோதும் சுதேச மித்திரனுக்குக் கட்டுரை எழுதிவந்தார். மித்திரனும் பாரதிக்கு மாதம் முப்பது ரூபாய் அனுப்பிவந்தான்.

கடையத்திலிருந்து மேற்கு நோக்கி ஐந்து மைல் சென்றால், அங்கே ஒரு சாஸ்தா கோவிலைக் காணலாம். அந்த சாஸ்தாவுக்கு பூசை செய்வார்கள் கடையம் வாழ் மக்கள். பூசை, ஆண்டுக்கு ஒரு முறைதான் நிகழும்.

பாரதியார் கடையத்தில் இருந்தபோது அந்த பூசையும் நடந்தது. பாரதியார் தமது நண்பராகிய நாராயண பிள்ளையுடன் பூசை காணச் சென்றார்.

பூசை முடிந்தபின் எல்லாரும் அங்கேயே சாப்பிடுவார்கள். இது வழக்கம்.

அந்த வழக்கப்படியே அப்போதும் நடந்தது. முதலில் பிராமணர் சாப்பிட்டனர். பின்னர் சைவப் பிள்ளைமார் சாப்பிட்டனர். பாரதியார் என்ன செய்தார்? பிராமணருடன் சேர்ந்து சாப்பிட்டாரா? இல்லை. தமது நண்பராகிய நாராயணப் பிள்ளையுடன் சேர்ந்து உண்டார்.

கடையத்து பிராமணர்கள் இஃது அறிந்தார்கள்; கோபம் கொண்டார்கள்; பாரதியாரை ஜாதியிலிருந்து நீக்கிவைத்தார்கள். அவ்வளவில் நின்றார்களா? இல்லை; இல்லை. மேலும் ஒரு படி சென்றார்கள். 'பாரதியாருக்குச் சாப்பாடு போடக் கூடாது' என்று கட்டுப்பாடும் செய்தார்கள்.

மூன்றுநாள். சோறின்றிப் பட்டினி கிடந்தார் பாரதியார். அவர்தம் நிலை கண்டு இரக்கம் கொண்டான் குடியானவன் ஒருவன்; சோறு சமைத்துக் கொண்டுவந்து பாரதியாருக்குக் கொடுத்தான்.

எப்படியிருக்கிறது பாருங்கள்! புதுச்சேரியிலே தான் கையில் காசில்லாமல் கஷ்டப்பட்டார் பாரதியார்; சில நாள் பட்டினியும் இருந்தார்; போதாது என்று போலீசாரின் தொல்லைகளுக்கும் ஆளானார்.

ஆனால் இங்கே என்ன?

உறவினர்! உறவினர் ஐயா! உறவினர். "தனியொருவனுக் குணவிலை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்" என்று பாடிய கவிக்கு உணவு கொடுக்கக்கூடாது என்று கட்டுப்பாடு செய்தார்கள் இந்த உறவினர்கள்!

"உடன் பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டா
உடன் பிறந்தே கொல்லும் வியாதி"

கடையத்தில் சில மாதங்கள் இருந்தார் பாரதியார்; அப்போது பற்பல முயற்சிகள் செய்தார். அம் முயற்சி எதுவும் பயன் தரவில்லை. அவ்விதம் பயன் தராது போன முயற்சிகளில் ஒன்றுதான் எட்டயபுரம் ஜமீந்தாரைப் பார்க்க முயன்றது.

ஆயிரத்துத் தொளாயிரத்துப் பத்தொன்பதாம் ஆண்டு மே மாதம் இரண்டாந் தேதி எட்டயபுரம் ஜமீந்தாருக்கு 'ஓலைத் தூக்கு' ஒன்று பாடி அனுப்பினார் பாரதியார்.

வெங்கடேசு ரெட்டப்ப பூபதி எனும் பெயர் கொண்ட அந்த ஜமீந்தார் பாரதியை நன்கு அறிந்தவர். பாரதியார் எட்டய புரத்தில் வாழ்ந்தபோது அவருடைய கவிகளைக் கேட்டு இன்புற்றுப் பாராட்டியவர்; அப்போது அவர் ஜமீந்தார் ஆகவில்லை: பின்னே ஜமீன் உரிமை ஏற்றார்.

அத்தகைய ஒருவரிடமிருந்து உதவி கிடைக்காதா என்று கருதினார் பாரதியார். எனவே 'ஓலைத்தூக்கு' பாடி அனுப்பினார்.

ஜமீந்தார் 'என்ன செய்தார்? பாரதியைப் பார்த்தாரா? பரிசு வழங்கினாரா? இல்லை; இல்லை? பார்க்கவுமில்லை; பரிசு வழங்கவுமில்லை. பதில்கூட அனுப்பவில்லை.

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் 'நல்ல பிள்ளைகள்' எப்படி பாரதிக்கு ஆதரவு நல்குவார்கள்?

பாரதியார் மனம் மிக நொந்தார். "இனி மனிதனைப் புகழ்ந்து பாடுவதில்லை" என்று உறுதி கொண்டார்.

எட்டயபுரம் ஜமீந்தாருக்கு பாரதி எழுதிய ஓலைத் தூக்கு அவர் மனம் ஒப்பிய ஒன்று என்று சொல்ல முடியாது.

பாரதியின் இளமை வாழ்வு நமக்கு என்ன அறிவிக்கிறது? பாரதியார் ஜமீந்தாரைத் துதி பாடி வாழ்ந்தவர் அல்லர் என்று தெரிவிக்கிறது.

சின்னச் சங்கரன் கதையும் அவ்வாறே அறிவிக்கிறது. அத்தகைய ஒருவர் ஜமீந்தாரின் புகழ் பாடி ஓர் ஓலைத் தூக்கு எழுதினார் என்றால் அது வறுமையின் கொடுமையே!

அவர் பெருமையை அறியாது அவருடன் நெருங்கி வாழ்ந்தவரின் வற்புறுத்தலே அவ்வாறு எழுதத் தூண்டியது எனலாம்.

சேற்றூர் ஜமீந்தாரைப் பார்க்கலாம் என்று கருதினார் பாரதியார். சேற்றூருக்குப் போனார். ஒரு நாள் முழுவதும் காத்திருந்தார். ஜமீந்தாரைக் காணல் இயலவில்லை.

ஜமீன் உத்தியோகஸ்தர்கள் என்ன சொன்னார்கள்? "ஜமீந்தார் வரவில்லை; இன்னும் எழுந்திருக்கவில்லை." என்றே சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

"சரி எலிமலை ஜமீந்தாரைப் பார்க்கலாம்" என்று எண்ணி அங்கு சென்றார் பாரதியார்.

"ஜமீந்தார் இருக்கிறாரா," என்று கேட்டார். எவரும் பதில் கூறவில்லை. பலமுறை கேட்டார். பதிலே இல்லை. பாரதிக்குக் கோபம் வந்துவிட்டது. வெறுப்பும் கூட.

பாரதிக்குப் பசி. சாப்பிட எண்ணி அங்கிருந்த சத்திரம் ஒன்றுக்குப் போனார். அங்கே ஒருவர். பாரதியை அறிந்தவர் அவர். ஒரு பாகவதரும் ஆவார்.

பாரதியைக் கண்ட உடனே பாரதிக்குப் பிடிக்காத சில சொற்களைக் கூறினார். பாரதியாருக்குக் கோபம் வந்து விட்டது.

சாப்பிடாமல் புறப்பட்டார். நேராக ராஜபாளையம் சென்றார். ராஜபாளையம் ராஜுக்களின் ஊர். ஊருக்கு வெளியே ஒரு கொட்டகை. ஊருக்குப் புதியவர் எவராவது வந்தால் அந்தக் கொட்டகையில்தான் இருப்பர். அந்தக் கொட்டகையில் உட்கார்ந்து இருந்தார் பாரதியார்.

தர்மராஜா என்பவர் அந்தக் காலத்திலே பிரபலமாக விளங்கியவர். தர்மகுணம் படைத்தவர். அவர் அவ்வழியே சென்றார். பாரதியார், கொட்டகையில் இருக்கக் கண்டார்.

"யார் அவர்? என்ன வேண்டும்? கேட்டுவா!" என்று ஓர் ஆளை அனுப்பினார்.

அந்த ஆள் வந்தார்; பாரதியைக் கண்டார்; கேட்டார்.

"கவிராஜ சிங்கம் சுப்பிரமணிய பாரதி நான். பசிக்கிறது. சாப்பாடு வேண்டும்" என்று கூறினார் பாரதியார்.

வந்தவர் திரும்பிப் போனார்; தர்ம ராஜாவிடம் விஷயத்தைக் கூறினார்.

தர்மராஜா என்ன செய்தார்? வீட்டுக்குச் சென்றார். புது வேஷ்டி ஒன்றை எடுத்தார். அந்த ஆளிடம் கொடுத் தார். பத்து ரூபாய் பணமும் கொடுத்தார்.

"அவருக்குச் சாப்பாடு கொண்டுபோய்க் கொடு. இந்த வேஷ்டியைக் கொடு. இந்த ரூபாயையும் கொடு" என்றார்.

தர்மராஜா கூறியபடியே கொண்டுபோய்க் கொடுத் தார் அவர்.

கண்டார் பாரதியார்; மகிழ்ந்தார். ராஜாவுக்கு நன்றி கூறினார்; ராஜாவைப் பாராட்டினார். புது வேஷ்டியை உடுத்துக் கொண்டார். பிறகு பசியாறினார். பணத்தையும் வாங்கிக் கொண்டார்.

அருகே சிறுவன் ஒருவன் நின்று கொண்டிருந்தான். அவனிடம் அரை அணாவைக் கொடுத்தார்; 'இரண்டு கார்டுகள் வாங்கிவா' என்றார். சிறுவன் ஓடினான். இரண்டு கார்டுகள் வாங்கிவந்தான். அப்போது, தபால் கார்டு ஒன்றன் விலை காலணாதான். அந்த கார்டிலே ஒரு பாடலை எழுதினார் பாரதியார். ஒரு கார்டில் சேற்றூர் ஜமீந்தார் விலாசத்தை எழுதினார். இன்னுமொரு கார்டிலே எலிமலை ஜமீந்தார் விலாசத்தை எழுதினார். இரண்டு கார்டுகளையும் தபாலில் சேர்க்கும்படி அந்தச் சிறுவனிடம் கொடுத்தார்.

சிறுவன் என்ன செய்தான்? பாடலை ஒரு நோட்டில் எழுதிக் கொண்டான். கார்டுகளைத் தபாலில் சேர்த்தான்.

பாரதி பாடிய பாடல் இதுதான்.

இல்லையென்னும் சொல்லையன்றி ஏதுமறியான் சேற்றூரான்
இல்லையென்றும் சொல்லான் எலிமலையான்—எல்லையிலா
மோகவலையில் மூழ்கி முத்திநெறி பேசுகிறான்
பாகவத னென்னும் பதர்.

ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பத்து ஏழாம் ஆண்டிலே எட்டயபுரம் குருகுகதாசபிள்ளை அவர்களுடன் நான் பேசியபோது அவர் இந்த நிகழ்ச்சியைக் கூறினார்; இந்தப் பாடலையும் கூறினார். ஆனால், இதை நான் அப்போது வெளியிட்ட புத்தகத்தில் சேர்க்கவில்லை.

பதினைந்து ஆண்டுகள் சென்றன. ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்து ஒன்றும் ஆண்டின் இறுதியிலே, நான் ராஜபாளையம் சென்றேன். அங்கே சில நாட்கள் தங்கினேன்.

அப்போது அய்யங்கார் ஒருவரைச் சந்தித்தேன். அவருக்கு அப்போது வயது ஐம்பது இருக்கும். ராகவ அய்யங்கார் என்பது அவர் பெயர். ராஜபாளையத்துக்கு அருகே ஒரு கிராமத்தில் வாழ்ந்தார் அவர். ஒருவர் மட்டும் சவாரி செய்யக்கூடிய சிறிய ஒற்றை மாட்டு வண்டியில் வந்தார் அவர். முழங்காலுக்கு மேல் துணி கட்டியிருந்தார்.

"இவர் பாரதியாரைப் பார்த்திருக்கிறார்" என்று என்னிடம் சொன்னார்கள் எனது நண்பர்கள்.

"அப்படியா!" என்றேன்.

"பாரதியாரை உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டேன் நான்.

அவர் உடனே இந்தப் பாடலைப் பாடினார். பாரதியார் ராஜபாளையத்துக்கு வந்து கொட்டகையில் தங்கியதைக்

கூறினார். தர்மராஜா உணவு, துணி, பணம் முதலியன அனுப்பினார் என்றும் கூறினார்.

"இந்தப் பாட்டு உங்களுக்கு எப்படித் தெரிந்தது?" என்று கேட்டேன்.

"அரையணா காசுகொடுத்து, இரண்டுகார்டு வாங்கி வரச் சொன்னாரே! அந்தச் சிறுவன்தான் நான். இப் பொழுது பெரியவனாகிவிட்டேன். பாரதியார் எழுதிய பாடலை ஒரு நோட்டில் எழுதி மனப்பாடம் செய்து கொண்டேன்" என்றார் அவர்.

கடையம் வாழ்க்கையில் சலிப்பு ஏற்பட்டது பாரதிக்கு. மீண்டும் சென்னை சேர்ந்தார். 'சுதேச மித்திரன்' அவரை ஏற்றுக் கொண்டான்.

மகிழ்ந்தார் பாரதி; உற்சாகம் கொண்டார். தொடக்கத்தில் ஓரிரு மாதங்கள் தம்பு செட்டித் தெருவிலே ஒரு வீட்டில் வசித்தார். அது அவருக்குப் பிடிக்கவில்லை.

திருவல்லிக்கேணியிலே ஒரு வீட்டிலே குடிபுகுந்தார். அங்கிருந்து மித்திரன் காரியாலயம் சென்று வேலை பார்த்து வந்தார்.

அப்போது 'சுதேசமித்திரன்' காரியாலயம் எங்கிருந்தது தெரியுமா? சென்னை ஜியார்ஜ்டவுன் எரபாலு செட்டித் தெருவில் இருந்தது.

பாரதியார் திருவல்லிக்கேணி தெளிசிங்கப் பெருமாள் கோவில் தெருவில் உள்ளதொரு வீட்டில் குடியிருந்தார்.

ஆபீசுக்குச் சென்று வரவும், இடைவேளையில் காப்பி சாப்பிடவும் காசு கொடுப்பார் அவரது மனைவி. காசைப் பெற்றுக் கொண்டு புறப்படுவார். ஆபீசுக்குப் போகும் வழியில் பூக்கடையைக் காண்பார். அங்கே செல்வார்,

பூ வாங்குவார். என்ன பூ? அரளிப்பூ! அரளிப் பூவை வாங்கிக் கழுத்திலே மாலையாக அணிந்து கொள்வார். அதிலே அவருக்கு மகிழ்ச்சி. கையிலே இருந்த காசு செலவழிந்து விடும். பகல் சிற்றுண்டிக்குக் காசு இராது. அதுபற்றி அவர் கவலைப்படமாட்டார். எவராவது அன்புடன் அழைத்துச் சிற்றுண்டி அளித்தால் வாங்கி உண்பார். அவரைப் பாராட்டுவார்.

பாரதியாரின் நண்பர் ஒருவர். அவர் பெயர் உலகநாத நாயக்கர், அவரும் சுதேசமித்திரனில் ஓர் உதவி ஆசிரியராகப் பணி புரிந்தார்.

நாயக்கருக்கு பாரதியார்மீது அன்பு; மதிப்பு; மரியாதை. பாரதியாருக்கும் நாயக்கர்மீது அன்பு.

வீட்டிலிருந்து சிற்றுண்டி கொண்டுவருவார் நாயக்கர். பகல் நேரத்திலே பசியாறுவார்; பாரதியாருக்கு வழங்குவார். பாரதியாரும் மிக்க மகிழ்ச்சியோடு அதை வாங்கி உண்பார்.

ஒரு நாள், தேனாம்பேட்டையில் ஒரு கூட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந்தார் நாயக்கர். அக் கூட்டத்தில் பேசுமாறு பாரதியாரை அழைத்தார்.

கூட்டம் தொடங்க வேண்டிய நேரம் மாலை ஐந்து மணி. பாரதியார் என்ன செய்தார்? பகல் ஒருமணிக்கே ஒரு ரிக்ஷாவில் ஏறிக்கொண்டு நாயக்கர் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தார்.

நல்ல வெயில்காலம். வெயிலின் வெப்பம் தாங்க முடியவில்லை.

"இந்த வெய்யிலில் ஏன் புறப்பட்டு வந்தீர்கள்?" என்று கேட்டார் நாயக்கர்.

"தம்பி! நீ பஞ்ச தந்திரக் கதை படித்திருக்கிருயா? 'நண்பனைவிடச் சிறந்தவன் வேறு எவனுமில்லை. நண்பனுடன் பேசிக்கொண்டிருப்பதே இன்பம்' என்று சொல்கிறது பஞ்சதந்திரம். நீ எனது நண்பன்; மிக நல்லவன். உன்னுடன் பேசிக்கொண்டிருப்பதே எனக்கு இன்பம். அதனுல்தான் இந்த வெய்யிலையும் பொருட் படுத்தாது வந்தேன்" என்முர் பாரதியார். பிறகு இருவரும் நீண்டநேரம் பேசிக் கொண்டிருந்தனர்.

— கூறியவர்: உலகநாத நாயக்கர்.

"இன்று எங்கள் வீட்டில் சொஜ்ஜி பண்ணியிருக்கிறுள் என் மனைவி. காலையில் நான் தின்றேன். ருசியாயிருந்தது. நீயும் வா? உனக்கும் கொடுக்கிறேன்"

இவ்வாறு கூறித் தமது நண்பர் உலகநாத நாயக்கரை அழைத்தார் பாரதியார்.

'சரி' என்முர் நாயக்கர். பாரதியாருடன் அவருடைய வீட்டுக்குச் சென்முர்.

வீட்டில் ஓரிடத்தில் இருக்கச் சொன்னுர் பாரதியார். உள்ளே சென்முர். "சொஜ்ஜி" யைத் தேடினுர். கிடைக்க வில்லை.

திரும்பி வந்தார் பாரதியார். நண்பர் அருகில் உட்கார்ந்துகொண்டார்.

"தம்பீ! நீ தங்கக் கம்பி! பத்தரை மாற்றுத் தங்கம். நீ சொஜ்ஜி சாப்பிடவேண்டும் என்று எண்ணி உன்னை அழைத்து வந்தேன். சொஜ்ஜி இல்லையே!" என்று சொல்லிவிட்டுத் தேம்பித் தேம்பி அழுதார்.

"அதனுல் என்ன! வருத்தப் படாதீர்கள். இன்ெனுரு நாள் தின்றுல் போகிறது" என்முர் நண்பர்,

இதற்கிடையில் பாரதியின் மனைவி வந்தார்; பாரதியார் வருந்துவது கண்டார்; உள்ளே சென்ருர். ஒரு கிண்ணத்தை எடுத்துவந்து பாரதியிடம் கொடுத்தார். அந்தக் கிண்ணத்தைக் கண்ட உடனே துள்ளிக் குதித்தார் பாரதியார். அவரது அழுகை பறந்தது. மகிழ்ச்சி பொங்கியது.

அந்தக் கிண்ணத்திலே சொஜ்ஜி இருந்தது. அதைத் தமது நண்பருக்குக் கொடுந்தார்; மகிழ்ந்தார், கள்ளம் கபடம் அற்ற உள்ளம் படைத்தவர் பாரதியார். குழந்தை போன்ற குணம்.

— கூறியவர் : உலகநாதநாயக்கர்.

பாரதியார் பசியால் வாடுவாரே என்று கருதிச் சிற்றுண்டி தயார் செய்து கொண்டுவந்து கொடுப்பார் அவரது மனைவி. அதை வாங்கிக் கொள்வார் பாரதியார். உடனே அதைத் தர்மே தின்றுவிடமாட்டார்.

காக்கைக்குக் கொஞ்சம்! குருவிக்குக் கொஞ்சம்! எறும்புக்குக் கொஞ்சம்! இப்படியாகச் சிற்றுண்டியில் முக்கால் பாகத்தைப் போட்டுவிடுவார். மீதியுள்ள கால் பாகத்தையே தாம் தின்பார்.

"எதை வேண்டுமாளுலும் பொறுக்க முடியும். ஆனுல் கொடுத்த உணவைத் தாம் உண்ணுமல் பறவைகளுக்குப் போட்டுவிட்டு நிற்கும் அவருடைய தார்மிக உணர்ச்சியை மட்டும் என்ளுல் சகிக்கவே முடிந்ததில்லே."

பாரதியார் சரித்திரத்தின் முன்னுரையிலே இவ்வாறு சொல்கிருர் செல்லம்மாள் பாரதி. இது 1952 - ம் ஆண்டு திருச்சி வாஞெலியில் செல்லம்மாள் பாரதி நிகழ்த்திய உரையில் உள்ளது.

ஒத்துழையாமைப் போர் தொடங்குமுன் மகாத்மா காந்தி சென்னை வந்திருந்தார். ராஜாஜியின் விருந்தினராகத் தங்கியிருந்தார்.

மகாத்மாவைக் காண வந்தார் பாரதியார். மகாத்மா ஒரு கட்டில்மீது அமர்ந்திருந்தார். அருகில் ராஜாஜி நின்றுகொண்டிருந்தார். எதிரில் சத்தியமூர்த்தி நின்று கொண்டிருந்தார். அப்பால் அரங்கசாமி அய்யங்கார் இருந்தார்.

உள்ளே நுழைந்தார் பாரதியார்; மகாத்மா அருகே அமர்ந்தார்.

"மகாத்மா காந்தி! இன்று மாலை திருவல்லிக்கேணி கடற்கரையில் நான் ஒரு கூட்டத்துக்கு ஏற்பாடு செய்திருக்கிறேன். நீங்கள் அதிலே பேச முடியுமா?" என்று கேட்டார்.

மகாத்மா காந்தி மகாதேவ தேசாயைப் பார்த்தார். மகாதேவ தேசாய்தான் மகாத்மாவின் காரியதரிசி. அவர், தம் வசமிருந்த குறிப்பைப் பார்த்தார்.

"இன்று மாலை மற்றொரு நிகழ்ச்சி இருக்கிறது" என்றார் மகாதேவ தேசாய்.

"இன்று முடியாது. நாளை..." என்றார் மகாத்மா.

"நாளை முடியாது." என்றார் பாரதி. அங்கிருந்து புறப்பட்டார். பாரதி போய் விட்டார்.

"இவர் யார்?" என்று கேட்டார் மகாத்மா.

"இவர் எங்கள் கவி" என்றார் ராஜாஜி.

இந்த நிகழ்ச்சியை வ. ரா. குறிப்பிட்டிருக்கிறார்.

மகாத்மா அருகில் நின்றிருந்த அனைவரும் பாரதியாரை அறிவர்,

பாரதியார் வந்த உடனே மகாத்மாவுக்கு அறிமுகம் செய்து வைத்திருக்கலாம் அல்லவா! அவ்விதம் செய்ய வில்லை. ஏன்? அதுதான் தமிழ் நாட்டின் சாபக்கேடு.

பாரதியார் திலகரின் கோஷ்டியில் முன்னின்று சுதேசிக் கிளர்ச்சி செய்ததை இவர்கள் அறியவில்லையா? விபின சந்திர பாலரை அழைத்துவந்து சென்னையில் சூறுவளிப் பிரச்சாரம் செய்வித்தாரே! அதை இவர்கள் அறியமாட்டார்களா?

இவற்றையெல்லாம் கூறி மகாத்மாவுக்கு பாரதியை அறிமுகம் செய்திருக்கலாமே! ஏன் அவ்வாறு செய்ய வில்லை?

அதுதான் போகட்டும். மகாத்மா காந்தியின் தென் ஆப்பிரிக்கப் போராட்டத்தை ஆதரித்து பாரதியார் தமது பத்திரிகையில் எழுதினரே! கார்ட்டூன் வெளியிட்டாரே! அதையாவது கூறியிருக்கலாமே!

தூத்துக்குடி சுதேசிக்கப்பல் போராட்டத்தை ஆதரித்து நாள் தவருது எழுதினரே! கப்பலோட்டிய தமிழர் சிதம்பரத்துடனும்—சிவத்துடனும்—தோள் கொடுத்துப் போராடினரே! அதையாவது காந்தியிடம் சொல்லியிருக்கலாமே!

இந்தப் 'பெரிய மனிதர்கள்' அந்த நேரத்திலே வாய் மூடி நின்றீர்களே! அது ஏன்? காரணம் என்ன? காரணம் ஒன்றே. பாரதி மாபெரும் தேசபக்தர் என்று காந்தியிடம் சொல்லிக் கொண்டாட மனம் இல்லை; நா எழவில்லை.

துணி வெளுக்க மண்ணுண்டு —எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி
தோல் வெளுக்கச் சாம்பருண்டு —எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி

மணி வெளுக்கச் சாணையுண்டு —எங்கள்
முத்து மாரியம்மா, எங்கள் முத்துமாரி
மனம் வெளுக்க வழியில்லை —எங்கள் முத்து
மாரியம்மா எங்கள் முத்துமாரி

ஒரு நாள், தெருவழியே சென்று கொண்டிருந்தார் பாரதியார். அங்கே ஒரு வீட்டுத் திண்ணைமீது உட்கார்ந்து படித்துக் கொண்டிருந்தான் ஒரு சிறுவன்.

"இளமையிற்கல்" என்று படித்தான் சிறுவன்.

"முதுமையில் மண்" என்று கூறி விட்டுச் சிரித்தார் பாரதியார். அவருடன் சென்ற நண்பர் சிலர் அவரைப் பார்த்தனர்.

"பாரதியார் ஏன் அவ்விதம் சொன்னார்" இதுதான் அவர்களுக்குத் தோன்றிய ஐயம்.

அப்படியே நடுத் தெருவில் நின்றுவிட்டார் பாரதியார்.

"இளமையிற் கல்; இளமையிற் கல்" என்று சொன்னார்கள். ஆனால், நமக்கு நல்ல கல்வி அளிக்கவில்லை. அதனாலே இளமையில் கல் ஆனோம். முதுமையில் மண்ணாகிவிட்டோம்" என்றார் பாரதியார்.

— வ. ரா. சொன்னது.

சென்னை ராயப்பேட்டையிலே 'குகானந்த நிலையம்' என்று ஓரிடம் இருக்கிறது. இந்த நிலையத்தைத் தொடங்கி வளர்த்தவர் திரு. வி. க. அங்கே 'பால சுப்பிரமணிய பக்த ஜனசபை' என்ற பெயர்கொண்ட சபை ஒன்றும் இருக்கிறது. பாம்பன் சுவாமிகள் தங்கியிருந்த இடம் இது.

ஒருநாள், அவ்வழியே சென்று கொண்டிருந்தார் பாரதியார். அவரைக் கண்டார் திரு. வி. க. அழைத்து வந்தார்; நிலையத்தின் உள்ளே அமரச் செய்தார்.

அன்று கிருத்திகை. மாலை நேரம். பாலசுப்பிரமணியர் படம் ஒன்று நன்றாக அலங்கரித்து வைக்கப் பட்டிருந்தது. குத்து விளக்குகள் ஏற்றி வைக்கப்பட்டிருந்தன. முருகப் பெருமானை வழிபடும் பொருட்டுப் பலர் கூடியிருந்தனர்.

"முருகன் மீது ஒரு பாட்டு" என்றார் திரு. வி. க. பாரதியாரை நோக்கி.

அவ்வளவுதான். எழுந்து நின்று கொண்டார் பாரதியார். முருகன் படத்தையே சிறிது நேரம் உற்று நோக்கிய வண்ணம் நின்றார். அந்தப் படத்திலிருக்கும் முருகனை 'வா வா' என்று அழைப்பவர் போல கைகளை சைகை செய்துகொண்டே இருந்தார். சிறிது நேரத்தில் ஆவேசம் வந்தவர்போல் ஆனார்.

'வருவாய் மயில் மீதினிலே' என்று பாடத் தொடங்கினார். பாட்டு மேலே மேலே ஏறியது. கேட்டவர் எல்லாரும் மெய்மறந்தனர்; உணர்ச்சி பொங்கினர். படத்திலிருந்த பாலசுப்பிரமணியன் அங்கிருந்து துள்ளி, வடிவேலுடன் வருவது போன்ற ஒரு மனோபாவம் ஏற்பட்டுவிட்டது.

அப்படியே அனைவரும் பாட்டில் ஈடுபட்டனர். கண் எதிரே முருகன் வருவது போன்றதொரு தோற்றம் பெற்றனர்.

— கூறியவர் : திரு. வி, க.

பாரதியார் நடக்கும்போது ஓர் இராணுவ வீரனைப் போலவே நடப்பார். இராணுவ வீரனைப் போலவே தமது கோட்டின் மீது 'பின்' குத்திக் கொண்டிருப்பார். வலது

தோள்பட்டையில் ஒரு 'பின்' இடது தோள் பட்டையில் ஒரு 'பின்'.

தாம் ஓர் இராணுவ வீரர் என்ற எண்ணம் அவருக்கு இருந்தது. அதாவது இந்திய விடுதலைப் போர் வீரர் என்ற எண்ணம்.

ஒரு நாள் காலை நேரம். நண்பர் ஒருவர் பாரதியைப் பார்க்க வந்தார். அவர் பெயர் நடேசய்யர். 'சுதேசமித்திரன்' பத்திரிகையிலே உதவி ஆசிரியர் வேலை பார்த்து வந்தார்.

பாரதியார் திருவல்லிக்கேணியிலே குடியிருந்த வீட்டில் இருவரும் பேசிக் கொண்டிருந்தனர். அப்பொழுது பாரதியாரின் மனைவியார் வந்தார்.

"இந்த மாதிரி 'பின்'னைக் குத்திக் கோட்டை நாசமாக்கலாமா? எத்தனை முறை சொன்னாலும் கேட்க மாட்டேன் என்கிறீர்களே!" என்று சொல்லிக் கொண்டே வந்து 'பின்'னை எறிந்து விட்டுப் போனார்.

பாரதியாரின் முகம் வாடியது. பாப்பாவை அழைத்தார். பாப்பா வந்தது. "அந்த சட்டையைத் துவைக்க வேண்டாம் என்று அம்மாவிடம் சொல்லு" என்றார்.

அப்போதும் அவர் மனம் அமைதி பெறவில்லை.

"தம்பீ! சிறிது நேரம் இங்கேயே இரு. இதோ வந்து விடுகிறேன்" என்றார். பக்கத்து அறைக்குள் சென்றார். சிறு குழந்தை போல் விம்மி விம்மி அழுதார். சிறிது நேரம் அழுதபின் கண்களைத் துடைத்துக் கொண்டு வந்தார்.

"தம்பீ! குடும்பம் நடத்துவது சுலபமன்று. ரொம்ப சிரமம்" என்றார்.

— கூறியவர் : நடேசய்யர்

திருவல்லிக்கேணியில் இருந்தபோது நாள்தோறும் பார்த்தசாரதி கோவிலுக்குச் செல்வார் பாரதியார்; பார்த்தசாரதியை தரிசனம் செய்துவிட்டு வெளியே வருவார். வாசலில் யானை இருக்கும். அதைப் பார்த்துக் கொண்டு சிறிது நேரம் நிற்பார். அதற்குப் பழம் கொடுப் பார். இது வழக்கம்.

இந்த வழக்கப்படி அன்றும் சென்றார்; பார்த்த சாரதியை தரிசனம் செய்தார்; வெளியே வந்தார்; கோயில் யானையிடம் சென்றார். யானைக்கு மதம் பிடித்திருந்தது. அதனாலேயே அந்த யானையைச் சுற்றி இரும்பு வேலி அடைத்திருந்தார்கள். யானையின் கால்களை இரும்புச் சங்கிலி கொண்டு பிணைத்திருந்தார்கள்.

யானையிடம் பாரதி செல்வது கண்டான் யானைப் பாகன்; அவரைத் தடுத்தான். அவர் நிற்கவில்லை. யானை யிடம் சென்றார். வாழைப்பழம் கொடுத்தார். யானை என்ன செய்தது?

தனது துதிக்கையால் அவரைத் தள்ளிவிட்டது. காற்று ஊதினாலும் கீழே விழுந்துவிடக் கூடிய பாரதியின் உடல், யானையின் வலி முன் எம்மாத்திரம்? யானையின் காலடியில் விழுந்து விட்டார் பாரதியார். உடம்பு முழு வதும் காயம். ரத்தம் வந்துவிட்டது.

அவ்வளவுதான். பெருங்கூட்டம் கூடி விட்டது. எவரும் யானை அருகில் செல்லத் துணியவில்லை. பாரதியைத் தூக்கவில்லை.

ஓடி வந்தார் குவளைக் கண்ணன். தாவிக் குதித்தார். பாரதியைத் தூக்கினார். வெளியே நீட்டினார். அப்போது மற்றவர்கள் உதவினார்கள். செய்தி கேட்டார் மண்டயம் ஸ்ரீநிவாசாச்சாரியார். ஓடி வந்தார். ஒரு கார் ஏற்பாடு

செய்து கொண்டு ராயப்பேட்டை மருத்துவ நிலையத்துக்குக் கொண்டு போனார். நண்பர்கள் உடன் சென்றார்கள். காயத்துக்கு மருந்து போடப்பட்டது. வீட்டுக்குக் கொண்டுவந்து சேர்த்தார்கள்.

காயங்கள் ஆறிவிட்டன. ஆனால், அவரது உடல்நிலை மோசமாகியது. வயிற்றுக்கடுப்பு அவரைப் பற்றிக் கொண்டது; வாட்டியது. இது நண்பர்களுக்கு அறிவிக்கப் படவில்லை.

பாரதியார் நோய்வாய்ப்பட்ட செய்தி அறிந்தார் நெல்லையப்பர்; ஓடி வந்தார். ஒரு டாக்டரை அழைத்தார். டாக்டரும் வந்தார்; நோய்க்கு மருந்து கொடுத்தார்.

ஆனால், பாரதியோ! மருந்து உட்கொள்ள மறுத்து விட்டார். எவ்வளவோ வற்புறுத்தியும் கேட்கவில்லை. பிடிவாதமாக இருந்துவிட்டார் பாரதி. முகவாட்டத்துடன் திரும்பிச் சென்றுவிட்டார் டாக்டர். பாரதியின் அருகிலேயே இருந்தார் நெல்லையப்பர்.

ஆயிரத்துத் தொளாயிரத்து இருபத்து ஓராம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11-ந் தேதி இரவு மணி பன்னிரண்டு. சிறிது நேரத்திற்கு ஒருமுறை எழுந்திருப்பதும் படுப்பதுமாக இருந்தார் பாரதியார்.

"காலா! என் காலருகே வாடா!" என்று பாடிய பாரதி காலனுடன் போராடிக்கொண்டிருந்தார்.

காலன் வந்தான்; அவர் உயிரைக் கவர்ந்து சென்றான்.

"மரணமில்லை; மரணமில்லை" என்று முழங்கிய பாரதி மரணம் அடைந்தார்.

செப்டம்பர் பன்னிரண்டாம் தேதி. பொழுது விடிந்தது. பாரதி இறந்த செய்தி நண்பர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

ஹரிஹர சர்மா வந்தார்; மண்டயம் ஸ்ரீநிவாசாச்சாரியார் வந்தார்; சுரேந்திரநாத் ஆர்யா வந்தார்; வக்கீல் எஸ். துரைசாமி அய்யர் வந்தார்; சர்க்கரைச் செட்டியார் வந்தார்.

எப்போதும் பாரதிக்கு உதவிவந்த எஸ். துரைசாமி அய்யரே இப்போதும் உதவினார்.

பாரதியின் உடலை மயானத்துக்குக் கொண்டு சென்றார்கள். ஹரிஹர சர்மாவே பாரதிக்கு ஈமக்கடன் செய்தார்.

சிறு சொற்பொழிவு நிகழ்ந்தது. பிறகு பாரதி பாடல்கள் பாடப்பட்டன.

பாரதியார் பூத உடல் நீத்தார்; புகழ் உடல் பெற்றார்.

# அன்று முதல் இன்று வரை

**பா**ரதியார் இறந்தபோது அவருடைய குடும்பம் எந் நிலையில் இருந்தது? ஆதரவற்ற நிலையில் இருந்தது. பாரதியாரின் மனைவி மக்கள் ஆகியோரின் வாழ்க்கைக்கு என் செய்வது? வழி யாது? வழி ஒன்றே. அதாவது, பாரதி பாடல்களைப் புத்தகமாக வெளியிட்டு விற்கலாம். விற்பனையினின்றும் கிடைக்கக்கூடிய தொகையைக் கொண்டு பாரதியாரின் குடும்பத்துக்கு உதவலாம். இதுதவிர வேறு வழி எதுவும் தோன்றவில்லை. எனவே, பாரதியாரின் நண்பர் சிலர் கொண்ட கமிட்டி ஒன்று இதன் பொருட்டு நிறுவப்பட்டது. அதாவது 1921-ம் ஆண்டு செப்டம்பர் மாதம். அடுத்த ஆண்டு முடிவதற்குள் பாரதி பாடல்களைப் பன்னிரண்டு புத்தகங்களாக வெளியிடுவது என்றும், முன் பணமாக ரூபாய் பன்னிரண்டு அனுப்பி சந்தாதாரர்களாகச் சேர்ந்துகொள்வோருக்கு இப் புத்தகங்களை அனுப்பி வைப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது. அவ்வாறே பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுவிக்கப் பட்டது. பலன் என்ன ஏற்பட்டது? உற்சாகம் அளிப்பதாக இல்லை. சிலர் முன்பணம் அனுப்பி ஆதரித்தனர். வேறு சில நண்பர்கள் இம் முயற்சிக்குப் பண உதவி செய்தார்கள். திலகர் சுயராஜ்ய நிதியிலிருந்து ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது.

இந்தப் பணத்தை மூலதனமாகக் கொண்டு 'பாரதி ஆசிரமம்' தொடங்கப்பட்டது. பாரதியின் மனைவி செல்லம்மாளும், செல்லம்மா அவர்களின் சகோதரர் அப்பாத்துரையும் இம் முயற்சியை மேற்கொண்டனர். திருவல்லிக்கேணி பெரிய தெருவில் பாரதி ஆசிரமம் இருந்தது.

1922-ம் ஆண்டுக்குள் சில புத்தகங்களே வெளி வந்தன. அதன்பின் வெளி வரவில்லை. புத்தக விற்பனை சுமாராகவே இருந்தது. உற்சாகம் அளிப்பதாக இல்லை.

அவ்விதம் இருந்தபோது மேற்கொண்டு புத்தகங்கள் எப்படி வெளிவரும்? வரவில்லை. 1923க்குள் புத்தக விற்பனையும் சுருங்கியது. வெளியீடும் நின்றது. வெளி வந்த புத்தகங்கள் விற்பனையாகாமல் தேங்கி இருந்தன.

பாரதி நூல்கள் வெளியிடும் உரிமையை எவருக்காவது விற்று விடலாம் என்று எண்ணினர். ஆனால், அதிக விலை கொடுக்க எவரும் முன் வந்தாரிலர். முன் வந்தவர் சிலரும் பணம் என்ற பேச்சு வந்தபோது பின்வாங்கினர். சிறிது சிறிதாகப் பல தவணைகளில் கொடுப்பதாகக் கூறினர். இவையெல்லாம் பாரதி குடும்ப சம்ரக்ஷணைக்கு உதவுமா? போதுமா?

எனவே, புத்தகங்களை எல்லாம் ஹரிஹர சர்மாவின் பொறுப்பில் ஒப்புவித்தார்கள். புத்தகங்களை விற்க வேண்டும். விற்பனைமூலம் கிடைக்கும் பணத்திலிருந்து குறிப்பிட்டதொரு தொகையை பாரதி குடும்பத்துக்குக் கொடுக்க வேண்டும். இவ்வாறு ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டு புத்தகங்களை ஹரிஹர சர்மாவிடம் ஒப்புவித்தார்கள். 1924-ம் ஆண்டிலே இது நடந்தது.

அந்த ஆண்டிலேயே பாரதியாரின் மகள் சகுந்தலாவுக்குத் திருமணம் நிகழ்ந்தது. புத்தகங்களை ஈடுகாட்டி

இரண்டாயிரம் ரூபாய் கடன் வாங்கிக் கொடுத்தார் ஹரிஹர சர்மா.

அதே ஆண்டில் சகுந்தலாவின் கணவர், பாரதியாரின் தம்பி விசுவநாதன், ஹரிஹர சர்மா ஆகிய மூவரும் சேர்ந்து "பாரதி பிரசுராலயம்" என்ற நிறுவனத்தைத் தொடங்கினர். பாரதி நூல்களை வெளியிடும் பணியை மேற்கொண்டது பாரதி பிரசுராலயம். பாரதி நூல்களின் உரிமை மட்டும் பாரதி குடும்பத்தினரிடமே இருந்தது. பாரதி நூல்கள் ஒன்றன் பின் ஒன்ருக வெளிவரத் தொடங்கின.

இந்நிலையில் மற்ருேர் அடி விழுந்தது.

1928-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 7-ந் தேதி பர்மா கவர்னர் ஓர் உத்திரவு பிறப்பித்தார். பாரதியாரின் தேசீய கீதங்கள் பர்மா எல்லையில் நுழையக்கூடாது என்றும், அந்தப் புத்தகங்களைப் பறிமுதல் செய்யவேண்டும் என்றும், அந்த உத்தரவு தெரிவித்தது.

அப்போது இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்தது பர்மா. 1928-ம் ஆண்டு செப்டம்பர் 11-ந் தேதியிட்ட சென்னை அரசாங்க கெஜட்டில் இந்த உத்தரவு வெளி வந்தது. இவ்வாறு உத்தரவு வந்த உடனே சென்னை போலீசார் என்ன செய்தனர்? திருவல்லிக்கேணியில் இருந்த பாரதி பிரசுராலயத்தையும், பாரதி நூல்கள் அச்சுப் போடப்பட்ட ஹிந்தி பிரச்சார் அச்சகத்தையும் சோதனை செய்தனர்; புத்தகங்களை எடுத்துச் சென்றனர்.

இதனை ஆட்சேபித்து பாரதி பிரசுராலயத்தினர் நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தனர்.

அப்போது சென்னை மாகாணத்தில் ஜஸ்டிஸ் கட்சி மந்திரிசபை பதவி வகித்தது. டாக்டர் சுப்பராயன் கல்வி மந்திரியாக இருந்தார்.

பாரதி பாடல்களுக்கு அரசாங்கம் தடை விதித்ததைக் கண்டித்துச் சட்டசபையில் பேசினார் சத்தியமூர்த்தி.

பாரதி பாடல்களில் அரசாங்க துவேஷம் எதுவுமில்லை என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அதன்மீது, பறிமுதல் செய்த புத்தகங்களை அரசாங்கம் திருப்பிக் கொடுத்தது.

இது, நல்லதொரு விளம்பரம் ஆயிற்று. 'சர்க்காரால் பறிமுதல் செய்யப்பட்டுத் திருப்பித்தரப்பட்டது' என்று எழுதி ரப்பர் ஸ்டாம்பு செய்து, அதைப் பாரதி புத்தகங்களின் மேல் முத்திரை போட்டு விற்பனை செய்தது பாரதி பிரசுராலயம்.

ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பத்தி ஒன்றில் பாரதி பாடல் உரிமையை செல்லம்மா பாரதியிடமிருந்து வாங்கிக் கொண்டது பாரதி பிரசுராலயம். அதற்காக ரூபாய் நாலாயிரம் பெற்றுக்கொள்ளச் சம்மதித்தார் செல்லம்மா பாரதி. அதில் சகுந்தலாவின் கலியாணத்தின் பொருட்டு வாங்கிய கடன் ரூபாய் இரண்டாயிரத்தையும் கொடுத்து விட்டு, மீதியுள்ள பணத்தைச் செல்லம்மா பாரதியிடம் கொடுப்பதென்று முடிவு செய்யப்பட்டது. அவ்விதமே கொடுக்கப்பட்டது.

பாரதி பாடல்களை ஒலிப்பதிவு செய்யும் உரிமையை ரூ400க்கு ஏ. வி. எம். செட்டியார் வாங்கினார்.

1938-ம் ஆண்டில் சகுந்தலாவின் கணவர் பாரதி பிரசுராலயத்தினின்றும் விலகிக் கொண்டார். 1941-ம் ஆண்டில் ஹரிஹர சர்மாவும் பாரதி பிரசுராலயத்தினின்று விலகினார். ஆக, பாரதியாரின் தம்பி விசுவநாதன் ஒருவரே பாரதி பிரசுராலய உரிமையாளராக இருந்தார்.

இந்நிலையில் பாரதி நூல்களை நாட்டுடைமையாக்குதல் வேண்டும் என்ற எண்ணம் பலரிடையே தோன்றலாயிற்று,

1949ம் ஆண்டில் ஓமந்தூரர் ராமசாமி ரெட்டியார் முதன் மந்திரியாக இருந்தபோது, பாரதி பாடல்களை நாட்டுடைமையாக்கினர்.

பாரதியாரின் மனைவி செல்லம்மாளுக்கு ஐயாயிரம் ரூபாயும், தங்கம்மா பாரதிக்கு ஐயாயிரம் ரூபாயும், சகுந்தலா பாரதிக்கு ஐயாயிரம் ரூபாயும் கொடுத்தது ஓமந்தூரரார் அரசாங்கம்.

இப்போது பாரதி பாடல் நாட்டின் உடைமையாக்கப் பட்டு விட்டது.

## பாடலின் பின்னே

சுயராஜ்யமே நமது லட்சியம். அதாவது, இந்தியாவை இந்தியர்களே ஆள்வது.

இவ்வாறு கூறினார் தாதாபாய் கல்கத்தா காங்கிரசிலே. 'சுயராஜ்யம் எனது பிறப்புரிமை' என்று முழங்கினார் திலகர்.

ஆனால் வெள்ளையர் என்ன செய்தனர்? நம்மைக் கேலி செய்தனர்.

"உங்களிடையே பல மதங்கள் உள்ளன. பல மொழிகள் உள்ளன. பல ஜாதிகள் உள்ளன. நீங்கள் எப்படி ஓரினமாவீர்கள்? நீங்கள் எப்படி ஒன்று சேருவிர்கள்? உங்களுக்கு 'ஜாதீய ஞானம்' ஏது? எப்படி ஏற்படும்? ஏற்படாது. ஆகவே, நீங்கள் சுயராஜ்யம் பெறத் தகுதியற்றவர்கள்" என்றார்கள்.

வெள்ளையர் மட்டுமா இவ்வாறு கூறினர்? இல்லை இந்தியரில் சிலரும் கூறினர்.

இந்தியாவின் எதிரிகள் இவ்வாறு கூறியதை எதிர்த்து முறியடிக்க வேண்டிய பொறுப்பு திலகர் கட்சியினருக்கு ஏற்பட்டது. அந்தப் பொறுப்பை நிறைவேற்ற முற்பட்டார் பாரதியார்.

பாலபாரத சங்கத்தின்சாரிபில் கூட்டங்கள் கூட்டினார்; தேசீயச் சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்தார்; "இந்தியா" பத்திரிகை மூலம் பிரசாரமும் செய்தார். அவர் செய்த பிரச்சாரத்தை இப்போது காண்போம்.

"இந்தியாவிலே பிறந்து, இந்தியாவிலே வளர்ந்து, இந்த நாட்டின் க்ஷேமலாபங்களையே தமது க்ஷேமலாபங் களாக உடைய எல்லா வகுப்பினரும் ஒரே ஜாதியென்று, அந்த ஜாதி முழுமையும் உன்னதம் பெறுவதற்குரிய வழிகளை அனுசரிக்க வேண்டுமென்ற ஞானமே, 'இந்திய ஜாதிய ஞானம்' என்று கூறப்படும்.

"இந்தியா பல பல பாஷைகளையும், மதங்களையும் இன்பங்களையும் உடைய நாடு. ஆதலால், இங்கே ஜாதீய ஞானம் ஏற்படுவது இயற்கை விரோதமென்று சிலர் கூறுகிறார்கள். இதனை நாம் எத்தனையோ முறை கண்டனம் செய்து எழுதியிருக்கிறோம். சென்ற புதன் கிழமை மாலை சென்னை பால பாரத சங்கத்தின் ஆதரவின் கீழ் கேம்பிரிட்ஜ் பட்டதாரியாகிய ஸ்ரீ. சி. ராமலிங்க ரெட்டி செய்த திறமை மிகுந்த உபந்நியாசத்திலே நமது நோக்கத்தைத் தழுவிப் பேசியது பற்றிச் சந்தோஷமடை கின்றோம். ஜாதீய ஞானம் ஏற்படுவதற்கு பாஷைகள், மதங்கள் இவை சிறிதேனும் தடையாக மாட்டா என்பதை ஸ்ரீ ராமலிங்க ரெட்டி நன்கு வற்புறுத்திப் பேசினார்.

"அமெரிக்காவிலே எத்தனையோ பின்னல் கொண்ட மதஸ்தர்கள் சேர்ந்து ஏக ஜாதீய உணர்ச்சி கொண் டிருக்க வில்லையா? சீனாவிலே 'பாக்ஸார்' கலகம் நடந்த போது பவுத்தர்கள், மகமதியர்கள், கன்பூஷியஸ் மார்க்கஸ்தர் முதலிய எல்லோரும் ஒன்றுசேர்ந்து கொண்டு வெள்ளை நிறத்தவரை எதிர்க்கவில்லையா? ஜப்பானில் கிறிஸ்தவர்கள், பவுத்தர்கள், என்ற

எல்லோரும் ஒருங்கு சேர்ந்து ருஷ்ய கிறிஸ்தவர்களை நாசம் செய்ய வில்லையா?

"ஆதலால் மதவேற்றுமைகளும், குலவேற்றுமைகளும் இந்தியாவிலே ஜாதிய ஞானம் பிரபலமடைந்து ஸ்வராஜ்யம் ஏற்படுதற்குச் சிறிதேனும் தடையாகமாட்டா. எந்தக் குலமாய் இருந்தாலும், எந்த மதமாய் இருந் தாலும் இந்தியர்கள் எல்லோரும் ஒரு ஜாதிதான். இந்த ஜாதீய உறுதியை அந்நியர் எவ்வளவு அசைக்க முயன்றாலும் இது சிறிதேனும் அசைவுபெற மாட்டாது.
(இந்தியா — மார்ச் 16 - 1907)

இப்பொழுது பாரதியின் பாடல் ஒன்றை கவனிப்போம்.

ஜாதி மதங்களைப் பாரோம் —உயர்
ஜன்ம மித்தேசத்தில் எய்தினராயின்
வேதிய ராயினும் ஒன்றே —அன்றி
வேறு குலத்தின ராயினும் ஒன்றே.
ஈனப் பறையர்களேனும் —அவர்
எம்முடன் வாழ்ந்திங் கிருப்பவரன்றோ?
சீனத்தராய் விடுவாரோ? பிற
தேசத்தார் போற்பல தீங்கிழைப்பாரோ?

இந்தியாவின் விரோதிகளுக்கு எத்தகைய பதிலடி கொடுக்கிறார் பாரதியார்? முன்னேயுள்ள கட்டுரையைப் படித்து விட்டு இந்தப் பாடலையும் படித்தால்தான் அதன் உண்மை வேகம் நமக்குப் புலப்படும்.

இவ்வளவில் நின்றாரா பாரதியார்? இல்லை. இன்னும் ஒரு படிமேலே ஏறித் தாக்குகிறார்.

---

Nationalism — ஜாதீய அறிவு.

1942ம் ஆண்டிலே 'வெள்ளையனே வெளியேறு' என்று முழக்கம் கொடுத்தார் மகாத்மாகாந்தி; நாடுமுழுவதும் எதிரொலி கொடுத்தது.

அதற்கு முன்பே— முப்பத்தைந்து ஆண்டுகள் முன்பே —முதல் முழக்கம் செய்தார் பாரதி.

ஆயிரம் உண்டு இங்கு ஜாதி — எனில்
அந்நியர் வந்து புகல் என்ன நீதி?

கேட்கிறார் பாரதி. நமக்குள்ளே சாதிகள் ஆயிரம் இருக்கலாம். அந்நியனுக்கு இங்கே என்ன வேலை? வெள்ளையன் வந்து புகுவது என்ன நீதி? ஆகவே, 'வெள்ளையனே! வெளியேறு' என்று முழங்குகிறார். பாரதியின் கவிதாபீரங்கி எப்படி முழங்குகிறது பாருங்கள்!

ஆயிரத்துத் தொளாயிரத்து ஐந்தாம் ஆண்டிலே வங்காளத்தை இரண்டு துண்டாக்கினார் லார்டுகர்ஸான். இந்தத் துண்டிப்பை எதிர்த்து நாடு முழுவதும் கிளர்ச்சி நடைபெற்றது. வங்கப் பிரிவினை எதிர்ப்பும், சுதேசிக் கிளர்ச்சியும் வங்காளத்திலே பல பகுதிகளில் நடை பெற்றன.

துண்டிக்கப்பட்ட வங்கத்தின் ஒரு பகுதி கிழக்கு வங்காளம். கிழக்கு வங்காளத்தின் முதல் கவர்னராக நியமனம் பெற்றவர் ஸர். பி. புல்லர் என்ற ஆங்கிலேயர்.

கிழக்கு வங்காளத்தில் தோன்றிய பிரிவினை எதிர்ப்பு இயக்கம், சுதேசிக் கிளர்ச்சி, வந்தே மாதர கோஷம் இவற்றையெல்லாம் அடக்க முயன்றார் இவர்; தான்தோன்றித்தனமாக நடந்து கொண்டார்! அடக்கு முறைக்கு ஓர் எல்லையில்லை; வெறிபிடித்துத் தலைவிரித்து ஆடினார் இவர்.

பிரிவினை இயக்கம் சுதேசி இயக்கம் ஆகியவற்றை வங்காளத்திலே முன்னின்று நடத்தியவர் சுரேந்திரநாத் பானர்ஜி என்பவர். இவர் மிகச் சிறந்த நாவலர்.

ஆயிரத்துத் தொளாயிரத்து ஆறும் ஆண்டு, ஏப்ரல் மாதம் வங்க மாகாண சுதேசி மகா நாட்டை பாரிசாலில் நடத்த ஏற்பாடு செய்திருந்தார் சுரேந்திரநாத் பானர்ஜி.

பாரிசால் என்பது கிழக்கு வங்காளத்திலே ஒரு ஜில்லா. அந்த சமயத்திலே இந்த ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டாக இருந்தவர் எமர்சன் என்பவர். அந்த ஜில்லா போலீஸ் அதிகாரியாக விளங்கியவர் கெம்ப் என்பவர்.

மகாநாடு நடப்பதற்குப் பல நாட்கள் முன்பிருந்தே மாணவர்கள் பிரச்சாரம் செய்யத் தொடங்கிவிட்டார்கள்; தெருத் தெருவாக ஊர்வலம் சென்றார்கள்; 'வந்தே மாதரம்' என்று முழங்கினார்கள்; கிராமங்கள் தோறும் சென்றார்கள்; 'வந்தே மாதரம்' என்று முழங்கினார்கள். தெருவிலே சுதேசிக் கட்சியைச் சேர்ந்த ஒருவர், மற்றொருவரைக் கண்டால் உடனே 'வந்தே மாதரம்' என்று உரக்கக் கூவினார்கள்.

இப்படியாக பாரிசால் பகுதியிலே எங்கும் சுதேசி உணர்ச்சி பொங்கி வழிந்தது. ஏப்ரல் மாதத்திலே மகாநாடும் கூடியது.

கவர்னர் புல்லர் என்ன செய்தார்? ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டுக்கு சர்வாதிகாரம் கொடுத்தார். அந்த சர்வாதிகாரி என்ன செய்தார்?

மகாநாட்டைக் கலைத்து விடுமாறு உத்தரவு பிறப்பித்தார். போலீஸ் அதிகாரி வந்தார். மகாநாட்டைக் கலைத்தார். எவரும் கலைந்து செல்லவில்லை. குண்டாந்தடி கொண்டு அடிக்கச் சொன்னார். மகாநாட்டுக்கு வந்திருந்த

பிரதிநிதிகளுக்கு அடி. மகாநாட்டுத் தொண்டர்களுக்கு அடி. மக்கள் கொதித்து எழுந்தார்கள். 'வந்தே மாதரம்' என்று முழங்கினார்கள். மாஜிஸ்டிரேட் என்ன செய்தான்? எவருமே 'வந்தே மாதர' கோஷம் போடக் கூடாது என்று உத்தரவு பிறப்பித்தான்.

மாணவர்கள் என்ன செய்தார்கள்? கூட்டமாக நின்று 'வந்தே மாதரம்' என்று கோஷம் போட்டார்கள்.

மாணவர்கள் இந்த மாதிரி அரசியல் கிளர்ச்சிகளில் ஈடுபடக் கூடாது என்று உத்தரவு பிறப்பித்தான் மாஜிஸ்ட்ரேட்.

மாஜிஸ்ட்ரேட்டின் உத்தரவு கண்டு மாணவர்கள் அடங்கினார்களா? இல்லை. கூட்டங்கள் கூட்டினார்கள்; சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்; 'வந்தே மாதரம்' என்று கோஷமிட்டார்கள்.

மாஜிஸ்ட்ரேட் என்ன செய்தான்? தன் உத்திரவுக்கு அடங்கி நடக்காத மாணவர்களைப் பள்ளிக் கூடங்களி லிருந்து விலக்கி விடுமாறு பள்ளி அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்தான்.

மாணவர்கள் என்ன செய்தார்கள்? "மாஜிஸ்ட்ரேட் உத்தரவுப்படி நடக்கும் பள்ளிகளில் நாங்கள் படிக்க மாட்டோம்" என்றார்கள்; பள்ளிக் கூடங்களை பகிஷ்கரித் தார்கள்.

பாரிசாலில் நடைபெற்ற இந்தக் கிளர்ச்சியின் எதிரொலி வங்கம் முழுவதும் கேட்டது; வங்கம் மட்டுமா? இந்திய நாடு எங்குமே கேட்டது.

வங்கத்தில் நடைபெற்ற சர்வாதிகாரத்துக்கு— அடக்குமுறைக்கு—பாரதியாரின் கவிதா பீரங்கி எதிர் முழக்கம் செய்கிறது.

"கிழக்கு வங்க கவர்னரே! புல்லரே! உன் கைவரிசையைக் காட்டு!"

வந்தே மாதரம் என்போம்

"ஆம்! அப்படித்தான் சொல்வோம். இந்திய மக்கள் எல்லாரும் ஒரே குரலில் சொல்வோம். உனது அடக்கு முறை கண்டு அஞ்சோம்." என்ற பொருள் அதிலே தொனிக்கிறது. 'வந்தே மாதரம்' என்பதன் பொருளையும் உடனே சொல்கிறார். 'வந்தே மாதரம்' என்றால் 'எங்கள் மாநிலத்தாயை வணங்குதும்' என்று பொருள் என்கிறார் பாரதியார்.

இந்த அரசியல் சரித்திரப் பின்னணியை மனத்தில் கொண்டு பார்த்தால்தான். 'வந்தே மாதரம்' பாடலில் உள்ள வேகத்தையும், எதிர் முழக்கத்தையும் நன்கு உணரலாம்.

ஆயிரம் உண்டிங்கு ஜாதி —எனில்
அந்நியர் வந்து புகல் என்ன நீதி?

என்ற அடிகளைப் பாரதியார் திருப்பித்திருப்பிச் சொல் வாராம். அந்நியர், அந்நியர் என்று பல முறை அழுத்திச் சொல்வாராம். 'என்ன நீதி?' என்ற சொற்களை ஒவ்வொரு புறமும் நின்று பாய்ந்து பாய்ந்து கேட்பாராம். அப்படிக் கேட்கும் போது வேகம்—எழுச்சி—தோன்றும்.

கிங்ஸ் போர்டு என்பவர் ஓர் ஆங்கிலேயர். வங்காளத்திலே முஸபர்பூரிலே ஜில்லா நீதிபதியாக இருந்தார்; சுதேசி இயக்கத்திலே ஈடுபட்டவர்களுக்குக் கடுமையான தண்டனை விதித்துக் கொண்டிருந்தார். இது கண்டு மனம் கொதித்தார்கள் வங்க இளைஞர்கள். 'பழிக்குப் பழி' வாங்கு என்றது அவர்தம் உள்ளம். கிங்ஸ் போர்டு மீது வஞ்சம் தீர்க்க உறுதி கொண்டார்கள்.

குதிராம்போஸ் என்பவர் ஓர் இளைஞர். பதினெட்டே வயது நிரம்பப் பெற்றவர். பால் வடியும் முகம். தீப்பொறி கக்கும் கண்கள். கட்டு மஸ்தான உடல். உறுதி கொண்ட நெஞ்சு.

இந்த இளைஞர் முன்வந்தார். எதற்கு? கிங்ஸ் போர்டு என்ற அந்த அக்கிரம நீதிபதி மீது வஞ்சம் தீர்க்க.

ஆயிரத்துத் தொளாயிரத்து எட்டாம் ஆண்டு, ஏப்ரல் மாதம் முப்பதாந்தேதி. சூரியன் மலை வாயில் விழுந்து விட்டான். இரவு கவ்வியது.

கிங்ஸ்போர்டு வசித்த பங்களாவுக்கு அருகில் சென்று கொண்டிருந்தார் அந்த இளைஞர். கையிலே வெடிகுண்டு. ஒரு புதரிலே மறைந்து நின்றார்; கிங்ஸ் போர்டின் வருகையை எதிர் நோக்கி நின்றார்.

அந்தக் காலத்திலே குதிரை பூட்டிய கோச் வண்டியில் தான் வெள்ளையர்கள் செல்வார்கள். 'கிங்ஸ் போர்டு கோச் வண்டியில் வருவான். அவனை யமனிடம் சேர்க்க வேண்டும்' என்று உறுதி பூண்டு நிற்கிறார் குதிராம்போஸ். வழிமேல் வழிவைத்து நிற்கிறார்.

கோச் வண்டியும் வேகமாக வந்தது. வெடிகுண்டை வீசினார் குதிராம் போஸ்.

அவ்வளவுதான்! இரண்டு பெண்களின் ஓலம் கேட்டது!

கோச்சின் உள்ளிருந்தவர் கிங்ஸ் போர்டு அல்லர். ஆங்கிலப் பெண்மணிமார் இருவர். பெயர் கென்னடி என்பது.

கிங்ஸ் போர்டு பங்களாவுக்கு வந்த பெண்கள் அவர்கள். கிங்ஸ் போர்டின் நண்பரான கென்னடி என்ற ஆங்கிலேயர் ஒருவரின் மனைவியும் மகளும் ஆவர்.

குதிராம் போசின் குறி தப்பியது.

பிறகு கேட்க வேண்டுமா? போலீஸ் வந்தது; வேட்டையாடியது: குதிராம்போசைக் கைது செய்தது; வழக்குத் தொடுத்தது. குதிராம்போஸ் தூக்கிலிடப் பட்டார்.

இந்த வழக்கு வங்காளத்தையே ஒரு குலுக்குக் குலுக்கி விட்டது. குதிராம்போசின் படம் வங்காளிகளின் வீடுகளை அலங்கரித்தது. வங்க வாலிபர் எல்லாருடைய நெஞ்சிலும் நீங்காது குடிபுகுந்தார் குதிராம்போஸ்.

'யுகாந்தர்' என்பது ஒரு பத்திரிகை. தீவிர அரசியல் பத்திரிகை. அதன் ஆசிரியர், பூபேந்திர நாத தத்தர் என்பவர். இவர் சுவாமி விவேகானந்தரின் இளவல். வயதில் இளைஞரே.

இவர் என்ன செய்தார்? குதிராம் போசின் தியாகத்தைப் பாராட்டித் தமது பத்திரிகையிலே எழுதினார். தொடர்ந்து பல கட்டுரைகள் வரைந்தார்.

அரசாங்கம் சும்மா இருக்குமா? பூபேந்திரர் மீது வழக்குத் கொடுத்தது. பூபேந்திரர் சிறையில் தள்ளப் பட்டார்.

பூபேந்திரரின் தாய் இச் செய்தி கேட்டார். பாரத தேவியின் திருப்பணியிலே தமது மகன் சிறை சென்றது கேட்டார்; மகிழ்ந்தார்.

அம்மட்டோ! வங்க மாதர் 500 பேர் பூபேந்திரனின் தாய் இருந்த வீட்டுக்கு ஊர்வலமாகச் சென்றார்கள். பூபேந்திரனையும், அவரை ஈன்ற தாயையும் பாராட்டினார் கள்.

இந்த அரசியல் பின்னணியை உளத்தில் கொண்டு பாரதி பாடல் ஒன்றைப் பார்ப்போம்.

---

History of the Congress by Pattabi Sitaramayya

பா பேந்திரியம் செறுத்த எங்கள்
விவேகானந்தப் பரமன் ஞான
ரூபேந்திரன் தனக்குப் பின் வந்தோன்
விண்ணவர்த முலைகையாள் ப்ர
தாபேந்திரன் கோபமுறினும் அதற்கு
அஞ்சி அறம் தவிர்கிலாதான்
பூபேந்திரப் பெயரோன் பாரத நாட்
டிற் கடிமை பூண்டு வாழ்வோன்.

வீழ்த்தல் பெறத் தரும மெலாம் மறமனைத்தும்
கிளைத்துவர மேலோர் தம்மைத்
தாழ்த்ததமர் முன்னேங்க நிலைபுரண்டு
பாதகமே ததும்பி நிற்கும்
பாழ்த்த கலியுகஞ் சென்று மற்றொருகம்
அருகில் வரும் பான்மை தோன்றக்
காழ்த்த மன வீரமுடன் யுகாந்தரத்தின்
நிலையினிது காட்டி நின்றான்.
மண்ணாளு மன்னரவன் றனைச்சிறைசெய்
திட்டாலும் மாந்தரெல்லாம்
கண்ணாகக் கருதியவன் புகழோதி
வாழ்த்தி மனங் களிக்கின்றாரால்

* * *

இன்னாத பிறர்க கெண்ணான் பாரத நாட்
டிற்கிரங்கி இதயம் நைவான்
ஒன்றாரென்று எவருமிலான் உலகனைத்தும்
ஒருயிரென் றுணர்ந்த ஞானி
அன்னானைச் சிறைப்படுத்தார் மேலோர்தம்
பெருமை ஏதும் அறிகிலாதார்.

பூபேந்திரநாத தத்தரை இவ்வாறு பாராட்டுகிறார் பாரதி. பாரதியோடு சேர்ந்து நாமும் பூபேந்திரரைப்

பாராட்ட வேண்டுமாயின் இந்தப் பாடலின் அரசியல் பின்னணியை அறிதல் வேண்டும்.

வெள்ளையர்கள் இந்தியாவை எப்படி அடிமை கொண்டிருந்தார்களோ அதேமாதிரி ஆசியாவில்—குறிப்பாகத் தென்கிழக்கு ஆசியாவில்—மேலும் பல நாடுகளை அடிமை கொண்டிருந்தார்கள்.

இந்த நாடுகளில் சென்று வெள்ளையர் தோட்டம் போட்டனர். காப்பித் தோட்டம், ரப்பர் தோட்டம், தேயிலைத் தோட்டம், கரும்புத் தோட்டம். இம்மாதிரி தோட்டங்களைப் பெரும் அளவில் வைத்தனர்.

இத் தோட்டங்களில் வேலை செய்வதற்கு ஆள் வேண்டுமே! ஆட்கள் வேண்டும். அவர்களுக்குக் கூலியும் குறைவாகக் கொடுக்க வேண்டும். அவர்கள் முதுகில் ஏறிச் சவாரி செய்து வேலையும் வாங்க வேண்டும். இது தான் அந்த வெள்ளை முதலாளிகளின் நோக்கம்.

இந்த நோக்கத்துடன் பெரும் அளவில் ஆள் பிடிக்க முயன்றார்கள். இங்கே! இந்தியாவில்தான் பசியும் பட்டினியும் தலைவிரித்தாடினவே! மக்கள் பஞ்சத்தால் வாடினரே! பிழைக்க வழியின்றித் தவித்தனரே!

இந்த நாட்டு மக்களைக் கொண்டுபோய் தங்கள் சுரண்டல் வேட்டையை நடத்திக் கொள்ள விரும்பினார்கள் அந்த வெள்ளை முதலாளிகள்—தோட்டம் போட்ட முதலாளிகள்.

அவர்களுக்கு உதவியது இந்தியாவை ஆண்ட பிரிட்டிஷ் அரசாங்கம்.

ஆயிரக் கணக்கில் மக்களைத் திரட்டி அனுப்பினார்கள். பல்லாயிரக் கணக்கான மக்கள் கடல் கடந்து சென்றார்கள்; வயிற்றுப் பிழைப்புக்காகத் தேயிலைத் தோட்டங்களில் கூலிகளாக அமர்ந்தார்கள்; காப்பித் தோட்டங்களில்

வேலைக்கு அமர்ந்தார்கள்; ரப்பர் தோட்டங்களில் வேலைக்கு அமர்ந்தார்கள்.

பட்டினியால் வாடிய இந்த மக்கள் அரை வயிற்றுக் கஞ்சி பெற்றார்கள். வஞ்சனையின்றிப் பாடுபட்டார்கள். ஆனால், அந்த வெள்ளை முதலாளிகள் என்ன செய்தார்கள்? இவர்களை மனிதர்களாகவா நடத்தினார்கள்? இல்லை; இல்லை. நாயினும் கேவலமாக நடத்தினார்கள். பன்றிகளைப்போல் நடத்தினார்கள். ஏழை இந்திய மக்கள்! எவரிடம் போய் முறையிடுவர்? எவரிடம் தங்கள் துயரத்தைக் கூறுவர்? கடல்கடந்த அந்தப் பகுதியிலே ஆதரவான வார்த்தை கூறுவார் எவர்? எவரும் இலரே! மனம் புழுங்கினர்.

இவர்களது நிலையறிந்த இந்திய தேசிய காங்கிரஸ் என்ன செய்தது? கிளர்ச்சி செய்யத் தொடங்கியது. இந்திய நாடு முழுவதும் கூட்டங்கள் நடைபெற்றன. கடல் கடந்த இந்தியர் நிலைபற்றி இக் கூட்டங்களில் எடுத்துக் கூறப்பட்டது.

இந்த சமயத்திலேதான் 'கரும்புத் தோட்டத்திலே' என்ற பாடலைப் பாடினார் பாரதியார்.

பிஜித் தீவுக்கு ஆயிரக் கணக்கான இந்தியர்கள் சென்றார்கள். அங்கேயுள்ள கரும்புத் தோட்டங்களிலே வேலைக்கு அமர்ந்தார்கள். அவர்களது வாழ்க்கை எவ்வளவு மோசமாயிருந்தது என்பதை இந்தப் பாடலிலே பாரதியார் எடுத்துக் காட்டியுள்ளார்.

அந்த நாளிலே, பொதுக் கூட்டங்கள்தோறும் இந்தப் பாடல் பாடப்பட்டது. நாடக மேடைகளிலே இந்தப் பாடல் பாடப்பட்டது. பாடலைக் கேட்ட மக்கள் கண்ணீர் சொரிந்தார்கள். வாய்விட்டு அழுதார்கள்.

அத்தகைய உணர்ச்சியை உண்டு பண்ணிய பாடல் இது.

நம்முடைய விடுதலைப் போரில் மட்டும் பாரதியார் கருத்துச் செலுத்தினர் என்று கருதல் வேண்டாம். பிற நாடுகளில் நடைபெற்ற மக்கள் எழுச்சிகளையும் கண்டார்; கவனித்தார்; அவற்றுடன் தோழமை பூண்டார்; தமது பத்திரிகையில் எழுதினர்.

எகிப்து நாட்டின் விடுதலைப் போராட்டத்தை முன்னின்று நடத்தியவர் முஸ்தாபா கமால் பாஷா என்பவர். லண்டன் நகரில் வசித்த நமது இந்திய தேசாபிமானிகளுக்கு அவரை அறிமுகம் செய்து வைத்தனர் அயர்லந்து தேசாபிமானிகள்.

"சென்ற ஜுலை மாதம் 24ந் தேதி லண்டன் இஸ்லாமிய சங்கத்தார், முஸ்தாபா பாஷாவிற்கு விருந்தளித்து உபசரணைகள் செய்தார்கள். லண்டன் வந்திருக்கும் இந்தத் தேச பக்த சிரோமணி பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரின் குறைகளை எடுத்துக் கூறுவதில் சிறிதேனும் அச்சமற்றவர். ஈஜிப்டு நாடு சுயாதீனம் பெற வேண்டும் என்பதில் இவருக்குள்ள ஆர்வம் வரம்பற்றது.......இந்திய மீட்டிங்கில் அநேக இந்திய மாதர்களும் கனவான்களும் வந்திருந்தார்கள். அச்சமயத்தில் பாரத கண்டத்தின் உத்தம புத்திரராகிய சியாம்ஷி கிருஷ்ணவர்மா மேற்படி ஈஜிப்டிய தேச பக்தர் விஷயத்தில் தமக்குள்ள பெருமதிப்பைப் பற்றிப் பேசினர். சுயாதீனத்தின் மகிமையைப் பற்றி கிருஷ்ணவர்மா பேசிய போது, கேட்போருக்கெல்லாம் மயிர்க் கூச்சலுண்டாகும் படியாக இருந்தது. "யுத்தம் கூடாது. அமைதிவேண்டியது தான். அது அடிமைத் தன்மையுடன் கூடிய பேடி அமைதியாக இருக்கக் கூடாது. சுயாதீனத்துடன் கலந்ததாக

இருக்க வேண்டும். சுயாதீனத்தை இழப்பதைக் காட்டிலும் மரணமே விசேஷமானது" என்று கிருஷ்ணவர்மா சொன்னார். கிருஷ்ணவர்மாவின் பிரசங்கத்தைக் கேட்ட உடனே கனம் தங்கிய முஸ்தாபா பாஷா மகா சந்தோஷ மடைந்து, உடனே எழுந்து வந்து கிருஷ்ணவர்மாவுடன் கை குலுக்கி அன்பு பாராட்டினார். சுயாதீன தேவதையின் தொண்டர்களாகிய இவ்விரண்டு மகான்களும் கை குலுக்கியபோது சபையோர் பேரானந்தம் அடைந்தார்கள்."

(இந்தியா 18-8-1906)

ஆயிரத்துத் தொளாயிரத்து ஆறும் ஆண்டிலே, ருஷ்யாவைப் பற்றி ஐந்து கட்டுரைகள் எழுதினார் பாரதியார். இவை ஐந்தும் குறிப்பிடத்தக்க சிறப்பு வாய்ந்த கட்டுரைகள் ஆகும்.

"ஜார் சக்கரவர்த்தியின் அநீதிச் சிங்காதனம் சிதைந்து, கொடுங்கோன்மை துண்டு துண்டாகக் கழிவு பெற்று வரும் ருஷ்யாவில் அமைதி நிலைக்க இடமில்லை."

(இந்தியா—30-6-1906)

"ருஷ்ய ஜனங்களாகிய ஆடுகள் மீது அரசேற்றும் கடுவாய் அரசனும், அவனது ஓநாய் மந்திரிகளும், நெடுங் காலம் தரித்திருக்க மாட்டார்கள். இவர்களின் இறுதிக் காலம் வெகு சமீபமாக நெருங்கி விட்டதென்பதற்கு தெளிவான பல சின்னங்கள் புலப்படுகின்றன. நீதி ஸ்வரூபியாகிய சர்வேசனது உலகத்திலே அநீதியும் ருஷ்ய ஓநாய் தன்மைகளும் நிலைக்கமாட்டா."

(இந்தியா—21-7-1906)

"இப்பொழுது மறுபடியும் பெரும் கலகம் தொடங்கி விட்டது. ருஷ்ய சக்கரவர்த்தியின் சிங்காதனம் இது வரை எந்தக் காலத்திலும் ஆடாதவாறு அத்தனை பலமாக

இருக்க, இப்போது ஆடத் தொடங்கி விட்டது.........
சுயாதீனத்தின் பொருட்டும், கொடுங்கோன்மை
நாசத்தின் பொருட்டும் நமது ருஷ்யத் தோழர்கள் செய்து
வரும் உத்தமமான முயற்சிகள் மீது ஈசன் பேரருள்
செலுத்துவாஞக."

(இந்தியா—1-9-1906)

ஆயிரத்துத் தொளாயிரத்துப் பதினேழாம் ஆண்டு, ருஷ்யாவிலே மாபெரும் புரட்சி தோன்றியது. ஜார் வீழ்ந்தான்; மக்கள் புரட்சி வெற்றி கண்டது. அப்போது பாரதியார் பத்திரிகை எதுவும் நடத்தவில்லை. எனினும், ருஷ்யப் புரட்சி கண்டு அவர் மகிழ்ந்தார். கொடுங்கோலன் ஜார்மீது ஆத்திரம் கொண்டார். ஆத்திரம் பாடலாகப் பரிணமித்தது. புரட்சிக்காரர் மீது தோழமை, அன்பு கொண்டார். அது தோழமை வாழ்த்தாக மலர்ந்தது.

**மாகாளி பராசக்தி உருசிய நாட்**
**டினிற் கடைக்கண் வைத்தாள் ஆங்கே**
**ஆகாவென்றெழுந்தது பார் யுகப்புரட்சி**
**கொடுங்கோலன் அலறி வீழ்ந்தான்**

இந்தப் பாடல் பிறந்தது. இதிலே எத்தகைய உற்சாகம்! எத்தகைய மகிழ்ச்சி! ஜார் ஆட்சியின் கொடுமைமீது அவருக்கு ஏற்பட்ட சினம், அடுத்த சில அடிகளிலே பொங்குதல் காணலாம்.

இத்தகைய முடிவை 1906-ம் ஆண்டிலேயே முன்னதாக உணர்ந்தார்; அறிந்தார். தமது கருத்துப்படியே புரட்சி சேனை வெற்றி கண்டது கேட்டு, மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்துப் பாடுகிறார் பாரதியார்.

ருஷிய மக்களின் விடுதலையிலேயே ஆசிய மக்களின் விடுதலையைக் கண்டார் பாரதியார். ஆசிய நாடுகள் இனி

சும்மா இரா என்றுணர்ந்தார். ருஷ்யப் புரட்சியின் எதிரொலி, ஏனைய ஆசிய நாடுகளிலும் கேட்கும் என்றுணர்ந்தார்.

இந்திய நாடு விரைவில் விடுதலை பெறுதல் உறுதி என்று கண்டார். விடுதலை! விடுதலை! விடுதலை என்று முழங்கினார்.

ஏழையென்றும் அடிமை யென்றும்
எவனுமில்லை —ஜாதியில்
இழிவு கொண்ட மனிதரென்பது
இந்தியாவில் இல்லையே.

இவ்வாறு விடுதலைப் போர் முரசு கொட்டினார்.

விடுதலை பெற்ற இந்திய சமுதாயம் எப்படியிருக்க வேண்டும்? பாரதி பாடுகிறார்.

முப்பது கோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொதுவுடைமை
ஒப்பிலாத சமுதாயம்
உலகத்துக் கொரு புதுமை

மேற் கூறிய பாடல் முற்றும் படித்துப் பாருங்கள். இந்தக் கருத்து எப்படி வந்தது? எங்கிருந்து வந்தது?

ஆயிரத்துத் தொளாயிரத்துப் பதினேழாம் ஆண்டு ருஷ்யாவிலே நடந்த புரட்சிதான் பாரதிக்கு இக்கருத்தை வழங்கியது எனலாம்.

பொதுவுடைமையிலே உளம் பற்றிய பாரதி வேறு எவ்விதப் பாடல் பாட வல்லார்? பாரத சமுதாயம் பொது வுடைமை சமுதாயமாக மலர்தல் வேண்டும் என்று அவர் பாடியதில் வியப்பு ஏது? எதுவுமில்லை.

ஒரு நாடு; செழிப்புமிக்க நாடு; செல்வம் கொழிக்கும் நாடு. அந்த நாட்டை ஆளும் அரசன் மிக்க புகழுடன் விளங்குகிறான். பிற நாட்டினர் பலர் வருகின்றனர்; அந்த அரசனை வணங்குகின்றனர்; பொன்னும் மணியும் கொணர்ந்து கொட்டுகின்றனர்;. புகழ்கின்றனர். இதனைப் பார்க்கிறான் வேறு ஓர் அரசன். இதயம் புழுங்கு கிறான்; பொறாமையால் மனம் நைந்து போகிறான்.

தீச் செயல் நற்செயல் ஏதெனினும்
ஒன்று செய்து நாம்—அவர்
செல்வங் கவர்ந்தவரை விட
வேண்டும் தெருவிலே

என்று எண்ணுகிறான். செயல் நன்றோ, தீதோ எதுவாயினும் சரியே. செயல் பற்றிய கவலை அவனுக் கில்லை. அவனுடைய எண்ணம் ஒன்றே. அதாவது, அந்த நாட்டைக் கவர்தல் வேண்டும். அந்த நாட்டின் செல்வத்தைக் கொள்ளை கொள்ள வேண்டும். அந்த நாடாள்வோரை அடிமை கொள்ளல்வேண்டும். அந்த நாட்டு எழிலரசியைத் துகில் உரிந்து மானமிழக்கச் செய்தல் வேண்டும். இதுவே அவனது ஆசை,

இந்த ஆசை நிறைவேறுவது எப்படி? படைதிரட்ட லாமா; போர் தொடுக்கலாமா?

பொறாமை கொண்ட இந்த அரசனுக்கு ஒரு மந்திரி; துர்மந்திரி. அவன் என்ன சொல்கிறான்?

வெஞ்சமர் செய்திடுவோ மெனில்—அதில்
வெற்றியும் தோல்வியும் யார்கண்டார்

என்று சொல்கிறான். போர் என்றால் அதிலே வெற்றி பெற்றாலும் பெறலாம்; தோல்வி அடைந்தாலும் அடையலாம்,

"அது நம் கையில் இல்லை. ஆகவே நிச்சயம் வெற்றி கிட்டக்கூடிய முறையைக் கடைப்பிடிக்க வேண்டும்."

இவ்வாறு போதிக்கிறான் அந்த துன்மந்திரி. "தந்திரத்தால்—சூதால்—அவரை வெற்றி கொள்ளவேண்டும்." என்கிறான்.

அதன்படியே சூதினால் அந்த நாட்டைக் கவர்கிறான் செல்வத்தைக் கொள்ளை கொள்கிறான். நாட்டு மன்னரை அடிமை கொள்கிறான். அந்த நாட்டின் எழிலரசியை மானபங்கம் செய்கிறான். முடிவு என்ன?

செல்வமும் நாடும் இழந்தவர் சீறுகின்றார். அடிமை கொண்ட மன்னனைப் போரிலே மாய்த்து வஞ்சம் தீர்க்கச் சபதம் செய்கிறார். இழந்த நாட்டை மீட்கச் சபதம் செய்கிறார். அடிமைத் தளையை முறிக்கச் சூளுரைக்கிறார். அந்த நாட்டு எழிலரசியும் அவ்வாறே சூளுரைக்கிறாள்.

இவ்வளவில் கதை முடிகிறது.

இந்தக் கதை எங்கே உளது? மகாபாரதத்தில் உளது. மகாபாரதக் கதையின் சுருக்கமே இதுதான்.

இந்தக் கதையை எடுத்துக்கொண்டு பாடுகிறார் பாரதி. 'பாஞ்சாலி சபதம்' என்று இதற்குப் பெயர் சூட்டுகிறார்.

நமது கேள்வி இதுதான். பாரதக் கதை பழம் பெரும் கதை. நாட்டுமக்கள் அறிந்த கதை. ஒவ்வொருவர் வீட்டுத் திண்ணையிலும் பேசப்படும் கதை. இந்தக் கதையை பாரதி ஏன் பாடவேண்டும்?

பாரதத்தில் கதைக்குத்தானா பஞ்சம்! எவ்வளவோ கதைகள் காணப்படுகின்றனவே! அவற்றில் ஏதாவது ஒன்றினை பாரதி பாடியிருக்கலாமே!

சூதாடி நாடு கவர்ந்த இந்தப் பகுதியை மட்டும் எடுத்துக் கொண்டாரே! அது ஏன்? பாஞ்சாலியின் துகில் உரி படலத்தைப் பாடினாரே! அது ஏன்? பின்னே அடிமைப் பட்டோர் அடிமை கொண்டவர் மீது போர் தொடுத்து உயிர் குடிப்பதாகச் சபதம் செய்த பகுதியைப் பாடினாரே! அது ஏன்? 'பாஞ்சாலி சபதம்' என்று மகுடமிட்டாரே? அது ஏன்?

சத்ரபதி சிவாஜி தமது சேனைக்குக் கூறியதாகச் சுமார் 180 அடிகள் பாடியிருக்கிறாரே! ஏன் பாடினார்.?

குருகோவிந்தரைப் பற்றிப் பாடியிருக்கிறாரே! ஏன் பாடினார்? பாரதியின் நோக்கம் என்ன?

நோக்கம் ஒன்றே. அதாவது, மக்களைத் தட்டி எழுப்புதல். சோர்வுற்ற மக்களின் சோர்வு போக்குதல்: எழுச்சியூட்டுதல்! எழுச்சி! எழுச்சி! எழுச்சி!

அந்த நாளிலே தேசபக்தர் எல்லாருமே இந்த உத்தியைத்தான் கையாண்டனர். அதாவது, கதைமூலம் கருத்தைத் தெரிவித்தல்.

இந்திய சரித்திரத்திலே காணப்படும் எழுச்சிகளை எல்லாம் விவரிப்பார்கள். அதன்மூலம் மறைமுகமாகத் தங்கள் கருத்தை வலியுறுத்துவார்கள்.

கதைதான் மக்கள் மனத்திலே ஆழமாகப் பதியும். எனவே, கதை கூறுவதன்மூலம் கருத்தை வலியுறுத்துவார்கள்.

இதே உத்தியைத்தான் பாரதியும் கையாண்டிருக்கிறார்.

ஆங்கிலம் கற்றவர்கள் 'பார்ம்' என்றும் 'கண்டெண்ட்' என்றும் சொல்வார்கள்.

'பாரம்' என்பது என்ன? 'பாரம்' என்ருல் வடிவு, அமைப்பு என்று பொருள்.

வடிவு யாது? அமைப்பு யாது? பாரதி பாடல்களின் வடிவம் யாவும் பழையனவே. பாட்டின் அமைப்பு பழைய அமைப்புதான்.

நொண்டிச்சிந்து, ஒருவகைப் பாடல் வடிவம்; அமைப்பு. இது புதியதா? இல்லை. வடிவம் பழைய ஒன்றுதான். இந்த வடிவத்தையே அவர் பல பாடல்களில் அமைத்திருக்கிருர்.

நெஞ்சு பொறுக்குதில்லையே!—இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்து விட்டால்

இது நொண்டிச் சிந்து. ஆனால் இந்த சிந்தின் 'கண்டென்ட்' என்ன? அதாவது சிந்திலே பாடப்படும் பொருள் என்ன? பாடப் படும் பொருள் புதிது.

சிந்து பழையது; சிந்திலே கூறப்படும் பொருள் புதிது.

இதே மாதிரி கும்மியை எடுத்துக் கொள்வோம். 'கும்மி' எனப்படும் பாடல் அமைப்பு பழைய ஒன்றே. ஆனால், பாரதியார் அந்தப் பழைய கும்மி மூலம் புதிய கருத்தைச் சொல்கிருர். அதுவே 'பெண்கள் விடுதலைக் கும்மி.'

கும்மியடி தமிழ் நாடு முழுதுங்
குலுங்கிடக் கை கொட்டிக் கும்மியடி

பாடல் வடிவம் என்னவோ பழைமையானதுதான். ஆனால், அதிலே சொல்லப்படும் கருத்து புதியது. 'பாரம்' பழையது; 'கண்டெண்ட்' புதியது.

ஜாதி மதங்களைப் பாரோம்—உயர்
ஜன்மம் இத்தேசத்தில் எய்தினராயின்

இந்தப் பாடல் வடிவமும் பழைய ஒன்றே.

ஐந்து கல்லால் ஒரு கோட்டை—இந்த
ஆனந்தக் கோட்டைக்கு ஒன்பது வாயில்

இது தெருவிலே பண்டாரங்கள் பாடிவரும் பாட்டு. இந்தப் பாட்டின் வடிவம் பழையது.

இந்தப் பழைய வடிவத்தை எடுத்துக் கொண்டார் பாரதியார். அதிலே புதிய கருத்தைப் புகுத்தினார்.

இவ்வாறு பழைய வடிவத்திலே புதிய கருத்தை ஏன் புகுத்தினார்? காரணம் என்ன? காரணம் ஒன்றே.

அதாவது, இந்தப் புதிய கருத்து சாதாரண மக்களிடையே பரவுதல் வேண்டும். சாதாரண மக்களிடையே பழக்கத்தில் இருக்கிறது நொண்டிச் சிந்து. சாதாரண மக்களிடத்திலே பழகிவருவது கும்மி! சாதாரண மக்களிடையே பழக்கத்திலிருப்பது பண்டாரப் பாட்டு. அதாவது தாயுமானவர் ஆனந்தக் களிப்பு எனப்படுவது.

எனவே, இந்த சந்தத்தில்—மெட்டில்—வடிவில் பாடினால் பாமர மக்களிடையே புதிய கருத்து எளிதில் பரவும் என்பதே பாரதியின் கருத்து. எனவே, பழைய வடிவில் புதிய கருத்தைப் பாடினார்.

மகா பாரதக் கதை மிகப் பழைய ஒன்று. எனினும் அதிலே புதிய கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறார் பாரதி. அக்கருத்து யாது?

ஆங்கிலேயர்கள் வாணிபத்தின் பொருட்டுப் பாரத நாட்டுக்கு வந்தார்கள். இந்த நாட்டின் செல்வச் செழிப்பைக் கண்டார்கள். இச் செல்வம் முழுதும் கவர்ந்துகொள்ளத் திட்டமிட்டார்கள். போர் செய்தார்களா? இல்லை. தந்திரத்தால்—சூதால்— இந்த நாட்டுச் செல்வத்தைக் கொள்ளையிட்டார்கள்.

இந்த நாட்டு மக்களை அடிமை கொண்டார்கள். இவர்களது நாட்டையும் கவர்ந்து கொண்டார்கள்.

டாக்கா மஸ்லின் என்ற புகழ் பெற்ற துணிகளை உரிந்து கொண்டார்கள்.

இவ்வாறு நாடிழந்து, செல்வம் இழந்து, அடிமைப் பட்ட மக்கள் சபதம் செய்கிறார்கள்.

தம்மை அடிமை கொண்டோரைப் போரிலே வென்று, தங்கள் நாட்டையும் செல்வத்தையும் மீட்கச் சபதம் செய்கிறார்கள்.

இந்த உட்கருத்தைத்தான் 'பாஞ்சாலி சபதம்' என்ற தலைப்புடன்கூடிய காப்பியத்தின்மூலம் நமக்கு அறிவிக்கிறார் பாரதி.

பாரதிக்கு இக்கருத்து எவ்வாறு தோன்றியது? 1907ம் ஆண்டு ஜனவரி மாதம் 26ந் தேதி பத்திரிகையிலே பாரதி எழுதுகிறார்:

"இந்தியாவை வாள் பலத்தினால் ஜெயித்தோம் என்று 'டைம்ஸ்' பத்திரிகை எழுதுவது பிரம்மாண்டமான பொய் என்று ஆரம்பத்திலேயே சொன்னோம். இது நம்முடைய சொந்த அபிப்பிராயம் மட்டுமன்று, ஸீலி என்ற புகழ் பெற்ற ஆங்கிலேய பண்டிதரும் இதே அபிப்பிராயத்தைத் தெரிவித்திருக்கிறார். உள்நாட்டிலே, குழப்பம் கொண்டிருந்த இத்தேசத்தை ஆங்கிலேய வர்த்தகக் கம்பெனியார் இந்தியப் படைகளையும், இந்தியப் பணத்தையும் வைத்துக் கொண்டு, தந்திரத்தினாலும், கபடத்தினாலும் ஜெயித்தார்களென்று மேற்படி ஆங்கிலேய பண்டிதர் விஸ்தாரமாக நிரூபணம் செய்திருக்கிறார். அவருடைய விவகாரங்களையும் சித்தாந்தத்தையும் மற்றொருமுறை தமிழில் மொழி பெயர்த்து எழுத உத்தேசித்திருக்கின்றோம்."

இவ்வாறு எழுதினார் பாரதியார்.

ஸர் ஜான் ஸீலி என்பவர் பிரிட்டனில் இருந்த பிரிட்டிஷ் வரலாற்று அறிஞர். 'இங்கிலாந்தின் விரிவு' என்ற தலைப்புடன் ஒரு நூல் வெளியிட்டார் அவர். இந்திய நாடு பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியானது எப்படி என்பதை அந்த நூலிலே அவர் விவரித்திருக்கிறார். ஆங்கிலேயர்கள் இந்த இந்திய நாட்டைச் சூதாலும், வஞ்சனையாலும் அடிமை கொண்டது எப்படி என்பதை அந்த நூலிலே விரிவாகக் காணலாம்.

விடுதலைப் போராட்டத்தின் தலை நாளிலே ஸீலி எழுதிய புத்தகம் இந்திய தேசபக்தர்களின் பைபிளாக விளங்கியது.

ஸீலி எழுதிய புத்தகத்தைத் தமிழிலே மொழி பெயர்த்து வெளியிட எண்ணினார் பாரதியார். ஆனால் அக்கால அரசியல் சூழ்நிலை அதற்கு இடம் தரவில்லை.

எனவே, இந்திய நாடு வஞ்சனையால், சூதால், அடிமை கொள்ளப்பட்டது என்ற கருத்தைப் பிரசாரம் செய்ய விரும்பினார். சூது மூலமே இந்திய நாட்டின் செல்வத்தை ஆங்கிலேயர்கள் கவர்ந்து செல்கிறார்கள் என்பதையும் பிரச்சாரம் செய்ய விரும்பினார். இவ்வாறு அடிமையான மக்கள் இழந்த சுதந்திரத்தை மீண்டும் பெறச் சபதம் செய்வதையும் பிரச்சாரம் செய்ய விரும்புகிறார்.

ஆக, இம் மூன்று அடிப்படைக் கருத்துக்களையும் வெளியிடுவதற்கு நல்லதோர் கருவி கிடைத்தது. அதுவே பாரதம். சூதாடல், அடிமை கொள்ளல், அடிமை நீங்கப் பொங்கி எழல். ஆகிய மூன்றையும் வலியுறுத்தும் பகுதியை எடுத்துக் கொண்டார். தாம் சொல்ல விரும்பிய கருத்தைச் சொல்லி விட்டார் பாரதி.

அதிலே 'சபதம்' என்ற சொல்—பாஞ்சாலி சபதம்— என்ற தலைப்பு அரசியலில் இடம் பெற்று விட்டது.

# முடிவு பெறுத கதை

பாரதியின் பெயரால் வெளிவந்துள்ள கட்டுரைகள் பல. கதைகளும் உள.

இவை யாவும் மகாகவி சுப்பிரமணிய பாரதி எழுதியவைதானு? ஐயம்.

இந்த ஐயப் பாட்டுக்குக் காரணம் என்ன? வரகவி அ. சுப்பிரமணிய பாரதி என்ற பெயர் கொண்டவர் ஒருவரும் இருந்தார். அவரை நான் கண்டிருக்கிறேன்; பேசியதும் உண்டு.

அந்தக் காலத்தில் அவரும் சுதேசமித்திரனுக்குக் கதைகளும் கட்டுரைகளும் எழுதிவந்தார்.

எனவே, பெயர் கண்டு எல்லாம் மகாகவி பாரதி எழுதியவையே என்று முடிவு செய்வது சரியாகுமா? யோசித்தல் வேண்டும்.

பாரதியின் கதைகளில் முற்றுப் பெறுதவை இரண்டு. ஒன்று "சின்னச் சங்கரன் கதை." மற்ருென்று "சந்திரிகையின் கதை" "சின்னச் சங்கரன் கதை" சுப்ரமண்ய சிவாவின் பத்திரிகையான 'ஞான பாநு'வில் வெளிவந்தது. ஆருவது அத்தியாயத்திற்கு மேல் தொடரவில்லை.

சின்னச் சங்கரன் கதையைப் பற்றிய குட்டிக் கதை யொன்றுண்டு. சின்னச் சங்கரன் கதையை எழுதினுர்

பாரதி. புதுச்சேரியில் இருந்த தம் நண்பர் குழாத்திற்குப் படித்துக் காட்டினார். கதை கேட்டதும் எல்லோரும் குலுங்க குலுங்கச் சிரித்தனர். அப்போது அவர் வீட்டில் முருகேசன் என்றொரு சிறுவன் 'எடுபிடி' வேலைக்காரனாக இருந்தான்.

ஒரு நாள் முருகேசன் மாயமாய் மறைந்தான். 'சின்னச் சங்கரன் கதை'யின் கையெழுத்துப் பிரதியும் எங்கோ போய்விட்டது. நண்பர்கள் வற்புறுத்தவே மீண்டுமொரு முறை பாரதி அதே கதையை எழுதினார். 'ஞான பாநு'வில் அது வெளிவந்தது. அந்தக் கதை இதோ.

## சின்னச் சங்கரன் கதை

நமது நாட்டுக் கதைகளிலே பெரும்பாலும் அடி தொடங்கிக் கதா நாயகனுடைய ஊர், பெயர், குலம், கோத்திரம், பிறப்பு வளர்ப்பெல்லாம் கிரமமாகச் சொல்லிக்கொண்டு போவது வழக்கம். நவீன ஐரோப்பிய கதைகளிலே பெரும்பகுதி அப்படியல்ல. அவர்கள் நாடகத்தைப் போலவே கதையை நட்ட நடுவில் தொடங்குகிறார்கள். பிறகு, போகப் போகக் கதாநாயகனுடைய பூர்வ விருத்தாந்தங்கள் தெரிந்து கொண்டே போகும். எங்கேனும் ஒரு காட்டில், ஒரு குளக்கரையில், ஒரு தனி மேடையில் இவன் தனது காதலியுடன் இருப்பான். அப்போது கதையின் ஆரம்பங்களை எடுத்து விரிப்பான். இது அவர்களுடைய வழி.

நான் இக் கதையிலே மேற்படி இரண்டு வழிகளையும் கலந்து வேலை செய்யப் போகிறேன். சின்னச் சங்கரன்—நம்முடைய கதாநாயகன் விருத்தாந்தங்களை மாத்திரம் பூர்வத்திலிருந்து கிரமமாகச் சொல்லிவிட்டுக் கதையில் வரும் மற்றவர்கள் விஷயத்திலே கொஞ்சம் ஐரோப்பிய

வழியைத் தழுவிக்கொண்டு செல்லக் கருதுகிறேன். சர்வ கலாநிதியாகிய சரஸ்வதி தேவி எனது நூலில் கடைக்கண் வைத்திடுக.

## பிஞ்சிலே பழுத்தது

சின்னச் சங்கரன் பிஞ்சிலே பழுத்துவிட்டான். நம்முடைய கதாநாயகனுடைய பெயர் அத்தனை நயமில்லை என்றும், கொஞ்சம் கவுரவக் குறைவாக இருக்கிறது என்றும், எவரும் கவலையுறலாகாது. போகப் போக இந்தப் பெயர் மாறிக்கொண்டே போகும். கடைசியில் படிப்பவர்கள் பயப்படும்படி அத்தனை படாடோபமாக முடியும்படி ஏற்பாடு செய்கிறேன். சின்னச் சங்கரன், சங்கரன், சங்கரய்யர், சங்கர நாராயண அய்யர், சங்கர நாராயண பாரதியார் இத்யாதி, இத்யாதி. சின்னச் சங்கரன் கவுண்டனூர் இங்கிலீஷ் பள்ளிக்கூடத்திலே மூன்றுவது வகுப்பில் படிக்கிறுன். அந்தக் காலத்தில் இதை 'மிடில் ஸ்கூல்' என்பார்கள். பையனுக்கு வயது பன்னிரண்டு அல்லது பதின்மூன்று இருக்கும். இதற்குள் தமிழில் புலவராய் விட்டான். கவுண்டனூரில் ஜலம் குறைவு; பணம் குறைவு; நெல் விளைவு கிடையாது; வாழை தென்னை, மா, பலா இவையெல்லாம் வெகு துர்லபம்; பூக்கள் மிகவும் குறைவு; புலவர்களுக்கு மாத்திரம் குறைவில்லை. அந்தச் சரக்கு மலிவு. தமிழில் சங்கரன் பலபல நூல்கள் பல பல காவியங்கள் படித்து முடித்திருந்தான். இவை பெரும்பாலும் 'சிங்கார' ரஸம் மிகுந்திருப்பன. இந்த ஜாதிக் காவியங்கள்தான் சங்கரனுக்கும் பிடிக்கும். கவுண்டனூர் புலவர்கள் எல்லோருக்கும் இப்படியேதான். மன்மத விகாரத்தைப் புகழ்ந்து பேசியிருக்கும் நூல்களும் தனிப்பாடல்களும் அவ்வூரிலே வெகு சாதாரணம். சங்கரனுக்கும் இவை வெகு சாதாரணமாயின. "பாஷைகளிலே

15

தமிழ் சிறந்தது. தமிழில் இருளப்ப நாயக்கன் காதல், செறுவூர்க் கோவை, பிச்சித்தேவன் உலாமடல் முதலிய காவியங்கள் நிகரற்ற பெருமையுடையன. இவற்றிலுள்ள சுவை உலகத்தில் வேறெதிலுமேயில்லை" என்பது சின்னச் சங்கரனுடைய கொள்கை. சங்கரன் கொஞ்சம் குள்ளனாக இருந்தபடியால் பள்ளிக்கூடத்தில் மற்றப் பிள்ளைகள் அவனுக்குச் 'சின்னச் சங்கரன்' என்று பெயர் வைத்து விட்டார்கள்.

தென் பாண்டி நாட்டிலே, பொதிய மலைக்கு வடக்கே இருபது காத தூரத்தில் பூமி தேவிக்குத் திலகம் (வைத்து அது உலர்ந்து போயிருப்பது) போலக் கவுண்டபுரம் என்ற நகரம் நிகழ்ச்சி பெற்றது. அதைத்தான் பாமர ஜனங்கள் கவுண்டனூர் என்பார்கள். இந்நகரத்தில் நமது கதை தொடங்கும் காலத்திலே மகா கீர்த்திமானாகிய ராமசாமிக் கவுண்டரவர்கள் அரசு செலுத்தி வந்தனர். வெளியூர் பாமர ஜனங்கள் இவரை 'ஜமீந்தார்' என்பார்கள். கவுண்டபுரத்திலே இவருக்கு "மகா ராஜா" என்றும் பட்டம். கவுண்டரின் மூதாதைகளின்மீது பண்டைக் காலத்துப் புலவர்கள் பாடியிருக்கும் "இன்ப விஸ்தாரம்" முதலிய நூல்களை அவ்வூர்ப் புலவர்களும், அவர்களைப் பின்பற்றி ம்ற்ற ஜனங்களும் வேதம் போலக் கொண்டாடு வார்கள்.

ராமசாமிக் கவுண்டர் (இவருடைய முழுப்பெயரைப் பட்டங்கள் சகிதமாக பின்பு சொல்லுகிறேன்.) தமிழில் அபிமானமுடையவராதலால் கவிதை பாடத் தெரிந்தவர் களுக்கு அவ்வூரில் மிகுந்த மதிப்புண்டு. சின்னச் சங்கரனுக்குப் பத்து வயது முதலாகவே கவிபாடும் தொழிலில் பழக்கமுண்டாய் விட்டது. எப்போதும் புலவர்களுடனேதான் சகவாஸம். ஒத்த வயதுப் பிள்ளை

களுடன் இவன் சேர்ந்து போவதில்லை. எங்கேனும் மதன நூல்கள் வாசித்து பலர் உட்கார்ந்து ரஸித்துக் கொண்டிருப்பதைக் கண்டால் இவனும் அங்கே போய் உட்கார்ந்து விடுவான். பள்ளிக்கூடத்துப் பாடங்க ளெல்லாம் கிருஷ்ணார்ப்பணந்தான். பூகோள சாஸ்திரம், கணக்கு, சுகவழி முதலிய எத்தனையோ பாடங்கள் கீழ் வகுப்புகளிலே இவனுக்குக் கற்றுக் கொடுக்க முயற்சி செய்தார்கள். ஒன்றிலும் இவன் கருத்தைச் செலுத்த வில்லை. இவனுக்கு எப்போதும் ஒரே சாஸ்திரம், ஒரே கணக்கு, ஒரே வழிதானுண்டு.

"சாற்றுவதும் காமகலை சாதிப்பதும்
போற்றுவதும் காமனடிப் போது"

கவுண்டனூரர் புலவர் கூட்டத்திலே சங்கரன் ஒருவனாகி விட்டான். சுருக்கம் அவ்வளவுதான். இவன் பாட்டுக் களில் சிலசில பிழைகள் இருந்தபோதிலும் இவனுடைய சிறு வயதைக் கருதி அப்பிழைகளை யாரும் கவனிப்பதில்லை. சுவை மிகுதியைக் கருதி இவனை மிதமிஞ்சி புகழ்வோர் பலராயினர். ஒரு பாட்டில் எத்தனைக்கெத்தனை அசுத்த மான வார்த்தைகள் சேர்கின்றனவோ அத்தனைக் கத்தனை சுவையதிகமென்பது கவுண்டனூரர்ப் புலவர்களுடைய முடிவு. எனவே, பையன் நாவும் கையும் சிறிதேனும் கூசாமல், காமுகர்களுக்கு வேண்டிய பதங்களைத் தாராள மாகப் பொழிந்து பாடல்கள் செய்யலானான். சங்கரனுடைய பந்துக்களுக்கெல்லாம் இந்த விஷயத்தில் பரமானந்தம்.

இவனுக்கு மூன்று வயதிலே தாய் இறந்துபோய் விட்டாள். தகப்பனார் பெயர் சுப்பிரமணிய அய்யர். அவர் ராமசாமிக் கவுண்டருடைய ஆப்தர்களிலே ஒருவர். இங்கிலீஷ் படித்துப் பழைய காலத்துப் பரீக்ஷை

ஏதோ தேறி, சர்க்காரி உத்தியோகத்துக்குப் போகாமல் வியாபாரஞ் செய்து சிறிது பணம்தேடி வைத்து விட்டார். இவருக்கு இரண்டாந்தாரம் விவாகமாகி விட்டது. எனவே தனது தாயைப் பெற்ற பாட்டனும் பாட்டியும் சங்கரனைப் பிராணனுகவே நினைத்துவிட்டார்கள். சங்கரன் விளையாடுவதற்கு வேண்டுமென்று கேட்டால், தாத்தா தாம் பூஜை செய்யும் சிவலிங்கத்தைக்கூடக் கொடுத்து விடுவார். அத்தனை 'செல்லம்'. ஆனல் சிவலிங்கத்தைப் பற்றி யாதொரு விதமான பயத்துக்கும் இடமில்லை. பையன்தான் விளையாட்டில் புத்தி செலுத்தும் பழக்கம் இல்லையே! பையனுடைய கையும் காலும் வாழைத் தண்டைப் போலிருக்கும். பிராணசக்தி வெகு சொற்பம். நெஞ்சு அரையேமாகாணி அடி அகலம். கண்கள் ருதுவாகி நோய் பிடித்திருக்கும் கன்னிகளின் கண்களைப் போலி ருக்கும். முதுகிலே கூன். ஆணையினும், பெண்ணையினும் ஏதேனும் ஒரு புதிய முகத்தைப் பார்த்தால் கூச்சப் படுவான். தற்காலத்தில் நமது தேசத்துப் பள்ளிக்கூடங் களிலேயே பிள்ளைகளைப் பெண்களாக்கிவிடும் திறமை உபாத்திமார்களுக்கு அதிகமுண்டு. அத்துடன் கவிதையுஞ் சேர்ந்து விட்டது—கவுண்டனூர்க் கவிதை— பையனுக்கு ஜீவதாது மிகவும் குறைந்து பொய்மை நிறைந்த சித்த சலனங்கள் மிகுதிப்பட்டு விட்டன.

இந்த விநோதமான பிள்ளையைத் தாத்தாவும் பாட்டியும் ஏதுமறியாத வெறும் பொம்மை போலப் பாராட்டினர்கள், 'பால் குணம் மாருத குழந்தை' என்பது அவர்களுடைய கருத்து. அவனுக்கென்று தனியாக ஒரு சுபாவமும், தனி சம்ஸ்காரங்களும் ஏற்பட்டதாகவே அவர்களுக்கு நினைப்பில்லை. அவனுடைய புலமை ஈசனுல் கொடுக்கப்பட்ட வரமென்றெண்ணினர்கள். ஏதுமறியாத குழந்தைக்கு இப்படிக் கல்வி ஏற்பட்ட ஆச்சரியத்தால்

அவர்களுக்கு அளவிறந்த மகிழ்ச்சி யுண்டாயிற்றேயல்லாது அவன் பாப்பா என்ற எண்ணம் மாறவில்லை. இரண்டு மூன்று தினங்களுக்கொருமுறை பாட்டி அவனுக்கு 'சாந்தி' கழிப்பாள். சுண்ணும்புக்கும், மஞ்சளுக்கும் செலவதிகம் — சங்கரனுக்குக் கண்பட்டது கழியும் பொருட்டாக.

தகப்பனுர் இவனை 'பையன்' என்று பேசுவார். இவன் முற்றிப்போன விஷயம் அவருக்குத் தெரியாது. இவனுடைய 'கீர்த்தி' புலவர்களுக்குள்ளே பரவி கவுண்டரவர்கள் செவிவரை எட்டிப்போயிற்று, இதிலிருந்து சுப்பிரமணிய அய்யருக்கு மிகுந்த சந்தோஷம். ஆனுல் இவன் பள்ளிக்கூடத்துப் பாடங்களை நேரே படிப்பதில்லை என்பதில் கொஞ்சம் வருத்தமுண்டு. இவனைப் பெரிய பரீக்ஷைகளில் தேறும்படி செய்து சீமைக்கனுப்பி, ஜில்லா கலெக்டர் வேலைக்குத் தயார் செய்யவேண்டும் என்பது அவருடைய ஆசை. அதற்கு இவன் புலவர்களிடம் சகவாஸம் செய்வது தான் பெரிய தடையென்பது அவருடைய புத்தியில் தட்டவில்லை. இவனுடைய மாமனுகிய கல்யாணசுந்தரம் முதலிய சில துஷ்டப் பையன்களுடன் சேர்ந்து விளையாடிக் கெட்டுப் போகிறுனென்றும், தாய் வீட்டார் கொடுக்கும் செல்லத்தால் தீங்குண்டாகிறது என்றும், இவ்விரண்டையும் கூடியவரை குறைத்துக்கொண்டு வரவேண்டுமென்றும் அவர் தீர்மானஞ் செய்தார்.

இனி, இவனுடன் ஒத்த வயதுள்ள பிள்ளைகள் ஆரம்பத்திலே சங்கரனை இகழ்ச்சியில் வைத்திருந்தார்கள். பிறகு நாளடைவில் சங்கரன் ஒரு 'வித்துவான்' ஆகி விட்டதைக் கண்டவுடனே அந்தப் பிள்ளைகளுக்கெல்லாம் அவனிடம் ஒருவிதமான பயமும் வியப்பும் உண்டாயின. 'இவன் நோஞ்சப்பயல்; ஒரு இழவுக்கும் உதவமாட்டான்'

என்று முன்போல வாய் திறந்து சொல்வதில்லை. மனத்திற்குள் அவ்வெண்ணத்தை அடக்கிவிட்டார்கள்.

பள்ளிக்கூடத்துக்குப் போன சங்கரனை உபாத்திமார் 'புலவரே, பலகையின் மேலே ஏறி நில்லும், என்பார்கள், பாடங்கள் நேரே சொல்லாதது பற்றி. நமது சின்னப் புலவர் பலகையின் மேலேறி நின்றுக் கொண்டு மனத்துக் குள்ளே எதுகைகளடுக்கிக்கொண்டிருப்பார். உபாத்தியாயர் கரும்பலகைமேல் கணக்குப் போட்டுக் கொண் டிருப்பார். இவன்,

"புலவன், அலவன், வலவன்
பலகை, அலகை, உலகை,
நில், நெல், வில், பல், சொல், அல், எல், கல், மல்,
வெல், வல்—
கணக்கு வணக்கு இணக்கு—"

என்று தனக்குள்ளே கட்டிக்கொண்டு போவான்.

வாத்தியார் 00. 2853......... என்று ஒரு கணக்குப் போட்டு முடிவு கட்டிக் கொண்டு போகையில், சங்கரனை நோக்கி, "சங்கரன்! புள்ளியை எந்த இலக்கத்தின் மேல் போடுகிறது? சொல் பார்ப்போம்!" என்பார். இவன் மறுமொழி சொல்லாமல் பித்துக்கொண்டவன் போலிருப் பான். அவர், "என்னடா விழிக்கிறாய்?" என்று கேட்டுத் திட்டிய பிறகு அடுத்த பையனிடம் வினவுவார்.

அடுத்தவன் ஏது சொல்கிறான் என்பதைக்கூட கவனி யாமல், இவன் மனத்திற்குள்,

விழி, இழி, கிழி, பிழி, வழி, அழி, பழி, மொழி, ஒழி, புள்ளி, உள்ளி, பள்ளி, அள்ளி, கிள்ளி, தெள்ளி, வெள்ளி என்று அடுக்கிக் கொண்டே போவான்,

தமிழ் பாடம் வரும்போது மாத்திரம் கொஞ்சம் கவனிப்பான். அதிற்கூட இலக்கணம் தடவும்.

இவனுடைய தகப்பனாரின் மதிப்பையும், ராமசாமி கவுண்டர் இவனிடம் தயவு பாராட்டுகிறாரென்பதையும் உத்தேசித்து உபாத்திமார் இவனை அதிகமாக அடித்துக் கொல்வதில்லை. 'இவன் கடைசிவரை உருப்படமாட்டான்' என்பது அவர்களுடைய முடிவு.

ஊரிலுள்ள பெண்குட்டிகள் எல்லாம் "சங்கரன் அப்பாவி" என்று சொல்லும். இவ்வாறு அவரவர் தத்தமக்கு ஒத்தபடி நினைத்துக்கொண்டு சங்கரன் பிரத்யேகமாக ஒரு வகையில் முதிர்ந்து வருகிறான். எல்லார் விஷயமும் இப்படியேதான். ஒருவனுடைய உள்ளியல்பை மற்றொருவன் முழுவதும் அறிந்து கொள்ளுதல் எக்காலத்திலும் சாத்தியமில்லை. அவனவனு டைய இயல்பு அவனவனுக்கே தெளிவாகத் தெரியாது. பிறனுக்கு எப்படி விளங்கும்?

பிள்ளைகளையும் பெண்களையும் பற்றி, தாய் தகப்பன் மார் கொண்டிருக்கும் எண்ணம் பெரும்பாலும் தப்பாகவே யிருக்கும். குழந்தைகளின் அறிவும் இயல்பும் எவ்வளவு சீக்கிரத்தில் மாறிச் செல்கின்றன வென்பதைப் பெற்றோர் அறிவதில்லை. 'பாப்பா, பாப்பா' என்று நினைத்துக் கொண்டே இருக்கிறார்கள். பதினாறு பதினேழு வயதாகும் போது, "அப்பப்பா; அப்பப்பா!' என்கிறார்கள்.

## ரங்கசாமிக் கவுண்டர் திருச்சபை.

மகாராஜ ராஜபூஜித மகாராஜ ராஜஸ்ரீ ராஜமார்த் தாண்ட சண்டப் பிரசண்ட அண்ட பகிரண்ட கவுண்டாதி கவுண்ட கவுண்டனாரதிப ராமசாமிக் கவுண்டரவர்

களுக்கு வயது சுமார் ஐம்பதிருக்கும். நல்ல கருநிறம். நரை பாய்ந்த மீசை, கிருதா. முன்புறம் நன்றாகப் பளிங்கு போல் தேய்க்கப்பட்டு, நடுத்தலையில் தவடு பாய்ந்து, பின் புறம் ஒரு சிறிய முடிச்சுப் போட்டு விளங்கும் முக்கால் நரையான தலை. நெடுந்தூரம் குழிந்த கண்கள், இமைப் புறங்களில் 'காக்கைகால்' அடையாளங்கள். பொடியினால் அலங்கரிக்கப்பட்ட மூக்கு. வெற்றிலைக் காவியினாலும் புகையிலைச் சாற்றினாலும் அலங்கரிக்கப்பட்ட பற்கள், குத்துயிரோடு கிடக்கும் உதடு. ஆபரணங்கள் பொருந்திய செவிகள். இருமல். அரையில் பட்டு ஜரிகை வேஷ்டி. விரல் நிறைய மோதிரங்கள், பக்கத்திலே வெற்றிலை துப்புவதற்கு ஒரு காளாஞ்சி. ஒரு அடைப்பைக்காரன்— இதுதான் ரங்கசாமிக் கவுண்டர்.

இவர் காலையில் எழுந்தால், இரவில் நித்திரை போகும்வரை செய்யும் தினசரிக் காரியங்கள் பின்வருமாறு:

காலை எட்டு அல்லது எட்டரைமணி வேளைக்கு எழுந்து கைகால் சுத்தி செய்து கொண்டு ஒன்பது மணி யானவுடன் பழையது சாப்பிட உட்காருவார். பழையதிற்குத் தொட்டுக் கொள்ளத் தமது அரண்மனை யிலுள்ள கறிவகை போதாதென்று வெளியே பல வீடுகளி லிருந்து பழங்கறிகள் கொண்டுவரச் சொல்லி வெகு ரஸமாக உண்பார். (அதாவது காலை 'லேகியம்' முடிந்த பிறகு. இந்த அபினி லேகியம் உருட்டிப் போட்டுக் கொள் ளாமல் ஒரு காரியங்கூடத் தொடங்க மாட்டார்; பார்ப் பார் எடுத்ததற்கெல்லாம் ஆசமனம் செய்யத் தவறாது இருப்பது போல.) பழையது முடிந்தவுடன் அந்தப் புரத்தை விட்டு வெளியேறி இவருடைய சபாமண்டபத் தருகேயுள்ள ஒரு கூடத்தில் நாற்காலியின் மீது வந்து படுத்துக் கொள்வார். ஒருவன் கால்களிரண்டையும்

பிடித்துக் கொண்டு இருப்பான். இவர் வெற்றிலைபோட்டு காளாஞ்சியில் துப்பியபடியாக இருப்பார்.

எதிரே ஆராவது உத்தியோகஸ்தர், வேலையாட்கள், கவுண்டனூரர்ப் பிரபுக்கள், இவர்களில் ஒருவன் வந்து கதை, புரளி, கோள்வார்த்தை, ஊர்வம்பு, ராஜாங்க விவகாரங்கள், ஏதேனும்— பேசிக்கொண்டிருப்பான். சில நாட்களிலே வெளிமுற்றத்தில் கோழிச் சண்டை நடக்கும். வெளி ஊரிலிருந்து யாரேனுமொரு கவுண்டன் ஒரு நல்ல போர்ச்சேவல் கொண்டு வருவான். அரமனைச் சேவலுக்கும் அதற்கும் சண்டைவிட்டுப் பார்ப்பார்கள். அரமனைச் சேவல் எதிரியை நல்ல அடிகள் அடிக்கும்போது, ஜமீந்தாரவர்கள், நிஷ்பக்ஷபாதமாக இரு பக்கத்துக் கோழிகளின் தாய், பாட்டி, அக்காள், தங்கை எல்லோரையும் வாய் குளிர வைது சந்தோஷம் பாராட்டுவார். களத்திலே ஆரவாரமும், கூக்குரலும், நீசபாஷையும் பொறுக்க முடியாமலிருக்கும்.

பெரும்பாலும், சண்டை முடிவிலே அரமனைக் கோழிதான் தோற்றுப்போவது வழக்கம். அங்ஙனம் முடியும்போது, வந்த கவுண்டன் தனது வெற்றிச் சேவலை ரங்கசாமி கவுண்டரவர்கள் திருவடியருகே வைத்து சாஷ்டாங்கமாக விழுந்து கும்பிடுவான். இவர் அச் சேவலைப் பெற்றுக் கொண்டு, அவனுக்கு நல்ல பாகை, உத்தரீயம், மோதிரம் ஏதேனும் சன்மானம் பண்ணி அனுப்பி விடுவார். பிறகு பழைய அரமனைச் சேவலைத் தள்ளி விட்டுப் புதிதாக வந்த சேவலை "சமஸ்தான வித்வானாக" வைப்பார்கள். அடுத்த சண்டையில் இது தோற்றுப் போய் மற்றொன்று வரும். எத்தனை வீரமுள்ள சேவலாக இருந்தாலும் கவுண்டனூரர் அரண்மனைக்கு வந்து ஒரு மாதம் இருந்தால் பிறகு சண்டைக்குப் பிரயோஜனப்

படாது. ஜமீன் போஷணையிலேயே அந்த நயமுண்டாகிறது.

பகல் ஒன்றரை மணிக்கு ஸ்நானம் தொடங்கும். வெந்நீரிலேதான் ஸ்நானம் செய்வார். ராமசாமி கவுண்டர் ஸ்நானஞ் செய்வதென்றால், அது சாதாரண காரியமன்று, ஜலத்தையெடுத்து ஊற்றுவதற்கு இரண்டு பேர். உடம்பு தேய்க்க இரண்டு பேர். தலை துவட்ட ஒருவன், உடம்பு துடைக்க ஒருவன், வேறு வேஷ்டி கொண்டு அரையிலுடுத்த ஒருவன், நேபாளத்து ராஜாவின் பிரேதத்துக்குக்கூட இந்த உபசாரம் நடக்காது.

ஸ்நானம் முடிந்தவுடனே பூஜை. ஜமீந்தார் பூக்களை வாரி வாரி முன்னே வைத்திருக்கும் விக்கிரகத்தின் மேல் வீசுவார். பூஜா காலத்தில் ஸ்தல பாகவதர்கள் வந்து பாடுவார்கள். சில சமயங்களில் சங்கீத விஷயமாக சம்பாஷணைகள் நடப்பதுண்டு. ஜமீந்தார் தாம் 'கவனம்' செய்த கீர்த்தனைகளைப் பாகவதர்களிடம் பாடிக்காட்டு வார். (சங்கீதத்திலும் சாஹித்தியத்திலும் ராமசாமிக் கவுண்டர் புலி. அந்த சங்கதி ஞாபகமிருக்கட்டும்.)

ஒருவன் சமஸ்தான வித்துவான் — அண்ணாத்துரை அய்யர், தோடி — நாராயணய்யங்கார், பல்லவி— வேதாசல குருக்கள் முதலிய வித்துவான்களனைவரும் வந்து கூடியிருந்தனர். அண்ணாத்துரை அய்யரை நோக்கி ஜமீந்தார் "நான் அடாணாவில் மானேயங்கே போன வகை யென்னடி' என்ற வர்ணமெட்டிலே பரமசிவன் மேல், ஒரு சாஹித்யம் பாரித்திருக்கிறேன். (ஒரு கீர்த்தனை செய்திருக்கிறேன் என்றர்த்தம்) அதை நீங்கள் "கேட்க வில்லையே" என்றார். 'உத்தரவாகட்டும்' என்றார் பாகவதர். (சொல்லு கேட்போம் என்றர்த்தம்.)

உடனே ஜமீந்தார் ஜலதோஷம் பிடித்த பன்னிரண்டு குயில்கள் சேர்ந்து சுருதியும், லயமும் ஒன்றுபடாமல் பாடுவது போன்ற தமது திவ்விய சாரீரத்தை எடுத்துப் பின்வரும் கீர்த்தனை பாடலாயினர். ஒரு பாகவதர் தம்பூரில் சுருதி மீட்டினார். ஜமீந்தார் அந்த சுருதியை லக்ஷ்யம் பண்ணவில்லை.

ராகம்: அடாணா தாளம்: ரூபகம்

மானேயங்கே போனவகை யென்னடி
என்ற மெட்டு

பல்லவி

**மானே கையில் தானே தரித்தானே—ஒரு**
**மாதைத் தரித்தானே மழுவை தரித்தானே (மா)**

பல்லவியில் முதல்வரி பாடி முடிப்பதற்குள்ளாகவே அண்ணாதுரை பாகவதர். "பேஷான கீர்த்தனம்! பேஷான கீர்த்தனம்! சபாஷ்! சபாஷ்!" என்றார். "ஒரு வரி பாடு முன்னே இது நல்ல கீர்த்தனையென்று எப்படித் தெரிந்தது?" என்று ஜமீந்தார் கேட்டார். "ஒரு பானை சோற்றுக்கு ஒரு பருக்கை பதம் பார்த்தால் போதாதா?" என்றார் பாகவதர். ஜமீந்தாரும் இந்த நியாயத்துக்குக் கட்டுப்பட்டு, சந்தோஷம் மிகுந்தவராய் மேலே பாடலாயினர்.

பல்லவி

**மானே கையில் தானே தரித்தானே ஒரு**
**மாதைத் தரித்தானே மழுவை தரித்தானே (மா)**

அனுபல்லவி

**கோனே சிவனே குருவே பருவே மெய்ஞ்**
**ஞான பான மோனமான நாதா • தாமரைப் பாதா (மா)**

"அனுபல்லவியில் இரண்டாம் அடியில் "முடுகு" வைத்திருக்கிறேன் பார்த்தீர்களா?" என்று ஜமீந்தார் கேட்க, பாகவதர்களெல்லோரும் 'பேஷ்! பேஷ்! பேஷ்" என்றனர்.

சரணம்

எந்தனை மோக்ஷ கதியினில் சேர்த்திட
இன்னுமு மாகாதா?—உன்னைச்
சொந்தக்குல தெய்வ மென்று நித்தந்துதி
சொன்னது போதாதா?
விந்தை யுடனிங்கு வந்தென்னை யாளவும்
மெத்த மெத்த வாதா?
வந்தனை தந்துனைப் போற்றிடும் ராமசா
மிக்க வுண்ட ராஜ போஜனுக்
கருள் செய்யும் பாதா (மா)

என்று கடைசியடியை இரண்டு முறை திருப்பிப் பாடி, ராமசாமிக் கவுண்டர், மிகவும் திருப்தியுடன், தியாகய்யர் 'நகுமோமு' கீர்த்தனத்தை ஒரு சிஷ்யனிடம் முதல் முறை பாடிக் காட்டிய பிறகு புன்சிரிப்புச் சிரிப்பதுபோல நகைத்தருளினர்.

பாகவதர்களெல்லோரும் "சபாஷ்" சொல்லி கொட்டி விட்டார்கள்.

பிறகு அண்ணுத்துரை பாகவதர், மகாராஜா இந்த கீர்த்தனத்தை எழுதிக் கொடுத்தால் நான் வீட்டிலே போய் சிட்டைஸ்வரங்கள் சேர்த்துப் பாட்டையும் நன்றாகப் பாடம் செய்துக்கொண்டு வருவேன். இதை நித்தியம் பூஜா காலத்தில் பாடவேண்டுமென்று என்னுடைய அபிப் பிராயம் என்றார்.

'அதுக்கென்ன? செய்யுங்கள்!" என்றார் ஜமீன்தார்'

பூஜை முடிந்தவுடனே போஜனம். பழையது தின்ன ஊரார் வீட்டுக் கறிகளெல்லாம் தருவித்த மனிதன், பகற் சோற்றுக்கு ஊரைச் சும்மா விடுவாஞ? கிருஷ்ணய்யங்கார் வீட்டில் இருந்து "உப்புச்சாறு", கேசவய்யர் வீட்டிலிருந்து 'அவியல்', குமாரசாமிப்பிள்ளை வீட்டுக் "கீரைச் சுண்டல்;" இன்னும் பலர் வீட்டிலிருந்து பலவித மாமிச பக்குவங்கள். இவ்வளவு கோலாகலத்துடன் ஒரு மட்டில் போஜனம் முடிவு பெறும்.

ராமசாமிக் கவுண்டர், பார்ப்பார் சொல்லுவது போல, நல்ல போஜனப்பிரியன். மெலிந்த சரீரமுடைய ஒரு சிநேகிதனுக்கு அவர் பிரசங்கம் செய்ததாகச் சரித்திரங்கள் சொல்லுகின்றன.

"இதோ பாரு, ரங்கா, 'நீயேன் மெலிஞ்சு மெலிஞ்சு போரே (போகிருய்) தெரியுமா? சரியாய் சாப்பிடவில்லை. சாப்பாடு சரியானபடி செல்ல ஒருவழி சொல்கிறேன் கேளு. ஒரு கை நிறையச் சோறெடுத்தால் அதுதான் ஒரு கவளம். அப்படி நீ எத்தனை தின்பை? எட்டுக் கவளம், ரம்ப அதிகமாய்ப் போனுல் ஒன்பது கவளம் வைச்சுக்கோ. அவ்வளவுதான். சாஸ்திரப்படி முப்பத்திரண்டு கவளம் சாப்பிடவேணும். அதற்கு நீ என்ன செய்ய வேணுமென்ருல், இன்றைக்கு ஒன்பது கவளம் சாப்பிடுகிருயா? நாளைக்குப் பத்துக் கவளமாக்க வேணும். நாளன்றைக்குப் பதினென்ருக்க வேணும். நாலாநாள் பன்னிரண்டு. இப்படி நாள்தோறும் ஒவ்வொன்ருக அதிகப்படுத்திக் கொண்டு போய் முப்பத்திரண்டுகளோடு நிறுத்தி விட வேணும். பிறகு ஒருபோதும் முப்பத்திரண்டு கவளத்திற்குக் குறையவே செய்யலாது."

இந்த உபதேசம், மெலிந்த உடல் கொண்ட ரங்கனுக்கு எவ்வளவு பயன் பட்டதோ, அதனை அறிய

மாட்டோம். ஜமீந்தார் அவர்களுக்கு இந்த அநுஷ்டானம் சரிபட்டு வந்தது. அவர் முப்பத்திரண்டு கவளத்திற்குக் குறைவாக ஒருபோதும் சாப்பிடுவதில்லை; ஒருபோதும் மெலிவதுமில்லை. பகல் போஜனம் முடிந்தவுடன் ஜமீந்தார் நித்திரை செய்யத் தொடங்குவார். அரமனைக்கு வெளியேகூடச் சில சமயங்களில் சத்தங் கேட்கும்படியாகக் குறட்டை விட்டுத் தூங்குவார். மாலை ஐந்து மணிக்கு விழிப்பார், விழித்தவுடன் ஆறுவது அல்லது ஏழாவது முறை 'ஆசமனம்'. கொஞ்சம் பலகாரம் சாப்பிடுவார். உடனே ஐரோப்பிய உடை தரித்துக் கொண்டு கச்சேரிக்குப் போவார். அங்கே பலர் பல விதமான விண்ணப்பங்கள் கொண்டு கொடுப்பார்கள். அவற்றையெல்லாம் வாங்கிக்கொள்வார். அதாவது பக்கத்தில் நிற்கும் குமாஸ்தா அவற்றை வாங்கி வைக்கும் போது இவர் பார்த்துக் கொண்டிருப்பார். விண்ணப்பங்கள் வாங்கி முடிந்த பிறகு காகிதங்களில் கையெழுத்துப் போடும் காரியம் தொடங்கும். பழைய மனுக்கள், திவான் கச்சேரிக் கடிதங்கள், இவற்றின்மேல் தனதிஷ்டப்படி யெல்லாம் உத்தரவுகளெழுதி வைத்திருப்பான். அவற்றின் கீழ் வரிசையாகக் கையெழுத்துப் போட்டுக் கொண்டே வரவேண்டும். இன்னின்ன வியவகாரங்களைப் பற்றிய காகிதங்களின்மேல் இன்னின்ன உத்தரவுகள் எழுதப்பட்டிருக்கின்றன என்ற சமாசாரமே "லேகியக்" கவுண்டருக்குத் தெரியாது.

ஒரு சமயம் வழக்கப்படி உத்தரவுகள் தயார் பண்ணிக்கொண்டு வரும் குமாஸ்தா ஊரிலில்லை. அவன் இடத்திற்கு மற்றொருவன் வந்திருந்தான். ஜமீந்தார் தாமே மனுதாரர்களுக்கு உத்தரவு எழுதுவாரென்று அவன் நினைத்து, மனுக்காகிதங்களை அப்படியே மேஜை மேல் வைத்துவிட்டான். ஜமீந்தாரும் விட்டுக்கொடாத

படி, அந்த மனுக்களை ஒவ்வொன்ருகத் திருப்பிப் பார்த்து மேலே உத்தரவுகள் எழுதத் தொடங்கினர்.

கவுண்டபுரத்துக்கு மேற்கே இரண்டு நாழிகை தூரத்திலுள்ள நடுக்கனூர் கிராமத்திலிருந்து வில்வபதிச் செட்டி என்ற ஒரு கிழவன் பின்வருமாறு மனுக் கொடுத்திருந்தான்.

"பிதா மகாராஜா காலத்தில் நான் மிகவும் ஊழியம் செய்திருக்கிறேன். இப்போது பலவித கஷ்டங்களால் நான் ஏழையாய்ப் போய், மக்களையும் சாகக் கொடுத்து விட்டுத் தள்ளாத காலத்தில் சோற்றுக்குச் சிரமப்பட்டு கொண்டிருக்கிறேன். மகாராஜா அவர்கள் சமூகத்தில் கிருபை செய்து ஜீவனத்துக்கு ஏதேனும் மனோவர்த்திச் செலவிலே கொடுக்கும்படி பிரார்த்திக்கிறேன்."

இந்த மனுவை ஜமீந்தார் தமது குமாஸ்தாவின் உதவியினுல் வாசித்து முடித்துவிட்டு, பிறகு காகிதத்தின் புறத்திலே அடியிற் கண்டபடி உத்தரவெழுதி விட்டார்.

"தாசில்தாரர் குமரப் பிள்ளைக்கு—வில்வபதிச் செட்டி பேருக்கு நிலம் விட்டு விடவும்." இதை எழுதி நீளமாக ராமசாமிக் கவுண்டர் என்று கையெழுத்துப் போட்டு தீர்த்து விட்டார்.

இப்படிப் பலவிதமான உத்தரவுகள் பிறப்பித்து ஜமீந்தார் தமது கச்சேரியை முடித்து விட்டார். மறுநாள் இந்த வில்வபதிச் செட்டியின் மனு திவான் கச்சேரிக்கு வந்து சேர்ந்தது. கவுண்டருடைய உத்திரவை திவான் படித்துப் பார்த்தார். தாசில்தார் குமாரப் பிள்ளையின் அதிகாரத்துக்குட்பட்ட பூமியில் மேற்படி செட்டிக்கு ஜீவனும்சத்துக்கு நிலம் விட வேண்டுமென்று கவுண்டரவர்களுடைய திருவுள்ளம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிந்துக் கொண்டார். ஆனுல் எவ்வளவு நிலம், எந்த விதமான

நிலம், என்ன நிபந்தனைகள், முதலிய விவரங்களொன்றும் தெரியவில்லை. உத்தரவை அடித்துவிட்டுத் திவான் வேறு மாதிரி எழுதிக் கொண்டுவந்து ரகஸ்யமாகக் கவுண்டரின் கையெழுத்து வாங்கிக்கொண்டு போய்விட்டார். உத்தரவிலுள்ள பிழைகளை திவான் எடுத்துக் காட்டியபோது குற்றமுழுவதையும் குமாஸ்தாவின் தலையிலே போட்டு விட்டார். "நான் மனுவை வாசித்துப் பார்க்கவேயில்லை. வேறே பெரிய விவகார மொன்றிலே புத்தியைச் செலுத்திக் கொண்டிருந்தேன். இந்த மனு என்ன விஷயம் என்று குமாஸ்தாவைக் கேட்டேன். 'செட்டி மிகவும் ஏழை; அவனுக்கு உதவி செய்ய வேண்டியதுதான்' என்று குமாஸ்தா சொன்னான். தங்களுடைய அபிப்பிராயந் தெரிந்துதான் சொல்லுகிறனென்று நினைத்து உத்தரவெழுதி விட்டேன். மஹோவர்த்தியிலே பணத்துக்குத்தான் திண்டாடுதே! அதிலே இந்த இழவையுங்கொண்டு போய்ச் சேர்ப்பதெப்படி? இதை யோசனை செய்துதான் குமரப் பிள்ளை இலாகாவில் நிலம் விட்டுக் கொடுக்கும்படி எழுதினேன். எனக்கு அந்த வில்வபதிச் செட்டியை போதுமானபடி தெரியும். அவன் சுத்த அயோக்கியப் பயல். பட்டினி கிடந்து செத்தால் சாகட்டுமே! நமக்கென்ன!"

சாயங்காலத்துக் கச்சேரி முடிந்தவுடன், கவுண்டரவர்கள் குதிரை வண்டியிலேறி ஊரைச் சுற்றி சவாரி செய்துக் கொண்டு வருவார். கவுண்ட நகரம், சரித்திர பெருமையும், 'க்ஷேத்திர மகாத்மியமும்' வாய்ந்த ஊராயினும், அளவில் மிகவும் சிறியது. ஐந்து நிமிஷத்துக்குள் குதிரை வண்டி இதைச் சுற்றி வந்து விடும். இதற்கு பன்னிரண்டிடத்தில் "வாங்கா" ஊதுவார்கள். இந்த "வாங்கா" என்பது பித்தளையில் ஒருவித ஊது வாத்தியம். பறையர் இதனை ஊதிக் கொண்டு ஜமீந்தார

வர்களின் வண்டி முன்னே குடல் தெரிக்க ஓடுவார்கள். சில தினங்களில் பல்லக்கு சவாரி நடக்கும். இன்னும் சில சமயங்களில் ஜமீந்தாரவர்கள் ஆட்டு வண்டியிலே போவ துண்டு. "ஆட்டு வண்டி", சவாரிக்கு உதவுமா என்று படிப்பவர்களிலே சிலர் வியப்படையக் கூடும். இரண்டு ஆடுகளைப் பழக்கப்படுத்தி, அவற்றுக் கிணங்க ஒரு சிறு வண்டியிலே பூட்டி, வண்டி, ஆடுகள் இவற்றைச் சேர்த்து நிறுத்தால், அவற்றைக் காட்டிலும் குறைந்த பக்ஷம் நாலு மடங்கு அதிக நிறை கொண்ட ஜமீந்தார் ஏறிக்கொண்டு, தாமே பயமில்லாமல் ஓட்டுவார். குதிரைகள் துஷ்ட ஜந்துக்கள். ஒரு சமயமில்லாவிட்டால் ஒரு சமயம் கடி வாளத்தை மீறி ஓடி எங்கேனும் வீழ்த்தித் தள்ளிவிடும். ஆடுகளின் விஷயத்தில் சந்தேகமில்லை யல்லவா? இன்னும் சில சமயங்களில் ஜமீந்தார் ஏறு குதிரை சவாரி செய்வார். இவருக்கென்று தனியாக ஒரு சின்னக் குதிரை மட்டம், ஆட்டைக் காட்டிலும் கொஞ்சம் பெரிது—தயார் செய்துக் கொண்டு வருவார்கள். அதன் மேல் இவர் ஏறி உட்கார்ந்த வுடனே, அதற்கு முக்கால்வாசி மூச்சு நின்று போகும். பிராணன் கொஞ்சம் தான் மிஞ்சியிருக்கும். எனினும் இவருக்குப் பயந்தெளியாது. இவருடைய பயத்தை உத்தேசித்தும், குதிரையை எப்படியாவது நகர்த்திக் கொண்டு போகவேண்டுமென்பதை உத்தேசித்தும் முன்னும் பின்னும் பக்கங்களிலுமாக ஏழெட்டு மறவர் நின்று, அதைத் தள்ளிக் கொண்டு போவார்கள். ஜமீந்தார் கடிவாளத்தை ஒரு கையிலும் பிராணனை மற்றொரு கையிலும் பிடித்துக்கொண்டு பவனி வருவார்; வாங்காச் சத்தத்துக்குக் குறைவிராது. இந்த வியவகாரம் ஒரு முறை நடந்தால், பிறகு மூன்று நான்கு வருஷங் களுக்கு இதை நினைக்கமாட்டார். அதற்கப்பால் மனுஷன் க்ஷத்திரியனல்லவா? பயந்தெளிந்து பின்னொரு முறை

நடக்கும். இவர் இப்படி கோழையாக இருப்பதைக் கருதி யாரும் நகைக்கலாகாது. அர்ஜுனனும், வீமனும், அபிமன்யுவும் தோன்றிய சந்திர வம்சத்தில் நேரே பிறந்த தாக இதிகாஸங்களிலே கோஷிக்கப் படுகின்ற கவுண்டனூரர் ராஜகுலத்தில் இவர் சேர்ந்திருந்தும், இவ்வாறு கொஞ்சம் அதைரியப்படுவதற்குச் சில ஆழ்ந்த காரணங்களுண்டு.

இவருக்குப் புத்திர பாக்கியம் இல்லே. அதற்காகப் பலவித ஹோமங்கள், பூஜைகள், கிரக சாந்திகள், தீர்த்த யாத்திரைகள், யந்திர ஸ்தாபனங்கள் முதலியன செய்துக் கொண்டு வருகிறூர். இந்த அவசரத்திலே குதிரை யிலிருந்து தவறி விழுந்து உயிர் போய்விடுமாஞல் பிறகு இவருடைய சக்ராதிபத்யத்துக்கு ஒரு மகன் பிறக்க இடமே இல்லாமல் போய்விடுமல்லவா? எத்தனே பேர் குதிரையிலிருந்து விழுந்து செத்திருக்கிறூர்கள். அதையும் கவனிக்க வேண்டாமா? சில மாதங்களுக்கு முன்பு கூட ருஷியா தேசத்தில் ஒரு குதிரைப் பந்தயத்திலே ஒருவன் வேலி தாண்டி விழுந்து உயிர் போய்விட்டதாக 'சுதேச மித்திரன்' பத்திரிகையில் எழுதியிருந்த விஷயத்தை இவரிடம் யாரோ சொல்லவில்லேயா? நாலு காரியத்தையும் யோசனே செய்துதானே நடக்க வேண்டும். ஒரு தரம் போன உயிர் திரும்பிவிடுமா? சாயங்காலத்து சவாரி முடிந்தவுடனே கவுண்டரவர்கள் அரண்மனேக்குள் வருவார். நாலேந்து பேராக இருந்து, இவருடைய ஐரோப்பிய உடுப்புகளேக் கழற்றி எறிந்துவிட்டு, வேஷ்டி உடுத்துவார்கள். உத்தரீயத்தைத் தாமாகவே வாங்கி மேலே போட்டுக்கொள்வார். மனுஷன் வேலேக்கு மாத்திரம் பின் வாங்கமாட்டார். அது ஒரு குணம் இவரிடத்தில். பிறகு கைகால் சுத்தி செய்துக்கொண்டு லேகியம் "சாப்பிட்ட பிறகு சாய்வு நாற்காலிக்கு வந்து விடு

வாரி. அப்பால், வெற்றிலை, புகையிலை, ஊர் வம்பு, கதை முதலியன.

இரவு சுமாரி பத்து மணியாகும்போது ஜமீந்தாருக்கு ஒருவாறு புகையிலைச் சாறும், லேகிய வெறியுமாகச் சேர்ந்து தலையை மயக்கி, சாய்ந்தபடி கதை கேட்கக்கூட முடியாதவாறு செய்து விடும். வம்பு பேசும் காரியஸ்தர் களுக்கும் நின்று நின்று காலோய்ந்து போய்விடும். எனவே கவுண்டர் எழுந்து கை கால் சுத்தி செய்வித்துக்கொண்டு, ஸந்தியாவந்தனம் செய்து முடித்து, லேகியம் தின்றுவிட்டு, அந்தப்புரத்திலே போய் சாயந்திரப்படி முப்பத்திரண்டு கவளம் சாப்பிட்டு உடனே நித்திரைக்குப் போய்விடுவாரி. ஜமீந்தாரவர்களுக்கு ஐந்து மனைவிகளுண்டு. ஆனல் ஜமீந்தாரவர்களோ அரிஜுனனுக்கு நிகரானவரி. விராட நகரத்திலிருந்த அரிஜுனனுக்கு—அதாவது, மகாராஜ ராஜ பூஜித மகாராஜ ராஜஸ்ரீ மகாராஜ மாரித்தாண்ட சண்ட பிரசண்ட அண்ட பகிரண்ட கவுண்டாதி கவுண்ட நகராதிப ராமசாமிக் கவுண்டரவரிகள் பரிபூரண நபும்ஸக னென்று தாத்பரியம்—இவருடைய தினசரிக் காரியம் ஒருவாறு சொல்லி முடித்தோம். இன்னும் எவ்வளவோ சொல்ல வேண்டியிருக்கிறது. சந்தரிப்பம் வாய்க்குமிடத்து அப்போதப்போது சொல்லுகிறோம். இவ் வத்தியாயத்தின் மகுடத்திலே குறிப்பிட்டபடி இவருடைய சபையைப்பற்றி மாத்திரம் கொஞ்சம் விவரித்துச் சொல்லப் போகிறோம். நம்முடைய கதாநாயகனாகிய சங்கரன் இந்தச் சபையைச் சேர வேண்டியவனாக இருக்கிறபடியால். ராமசாமி கவுண்டரி தமிழிலும், சங்கீதத்திலும் வித்வானென்று முன்னமேயே சொல்லியிருக்கிறோம். அவருடைய சபை யிலுள்ள பண்டிதரிகளுடைய பெயரி, இயல் சிறப்பு முதலியவற்றைச் சிறிது விஸ்தரிக்கின்றோம். வித்துவான் அண்ணாத்துரை ஐயரி, தரிகாலங்கார சரிவ சாஸ்திரசாகர

உபய வேதாந்த பிரவர்த்தன நிவர்த்தன சம்வர்த்தனு சாரிய பெருங்குன்றம் கிடாம்பியாச்சான் ஆம்ரோதனு சார்யர், முத்தமிழ்ச் சிங்கக்குட்டி முத்துக் கருப்பண பாவலர், தோடி நாராயணய்யங்கார், முடுகு பல்லவி வேதாசல குருக்கள், கம்பராமாயணப் பிரசங்கம் ஆறுமுகக் கவுண்டர், மூங்கிலறுப்பு ராமச்சந்திர பாகவதர், அறுபத்து நாலக்ஷர பிச்சாண்டி பாகவதர், பரமபத தூஷண ஸ்வமத பூஷண, சரிவ மத பாஷாண பூர்ண பரமசிவனவர்கள், தொல்காப்பியம் இருளப்ப பிள்ளை, காமரஸ மஞ்சரி சுந்த ரய்யர் இவர்களே முக்கிய வித்துவான்கள்—இனி சில்லறை வித்துவான்கள் பலருண்டு.

மேலே சொல்லப்பட்ட வித்துவான்கள் எல்லோரும் புடை சூழ்ந்திருக்க, வானத்துப் புலவர்களுக்கு நடுவே இந்திரன் போலவும், (வானத்து) மீன்களுக்கு நடுவே ஆமை (சந்திரன்) போலவும், இன்னும் எதையெல்லாமோ போலவும் கவுண்டர் வீற்றிருந்தார்.

அப்போது அடப்பை தூக்கும் தொழில் உடைய வனும், ஆனுல் முத்தமிழ் புலவர்களுக்குள்ளே மிகச் சிறந்த வகுப்பில் வைத்து எண்ணத் தக்கவனுமாகிய முத்திருளக் கவுண்டன் வந்து, பின்வருமாறு விண்ணப்பஞ் செய்துக் கொள்ளலானுன்.

"புத்தீ" என்ருன் முத்திருளன்.

(ஜமீந்தாரவர்களிடம் வேலையாட்கள் பேசும்போதே 'புத்தி' என்று தொடங்குவது வழக்கம்.) இந்தச் சொல்லை இந்த இடத்தில், இந்த சரித்திரத்தில் வழங்குவதற்கு உள்ள விசேஷ காரணத்தைக் கண்டுபிடித்துச் சொல்லும்படி தமிழ் நாட்டில் மலிந்து கிடக்கும் பாஷா பரிசோதனைப் பண்டிதர்களிடம் பிரார்த்தனை செய்து கொள்ளுகிறேன். நான் யோசனை செய்து பார்த்தால் எனக்கு ஒன்றுமே

விளங்கவில்லை. சிற்சில காரணங்கள் தோன்றுகின்றன. ஆனால் ஒருவேளை சரியாக இருக்குமோ இராதோ என்ற அச்சத்தால் இங்கு வெளியிட மனம் வரவில்லை.

'புத்தி' என்றான் முத்திருளன்.

'என்ன முத்திருளு, உன் முகத்தைப் பார்த்தால் ஏதோ நல்ல சமாச்சாரம் கொண்டு வந்திருக்கிறது போல் தோன்றுகிறது. என்ன, நான் நினைத்தது சரியா, தப்பிதமா?'' என்று ஜமீந்தார் கேட்டார்.

''ஐயோ! அவ்விடத்து ஊகத்திலே ஒரு வார்த்தை சொல்ரது அதுதப்பியும் போகிறதா? இது எங்கேயாவது நடக்கிற சங்கதியா? மனுஷ்யாளுடைய நெஞ்சுக்குள்ளிருக்கிற ரகஸ்யத்துக்குள் இருக்கிற ரகஸ்யமெல்லாம் மகாராஜாவுடைய புத்திக்கு உள்ளங்கை நெல்லிக்கனி போலவும், கண்ணிலே விழுந்திருக்கும் பூவைப் போலவும் நன்றாகத் தெரிந்து போகுமே! அடியேன் மனசில் இருக்கிறது தெரியாதா?'' என்றான் முத்திருளன்.

கொஞ்சம் தெளிவு குறைந்ததும், தர்க்க சாஸ்திர விதிகளுக்கு இசையாததுமான இந்த ஸ்துதியைக் கேட்டு கவுண்டரவர்கள் மிகவும் சந்தோஷமடைந்து, முப்பத்திரண்டு பற்களில் விழுந்தது போக மற்றுள்ள காவி பூத்த பற்களெல்லாம் பெரியவும் சிறியவுமாகிய மாதுளங்கனி விதைகளைப் போலவும், வேறு பல உவமைப் பொருள்களைப் போலவும், வெளியே தோன்றும்படி பலமான மந்தஹாசம் புரிந்தார். முத்திருளன் மீது பொதுவாக எப்போதுமே ஜமீந்தாரவர்களுக்கு அன்பதிகம். அவன் நெடுநாளைய வேலைக்காரன். பல தந்திரங்கள் தெரிந்தவன். தவிரவும் பாலியத்தில் ஜமீந்தாரவர்கள் சில்லரை விளையாட்டுகள் விளையாடிய போது உடந்தையாக இருந்து பலவித உதவிகள் செய்

தவன். இன்னும் பல காரணங்களுமுண்டு. ஆனால் பிரபுக்களின் தயவாகிய நதியின் மூலத்தை விசாரிக்கலாகாது.

"முத்திருளு, மற்றவர்களுடைய கவியும் சரி, உன்னுடைய வார்த்தையும் சரி, அவர்களுடைய கவி .கேட்பதிலுள்ள சுகம் உன் பேச்சிலே இருக்கிறது" என்று ஜமீந்தார் தனது வேலைக்காரனை மெச்சினார். சபையிலிருந்த புலவர்களுக்கெல்லாம் அடிவயிற்றிலே எரிச்சலுண்டாயிற்று. இது முத்திருளக் கவுண்டனுக்குத் தெரியும். ஜமீந்தாருக்குக்கூட ஒருவேளை தெரிந்திருக்கலாம். அப்படியிருந்தும் அவர்களெல்லோரும் தமது எரிச்சலை உள்ளே அடக்கிக் கொண்டு வெளிப்படையாக ஜமீந்தாருடைய கருத்தை ஆமோதித்துப் பேசினார்கள். உபய வேதாந்த ஆச்சாரியர், "ஆமாம், மகாராஜா! ஸமஸ்கிருதத்திலே பாணகவியைப் போல, நமது முத்திருளக் கவுண்டன். அவர் தமது காதம்பரியை வசன நடையிலே தான் எழுதியிருக்கிறார். அப்படியிருந்தும் பாட்டாகச் செய்யப்பட்டிருக்கும் எத்தனையோ காவியங்களைக் காட்டிலும் அதைப் பெரியோர்கள் மேலானதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் பாணகவி உட்கார்ந்து புஸ்தகமாக எழுதினார். நமது முத்திருளக் கவுண்டன் சிரமமில்லாமலே பேசுகிற பாவனையில் அத்தனை பெரிய திறமை காட்டுகிறான். இவனை வசன நடையில் ஆசு கவி என்று சொல்லலாம்." என்று திருவாய் மொழிந்தருளினார்.

உடனே, முத்திருளன் அவரை விரஸத்துடன் நோக்கி, "செய்யுளும் நமக்குப் பாடத்தெரியும், சாமீ! ஏதோ வாயினால் சும்மா உளறிக்கொண்டிருப்பான், பாட்டுப் பாடத் தெரியாதவன் என்று நினைத்துவிட

வேண்டாம்" என்றான். தனக்குக் கவி பாடத் தெரியும் என்பதையும், அவருக்கு அத்தொழில் தெரியாதது பற்றித் தனக்கு அவரிடம் மிகவும் அவமதிப்புள்ள தென்பதையும், அவருக்குக் குறிப்பிட்டுக் காட்டும் பொருட்டாக ஆ...சாரியர் தமது உள்ளத்திலே எழுந்த கோபத்தை அச்சத்தினால் நன்றாக அடக்கி வைத்துக் கொண்டு "பாண கவி செய்யுள் பாடுவதில் இளைத்தவரென்று நினைத்தாயோ? ஆஹா முத்திருள கவுண்டா! நீ ஸமஸ்கிருதம் படித்திருக்கவேண்டும். படித்திருந்தால் நீ பாண கவிக்கு நிகரானவன் என்பது உனக்கே நன்றாகத் தெரிந்திருக்கும்" என்று திருவாய் மொழிந்தருளினார்.

(சாதாரணமாக ஆ...சாரியாரைப் போன்ற மகான்கள் பேசுவதை 'திருவாய் மலர்ந்தருளினார்' என்றுபுதிதாகச் சொல்வதற்கு இரண்டு காரணங்களுண்டு. அவருக்குத் தமிழ் பாஷையில் அதிக பழக்கமில்லாத போதிலும் திருவாய்மொழி, பிரபந்தம் முழுவதும் பாராமல் குட்டியுருவாகச் சொல்லக்கூடியவரென்பதை நாம் ஒருவாறு குறிப்பிட விரும்புதல் சாமான்ய காரணம். சரியான காரணம் இன்னும் சில வரிகளுக்கப்பால் தானே விளங்கும்.) பிறகு முத்திருளக் கவுண்டன் தனக்கு ஸமஸ்கிருதம் தெரியாதென்பதை ஆ...சாரியார் கேலி பண்ணுகிறாரென்று நினைத்து, தலையை நேரே தூக்கிக் கொண்டு, அவனது மீசை, கிருதாக்கள் துடிக்க பின் வருமாறு உபந்நியாசம் செய்யலானான்.

"சாமி, அய்யங்காரிவாளே, சாமிகளே; அப்படியா வந்து சேர்ந்தீர்கள். (சபையோர் நகைக்கிறார்கள்) இந்தக் கதையா? இதெல்லாம் முத்திருளனிடம்

வைத்துக் கொள்ள வேண்டாம். சென்னப் பட்டணத்தில் சி.வை. தாமோதரம் பிள்ளை என்று ஒரு மகா வித்துவான் இருந்தாரே, கேள்விபட்டதுண்டா? அவர் சூளாமணி என்னும் காவியத்தை அச்சிட்டபோது அதற்கு எழுதிய முகவுரையை யாரைக்கொண்டேனும் படிக்கச் சொல்லியாவது கேட்டதுண்டா? திருவனந்தபுரம் பெரிய கலாசாலையில் தமிழ்ப் பண்டிதராகி அன்னிய பாஷைகள் ஆயிரங்கற்று நகரில் புலவர் சிகரமாக விளங்கிய சுந்தரம் பிள்ளையவர்கள் எழுதிய நூல்களில் ஏதேனுமொன்றை எப்போதாவது தலையணையாக வைத்து படுத்திருந்ததுண்டா? அல்லது அவர் புத்தகங்கள் வைத்திருந்த அலமாரியை மோந்து பார்த்ததுண்டா?" (இந்த அற்புதமான வாக்கியத்தைக் கேட்டு சபை கலீரென்று நகைக்கிறது) ஆ...சாரியர் பேசுவதற்காகத் திருவாய் மலர்ந்தருளினர். ஆனல் மலர்ந்த திருவாய் மொழிவதற்குள்ளாகவே முத்திருளன் அவரை பேசவொட்டாதபடி பின்வருமாறு கர்ஜனை புரியலானன். "சாமி, சாமிகளே; அய்யங்காரிவாளே, பிறர் பேசும் போது நடுவிலே குறுக்கே பாயக்கூடாதென்று உங்கள் ஸமஸ்கிருத சாஸ்திரங்களிலே சொன்னது கிடையாதோ? அல்லது ஒருவேளை சொல்லியிருந்தால் அதை நீங்கள் படித்தது கிடையாதோ? சாமிகளே, மேலே நான் சொல்லிய புலவர்களும், இன்னும் 'ஆயிரக்கணக்கான வித்வத் சிரோமணிகளும், பதினயிரக்கணக்கான பண்டிதர் களும், நாற்பதினயிரக்கணக்கான, லக்ஷக்கணக்கான கோடிக்கணக்கான, பத்திரிகாசிரியர்களும், வடமொழியைக் காட்டிலும் தமிழே உயர்ந்த பாஷையென்பதை உள்ளங்கை நெல்லிக்கனி போல விளக்கி பசுமரத்தாணி போல நாட்டியிருக்கிருர்கள். நீவிர் அதனையுணராது முட்டி குரீ இப் (குருவி) போல இடர்படுகின்றீர்

"தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்து முதலை
உண்ட பாலனை யழைத்ததும்...ம்...ம்...ம்,
தண்டமிழ்ச் சொலோமறு புலச் .சொற்களோ
சாற்றீர்?"

*என்ற பாட்டைக் கேட்டதுண்டா?*

*இந்தப் பாட்டிலே சில வார்த்தைகள் முத்திருள னுக்கு சமயத்தில் ஞாபகம் வரவில்லையாதலால் அவற்றை விழுங்கிவிட்டு பிழையாகப் பாட்டைச் சொல்லி முடித் தான். சபையில் பலருக்கு 'இந்தப் பாட்டு நன்முக ஞாபகமுண்டு. ஆயினும் அவனைத் திருத்தப் போனால் தங்கள்மீது பாய்ந்து விடுவானென்று பயந்து புலவோர்கள் வாய்மூடி மௌனமாக இருந்துவிட்டார்கள். அவர்கள் திருத்தாமல் இருக்கும்படியாகவே முத்திருளன் அவர்களைச் சுற்றி நோக்கி மிகவும் பயங்கரமானதோர் பார்வை பார்த்துவிட்டு மேலே கர்ஜனை செய்கிறான்.*

*"இனி வடமொழியில் தான் வேதம் உளதென்று நீர் ஒருவேளை சொல்லலாம். அஃது எங்கள் தேவார திருவாசகங்களுக்கு நிகராகுமா? இந்தப் பாடலுக்கு நான் இப்போது பொருள் சொல்லமாட்டேன். உமக்குத் தெரியாவிட்டால், வீட்டிலே போயிருந்து கொண்டு படிப்புத் தெரிந்த வாலிபப் பிள்ளை எவனையேனும் அழைத்து அவனிடம் பொருள் கேட்டுக்கொள்ளும்."*

*(சபை கலீரென்று நகைக்கிறது. ஆ...சாரியர் முடி சாய்ந்து விட்டார்.) "ஆங்காணும், தமிழ்ப் பாஷைக்கு நேரானதோர் பாஷையில்லை. அதிலும், வடமொழி நமது தமிழ் மொழிக்குச் சிறிதேனும் நிகராகமாட்டாது. தமிழ் கற்றோர் அனைத்துங் கற்றோர். அறியும், அறியும் அறியும். இனி வித்துவான்களுடைய சபையிலே ஊத்த வாய்திறக்க வேண்டாம்."*

வாயிலே நுரைக்கும்படி முத்திருளன் இவ்வாக்கியம் சொல்லி முடித்து, மேலே பேச மூச்சில்லாமல் கொஞ்சம் நின்றான். அப்போது ஆ...சாரியர் மிகவும் ஹீனஸ்வரத்திலே, "முத்திருளா, என்ன இப்படிக் கோபித்துக் கொள்ளுகிறாயே. நான் பாணகவிக்கு நிகரென்று உன்னை ஸ்தோத்திரமாகத்தானே சொன்னேன். விஷயத்தைக் கவனியாமலே வீண் கோபம் செய்கிறாயே" என்று திருவாய் மொழிந்தருளினார்.

## சங்கரன் யமகம் பாடி அரங்கேற்றியது.

மேலே கூறப்பட்ட போராட்டம் முடிந்து, ஒருவாறு கவுண்டர் சபை கலைந்தது. புலவர்களெல்லாம் போன பின், தனியாக இருக்கும்போது, கவுண்டர் முத்திருளனை நோக்கி "ஏதோ நல்ல சமாசாரம் கொண்டு வந்தாயே, அது சொல்லி முடியுமுன்பாக, அந்த இழவு பார்ப்பான் சண்டை தொடங்கி விட்டான். நீ நல்ல போடு போட்டாய். அந்தப் பார்ப்பானுக்கு வேணும். அது போகுது. சொல்ல வந்த சங்கதியைச் சொல்" என்றார்.

"நம்ம சுப்பிரமணிய அய்யர் மகன் சங்கரன் சமூகத்தின் மேலே ஒரு யமகம் பாடியிருக்கிறான். நல்ல பாட்டு. அடியேனாலேகூட அவ்வளவு 'ஷோக்' கான பாட்டு பாட முடியாது. அதை சமூகத்திலே அரங்கேற்ற வேணும். மகாராஜா! பையன் சிறுவனாக இருந்தபோதிலும் புத்தி ரொம்பக் கூர்மை. அரண்மனைக்கு இத்தனை புலவர்கள் வருகிறார்களே, அவர்களெல்லாரையும் விட்டு அடியேனிடத்தில் வந்தால்தான் இந்தக் காரியம் சாயுமென்று தெரிந்துகொண்டான். அவன் வயதெவ்வளவு? நம்ம மகாராஜாவினுடைய கிருபை இவனுன் மேலே பரிபூர்ணமாக விழுந்திருக்கிறதென்று ஊகித்துக் கொள்வதென்றால், அதென்ன சாமான்யமாகச் சிறுபிள்ளைகளுக்கு

ஏற்படக்கூடிய விஷயமா? மகாராஜா காலுக்கு இந்த முத்திருளுதான் சரியான நாய்குட்டி. இவனிடத்திலே சொன்னால்தான் நமது கவி அரங்கேறுமென்று கண்டு பிடித்து விட்டான். புத்தி. அந்தப் பாட்டை ஒருநாள் சபையிலே அரங்கேற்றும்படி 'உத்தரவானால்' அப்போது இந்த அய்யங்கார்கள், புலவர்கள், இவர்களுடைய சாமார்த்தியங்களெல்லாம் வெளிபட்டுப் போகும். அடியேன் ஒருவனாலேதான் அந்தக்கவிக்கு பொருள்சொல்ல முடியும். மற்றவர்களாலே குட்டிக்கரணம் போட்டாக் கூட நடக்காது. அடியேனுக்குக்கூட அந்தப் பாட்டைக் கேட்டவுடனே இரண்டு நிமிஷம் திகைப்புண்டாய் விட்டது. பிறகுதான்—அடியேனுக்கு மகாராஜா கடாக்ஷமும், சரஸ்வதி கடாக்ஷமும் கொஞ்சம் இருக்குதே—கொஞ்சம் நிதானித்துப் பார்த்தேன். அர்த்தம் தெளிவாகத் தெரிந்தது." என்று முத்திருளு சொன்னான்.

ஜமீன்தார், "அப்படியா! யமகமா பாடுகிறான். உனக்குக்கூட அர்த்தம் கண்டு பிடிக்கத் திகைத்ததென்றால் வெகு நேர்த்தியான பாட்டாயிருக்குமே. பார்ப்போம், பார்ப்போம். நம்ம புலவர்களுடைய சாயம் எல்லாம் நாளை வெளுத்துப் போகும். நாளைக்கு சாயங்காலமே வைத்துக் கொள்ளுவோம். புலவர்களுக்கெல்லாம் சொல்லியனுப்பி விடு. ஒருவன்கூடத் தவறக்கூடாது, எல்லோரும் வந்து சேரவேணுமென்று."

இந்த ஆக்கினையைக் கேட்டு முத்திருளு சந்தோஷமுடையவனாய் வணங்கிச் சென்றான், மகாராஜாவும், தமது நித்திய அநுஷ்டானங்களுக்குப் புறப்பட்டுவிட்டார்! 'நித்திய கர்மானுஷ்டானங்கள்' என்று எழுத உத்தேசித்தேன். ஆனால் கவுண்டரவர்களுக்குக் 'கர்மம்' ஒன்றுமே கிடையாது. அத்வைதிகள் சொல்லும் நிற்குண பிரம்மத்தின் ஜாதியை சேர்ந்த ஆசாமி.

யமகம் பாடிய காலத்தில் சின்ன சங்கரனுக்கு வயது மிகவும் கொஞ்சம். இவனுடைய தகப்பனார் சுப்பிரமணிய அய்யருக்கும் சமஸ்தான வித்வான் முத்திருளக் கவுண்டனுக்கும் மிகுந்த சிநேகமுண்டு. அவன் அடிக்கடி வந்து சுப்பிரமணிய அய்யரிடம் பணம் வாங்கிக் கொண்டு போவதுண்டு. கடனென்று சொல்லித்தான் வாங்குவான். ஆனால் முத்திருளன் தயவிருக்கும்வரையில்தான் ஜமீந்தாருடைய தயவும் இருக்குமென்பதை நன்றாக அறிந்த சுப்பிரமணிய அய்யர், அவனிடம் பணத்தைத் திருப்பிக் கேட்கும் வழக்கமில்லை. அவனும் ராஜாங்க விவகாரங்களிலே புத்தியை அதிகமாக உழைப்பவனாதலால், மிக்க மறதிக்குணம் உடை வன். பணம் வாங்குவது அவனுக்கு கொஞ்சமேனும் ஞாபகமிருப்பதில்லை.

சின்னச் சங்கரன் விஷயத்தில் முத்திருளனுக்கு விசேஷ அன்பு ஏற்படுவதற்கு வேறொரு காரணமும் உண்டு. முத்திருளன் தகப்பன், எண்பது வயதுள்ள சோலையழகுக் கவுண்டன் என்பவன் கண்ணிழந்து வீட்டிலே உட்கார்ந்துக் கொண்டிருந்தான்; இந்தச் சோலையழகு தமிழ் காவியங்களிலே சாக்ஷாத் நச்சினார்க்கினியருக்கு சமானமானவன் என்பது அந்தவூர்க் கவுண்டருடைய எண்ணம். சோலையழகுக் கவுண்டனிடத்தில் சங்கரன் தினம் பள்ளிக்கூடம் விட்டவுடனே போய்ப் பழைய புலவர்களின் சரித்திரங்களும், பழைய கடினமான விடுகவிகளுக்குப் பொருளும், கதைகளும் கேட்டுக் கொண்டிருப்பான். ஊரிலுள்ள பெரிய மனுஷ்யர்களிலே ஒருவராகிய சுப்பிரமணிய அய்யரின் பிள்ளை தன்னிடம் வந்து பாடம் கேட்டுக்கொள்வதைப் பற்றி திருதராஷ்டிரக் கவுண்டனுக்கு அளவற்ற பூரிப்புற்பட்டிருந்தது. அந்தக் குடும்ப முழுதிற்குமே சங்கரன் மேல் 'ஆசை' அதிகம்.

மாலை ஐந்துமணி அடித்ததும், பள்ளிக்கூடத்திலிருந்து நேரே சங்கரன் ஜமீன்தாருடைய சபைக்கு வந்து விட்டான். மேலே சொல்லப்பட்ட வித்வான்களெல்லோரும் வந்து சபையில் கூடியிருந்தனர். திவான் முருகப்ப முதலியார், தாசில்தார் மாரிமுத்துப் பிள்ளை, இன்னும் சில கவுண்டப் பிரபுக்கள், உத்தியோகஸ்தர் எல்லோரும் வந்திருந்தனர்.

ஜமீந்தார் சங்கரனை நோக்கி, "எங்கே? தம்பி உன் பாட்டை வாசி, கேட்போம்" என்றார். சங்கரன் சட்டைப் பையிலிருந்து ஒரு காகிதத்தை வெளியே உருவிப் படிக்கத் தொடங்கினான்.

பையனுக்கு வாய் குழறுகிறது. உடம்பெல்லாம் வியர்க்கிறது.

சரஸ்வதிக்கு லஜ்ஜை யதிகம். லக்ஷ்மியைப் போல நாணமற்றவளன்று. சங்கரன் போன்றவர்களிடம் விளங்கும் போலி—சரஸ்வதிக்குக் கூட ஆரம்பங்களில் கொஞ்சம் லஜ்ஜை உண்டாகும். நாளாக, நாளாகத்தான் லஜ்ஜை, நாணம் எல்லாங் கெட்டுப்போய் தெருவேசிகளின் இயல்புண்டாகி விடும்.

சங்கரன் படும் அவஸ்தையைக் கண்டு முத்திருளக் கவுண்டன் அவனை உற்சாகப் படுத்தும் பொருட்டாக. "பயப்படாதே சாமி, தைரியமாய் வாசி. உயர்ந்த கவியாச்சுதே. இதிலென்ன வெட்கம்? மேலும் நம்ம மகாராஜாவின் முன்னிலையில் நம்முடைய படிப்பைக் காட்டாமல் யாரிடம் காட்டுவது? இதில் கூச்சப்படலாமா?" என்றான்.

மகாராஜ ராஜஸ்ரீ, ராஜகுல தீப ராமசாமி கவுண்டர் மீது சங்கரய்யர் பாடிய யமக அறு சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

"கவுண்டவுண்ட தென மாரன் கணை
பொழியமிகச் சோர்ந்து கண்ணீராற்றிற்
கவுண்ட வுண்ட மார்பினளாய் மகளுன்னை
நினைந்து மனங்கரையா நின்றாள்,
கவுண்ட வுண்ட சீதையினை
மாலையிட்ட பெருமானே கவுண்டனூரிற்,
கவுண்டவுண்ட ராமசாமித் துரையே
விரைவிற் கலவி செய்யே."

இந்த யமக விருத்தம் பாடி முடிந்தவுடனே முத்திருளக் கவுண்டன் சபையோரைச் சுற்றித் திரும்பிக் காட்டிலே தனிச் சிங்கம் விழிப்பதுபோல ஆடம்பரமாக விழித்தான். புலவர்களுக்கெல்லாம் அடிவயிறு குழப்பமாயிற்று. யாரும் வாயைத் திறக்கவில்லை. கடைசியாக உபய வேதாந்த ஆம்ரோதனுச்சாரியார் திருவாய் மலர்ந்து, "முத்திருளக் கவுண்டா! இந்தப் பாட்டுக்கு நீதான் அர்த்தம் சொல்ல வேண்டும்" என்றார். முத்திருள கவுண்டன் பின்னும் ஒரு முறை ஒரு சுற்று சுற்றி விழித்து விட்டுச் சங்கரனிடமிருந்து காகிதத்தைக் கையில் வாங்கிப் பார்த்துக் கொண்டு, ஒரு முறை கனைத்ததன் பின்பு, பின் வருமாறு வியாக்கியானம் செய்யலானான்.

இது நற்றாயிரங்கல் என்னும் துறை (அதாவது, தன் மகள், காதல் துன்பத்தால் வருந்துவதைக் கண்ட தாயொருத்தி மனம் பொறுக்காமல் சொல்லுவது.)

கவுண்டவுண்ட தென மாரன் கணைபொழிய மிகச் சோர்ந்து கண்ணீராற்றிற்; கவுண்டவுண்ட மார்பினளாய் மகளுன்னை நினைந்து மனங்கரையா நின்றாள்; கவுண்டவுண்ட சீதையினை மாலையிட்ட பெருமானே கவுண்டனூரிற், கவுண்டவுண்ட ராமசாமித் துரையே நீ விரைவிற் கலவி செய்யே."

"கவுண்டவுண்டதென"—கவுண் தாவுண்டதென; கவுண் கற்கள் தாவி வருவது போல. இங்கு "கவுண்டாவுண்ட" என்றிருக்க வேண்டியது, குறுக்கல் விகாரத்தால் 'கவுண்டவுண்ட' என்ருயிற்று.

"மாரன்—மன்மதன், காமவேள். "கணைபொழிய"—அம்புகளை யெய்ய, அதாவது பகழிகளைத் தூவ. அதனுல் "மிக்க சோர்ந்து"—மிகவும் சோர்வெய்தி: சாலவும் துக்க மெய்தியவளாய் "கண்ணீராற்றில்"—கண்ணிலே உதிர்க்கும் நீரினுலாகிய நதியினுல்,

'கவுண்டவுண்ட மார்பினளாய்' கவ்வுண்ட, உண்ட மார்பினளாய்; அதாவது கவ்வப்பட்ட உருண்டை மார்பினை உடையவளாய். கண்ணீர் வெள்ளத்தாலே விழுங்கப்பட்ட பயோதரத்தினளாய். இங்கு "உருண்ட" என்பதில் ருகரம் கெட்டது. தொல்காப்பியத்தில் கெடுதி யதிகார விதிப்படி யென்க.

"மகள்" எனது புதல்வி.

"உன்னை நினைந்து மனங்கரையா நின்ருள்"—இதன் பொருள் வெளிப்படை. "கவுண்டவுண்ட சீதையினை"—இதனை, கா உண்டு அவ் உண்டு அ சீதையினை என்று பிரித்துப் பொருள் கொள்ளுக. இலங்கையிலே ஒரு கா (அசோகவனம்) உண்டு; அவ்விடத்தில், உண்டு—இருந்தாள்; அ—அந்த; சீதையினை—சீதா தேவியை, காவுண்டு என்பது "கவுண்டு" எனக் குறுகியதும், "அச்சீதை யென்பதில் மெய் கெட்டதும் தொல்காப்பிய விதிப்படியே யென்க. "அவ்" என்பதன் பிறகு இடத்தில் என்னும் சொல் வருவித்துக் கொள்ளப்பட்டது.

"மாலையிட்ட பெருமானே"—(சீதா தேவியின்) நாயகனுகிய ஸ்ரீ ராமபிரானுக்கு நிகரானவனே; இராமன்

சூரிய குலத்தவனாகவும், நமது மகாராஜா சந்திரகுலத் திலகமாகவும் இருப்பினும் பெயரொற்றுமை கருதியும், வீரியம் முதலிய குணப் பெருமைகளின் ஒப்பைக் கருதியும், கவி இங்ஙனம் எழுதியிருக்கிறார். மேலும், அரசன் மகா விஷ்ணுவின் அவதாரமென்று வேதங்கள் முழங்குதலறிக. இராமனும் மகாவிஷ்ணுவின் அவதாரமென்றே கருதப் படுதலுணர்க.

'கவுண்டனூரில்''—கவுண்ட மாநகரத்தின் கண்ணே, நீர்வளம், நிலவளம், பாவளம் முதலியன பொருந்தியதாய் அஷ்ட லக்ஷ்மிகளுக்குத் தாய்வீடாய் அமராபதி போல் விளங்கும் நமது ராஜதானியிலே;

'கவுண்டவுண்ட ராமசாமித் துரையே',—ஏ கவுண்டா! (கவுண்ட வமிசத்தில் உதித்த மன்னா) உண்ட (அறுவகைச் சுவைகளும் பொருந்திய இனிய உணவை எப்போதும் சாப்பிடுகிற) ராமசாமித் துரையே! எல்லோரும் உண்பவரேயாயினும் நமது மகாராஜாவுக்கு மாத்திரம் 'உண்ட' என்னும் அடைமொழி கொடுத்த தேனோ என்றால், எல்லோரும் உண்பது போலன்று, இவர் தேவர்களைப் போல அரிய உணவுகளை உண்ணும் பாக்கிய வான் என்பதைக் குறிப்பிடும் பொருட்டே என்க.''

## காதல்

சின்னச் சங்கரன் யமகம் பாடி அரங்கேற்றிய புகழ், கவுண்ட ராஜ்யம் முழுவதிலும் பரவி, ததீதளித்துப் போய் விட்டது. கவுண்டர் சபையில் வந்த வேடிக்கைகளை யெல்லாம் மேல் அத்தியாயத்தில் நான் விஸ்தாரமாக எழுதவில்லை. கவுண்ட சபையின் வர்ணனை எனக்கே சலிப்படைந்து போய்விட்டது. படிப்பவர்களுக்கும்

அப்படித் தானே இருக்கும்? அதை உத்தேசித்து அரையே மாகாணி வேலைதான் செய்தேன்.

இப்போது சின்னச் சங்கரனுடைய 'காதல்' விஷயம் சொல்லப் போகிறேன். சிரத்தையுடன் படிக்கவேண்டும். தேசமாகிய உடலுக்கு வித்துவானே உயிர். ஒரு ஜாதியாகிய கடிகாரத்திற்கு 'சாஸ்திரம்' தேர்ந்தவனே 'வில்'. நாகரீகமாகிய கங்கா நதிக்குக் 'கவி'யின் உள்ளமே மூல ஊற்று. ஆகவே கவியின் 'காதல்' உலகமறியத் தக்கது. சின்னச் சங்கரன் தமிழ் தேசத்திலே ஒரு 'கவி.' இருபது முப்பது வருஷங்களுக்கு முன் இந்த நாட்டில் கவிகளெல்லோரும் சின்னச் சங்கரன் மாதிரியாகத் தானிருந்தார்கள். இப்போதுதான் ஓரிரண்டு பேர் தமிழில் கொஞ்சம் சரியான பாட்டுக்கள் எழுதப்பட்டிருப்பதாகக் கேள்வி. அவர்களுடைய பெயர்கூட எனக்குத் தெரியாது. நான் தமிழ் தேசத்து பழக்கத்தைவிட்டு நெடு நாளாய்விட்டது. (இப்போது வட ஆப்பிரிக்காவிலிருக்கிறேன்.)

ஆனால் முப்பது வருஷங்களுக்கு முன் நான் தமிழ் நாட்டில் இருந்தபோது அங்கே சின்னச் சங்கரனுக்கு மேலே உயர்ந்த வகுப்பைச் சேர்ந்த 'கவி' நான் பார்த்தது கிடையாது. தேசமோ உலகத்துக்குள்ளே ஏழை தேசமாச்சுதா? பதினாயிரம் ரூபாயிருந்தால் அவன் தமிழ் நாட்டிலே கோடீசுரன். பத்து வேலி நிலமிருந்தால் அவன் ராஜாதி ராஜ ராஜ மார்த்தாண்டன். ஒரு ஜமீனிருந்து விட்டால், அவன் 'சந்திர வம்சம்' 'சூரிய வம்சம்' 'சனீசுர வம்சம்' 'மகாவிஷ்ணுவின் அவதாரம்.'—பழைய 'பன்றி' அவதாரத்துக்குப் பக்கத்திலே சேர்க்க வேண்டியது. இந்த தேசத்தில் முப்பத்து முக்கோடி தேவர்களென கணக்குச் சொல்லுகிறார்கள். நான் நாலைந்து பேரைக்கூட பார்த்தது கிடையாது. அது எப்படி வேண்டுமென்றாலும்

போகட்டும். ஆனால், இந்த முப்பத்து முக்கோடி தேவர் களிலே எனக்குத் தெரிந்தவரை நம்முடைய மகாவிஷ்ணு வுக்குத்தான் சிரமம் அதிகம். பன்றி விஷ்ணுவின் அவதாரம், ஆமை விஷ்ணுவின் அவதாரம். கவுண்டனூர் ஜமீந்தார் விஷ்ணுவின் அவதாரம். அன்னிபெஸண்ட் வளர்க்கிற (நாராயணய்யர் இடங்கொடாத) கிருஷ்ண மூர்த்தி பையன் அதே அவதாரம்.

மொத்தத்தில், மகாவிஷ்ணுவுக்குக் கஷ்டம் அதிகம். இப்படித் தெருவிலே கண்டவர்களை யெல்லாம் மூன்று காசுக்காகப் புகழ் பாடுவது, பெண்களுடைய மூக்கைப் பார்த்தால் உருளைக் கிழங்கைப் போலிருக்கிறது. மோவாய் கட்டையைப் பார்த்தால் மாதுளம் பழத்தைப் போலிருக்கிறது. கிழவியுடைய மொட்டைத் தலையைப் பார்த்தால் திருப்பாற் கடலைப்போல் இருக்கிறது என்று திரும்பத் திரும்பக் காது புளித்துப் போகிற வரையில் வர்ணிப்பது; யமகம், திரிபு, பசு மூத்ரபந்தம், நாக பந்தம், ரத பந்தம், தீப்பந்தம் முதலிய யாருக்கும் அர்த்தமாகாத நிர்பந்தங்கள் கட்டி, அவற்றை மூடர்களிடம் காட்டி சமர்த்தனென்று மனோராஜ்யம் செய்துக் கொள்வது— இவைதான் அந்தக் காலத்திலே கவிராயர்கள் செய்த தொழில்.

கவுண்டனூர் ஜமீந்தார் அவர்களின் அடைப்பைக் காரன், மந்திரி, நண்பன், ஸ்தல வித்வான் முதலியன வாகிய முத்திருளக் கவுண்டனுக்கு ஒரு பெண் உண்டு. வயது பதினாறு. (இப்போதல்ல; சங்கரன் கதையிலே அவள் புகுந்த காலத்தில்.)

நிறம் கருப்பு; நேர்த்தியான 'மைக்' கருப்பு; பெரிய கண்கள், வெட்டுகிற புருவம்; அதிக ஸ்தூலமுமில்லாமல், மெலிந்து ஏணி போலவும் இல்லாமல், இலேசாக உருண்டு

நடுத்தரமான உயரத்துடன், ஒழுங்காக அமைந்திருந்த சரீரம். படபடப்பான பேச்சு. எடுத்த வார்த்தைக் கெல்லாம் கலீரென்று சிரிக்கும் சிரிப்பு. மதுரைச் சீட்டிச் சேலை, டோரியா ரவிக்கை, நீலக் குங்குமப் பொட்டு, காதிலே வயிரத்தோடு, கழுத்திலே வயிர அட்டிகை, கையிலே வயிரக் காப்பு. நகையெல்லாம் வயிரத்திலே. மாணிக்கம் ஒன்றுகூடக் கிடையாது. மேனி முழுவதுமே நீலமணி. தலையைச் "சொருக்கு"ப் போட்டு, அதில் ஜாதி மல்லிகைப்பூ வைத்துக் கொள்வதிலே பிரியமுடையவள். கொஞ்சம் குலுங்கிக் குலுங்கி நடப்பாள். காலில் மெட்டிகள் "டனீர்" "டனீர்" என்றடிக்கும். இவ்வளவு "ஷோக்"கான குட்டிக்குப் பெயர் அத்தனை நயமாக வைக்கவில்லை. "இருளாயி" என்று பெயர் வைத்திருந் தார்கள்.

இவள் மேலே சங்கரனுக்குக் காதல் பிறந்துவிட்டது. சங்கரனை இதற்குமுன் சரியாக வர்ணித்திருக்கிறேனோ இல்லையோ! நேரே ஞாபகமில்லை. எனினும் இப்போது அவனுடைய காதல் கதை சொல்லத் தொடங்கும்போது மற்றொரு முறை வர்ணனை எழுதியாக வேண்டியிருக்கிறது.

கருப்பு நிறம். குள்ள வடிவம், மூன்று விரல் அகலம் நெற்றி. கூடு கட்டின நெஞ்சு. குழிந்த கண்கள், இரத்த மற்ற இதழ்கள். நெரிந்த தொண்டை. பின்னுகிற கால்கள். அரையிலே அழுக்கு மல் வேஷ்டி. மேலே ஒரு அழுக்கான பட்டுக்கரைத் துண்டு. இவ்வளவையும் மீறி கொஞ்சம் புத்திக் கூர்மையுடையவன் போல் தோற்று விக்கும் முகம்.

இவ்விருவருக்குள்ளே 'காதல்' எப்படி ஏற்பட்டதென் பதின் மூலங்கள் எனக்குத் தெரியாது. ரிஷி மூலம், நதி மூலம் விசாரிக்கப்படாது என்பார்கள்; அதாவது, சின்ன

ஆரம்பங்களிலிருந்து பெரிய விளைவுகள் ஏற்படும் என்றர்த்தம். காதல் சமாச்சாரமும் அப்படித்தான். ஒரு பார்வை, ஒரு தட்டு—ஒரே பார்வை ஒரேதட்டாக முடிந்து விடும். ஒரு பேச்சு, ஒரு சிரிப்பு—மரண பரியந்தம் நீங்காத பந்தமேற்படுத்தி விடும். ஆனல், இருளாயிக்குச் சங்கரன் விஷயத்தில் அப்படி நிலைத்த காதல் இருந்த தென்று நிச்சயமாகச் சொல்வதற்கில்லை. சங்கரனுக்கு மாத்திரம் அவளிடம் பரிபூரண மோகம் ஏற்பட்டிருந்தது. அது மனத்திலே போய் நிற்கவில்லை. ஏறக்குறைய மரணத்திலே கொண்டு விட்டுவிடத் தெரிந்தது. முத்திருளக் கவுண்டனுடைய தகப்பன், ஒரு தொண்டு கிழவன். கண் இல்லாமல் வீட்டிலேயே உட்கார்ந்திருந் தான். அவனை மனித விவகாரங்கள் இல்லாத ஒரு தனித் தீவாந்திரத்திலே கொண்டுவிட்டு, இரண்டு காணி நிலம் மாத்திரம் கொடுத்து பயிரிட்டுக் கொள்ளும்படிச் சொன்னல்—அதாவது, கண்களையும் திருப்பிக் கொடுத்த பிறகு—அந்த இரண்டு காணிகளில் முக்கால் காணியை வெற்றிலைத் தோட்டமாக்குவான். ஒரு முழுக் காணியிலே புகையிலைத் தோட்டம் போட்டுவிடுவான். மிஞ்சின கால் காணியிலேதான் நெல் விதைப்பான்—பாக்கு மரம் வைத்தது போக. காய்கறிகள் கூட அவசியம் இல்லை. இந்த இரண்டு காணிக்கு ஒரு சின்னக் குளம் கொடுக்கமாட்டார் களா? அதில் மீன்கள், நண்டு, அகப்படாதா? ஒரு பார்வை பார்த்துக் கொள்வான்.

கிழ 'திருதராஷ்டிர'க் கவுண்டனுக்குப் புகையிலையிலே எவ்வளவு பிரியமோ அவ்வளவு பிரியம் கம்பராமாயணத் திலேயுமுண்டு. யாரேனும் வந்து கம்பராமாயணத்திலே ஒரு பாட்டு வாசித்து அர்த்தம் சொல்லும்படி கேட்டால் சரியாகச் சொல்லுவான். அவனும் கவுண்டனூர்த் தமிழ் புலவர்களிலே ஒருவன். ஆனல், சங்கரன் காலத்துப்

புலவர்களைக் காட்டிலும் அவன் விசேஷந்தான். அவனுக்கு வேறொன்றும் இல்லாவிட்டாலும் ஒரு பெரிய காவியத்துக்குப் பொருள் சரியாக சொல்லத் தெரியும். பின்னிட்ட புலவர்களுக்கு ஒன்றுமே தெரியாது. பாட்டுக் கட்டத்தான் தெரியும். முத்திருளக் கவுண்டனுடைய நட்பு ருசி கொடுக்கத் தொடங்கியதில் இருந்து, கிழக் கவுண்டனிடம் கம்பராமாயணம் கேட்க ஆரம்பித்தான். மாலைதோறும் பள்ளிக்கூடம் விட்டவுடனேயே முத்திருளக் கவுண்டன் வீட்டுக்குப் போய்ப் பாடல் கேட்கத் தவறுவதில்லை. இரவு எட்டு மணிக்குத்தான் திரும்பி வருவான். "தாத்தனிடம் அர்த்தம் கேட்க வருது அய்யர் வீட்டுப் பிள்ளை" என்று இருளாயிக்கு சங்கரனிடம் பிரியமேற்பட்டது. இந்தப் பிரியம் நாளுக்குநாள் பலவிதங்களிலே பக்குவமடையலாயிற்று. ராமாயணப் பாடத்துக்குப் போன இடத்திலே சங்கரன் "மன்மத கலை" படிக்கத் தொடங்கினான். கிழவனுடைய குருட்டு விழிக்குக் கூட விவகாரம் கொஞ்சம் கொஞ்சமாக பிரகாசமாய் விட்டது.

ராமாயணக் கதை குறைகிறது. சிரிப்பும் வேடிக்கைக் கதையும் அதிகப்படுகிறது; கிழவனுக்கு அர்த்தமாகா. வீட்டில் அந்தப் பெண்ணைத் தவிர வேறு ஸ்திரீயே கிடையாது. முத்திருளக் கவுண்டன் மனைவி, கிழவன் மனைவி இருவரும் செத்து நெடுங்காலமாய் விட்டது. இருளாயியும் சங்கரனும் சிநேகமாக இருப்பதில் கிழவனுக்கு அதிருப்தியே கிடையாது. 'அய்யர் வீட்டுப்பிள்ளை! ஐயோ பாவம்! அதுக்கு என்ன சூது தெரியுமா? வாது தெரியுமா? குழந்தைகள் தானே! விளையாடிக் கொண்டிருக்கட்டும். அதிலே தப்பிதம் வராது' என்று கிழவன் தனக்குத்தானே மனதறிந்த பொய் சொல்லிக்கொண்டு சும்மா இருந்து விடுவான். 'தப்பிதம்' நடந்தாலும் குடி முழுகிப் போய்

விடாது என்பது 'திருதராஷ்டிர' கவுண்டனுடைய தாத்பரியம்.

இருளாயிக்குப் பதினறு வயது என்று சொன்னேம். அப்போது சங்கரனுக்கு வயது பதினேழு. "ஜோடி" சரியாகவே இராது. ஆனல், ஐரோப்பியர் சொல்வது போல மன்மதன் குருட்டுத் தெய்வம். (கண்ணில்லாமல், குறிபார்த்து அம்புகள் போடுவது கஷ்டம். ஆனல், தெய்வத்துக்கு எதுவும் பெரிதில்லையல்லவா? மேலும் கவிகளுக்கும் புராணக்காரர்களுக்கும்கூடப் பெரும்பாலும் கண் விஷயம் அந்த மன்மதனைப் போலவேதான்.)

எப்படியோ அவர்களிடையே காதல் செடி பெரிதாகி வளர்ந்து பூப்பூத்து காய் காய்த்துப் பழம் பழுக்கத் தொடங்கி விட்டது. பழங்களென்றால் யாரும் தப்பெண்ணங் கொண்டுவிட வேண்டாம். இவர்களுடைய காதல் செடியிலே ஏராளமாகப் பழுத்துத் தொங்கிய பழங்கள் சங்கரன் செய்த கவிகளைத் தவிர வேறென்றுமில்லை. இருளாயி விஷயமாகச் சங்கரன் சுமார் 2000 கவிகள் வரை பாடித் தீர்த்து விட்டான்.

இப்படியிருக்கையில் இவ்விருவரின் சுகத்துக்கு இடையூறான ஒரு செய்தி வந்துவிட்டது. இவர்களுடைய காதலாகிய மரத்திலே இடிபோல் விழுந்த செய்தி.

(கதை முடியவில்லை)

## நமது கருத்து

'சின்னச் சங்கரன் கதை' பாரதியின் சுயசரிதமே என்று வ. ரா; ரா. அ. பத்மநாபன் ஆகியோர் கருத்துத் தெரிவித்துள்ளனர். இது ஏற்கக்கூடியது அன்று. பாரதி தம் இளம் பிராயத்தினைத் தம் 'சுய சரிதத்திலே' வடித்துக் காட்டியிருக்கிறார், எனவே இன்னொரு கதை தேவையில்லை,

சிறு வயதிலேயே தன் தாயை இழந்து விட்டான் சங்கரன், பாரதியின் தாயும் சிறு வயதிலேயே இறந்து விட்டாள் என்பதாலோ, சிறு வயதிலே தன்னோடு ஒத்த வயதினர்களோடு சேராமல் புலவர்களுடன் மட்டும் நட்புப் பாராட்டினான் சங்கரன் என்ற காரணங்களைக் கொண்டோ, சங்கரன் கதை பாரதியின் கதை என்று கொள்வது சரியாகுமா? பிஞ்சிலேயே இன்ப ரஸத்தைத் தவிர வேறொன்றிலும் நாட்டம் கொள்ளாது, அந்த ஓர் ரசத்தைத் தவிர வேறெதிலும் கவனம் செலுத்தாது. அதற்காகத் துணிச்சலாக அசிங்கமான பதங்களைக் கொட்டி, பிஞ்சிலே பழுத்து 'கவிதை' என்ற பெயரில் தாறு மாறாக ஏதோ எழுதிய சங்கரனை பாரதிக்கு ஒப்பிடலாமா?

'சின்னச் சங்கரன்' எங்கே? பாரதி எங்கே? பதின்மூன்று வயதிற்குள் தம் கவிதைத் திறத்தால் 'பாரதி' என்ற சிறப்புப் பட்டத்தை, விருதை சிவஞான யோகியாரிட மிருந்து பெற்றவர் பாரதி. சிவஞான யோகியார் என்ன சாமான்ய மானவரா? காந்திமதி நாதனைத் தம் கவிதை யால் அடக்கியதும் அந்த சிறுவயதிலேதான். அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச் சிந்துக்கு ஒப்பான காவடிச் சிந்து ஒன்றை முருகன்மேல் பாரதி பாடியதும் அப்போதுதானே! அந்த வயதில் அவர் பாடிய கவிதைகள் எத்தனை எத்தனை! ஒரே ரஸத்திலா பாடினார்? இல்லை, இல்லை! அவரைப் புகழ்ந்த புலவர்களும் எத்தனை பெரியோர்! இந்த பாரதி யும், 'யமகம்' பாடிய சங்கரனும் ஒரேயளவு திறமை யுள்ளவரா?

இனி 'சின்னச் சங்கர'னின் கதையைப் பார்ப்போம். கதாசிரியர் பாரதி தாம் ஐரோப்பிய பாணியையும், நம் நாட்டு பணியையும் சேர்த்துக் கையாளப் போவதாக அக் கதையின் தொடக்கத்திலேயே கூறுகிறார். அதுவரை

தமிழ் நாட்டுக் கதைகளில் இத்தகைய பாணி கையாளப் பட்டதே யில்லை எனலாம். அப்படிப்பட்ட புதுமை என்ன?

இது ஒரு நையாண்டிச் சித்திரம். நையாண்டி வேறு; ஹாஸ்யம் வேறு. நையாண்டிக்கு மற்ெறுரு பெயர்தான் கிண்டல்; குத்தல். வாழைப் பழத்தில் ஊசி சொருகுவது போல் மிக மென்மையாக எள்ளி நகையாடுவது. நையாண்டி ஊன்றிப் படித்தாலன்றி புலப்படாது. ஹாஸ்யம் மேலெழுந்த வாரியாகவே தெரியும்.

பாரதியின் நையாண்டிக்குச் சிறந்த உதாரணம் கவுண்டபுரம் ஜமீந்தாரின் பவனி. கவுண்டாதி கவுண்ட, அண்ட பகிரண்ட, ராஜாதி ராஜ, ராஜ மார்த்தாண்ட, ராஜ கம்பீர ராமசாமி கவுண்டர் என்று அவருக்குப் பெரிய பெரிய அடைமொழிகளைக் கொடுக்கிருர். அத்தகைய சூராதி சூரன் ஆட்டு வண்டியில் தைரியமாக சவாரி செய்வதாகச் சொல்வது கிண்டல்; சோனிக் குதிரை மீது நடுங்கியபடி ஒரு கையில் கடிவாளத்தையும், மற்ெறுரு கையில் உயிரையும் பிடித்துக்கொண்டு, பாதுகாப்புக்கு மறவர் சூழ்ந்து வர, பவனி வருவதாக வர்ணிப்பது அதைவிடப் பெரிய கிண்டல்; இவருடைய பாரத்தைத் தாங்காமல் திணறும் சோனிக் குதிரைமீது இவர் பயத்தில் திணறிக்கொண்டே பவனி வருகிருர் என்பது எவ்வளவு பெரிய கிண்டல்!

* * *

பிரபல ஆங்கில நாடகாசிரியர் ஷேக்ஸ்பியர். அவருடைய நாடகங்களில் "மிட் சம்மர் நைட்ஸ் டிரீம்" என்பது ஒரு சுப நாடகம் (காமெடி). அதிலே ஒரு ஹாஸ்ய பாத்திரம். அதன் பெயர் 'பாட்டம்! இந்தப் பெயரின்

பொருளே 'அடி மட்டம்'' என்பது. இந்த கதாபாத்திரம் உண்மையில் மட்டம்தான். காரணம் 'பாட்டம்'' புத்தி சாலியல்ல. முட்டாள், மகா முட்டாள்!

ஒரு இளவரசனின் திருமணத்தை யொட்டி நாடகம் போடுகிறார்கள் சிலர். பாட்டம் அதில் மூன்று மாறுபட்ட வேடங்களைத் தான் ஒருவனே ஏற்று நடிக்கத் துடிக்கிறான். 'வீரன் பிரமஸாக நான்தான் நடிப்பேன்' என்கிறான். பிரமஸ்ஸின் காதலி தீப்ஸ் என்ற பெண் பாத்திரத்தையும் தானே நடிக்கப்போவதாகக் கூறுகிறான். அந்த நாடகத்தில் ஒரு சிங்கமும் உள்ளது. அது பயங்கரமாக கர்ஜிக்கும் பிரமஸைப் பார்த்து. 'சிங்கமாகவும் நான்தான் நடிப்பேன்' என்று பிடிவாதம் பிடிக்கிறான். அது எப்படி முடியும்?'' என்று மற்றவர் கேட்கின்றனர்.

அதற்கு பதிலளிக்கிறான் பாட்டம். ''பெண் பாத்திரத்தை நடிக்கும் போது இடிமுழக்கம் போன்ற மெல்லிய கீச்சுக் குரலில் பேசுவேன். சிங்கமாக வரும் போது குயிலிசை போல கர்ஜிப்பேன்!'' என்கிறான்.

ஐயோ பாவம்! இடி முழக்கம் என்ற சொல்லுக்கும் மெல்லிய கீச்சுக் குரலுக்கும் வேற்றுமை தெரியாத இவன் எவ்வளவு புத்திசாலி! அது போகட்டும். சிங்கத்தின் கர்ஜனை குயிலைப் போலவா இருக்கும்? அட மண்டூகமே!

*　　　*　　　*

இவனைப் போன்றே மற்றொரு பாத்திரமும் உண்டு வேறொரு நாடகத்தில். 'பன்னிரண்டாம் இரவு' என்ற நாடகத்தில் தோன்றும் சர் ஆண்ட்ரு ஆக்சீக் பாட்டமிற்குச் சற்றும் குறைந்தவரல்ல. இவர் இலீரியா நாட்டு அழகி ஒலீவியாவை மணக்கத் துடிக்கிறார். இதற்காக

அவள் உறவினர் ஸர் டோபி பெல்ச்சின் உதவியை நாடுகிறுர்· உறவினன் ஆக்சீக்கின் பலவீனங்களை நன்கறிந் தவன் பெல்ச். ஆக்சீக்கின் முட்டாள்தனத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டு கொழுக்கிறுன்.

ஒலிவியாவின் தரிசனம் கூட ஆக்சீக்குக்கு கிடைக்க வில்லே. ஏமாற்றமடைந்த இவன் ஸர் டோபியைத் திட்டு கிறுன். அதே சமயம் அவ்வூர் கோமகனின் தூதுவன் ஒலீவியாவை பார்த்துவிட்டுத் திரும்புகிறுன். டோபி ஆண்ட்ரூஸை அவனுடன் வாள்போர் செய்யத் தூண்டு கிறுர். ஸர் ஆண்ட்ரூ அப்போது நடுங்கும் நடுக்கத்தை வர்ணிக்கிறுர் ஷேக்ஸ்பியர். அது எப்படி இருக்கிறதென் ருல் கவுண்டபுரம் ஜமீந்தார் குதிரைச் சவாரி செய்யும் போது எப்படி நடுங்கிஞரோ அப்படி இருந்தது!

இது மட்டுமா? ஆண்ட்ரூவுக்கும் ஜமீந்தாருக்கும் இன்னும் சில ஒற்றுமைகளும் உண்டு. தான் நாட்டியம்' இலக்கியம், இசை ஆகிய எல்லாவற்றிலும் வல்லவட என்பது ஆக்சீக்கின் எண்ணம். இந்த 'இலக்கிய மேதை' உபயோகிக்கும் சொற்களுக்கோ அர்த்தமே மாறுபட்டில் தாக இருக்கும். உதாரணமாக தலே என்பதற்குப் பதித இவன் தவளே என்பான். அவன் அகராதியில் தவளே என்ருல் தலே என்பது பொருள்.

'அதோ வருகிறுள், பாருங்கள். அவள் பெயர் மேரி. அவளுக்கு வணக்கம் தெரிவியுங்கள்! என்ருர் டோபி.

உடனே ஆண்ட்ரூ "செல்வி மேரி வணக்கம் தெரிவி!" என்ருன் சிறிதும் தயக்கமின்றி.

மற்றவர் நகைத்தனர். அதை அவன் சட்டை செய்யவே இல்லே.

இவனுடைய இந்த இலக்கியத் திறனைப் பார்க்கும் போது, ராமசாமி கவுண்டரின், "நான் ஒரு கீர்த்தனை பார்த்திருக்கிறேன்" என்ற சொற்கள் காதில் ஒலிக்கின் றனஅல்லவா? அவர், தாம் கட்டிய கீர்த்தனையை பாடிய விதத்தை ஆக்சீக்கின் இசை வல்லமையுடன் ஒப்பிடலாமா? இல்லை, அந்த கீர்த்தனையின் கடைசி அடியைத் திருப்பித் திருப்பி பாடினாரே

'மிக்க வுண்ட ராஜ போஜனுக்
கருள் செய்யும் பாத (மா)

இதை நினைத்து சிரிக்கலாமா?

* * *

ஐந்தாம் ஹென்றி இளவரசனாக இருந்தபோது, அவனுக்குச் சில நண்பர்கள் உண்டு. பால்ஸ்டாப் அவர் களில் ஒருவன். அவனுக்கு இரண்டே வேலைகள் உண்டு. ஒன்று நினைத்தபோதெல்லாம் உண்பது; மற்றொன்று கிடைத்த போதெல்லாம் குடிப்பது. அவனுக்கு மிகப் பெரிய தொந்தி உண்டு. பானை போலிருக்குமாம் வயிறு. உடம்பில் வயிறு தவிர வேறெதுவும் தெரியாது. இந்த பெரிய சாப்பாட்டுராமன் பெரும்புளுகன்; படுசோம்பேறி; மகா கோழை.

* * *

பால்ஸ்டாப் போல ஜமீந்தாரும் பெருந்தீனிப் பண்டாரம். பால்ஸ்டாப் குடிப்பான். இவர் லேகியம் சாப்பிடுவார். இது ஒரே ஒரு வித்தியாசம். மற்றபடி உருவம் எதிலும் எந்தவித வேற்றுமையும் கிடையாது. ஆனால் பால்ஸ்டாப் மிகவும் புத்திசாலி; கெட்டிக்காரன்.

அலெக்சாண்டர் போப் என்பவர். ஒரு பெரிய ஆங்கிலக் கவி, அவருடைய 'ஆன் எபிஸில் டு அர்பத் நாட்

(An Epistle to Arbuthnot) என்ற கவிதை மிகவும் பிரசித்தமானது. இந்தக் கவிதையில் இங்கிலாந்தில் அவர் காலத்திலிருந்த மட்டரகமான புலவர்களைப் பற்றி அவர் விரிவாக வர்ணிக்கிறார். இந்தத் 'தனிரகப்' புலவர்களை, 'க்ரப் ஸ்டிரீட்' புலவர்கள் என்று குறிப்பிடுகிறார்; அதாவது மிக மட்டரகமான புலவர்கள் என்று கூறுகிறார். இந்தச் சொற்களை அப்படியே மொழிபெயர்த்தால், 'தெருப் பொறுக்கி புலவர்கள்' என்று எழுதவேண்டி வரும்.

இவர்கள் புகழ்பெற்ற கவிஞர்கள் பலரை அறிந்த தாகக் கூறுவாராம். அவர்கள், தம் கவிதைகளை வானளாவப் புகழ்ந்ததாகவும் சிறிதுகூடத் தயங்காது கூறுவாராம். உண்மையில் அவர்களை இவர்கள் பார்த்துக் கூட இருக்கமாட்டார்களாம். பெரிய புலவர்களை அண்டி, எப்படியாவது தம் கவிதைகளைப் பிரபலப்படுத்த வேண்டுமென்று கெஞ்சுவார்களாம்.

இவர்களுடைய தொல்லைக்கு ஆளானவர்களில் கவிஞர் போப்பும் ஒருவர். சிலர் போப்பின் வீட்டிற்குச் செல்வர். பசி என்பர். ஏதாவது கொடுத்தால்தான் போவர். கொடுக்காவிட்டால் மறியல்கூட செய்வராம். இவர்களுக்குப் பயந்து வாயிலை மூடுவார் போப். உடனே அவர்கள் பின் வாயில் வழியாக உள்ளே புகுவார்கள். வந்தபின் மிரட்டி உருட்டி எதையாவது பறித்துச் செல்வராம்.

கவுண்டபுரம் புலவர்களைப் பற்றி பாரதி என்ன சொல்கிறார்?

"இப்படித் தெருவிலே கண்டவர்களை யெல்லாம் மூன்று காசுக்காகப் புகழ் பாடுவது, பெண்களுடைய மூக்கைப் பார்த்தால் உருளைக்கிழங்கைப் போல் இருக்

கிறது, மோவாய்கட்டையைப் பார்த்தால் மாதுளம் பழத்தைப் போலிருக்கிறது. கிழவியினுடைய மொட்டைத் தலையைப் பார்த்தால் திருப்பாற்கடலைப் போல் இருக்கிறது என்று திரும்பத் திரும்பக் காது புளித்துப் போகிற வரையில் வர்ணிப்பது; யமகம், திரிபு, பசு மூத்ர பந்தம், நாக பந்தம், ரத பந்தம், தீப் பந்தம் முதலிய யாருக்கும் அர்த்தமாகாத நிர்பந்தங்கள் கட்டி, அவற்றை மூடர்களிடம் காட்டி சமர்த்தனென்று மனோராஜ்யம் செய்து கொள்வது—இவைதான் அந்தக் காலத்திலே கவிராயர்கள் செய்த தொழில்."

பாரதி காட்டுகிற இந்த கவிராயர்களுக்கும் போப் வர்ணிக்கிற 'க்ரப் ஸ்டிரீட்' புலவர்களுக்கும் எத்தகைய ஒற்றுமை! போப்பைவிட ஒருபடி உயர்ந்து விட்டார் பாரதி!

முத்திருளன் இவர்களில் ஒருவன். ஏன், கவுண்டபுர புலவர்களையெல்லாம் ஆட்டி வைப்பவன் என்று கூடச் சொல்லலாம். இவன் அறிந்ததாகக் கூறுவது தொல்காப்பியம். ஜமீந்தாரின் வலது கை என்பதால் இவனை எதிர்த்துப் பேசுவோர் எவருமிலர். ஜமீந்தாரின் பக்கபலம் இருந்ததால் இவன் யாரையும் லட்சியம் செய்யமாட்டான். ஆனால் இவனுக்கும் ஒரு நல்ல குணம் உண்டு. கை நீட்டி வாங்கிய கடனைப் பணமாகத் திருப்பாவிட்டாலும், அதற்குக் கைம்மாறு செய்யாமல் தூங்கவே மாட்டான்.

* * *

ஆங்கிலத்திலே ஒரு நையாண்டிக் கவிதை உண்டு. அதன் பெயர் 'மாக் ப்ளெக்னோ'. மாக் ப்ளெக்னோ இதன் நாயகன். இந்தப் புலவன் எழுதிய கவிதைகள் அர்த்த

மற்றவை. வசனமோ சுத்த அபத்தம். இவன் தனக்குப் பின் தன் மந்தபுத்தி கவிதா ராஜ்யத்திற்கு ஒரு தகுந்த வாரிசைத் தேடினான். அவன் முயற்சியும் பலனளித்தது. 'பார்பிகான்' என்பது ஐயர்லாந்தில் ஒரு சிறிய கிராமம். இதுவே அவன் ராஜ்யம். இங்கு மிகவும் கீழ்த்தரமான நாடகங்களை நடித்துக் காட்டுவார்கள். தன் வாரிசை அங்கு அழைத்துச் சென்று பட்டம் சூட்டினான். முடிசூட்டு விழாவிற்குப் பின், வாரிசின் தகுதி, அருமை பெருமைகளைப் பற்றி சொற்பொழிவாற்றினான் மந்த புத்திக்கவிகள் மகாராஜா மாக் ப்ளெக்னோ. அதில் விசேஷம் என்ன வென்றால் ஒவ்வொரு வாக்கியமும் முன்னுக்குப் பின் முரணாக அமைந்ததே.

முடிசூட்டு விழாவின் கடைசி கட்டம். தன் மேலங்கியை வாரிசின்மீது போர்த்தியவுடன் மாக் ப்ளெக்னோ மாயமாய் மறைந்தான். இந்த விநோதமான முடிசூட்டுவிழா சித்திரத்தை நமக்குக் காட்டுபவர் பிரபல ஆங்கில கவி ஜான் டிரைடன்.

இதனோடு சின்னச் சங்கரனின் யமக அரங்கேற்று விழாவை ஒப்பு நோக்கிப்பாருங்கள். பாரதியின் அருமை யான நையாண்டிச் சித்திரத்தின்முன் 'மாக்ப்ளெக்னோ' என்ன செய்ய முடியும்?

எனவே, பாரதியின் சின்னச் சங்கரன் கதை ஓர் அருமையான 'நையாண்டி'. அந்தக் காலத்திலே சில ஜமீந்தார்களின் வாழ்க்கை எப்படியிருந்தது என்பதைச் சுட்டிக் காட்டி 'நையாண்டி' செய்யும் கிண்டல் சித்திரம்.

# பின்னுரை

சுப்ரமண்யம் என்பது முருகப்பெருமானின் திருப் பெயர். முருகனே தமிழர்களின் தெய்வம்; தமிழ்த் தெய்வம்.

முருகன் தீ வண்ணன்; ஜ்வாலை உருவினன்.

'குகையில் வளரும் கனலே' என்கிறார் பாரதியார்.

முருகன் போருக்கெனத் தோன்றியவன்; சூரபத்மனை மாய்க்கப் பிறந்த வீரன். இவ்வாறு நமக்குக் கந்தபுராணம் கூறுகிறது. எனவே சுப்ரமண்யம் என்ற அவதாரமே வீரத்தின் தோற்றம்.

தெரிந்தோ தெரியாமலோ அறிந்தோ அறியாமலோ நமது தமிழ்நாட்டு மக்கள் தமது பிள்ளைகளுக்குச் சுப்ரமண்யம் என்று பெயர் சூட்டுகிறார்கள்.

இப் பெயர் சூட்டும்பொழுது பெற்றோர்கள் என்ன கருதி இப்பெயர் சூட்டினார்களோ நாம் அறியோம்.

ஆனால் இப்பெயர் கொண்டோருள் பெரும்பாலோர் பிற்கால வாழ்வில் பெரும் வீரராக விளங்கியுள்ளார்கள்.

நமது தேசத்தின் விடுதலைப் போர் வரலாற்றைப் பார்த்தோமானால் இவ்வுண்மை புலப்படும்.

சுதேசமித்திரன் பத்திரிகையைத் தொடங்கித் தமிழ் நாட்டு மக்களை அரசியல் போருக்குத் தயார் செய்த ஜி. சுப்பிரமணிய அய்யரை மறக்க முடியுமா?

பாரிஸ்டர் படிப்புக்காக லண்டன் சென்று, வீர சவர்க்கார், மதன்லால் திங்ரா முதலியவர்களுடன் தொடர்புகொண்டு, விடுதலைப்போரில் ஈடுபட்டு, மாறு

வேடம் பூண்டு இங்கிலாந்திலிருந்து புதுச்சேரி வந்து சேர்ந்தாரே, வ. வே. சு என்கிற வரகனேரி சுப்ரமண்ய அய்யர்! அவரை மறக்க முடியுமா?

மகாத்மாகாந்தி ஒத்துழையாமைப் போர் தொடங்கிய போது தமது மகனுடன் சிறை சென்ற வழக்கறிஞர் தியாகி சாத்தூர் சுப்ரமணிய நாயனுரை மறக்க முடியுமா.

முடியாது; முடியாது; முடியவே முடியாது.

விடுதலைப் போருக்கும் சுப்ரமண்யம் எனும் பெயருக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. தமிழ் நாட்டில் ஏன், அகில இந்தியாவுக்குமே விடுதலைப் போரின் வீர தளபதியாகப் போர் முழக்கம் செய்துகொண்டு முன்னே சென்றவர் மகாகவி சுப்பிரமணிய பாரதியார். அவரது பாடல்கள் எழுச்சி மிக்கவை; உணர்ச்சி யூட்டுவன. போர் முரசு கொட்டி முன்செல்பவனின் குரல் அவை. இந் நாளிலே பலர் மனம்போனவாறு பாரதி பாடல்களைப் பாடுகிறுர்கள். பாரதியோ உணர்ச்சிமிக்க கவி; எழுச்சி கொண்ட கவி. நாட்டு மக்களுக்கு எழுச்சியூட்டவே அவர் பாடினுர். எனவே, பாரதி பாடல்களைப் பாடுவோர் எழுச்சி குன்றுமல் பாடவேண்டும். அப்படிப் பாடும்போது தான் அதிலே பாரதி என்ற மகாகவி உயிரோடு காட்சி தருவார். வேறு விதமாகப் பாடுதல் பாரதியைக் கொலை செய்வதற்கு ஒப்பாகும்.

ஆகவே, பாரதியைக் கொண்டாட விரும்புவோர் அவர்தம் பாடல்களை உணர்ச்சியோடு பாடவேண்டும்.

பாரதி எங்கே வாழ்கிறுர் என்றுல், அவர்தம் பாடல் களிலே என்று சொல்வேன். அப்பாடல்களை அவர் பாடியது போலவே உணர்ச்சியுடன் பாடல் வேண்டும்.

வாழ்க பாரதி! மகாகவி பாரதியின் புகழ் ஓங்குக! ஓங்குக!

**முற்றும்**